2890

# T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: XIV NO: 2

July 18th 1985

D
V211,31 N85
N85:14.2
136406

வெளியீடு 17-3-1986

Issued 17-3-1986

608/86

2890

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஜூலை 18, 1985 - தொகுதி XIV எண் 2**

**Thursday, the 18th July 1985 - Volume XIV No. 2**

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly, Secretariat, Fort St. George.

**Madras - 600 009**

விலை: ரூ. 3-00 காசுகள்

[Price Rs. 3-00 paise

136406

V2¹¹.31 N85

N85.14.2

உள்ளடக்கம்.

18—7—1985

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்:
உடுக்குறியிட்ட வினாக்கள் 129—173
(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 173—186

2. ஒத்திவைப்புத் தீர்மானம்:
பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் .. .. 186—200

3. அறிவிப்புகள்:
(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் நியமனம் .. 200
(ஆ) மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி 256
(இ) தீ அணைப்புப் பணி சட்ட முன்வடிவு, 1985 .. 331

4. கவன ஈர்ப்பு: ..
தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியாகும் பருத்தியைக் கொள்முதல் செய்வது .. 201—204

5. அறிக்கை அளித்தல்:
பொதுக் கணக்குக் குழு .. 204—205

6. அரசினர் தீர்மானம்:
விதி 33-ஐத் தளர்த்தல் .. 205

7. தமிழ்நாடு மின்வாரியத்தின் 1985—86ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் 1984-85 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை ஆகியவைமீது விவாதம். 205—256
மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் 205—206
* திரு. எஸ். சிவராமன் 200—213
* திரு. தி. அன்பழகன் 213—220
திரு. மு. இராமநாதன் 220—228
* திரு. வி. சுப்பிரமணியன் 228—230
திரு. ஆர். ரெங்கசாமி 230—235
திரு. சோ. கலிதீர்த்தான் 235—240
திரு. வி. பி. சிந்தன் 240—248
டாக்டர் தே. குமாரதாஸ் 248—252
திரு. கு. சுப்பராயன் . 252—256

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்:—

(அ) சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்ட காவல் திருத்த சட்ட முன் வடிவு, 1985.— 257—289

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 257,283—288

திரு. என். எஸ். வி. சித்தன் 257—259

திரு. பொன். முத்துராமலிங்கம் 259—264

திரு. மா. சின்னராசு 264—271

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 271—275

திரு. கு. சுப்பராயன் 275—280

திரு. வை. பாலச்சந்திரன் 280—283

(ஆ) தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1985 290—304

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி 290,300—304

திரு. கு. சுப்பராயன் 290—291

திரு. ஆ. நடராசன் 291—293

திரு. ஆர். செங்காளியப்பன் 293—294

டாக்டர் கே. சமரசம் 294—296

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 297—300

(இ) மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1985. 304—312

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி 310—312

திரு. கோ. வீரய்யன் 305—306

திரு. மா. மணிமாறன் 306—308

திரு. பொ. உத்திராபதி 308—309

திரு. செ. செம்மலை 309—310





(ஈ) வரி விதிப்புத் திருத்தச் (காலவரையறை பொருந்தாது என்பது) சட்டமுன்வடிவு, 1985— 312—318

மாண்புமிகு திரு. தா. வீராசாமி 312,316—317

திரு. மா. மணிமாறன் 313—314

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 315—318

(உ) பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்), சட்ட முன்வடிவு, 1985— 319—331

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் 319 329—351

திரு. சு. பாலன் 319—321

திரு. சா. துரைசாமி 321—324

திரு. கோ. வீரய்யன் 324—326

திரு. ஆ.கா.அ. அப்துல்சமத் 326—329

(ஊ) தீ அணைப்புப் பணி சட்டமுன்வடிவு, 1985— 331

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 331,337—339

திரு. பரிதி இளம்வழுதி 332—334

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 334—331

9. அரசினர் தனித் தீர்மானங்கள்— 339—350

சில நகரியங்களை அமைத்தல்— 339—342

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் 347—349

திரு. ஜி. கே. ஜெ. பாரதி 342—344

திரு. சு. பாலன் 345—346

திரு. கோ. வீரய்யன் 346—347

திரு. ஆ.கா.அ. அப்துல்சமத் 347

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 350—352

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## 1985, ஜூலை 18, வியாழக்கிழமை

## ஆடி 3, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு-2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.எச்.பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

''சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.''

உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால் சொல்லிலும் கோணுதல் இல்லாதிருத்தல் நடுவு நிலைமையாம்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

### சானார்பட்டியில் விவசாயிகள் மோட்டாருக்கு மின் இணைப்பு

709—(*வினா எண் 1322)— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியத்தில் விவசாயிகள் பலர் 3 வருட காலமாக மோட்டார்கள் வாங்கி மின் இணைப்பின்றி கஷ்டப்படுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மின் இணைப்பு கொடுக்கப் படும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியத்தில் 31-3-78-க்கு முன்னால் மனு செய்த பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது. 31-3-78-க்குப் பின்னால் 31-3-79-க்குள் வந்த மனுக்களில் 95 விவசாயிகள் ஆயத்த நிலையில் உள்ளனர். அவர்களுக்கு நடப்பாண்டில் மின் இணைப்பு கொடுப்பதாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** பேரவைத் தலைவர் அவர்களே சுமார் 8 வருடங்களுக்கு முன்பு பம்ப்செட் மோட்டாருக்கு மின் இணைப்புக் கேட்டு மனுச் செய்தவர்கள் சுமார் 500 பேர். அவர்களில் சுமார் 30 பேருக்கு, 30 தினங்களுக்குள் மோட்டார் வாங்கி பதியும்படி மின்வாரியம் நோட்டீஸ் கொடுத்தது. மோட்டார் வாங்கி, பதிந்து, 3 வருடங்கள் ஆகியும், மின் இணைப்பு வழங்கப்படவில்லை. அவர்களுக்கு எப்போது வழங்கப் படும்?

[1985 ஜூலை 18

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 8 வருஷங்களாக என்றார்கள். அவர்கள் மிகவும் பாக்கியசாலிகள் என்றே கருதுகிறேன். 31.3.76-க்கு முன்பு மனு கொடுத்தவர்களுக்குக் கொடுப்பதற்கே இந்த ஆண்டும் ஆகும். அது தான் மின் வாரியத்திலே உள்ள நிலைமை. ஏற்கனவே மனு கொடுத்து தயார் நிலையில் 30பேர் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் சொன்னது, 95 விவசாயிகள் ஆயத்த நிலையில் உள்ளனர், அவர்களுக்கு இவ்வாண்டு வழங்கத் திட்டம் இடப்பட்டுள்ளது.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, மனுச் செய்த 500 பேர்களில், 95 பேர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் நைஸாகப் பதில் சொல்கிறார்கள். நான் ரொம்ப மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் விவசாயிகள் படக்கூடிய கஷ்டங்களைப் பார்க்கிறபோது மின் இணைப்பு கிடைக்கவில்லையே, கிடைக்கவில்லையே, மனு செய்திருக்கிறோமே, என்ற அவல நிலையைப் பார்க்கிறபோது, அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து, விவசாயிகளுக்கு உடனடியாக பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் ரஃப்—ஆக பதில் சொல்லவேண்டும் என்று எதிர்பார்ப்பார் என்று நான் நிச்சயமாகக் கருதவில்லை. ஏராளமான பேர் மனுக்கள் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் ஆண்டு தோறும் கொடுக்கக் கூடிய அளவு மிகக் குறைவு. அதனாலே தான் இந்தத் தேக்கமே தவிர, விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடாது என்பது அல்ல. விரிவான விளக்கத்தை நிதி அறிக்கை விவாதம் இன்று வர இருப்பதால், அவர் பெற இயலும்.

## கீழ் கோத்தகிரியில் தேயிலைத் தொழிற்சாலை

710—(*வினா எண் 1036)—திரு.எம்.சிவக்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கீழ் கோத்தகிரியில் தமிழ்நாடு தேயிலைத்தோட்டக் கழகம் மூலமாக தேயிலை தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இல்லை.

திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அப்படி ஒரு திட்டம் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். தாயகம் திரும்பிய சிலோன் அகதிகள் அங்கே அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், ஏறத்தாழ 1,000 ஏக்கர் சுமாருக்கு அரசு தோட்டங்கள் அங்கே இருப்பதாலும், அந்த இடத்தில் இந்த ஆண்டாவது, ஒரு தொழிற்சாலை அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.



1985 ஜூலை 18]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, இதற்கு முன்பே, அந்தப் பகுதியில் ஒரு தொழிற்
சாலை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. நம்மிடத்திலே
உற்பத்தி ஆகிற தேயிலைகளுக்குப் போதுமான அளவு
நம்முடைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. புதிய தொழிற்
சாலை ஒன்று கூடலூர் பகுதியிலே உருவாக்குவதற்கான
திட்டங்கள் ஏற்கப்பட்டு அது தொடங்கப்பட இருக்கின்றது.
ஆகவே, அந்தச் சூழ்நிலையில், கோத்தகிரி பகுதியில் புதிய
தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான எந்தத் திட்டமும் அரசினி
டத்திலே இப்போது இல்லை.

## பழவேற்காட்டை சுற்றுலா மையமாக்கல்

711—(*வினா எண் 1999)—திரு.கே.பி. கே.சேகர்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி தொகுதியில் அடங்கிய புலிகாட் என்கிற பழவேற்காட்டை சுற்றுலா மையமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே,
(அ) ஆம், (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலின்
படி, அந்தப் பகுதியிலே சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து
இழுக்கிற வகையில் என்னென்ன காரியங்களை எப்போது துவக்கு
வதற்கு அரசு முனைய இருக்கிறது என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பழவேற்காடு பகுதியை மாவட்ட உலா
தலமாக மேம்பாடு செய்வதற்காக ஒரு திட்டம் அரசின்
பரிசீலனையில் இருக்கிறது. அதற்காக 2 லட்ச ரூபாய் ஒதுக்கப்
பட்டிருக்கிறது. மேலும் மத்திய அரசிடமிருந்து 7 லட்ச ரூபாய்
நிதி உதவி கேட்பதற்காகவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆகவே
இந்த திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு அது ஒரு
மாவட்ட உலாத் தலமாக சிறப்பு மிக்க இடமாக இருக்கும்.

வண்டலூரில் உயிரியல் பூங்கா

712 (*வினா எண் 2729)—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்டலூரில் உள்ள உயிரியல் பூங்கா எப்பொழுது திறக்கப்படும்?

(ஆ) அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:—தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): 'அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா' விரைவில் திறக்கப்படும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்றைய மாநிலங்களின் தலைநகரங்களில் இருப் பதைக்காட்டிலும் அதிகமான விஸ்தீரணம் உள்ள இந்த அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் உலக நாடுகளில் உள்ள பல உயிரினங்களை, பறவைகளை கொண்டு வந்து, உலகிலேயே சிறப்பான ஒரு உயிரியல் பூங்காவாக இருக்கும் அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டமிடப்பட்டுள்ளபடி 7 கோடி ரூபாய் செலவில் இந்த உயிரியல் பூங்காவின் பணிகள் நடைபெற்று முடிக்கப்படுகின்ற அந்த நிலையில் இந்தியாவிலேயே இது தான் மிகச் சிறந்த உயிரியல் பூங்காவாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை இந்த ஆண்டிலேனும் திறப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றதா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலே அல்ல; அனேகமாக அடுத்த மாதம் 15 ஆம் தேதிக்குள் இது முறையாக பொது மக்களுக்குத் திறந்து வைக்கப்படும்.

கபாலீஸ்வரர் கோயில் குளம் சீரமைப்பு

713—(*வினா எண் 2825)—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலைச் சேர்ந்த குளத்தை சீர்படுத்தி தூர் எடுத்து அழகு படுத்த அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலின் குளத்தில் தூர் எடுக்க வேண்டிய அவசியம் தற்சமயம் இல்லை.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிழாக் காலங்களில் தெப்ப உற்சவத்திற்காக தண்ணீர் போதாத காரணத்தலே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகத் தண்ணீரைப் பெற்று தெப்பம் விட வேண்டியிருக்கிறது. எனவே அதை தூர் எடுத்தால் தண்ணீர் வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்து தண்ணீர் எப்போதும் இருக்கும்படி செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விருப்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூர் எடுக்காத காரணத்தால் இப்போது அங்கே தண்ணீர் இல்லை என்ற நிலை இல்லை. திருக்குளத்திற்கு பல்வேறு இடங்களிலிருந்து தண்ணீர் வருகின்ற வகையில் அந்த திருக்குளம் உருவாக்கப்பட்ட நேரத்திலேயே ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். அந்தத் தண்ணீர் வருகின்ற வழிகள் எல்லாம் இப்போது கட்டிடங்கள் எழுப்பப்பட்டு அடைக்கப்பட்டு விட்டன. ஆகவே, அங்கே தண்ணீர் வரத்து நின்று போய் விட்டது. மழை பொழிந்தால் அந்த பொழிகிற மழை அந்த குளத்திற்குள் விழுகிற தண்ணீர் தான் இப்போது அங்கே தேங்கி நிற்கிறது. அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்ட காரணத்தால் போர் போட்டு அதிலே தண்ணீர் எடுக்க முடியுமா என்று பல நேரங்களில் முயற்சித்துப் பார்த்ததில் துரதிருஷ்டவசமாக அந்தக் குளத்திற்கு அடியில் நீர் ஊற்றுகள் இல்லாத சூழ்நிலையில் நீர் கிடைக்கவில்லை. ஆகவே குடிநீரை கொஞ்ச காலத்திற்கு முன்பு நம்முடைய குடிநீர் வாரியத்தின் மூலமாக அங்கே தண்ணீர் செலுத்தி அந்த தண்ணீர் தான் இப்போது இருந்து கொண்டிருக்கிறது, வெய்யிலில் காய்ந்தது போக. ஆனால் அதற்கு ஒரு நிரந்தரமான தீர்வு காணவேண்டும் என்றால் அதற்காக பெரிய செலவு ஆகும் என்று தெரிகிறது. சென்னை கடற்கரையில் காமராஜ் சிலைக்கு அருகில் இருந்து ஆழ் குழாய்கள் மூலம் அங்கே நிலத்தடி நீரை எடுத்து அங்கே இருந்து அந்த குளத்திற்குக் கொண்டு போக முடியுமானால் அப்படி ஒரு திட்டத்தை பரிசீலித்துப் பார்க்கலாம் என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி நிறுவப்படுமானால் அதற்கு சில கோடி ரூபாய் செலவாகலாம் என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, ஒரு மிகப் பெரிய திட்டமாக இருக்கிற காரணத்தால் அதைப் பரிசீலித்து அதற்கு அடிப்படையாக பொருளாதார வசதிகள் எல்லாம் இருக்கின்ற சூழ்நிலைகளை ஒட்டித்தான் முடிவு எடுக்க முடியும்.

[1985 ஜூலை 18

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல பதிலைச் சொல்லி இருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றிக் கடைகளை நடத்தி அதன் மூலம் அழகுபெறுவதைப் போல கபாலீஸ்வரர் கோயிலைச் சுற்றிலும் நான்கு புறங்களிலும் கடைகளை ஒழுங்கான முறையில் நிர்மாணம் செய்து இந்தக் கோயிலினுடைய அழகு கெடாமல் பார்த்துக் கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, இப்பொழுது இந்தக் குளத்தைச் சுற்றி ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டு இருக்கிற காரணத்தினாலே பொது மக்களுக்கும் தொல்லை ஏற்பட்டு வருகிறது; அழகும் குறைந்து கொண்டு வருகிறது. ஆகவே, அவர்களையெல்லாம் அப்புறப்படுத்தி விட்டு எந்த அளவிற்கு அதை நிலையான கட்டிடங்களாக உருவாக்கினால் அழகுபடுத்த முடியுமோ அல்லது பொது மக்களுக்கு வசதிக் குறைவில்லாமல் செய்ய முடியுமோ அப்படியொரு திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று அந்த ஆலயத்தினுடைய நிர்வாகிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தெப்பக்குளம் வேண்டுமென்பது ஒரு சமுதாய உணர்வோடு மட்டுமில்லாமல், அது அந்தப் பகுதியிலே உள்ள கிணறுகளுக்கு நீரூற்றுகளாக அமையும் ஒரு வாய்ப்பு கிராமப்பகுதிகளிலே அதிகமாக இருக்கிறது. அதைக் கருத்திற்கொண்டு கபாலீஸ்வரர் கோயிலின் குளத்திலே நம்முடைய மெட்ரோ வாட்டர் மூலம் தண்ணீரை விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு இன்றைக்கு கபாலீஸ்வரர் கோயில் குளத்தைச் சுற்றி அன்-ஆதரைஸ்ட் பப்ளிக் டாய்லெட்டாக உபயோகப்படுத்தப்பட்டு, கோயிலுக்குச் செல்பவர்கள் துர்நாற்றம் தாங்க முடியாமல் மூக்கை மூடிக்கொண்டு போக வேண்டிய நிலைமை இருக்கிறது. இதையும் மாற்றுவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திருக்குளங்களிலே தண்ணீரைத் தேக்கி வைப்பது என்பது சமுதாய நோக்கம் மாத்திரமின்றி, பக்கத்தில் உள்ள நீர்நிலைகளிலேயும், கிணறுகளிலேயும் தண்ணீர் வர வேண்டுமென்றுதான் திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது பக்கத்திலே கிணறுகளை ஏற்படுத்தி, பம்பு செட்டுகளைப் போட்டு தண்ணீரை எடுக்கின்ற காரணத்தினாலேயே இங்கே தண்ணீர் வற்றிவிடுகிறது. இந்தப் பகுதியிலே தண்ணீர் வறண்டு போய் இருக்கிறது. ஆகவே, நம்முடைய மெட்ரோ



1985 ஜூலை 18]

வாட்டரைக் கொண்டு, குடிநீரைக்கொண்டு எவ்வளவு நிரப்ப முடியும் என்பது பிரச்னை. காரணம், குடிப்பதற்கே நம்முடைய நகரத்திற்குத் தண்ணீர் இல்லாமல் சங்கடப்படுகின்ற ஒரு சூழ்நிலையில் திருக்குளத்திற்குத் தண்ணீரை விடுங்கள் என்று சொன்னால் எந்த அளவிற்கு அது சாத்தியமாகும் என்பதையும் நாம் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். அங்கே அசுத்தப்படுத்துவதைப் பற்றிச் சொன்னார்கள். மக்கள்தான் அசுத்தப்படுத்துகிறார்கள். வேறு யாரும், பிராணிகள் அல்லது ஆறறிவு இல்லாதவர்கள் அசுத்தப்படுத்துவதில்லை. ஆகவே, மக்கள் அசுத்தப்படுத்துகின்ற நேரத்தில் அங்கே இருக்கிற மக்கள் அதைத் தடுக்கின்ற அந்தப் பொறுப்பைஏற்றுக்கொள்ளவேண்டும். ஆலயம் பார்த்துக் கொள்ளவேண்டும் ஆலயம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றால் அங்கே ஆயிரம் பேரை, 500 பேரைக் காவலாக வைத்தால்கூட இந்த அசுத்தப்படுத்துகின்ற சூழ்நிலைகளை மாற்ற முடியாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் அவர்களாலே எவ்வளவு முடியுமோ எல்லோரிடத்திலேயும் சொல்லி அசுத்தப்படுத்தாதீர்கள் என்று ஒரு இயக்கத்தையே நடத்தினால் அது பயனுள்ள வகையில் இருக்கும். இருந்தாலும் ஆலயம் மிகுந்த அக்கறை கொண்டு அந்த இடத்தைப் பாதுகாப்பதற்குத் தன்னால் முடிந்த எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வருகிறது. இன்னும் தீவிரமாக எடுக்கும்.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த சட்டமன்றத் தொடரிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் சைதை பெருமாள் கோயிலினுடைய குளத்தைத் தூர் வாருவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இன்னும் அந்தப் பணி தொடங்கப்படவில்லை. அதில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், அதைப்போல கோதண்டராமசாமி கோயிலுக்குச் சொந்தமான அந்த மிகப் பெரிய குளம் மேற்கு மாம்பலம் பகுதியையே ஒரு அசுத்தக் காடாக மாற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில், அதை, ஆலயத்திற்குச் சொந்தம் இல்லாத அரசுப் புறம்போக்காக இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பணிகளை மேற்கொள்ளவில்லை என்று சொன்னார்கள்—எனவே, அந்தக் குளத்தை ஆலயத்திற்குச் சொந்தம் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, இது கபாலீஸ்வரர் திருக்கோயில் குளத்தைப் பற்றிய கேள்வி. அந்தக் குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் கொஞ்சம் விவரமாகப் பதில் சொல்ல இயலும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, மைலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலின் குளத்தில் நாத்திகம் பேசக்கூடிய முன்னாள் முதலமைச்சர் தூர் எடுத்த

காரணத்தினால்தான் அப்பொழுது மழை பெய்தது என்று தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யப்பட்டதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர வர்களே, அந்த ஆராய்ச்சிக் குறிப்பு என்னிடத்திலே இப்பொழுது இல்லை.

## சந்தன எண்ணெய் தயாரிப்பு

499 (*வினா எண் 1850)— திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்த மாவட்டத்தில் சந்தன மரங்கள் அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) சந்தன மரத்திலிருந்து சந்தன எண்ணெய் எடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாட்டில் வட ஆற்காடு, பெரியார் மற்றும் சேலம் மாவட்டங்களில் பெருமளவிலும், கோவை, நீலகிரி, தர்மபுரி, திருநெல்வேலி மாவட்டங்களில் குறைந்த அளவிலும் சந்தன மரங்கள் உள்ளன.

(ஆ) சந்தன மரத்திலிருந்து சந்தன எண்ணெய் தயாரிக்கும் பொருட்டு சந்தன மரப்பொருட்கள் தொழிற்சாலை வட ஆற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி தாலுக்காவில் உள்ள தெக்குப்பட்டு கிராமத்தில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் கீழ் பரிசோதனை ஓட்டங்கள் முடிந்து வர்த்தக ரீதியில் செயல்படும் நிலையில் உள்ளது.

திரு. தி. அன்பழகன்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் தெக்குப்பட்டு கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சந்தன எண்ணெய் தயாரிக்கும் ஆலையில் சந்தன எண்ணெய் உற்பத்தி எப்போது தொடங்கும்? அங்கே கிடைக்கும் மரத்தூள் மற்ற பொருள்களைக் கொண்டு சந்தன சோப்பு, ஊதுவத்தி உற்பத்தியைத் தொடங்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அந்த எண்ணெய் தயாரிக்கின்ற முயற்சியில்தான் பரிசோதனை ஓட்டங்கள் முடிந்து விட்டன. முறையாக வர்த்தக ரீதியாக விற்பனை செய்கின்ற முயற்சியில் ஈடுபடுவதற்கு திறந்து வைக்கப் படும் என்று தெரிவித்திருக்கிறேன். அப்படி திறந்து வைக்கின்ற நிகழ்ச்சி இன்னும் ஏறத்தாழ இரண்டு வாரத்தில் நடைபெறும். அதன் பிறகு அந்த ஆலை முறையாக இயங்கும். தொடர்ந்து



சந்தனத் தூள்களைக் கொண்டு பிற பொருள்கள் தயாரிக்கும் துணைத் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற கருத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தப் பணி பின்னலே நிறை வேற்றப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, மைசூரில் விளைகின்ற சந்தன மரத்தைவிட தமிழ்நாட்டில் உள்ள சந்தன மரத்திலிருந்து கிடைக்கும் எண்ணெயின் தரம் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே. சோதனை ஓட்டத்தின் மூலம் இங்குள்ள சந்தன மரத்திலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயின் தரம் குறைந்திருப்பதாகத் தெரிகிறதா அல்லது அதற்குச் சமமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறிப்புகள் இதுவரை கிடைக்கவில்லை. நம்முடைய சந்தன மரங்கள் தரமாக உள்ளன. சந்தன மரங்களில் எண்ணெய் சத்து அதிகமாக இருப்பதாகத்தான் தகவல் இருக்கிறது. காரணம் நம்முடைய சந்தன மரங்களை மைசூர் சந்தன சோப்பு தொழிற்சாலை அரசாங்க அதிகாரிகள் இங்கே வந்து ஏலத்தில் எடுத்துக்கொண்டு போகிறார்கள். குறிப்பாக இந்தமுறைதான் ஒரு டன் சந்தன மரம் ஒன்றேகால் இலட்சம் ரூபாய்க்கு, இதுவரையில் இல்லாத அளவுக்கு, விற்கப்பட்டிருக் கிறது. மொத்தம் ஆயிரத்து சொச்சம் டன்னுக்கு சுமார் ஆறு கோடியே சொச்சம் ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. இந்த இரண்டு தொகையும் இதுவரை சந்தன மர ஏலத்தில் இல்லாத அளவுக்கு கிடைத்திருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டில் உள்ள சந்தன மரங்கள் தரத்தில் உயர்ந்துள்ளன என்று இதுவரை உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய இந்த சந்தன மரங்கள் மூலம் ஆண்டுவாரியாக எவ்வளவு வருமானம் அரசுக்கு கிடைக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இது சந்தன மர எண்ணெய்த் தொழிற்சாலை பற்றியது; அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கப்படும்.

திரு க. இரா. சின்னராசு: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் நிறுவப்பட்டிருக்கிற சந்தனத் தொழிற்சாலைக்கு ஆண்டு ஒன்றுக்கு எத்தனை டன் சந்தனக் கட்டை தேவை? தேவையான அளவுக்கு தமிழ்நாட்டில் சந்தன மரங்கள் கிடைக் கின்றனவா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 400 டன் அல்லது 500 டன் தேவைப்படும். அதற்குமேலேயே தமிழ்நாட்டில் இருக்கிறது.

திரு. செ. ஆறுமுகம்: தலைவரவர்களே, அந்த எண்ணெயைப் பிழிந்த பிறகு கிடைக்கின்ற தூள்களைப் பயன்படுத்தி பௌடர் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இதற்கு முன்னாலேயே பதில் சொல்லிவிட்டேன்.

பச்சமலையைச் சுற்றுலாத்தலமாக்கல்.

500—(*வினா எண். 1925) திருமதி இரா. சரோஜா: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதியில் உள்ள பச்சமலையை (டாப் செங்காட்டுப்பட்டி) சுற்றுலாத்தலமாக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) அங்கு தொலைக்காட்சி நிலையம் அமைக்கும் வகையில் மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு ஏதேனும் செய்துள்ளதா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

திருமதி இரா. சரோஜா: தலைவரவர்களே, பச்சைமலைப் பகுதி பொதுமக்கள் பார்வையிடக்கூடிய பசுமையான பகுதி. எனவே அதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்க, வரும் நிதியாண்டில் அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நானும் அந்த மலையைப் பார்த்திருக்கிறேன். அது பசுமையான பகுதியாக ஒரு காலத்தில் இருந்திருக்கலாம். இப்போது பட்டா எல்லாம் வழங்கப்பட்டு, பசுமை எல்லாம் குறைந்து, அதை ஒரு வறண்ட பகுதியாக மாற்றியிருக்கிறார்கள். ஆகவே இப்போது அதை சுற்றுலாத்தலமாக்க எந்த முயற்சியும் அரசால் எடுக்க முடியாது. மேலும் எந்த இடத்தையும் சுற்றுலாத் தலமாக்கும் என்ற திட்டம் அடிப்படையில் இல்லை. அது இயற்கையாகவே சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் அமைந்திருக்குமேயானால் அதற்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு அரசு முயற்சிக்கின்றதே தவிர நாமே ஒரு இடத்தை சுற்றுலாத் தலமாக மாற்றுவது என்பது கிடையாது.

(முற்பகல் 9–20)

திருமதி இரா. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தொலைக்காட்சி வைப்பதன் மூலம் பச்சமலைக்கு விளம்பரம் தருவதாக அமையும். எனவே மத்திய அரசுக்கு நமது அரசு சிபாரிசு செய்யுமா?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே திருச்சியிலே ஒரு தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்றது. திருச்சியிலே இரண்டாவது ஒளிபரப்பு நிலையம் அமைக்கின்ற கருத்து மத்திய அரசிடத்திலே இருக்குமேயானால் அப்போது எந்த இடத்திலே அமைக்கலாம் என்பதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில் அவர்கள் அங்கே பார்வையிட்டபோது அங்கே பசுமை குறைவாக இருந்ததால் அதனைச் சுற்றுலா மையமாக அமைக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். எங்கள் மாவட்டத்தில் அவர்கள் கண் பார்வையைச் செலுத்தினால் ஏகப்பட்ட பகுதிகள் சுற்றுலா மையமாக அமைக்கப்படுகின்ற நிலைமையில் இருப்பதைப் பார்க்கலாம். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து அந்தப் பகுதிகளுக்கு வருகின்றபோது அவற்றைப் பார்வையிட்டு எங்கள் மாவட்டத்தில் அந்த வகையில் பல சுற்றுலா மையங்களை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்; பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி திருச்சி மாவட்டம் பச்சமலையைப் பற்றியதாகும்.

சிமெண்ட் ஒதுக்கீடு.

714—(*வினா எண் 430)—திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு மாநில அரசுக்கு ஒதுக்கும் மாதாந்திர சிமெண்ட் கோட்டா எவ்வளவு?

(ஆ) இதனை அதிகரிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, (அ) மைய அரசு மாநில அரசிற்கு காலாண்டுக்கு ஒருமுறை லெவி சிமெண்ட் ஒதுக்கீடு செய்கிறது. இவ்வகையில் தமிழ்நாட்டிற்கு 1984 ஆம் ஆண்டு 4–வது காலாண்டிலிருந்து, காலாண்டுக்கு 1,62,700 மெ.டன் லெவி சிமெண்ட் மைய அரசு ஒதுக்கீடு செய்கிறது.

(ஆ) தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்படும் லெவி சிமெண்ட் அளவு போதவில்லை என்பதனால், 2,52,000 மெ.டன்கள் காலாண்டுதோறும் ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டது. ஆனால் மத்திய அரசு கூடுதலாக சிமெண்ட் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலையில் இருப்பதாக கூறியுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களுக்கும் இதேபோல்தான் சிமெண்ட் அவர்களுடைய தேவையைப் பொறுத்து ஒதுக்குகின்றதா என்று அறிய விரும்புகிறேன். நமது தேவையைப் பூர்த்தி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது? வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கின்றதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு எல்லா சிமெண்ட் ஆலைகளிலிருந்தும் சிமெண்ட் உற்பத்தி செய்கின்ற அளவினைப் பார்த்து அந்தந்த மாநிலங்களுக்குத் தேவையான அளவுக்கு ஒதுக்கீடு செய்கின்றது. ஆனால் மாநிலங்களுடைய தேவை வளர்ந்து கொண்டே இருக்கின்றது என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும். வெளிநாட்டிலே இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றதா என்று கேட்டார்கள். இப்போது எஸ்.டி.சி. என்று அழைக்கப்படுகின்ற ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக மத்திய அரசு வெளிநாட்டிலே இருந்து தேவைப்படுகின்ற நேரங்களில் எல்லாம் சிமெண்ட் இறக்குமதி செய்து தேவைப்படுகின்ற மாநிலங்களுக்குத் தந்து உதவுகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, நமது சிமெண்ட் ஆலைகளில் சிமெண்ட் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நிலக்கரி ஸ்டாக் இல்லாமல் இருக்கின்றது. இதனால் சிமெண்ட் உற்பத்தி பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. சமீபத்தில் கூட தாழையூத்து சிமெண்ட் ஃபேக்டரிக்கு பாம்பே கப்பலில் கொண்டுவரப்பட்ட 5000 டன் நிலக்கரி கடலில் காணாமல் போய் கடலில் கரைந்துவிட்டது என்று சொல்லப்படுகின்றது. அவர்களுக்கு என்ன நிவாரணம் கொடுக்கப்பட்டுள்ளது? அதுமட்டுமல்லாமல் இந்த சிமெண்ட் ஆலைகள் பற்றாக்குறை இல்லாதவகையில் நிலக்கரியினை ஸ்டாக்வைத்துக் கொள்ளக்கூடிய வகையில் வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்; பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

சீர்காழியில் கூட்டுறவு நூற்பாலை.

715—(*வினா எண் 2170)— திரு க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம் சீர்காழி தாலூக்காவில் கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்காகும் செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம், மணல்மேடு கிராமத்தில் 30,544 கதிர்கள் உற்பத்தித் திறனுடன் ஏற்கனவே ஒரு கூட்டுறவு



நூற்பாலை இயங்கி வருகிறது. எனவே, இம்மாவட்டத்தில் சீர்காழி தாலூக்காவில் மேலும ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலை நிறுவும் திட்டம் எதுவும் தற்போது அரசின பரிசீலனையில் இல்லை.

திரு- க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன போது, மயிலாடுதுறை தாலுக்கா, மணல்மேட்டிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை இயங்கிக் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தின் மிகவும் கடைசி பகுதியாக இருக்கின்ற சீர்காழி தாலுகாவிலே எந்த தொழில் வளர்ச்சியும் இல்லை. தற்போது மயிலாடுதுறை தாலுகாவிற்குப் பக்கத்திலே கூட்டுறவு சர்க்கரை ஆலை இயங்கிக்கொண்டு வருகிறது. ஆகவே, சீர்காழி பகுதியிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்துவதன் மூலம் பக்கத்திலே இருக்கின்ற சிதம்பரம் தாலூகாவிலே இருப்பவர்கள் கூட நல்லமுறையிலே பயனடைவார்கள், சாலை வசதி பாலம் வசதி போன்றவைகள் இருப்பதினாலே. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது பின்தங்கிய பகுதியாக இருப்பதினால், மறு ஆய்வு செய்து ஒரு சிறிய கூட்டுறவு நூற்பாலையையாவது ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள நூற்பாலைகளில் மொத்த நூல் உற்பத்தி2,553இலட்சம்கிராம். கைத்தறி,விசைத்தறி,மற்றும் தனியார் துறைகளுக்குப் போதுமானது 1,597 இலட்சம் கிராம் நூலைவிட அதிகமாக தயாரிக்கப்படுகின்றது. உபரி 956 இலட்சம் கிராம் உற்பத்தி செய்யப்படுவதை பம்பாய், குஜராத் போன்ற மாநிலங்களுக்கு விற்பனை செய்கின்ற நிலை இருக்கின்றது. பிற்பட்ட பகுதியான சீர்காழியில் தொழில்களைத் துவங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களை அணுகினால், வேறு தொழில்களைத் துவக்க ஏற்பாடு செய்யலாம்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நூற்பாலை துவங்குவதற்கு சாத்தியமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சீர்காழி தொகுதியிலுள்ள குலசேகரபுரம் கிராமத்திலே அதிக இஸ்லாமியர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் கைத்தறி பாய் நெசவு செய்து வருகின்றார்கள். ஆகவே, கூட்டுறவு பாய் நெசவு ஆலையை, கூட்டுறவுத் துறை மூலம் ஆரம்பித்து, அந்த மக்களுக்கு வழிவகை செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சியை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம்.

[1985 ஜுலை 18

## புதிய சர்க்கரை ஆலைகள்.

716—(* வினா எண் 3431)—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் குடவாசலில் கூட்டுறவுத் துறை மூலம் ஒரு சர்க்கரை ஆலை துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தஞ்சை, மயிலாடுதுறை போன்ற பகுதிகளிலே கூட்டுறவுத்துறையின் மூலமாக சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த இரண்டுக்கும் இடைப் பகுதியான கொடவாசலை மையமாக வைத்து ஒரு சர்க்கரை ஆலையை கூட்டுறவுத் துறையின் மூலமாக இல்லாவிட்டாலும் தனியார்த் துறை மூலமாக அமைப்பதற்கு இந்த அரசு, அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, க. இராசராம் : தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே 8 ஆயிரம் ஏக்கர் கரும்பு பயிரிடப்படுகின்ற இடங்களில், சர்க்கரை ஆலை அமைப்பதற்கான சாத்திய கூறுகள் இருக்கின்றன. ஆகவே, நாம் இந்த முறையிலே 30 சர்க்கரை ஆலைகள் வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். இன்றைக்கு மயிலாடு துறையில் சர்க்கரை ஆலை வேலை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிட்டத் தட்ட 8 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட அளவிலே நிலம் தேவை என்று சொன்னார்கள். கும்பகோணம், திருவிடைமருதூர், கொடவாசல், வலங்கிமான் ஆகிய பகுதிகள் நல்ல நஞ்சைப் பகுதிகள். இங்கே கரும்பு தாராளமாகப் பயிரிடப்பட்டுவருகின்றது. எனவே, அவர்களுக்கு இருக்கின்ற சங்கடத்தை கவனத்தில் கொண்டு வருகின்ற ஆண்டிலாவது இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதுபோல், கரும்பு நல்லபடியாக விளைவிக்கின்ற இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைக்கின்ற சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆகவே, மேலும் 30 சர்க்கரை ஆலைகள் துவங்குவதற்கு அனுமதி தரவேண்டும் என்று மைய அரசைக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அது வந்த பிறகு, எங்கெங்கு சர்க்கரை ஆலைகளை உருவாக்கலாம் என்பதற்கு, கரும்பு விளைகின்ற இடங்களை ஆராய்ச்சி செய்து, அங்கெல்லாம் உருவாக்க அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.



1985 ஜுலை 18]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, 8 ஆயிரம் ஏக்கர் இருந்தால் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கலாம் என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டம் என்பது 14 இலட்சம் ஏக்கர்களைக் கொண்ட மாவட்டம். அங்கே அதிகமான தொழிற் சாலைகள் இல்லை. விவசாயத்தை நம்பியே வாழக்கூடிய மாவட்டமாக இருப்பதினால், அடுத்த ஆண்டிலாவது 30 ஆலைகள் வேண்டுமென்று கேட்கிறபோது, இன்னும் கொஞ்சம் அதிகமான ஆலைகள் வேண்டுமென்று கேட்டு, தஞ்சை மாவட்டத்திற்கு இன்னும் ஒரு ஆலை கிடைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே படிப்படியாக தொழில் துறையில் விவசாயம் சம்பந்தப்பட்ட தொழில்களை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் மயிலாடு துறையிலே தற்போது ஒரு சர்க்கரை ஆலை தொடங்க வேலை நடந்து கொண்டிருக்கிறது. அது வந்த பிறகு உரிமங்கள் கிடைக்குமானால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

## வாசுதேவநல்லூரில் புதிய சர்க்கரை ஆலை.

717—(* வினா எண் 3509)—திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதியில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

திரு. ஆர். ஈஸ்வரன் : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் வாசுதேவநல்லூர் பகுதியிலே சுமார் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ஏக்கரில் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். ஆகவே கூட்டுறவு சர்க்கரை ஆலையொன்றை அங்கே அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே சர்க்கரை ஆலைகள் இல்லை என்பது உண்மைதான். சர்க்கரை ஆலையை அங்கே விரைவிலே அமைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைக்கப்பெற்ற வினாக்கள் இப்போது எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.

[1985 ஜூலை 18

காமராஜ் மாவட்டத்தில் தொழில் இணையம்.

314— (* வினா எண் 120)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் 'சிப்காட் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ்' மேற்கு முகவை மாவட்டத்தில் ஆரம்பிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது திருவில்லிபுத்தூர் தாலுகாவில் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) திருவில்லிபுத்தூரில் இந்த தொழில் இணையம் நிறுவுவது பற்றி சாத்தியக் கூறுகள் தகுந்த நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்திலே திருவில்லிப்புத்தூர் தொகுதி தொழில் துறையிலே முன்னேறாத பகுதி. அங்கே தனியார்கள் முன்வந்து தொழில்கள் செய்வதற்கு வாய்ப்பு இல்லை. அரசுத் துறையில் தான் அங்கே தொழிற்சாலை வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தகுந்த நேரத்திலே பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அமைச்சர் அவர்களிடத்தில் பெட்டிஷன் கொடுத்து.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் அமைச்சர் அவர்களுடைய அறையிலே போய்க் கேட்கவேண்டும். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. இரா தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நிச்சயமாக திருவில்லிபுத்தூர் தொழில் நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் பெயரில் நாம் அமைத்திருக்கிற மாவட்டத்திலே நிறைய தொழில் சாத்தியக் கூறுகள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. திருவில்லிபுத்தூர் தொகுதி பின் தங்கிய பகுதி என்பது உண்மைதான். அந்தப் பகுதியை முன்னேற்றுவதற்கான முயற்சிகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலத்தில் மின்னணு தொழிற்பேட்டை.

315—(* வினா எண். 666)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் மின்னணு(எலக்ட்ரானிக்) தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?



1985 ஜூலை 18]

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலத்தில் ஒருமின்னணு (எலக்ட்ரானிக்) தொழிற்பேட்டையை அமைக்க அரசு முடிவெடுத்திருக்கிறது. இத்திட்டத்தின் விவரங்கள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சேலத்தில் மின்னணு எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைக்கும்போது அது வெளிநாட்டு உதவியோடு அமைக்கப்படுகிறதா? அல்லது நம் அரசே அமைக்கப் போகிறதா? அங்கே என்ன என்ன பொருள்கள் உற்பத்தி செய்யப் பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, சேலத்திலே மின்னணு தொழிற்பேட்டை அமைப்பதற்கு சென்ற நிதிநிலை அறிக்கையில் ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு நாம் 10 லட்ச ரூபாயிலே செலவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த வகையில் சுமார் 20 ஏக்கர் நிலம் சேலத்திலே தனியார் இடம் 8 லட்ச ரூபாய் செலவில் ஆர்ஜிதம் செய்து அபிவிருத்தி செய்ய 2 லட்சம் ரூபாய் செலவும் செய்ய குறிப்பு ஒன்று இருக்கிறது. அந்தத் திட்டம் வெகு வேகமாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இப்பேட்டையில் தனியார் துறையில் தொழில்கள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிய கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலை.

316 (* வினா எண் 750) —திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத்துறை மூலம் புதிய சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவ அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. தருமபுரி மாவட்டம் அரூர் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவ அனுப்பப்பட்ட விண்ணப்பம் மாநில அரசின் பரிசீலனையிலும் உள்ளன. இதற்கான உரிமங்கள் பெறப்பட்டவுடன் இவ்வாலைகளை நிர்மாணிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இப்போது எத்தனை ஆலைகள் மத்திய அரசின் கிளியரன்ஸ்க்காக காத்து இருக்கின்றன என்ற விவரத்தையும் தனியார் துறையின் மூலமாக எத்தனை சர்க்கரை ஆலைகள் அமைக்க மனுக்கள் வந்திருக்கின்றன என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்போது 30 ஆலைகள் வேண்டுமென்று மைய அரசிடம் கேட்டிருக்கிறோம். ஏற்கனவே 10 ஆலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் 40 ஆலைகளுக்குப் பக்கமாகப் போட வேண்டியதாக இருக்கிறது. அறந்தாங்கியிலே மட்டும் கொஞ்சம் பிரச்னை இருக்கின்றது. அங்கே தண்ணீர் இல்லை, கரும்பு இல்லை என்ற பிரச்னை எல்லாம் இருக்கின்றது. அதை விவசாய இலாகா பரிசீலித்துச் சொல்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஆயிரம் குழாய்க் கிணறுகளைப் போடுவதற்கான திட்டமும் இடப்பட்டிருக்கிறது. மற்றபடி, நான் இந்தச் சட்டமன்றத் தொடர் முடிந்த பிறகு, மத்திய அரசிடத்திலிருந்து வெகு விரைவிலே இந்த உரிமங்களைப் பெற நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறேன் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சர்க்கரை ஆலைகளின் மூலம் கிடைக்கின்ற பை-ப்ராடக்ட்ஸைப் பயன்படுத்தி, தொழிற்சாலைகளை அமைப்பதற்குத் தனித் திட்டம் ஏதேனும் நம்மிடம் உள்ளதா? அப்படியென்றால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலை கழிவுப் பொருள்களிலிருந்து இப்பொழுது, கெம்ப்ளாஸ்ட் போன்ற பெரிய தொழிற்சாலைகள் உருவாகி, அதிலே இருந்து பிளாஸ்டிக் போன்ற பொருள்களைச் செய்கிறார்கள். அதற்கு மூலப்பொருள், சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கின்ற கழிவுப் பொருள்தான். அதைப்போல் பல்வேறு தொழிற்சாலைகள் அமைக்க சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இன்டஸ்ட்ரியல் ஆல் ஹால் என்று சொல்லக்கூடிய எரி சாராயம் சர்க்கரை ஆலை கழிவுப் பொருள்களிலிருந்துதான் செய்யப்படுகிறது. சர்க்கரை ஆலைகள் அதிகமாக நிறுவுவதன் மூலம், பல புதிய தொழிற்சாலைகள் மேலும் வருவதற்கான சாத்தியக்கூறுகள் நிரம்ப இருக்கின்றன.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூரில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்ய ஏற்பாடு செய்திருப்பது போல, தமிழ்நாட்டிலுள்ள சிறிய சிறிய ஆலைகளில் கிடைக்கும் கரும்புச் சக்கையிலிருந்து, அவர்கள் விரும்பினால், காகிதம் உற்பத்தி செய்ய, அவர்களுக்கு அனுமதி அளிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தற்போது புகளூரில் நல்ல அமைப்பாக காகித ஆலைகள் இருக்கின்றன. பக்கத்திலேயிருந்து கரும்புச் சக்கையை எடுத்துக் கொண்டு வந்து விட முடிகிறது. இப்பொழுது நாம் கேட்டிருக்கிற உரிமங்கள் கிடைக்குமானால், அவையும் பக்கமாக அருகிலே அமைக்கப்பட்டு, இன்னொரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு நல்ல சாத்தியக் கூறுகள் தமிழகத்திலே இருக்கின்றன.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்றை கோவையில் நிறுவுவதற்கு 1974-ல் ஷேர் காப்பிட்டல் எல்லாம் விவசாயிகளிடமிருந்து வாங்கப்பட்டது. அதற்குப் பின்னர் அந்த ஆலை நிறுவப்படவில்லை. எல்லா வாய்ப்பு வசதிகளும் அங்கே இருக்கின்றன என்ற முடிவோடுதான் ஆக்கபூர்வமான வேலைகள் துவங்கப்பட்டன. ஆகவே, மீண்டும் ஒரு சர்க்கரை ஆலையைக் கோவையிலே ஆரம்பிக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அதைப் பற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால் கூட்டுறவுத் துறையிலும் தனியார் துறையிலும் சர்க்கரை ஆலைகளை விரைவிலே துவங்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறது.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் தனியார் சர்க்கரை ஆலை அமைப்பதற்கு ஏதாவது மனு செய்திருக்கிறார்களா? ஏற்கனவே நெல்லை மாவட்டத்தில் 1976 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு லைசன்ஸ்கள் எல்லாம் வழங்கப்பட்டு, அரசு துரிதமான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் அந்தக் கூட்டுறவு ஆலை நிறுவுவது நிறுத்தி விடப்பட்டது. ஆகவே, வருகிற நிதி ஆண்டிலாவது, நெல்லை மாவட்டத்தில் வாசுதேவநல்லூரில், 10,000 15,000 ஏக்கர் நிலத்தில் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்து, ஆயில் மெஷின். இயந்திரங்கள் எல்லாம் உபயோகித்து, மண்டை வெல்லம் உற்பத்தி செய்து, அந்த விவசாயிகளுக்கு நிரந்தரமான விலை கிடைக்காத காரணத்தாலே, அதிலேயிருக்கிற இலாபத்தை இடைத்தரகர்களும், வியாபாரிகளும் அடித்துக் கொள்கிற காரணத்தினால், அந்த விவசாயிகளுக்கு நிரந்தரமான விலை கிடைப்பதற்கு, ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் வாசுதேவநல்லூர் தொகுதியில் கடந்த 1977-வது ஆண்டிற்குப் பின்னால், அந்தத் தொகுதியில் மட்டுமல்ல, கடையநல்லூர் தொகுதி, இராஜபாளையம்

தொகுதி, சங்கரன்கோவில் தொகுதி ஆகியவற்றின் சுற்று வட்டாரத்தில் எந்தத் தொழிற்சாலையும் கிடையாது. அவை விவசாயிகள் அதிகம் இருக்கிற பகுதி என்பதை அரசு அறியும். அந்த அடிப்படையிலே கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஆரம்பிக்க, ஷேர் காப்பிட்டல் கூட வசூலிக்கப்பட்டு விட்டது.......... (மணி அடிக்கப்பெற்றது).

(முற்பகல் 9-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு உறுப்பினர்களின் கேள்விகளுக்கும் சேர்த்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி விடட்டும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே சர்க்கரை ஆலை அமைக்கப்பட வேண்டும், கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும், இப்போது அவர்கள் நல்ல விலை பெறுவதில்லை என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களாக இருக்கின்றன. அது உண்மைதான். கரும்பை வெல்லமாக ஆக்குவதிலே ஒரு பிரச்னை. நம் காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் ஆலைகளிலே கொண்டு சென்று சாறு பிழிந்தால் 9.5 சதவீதம் அல்லது 10 சதவீதம் வரையில் கிடைக்கிறது. கரும்பு ஆலைகளில் கொண்டு சென்று பிழிந்தால் 4 சதவீதம் தான் கிடைக்கிறது. 6 சதவீதம் வீணாகிறது. அதனாலே தான் சர்க்கரை தட்டுப்பாட்டைக் குறைக்க மத்திய அரசு இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், எல்லாம் நல்ல முறையில் செய்யப்பட்டு, பொது மக்களுக்கு தேவையான சர்க்கரை கிடைக்கிறது. அதிக அளவில் சர்க்கரை ஆலைகள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. இன்னும் அதிகமான சர்க்கரை ஆலைகளைப் போட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறோம், அந்த வகையில் வருகிற காலத்தில் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளையும் கவனிக்கிற வகையில் ஆய்வு செய்ய இந்த அரசு முயற்சியை மேற்கொள்ளும்.

உடையார்பாளையத்திற்கு கொள்ளிடத்திலிருந்து குடிநீர்.

718—(*வினா எண் 409) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி உடையார்பாளையம் நகருக்கு கொள்ளிடத்திலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம் அரசுக்கு உள்ளதா?



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஆம். உடையார்பாளையம் நகரில் குடிநீர்த் திட்டத்தின் ஆரம்ப கட்ட ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே இதுகுறித்து விவாதம் எழுப்பப்பட்டபோது, அங்கேயிருந்த தலைமைப் பொறியாளர் உலக வங்கியின் உதவியுடன் இந்தத் திட்டம் விரைவிலே ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே அந்தத் திட்டத்தை விரைவிலே மேற்கொள்வதற்கு அரசு முன்வருமா? உடனடியாக அந்த ஊருக்குக் குடிநீர் வசதி செய்ய அரசு முன் வருமா, என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே 42.18 இலட்சம் மதிப்பீட்டில் உலக வங்கியின் உதவியுடன் இந்தத் திட்டம் செயல்பட இருக்கிறது. 1986-87-லே இந்தத் திட்டம் எடுக்கப்பட இருக்கிறது.

தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம்.

719 (*வினா எண் 1455)—திரு.கோ. வீரய்யன் திரு எம். செல்லமுத்து, மற்றும் திரு. பாப்பா சுப்பிரமணியன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடபாதிமங்கலத்தில் உள்ள தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், 1985 ஆம் ஆண்டு வரை ஏற்பட்டுள்ள மொத்த நஷ்டம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, (அ) அறியும்.

(ஆ) இதுவரையில் ஏற்பட்டுள்ள மொத்த இழப்பு ரூ. 96.54 லட்சங்கள்.

திரு. கோ. வீரய்யன்: தலைவர் அவர்களே, இந்த வடபாதி மங்கலத்தில் அமைக்கப்பட்டுள்ள கரும்புப் பண்ணைக் கழகம் என்பது உச்சவரம்புச் சட்டத்திலிருந்து நிலத்தை மறைப்பதற்காகவே உண்டாக்கப்பட்டது. அந்த விதிவிலக்கு ஏற்பாடு செய்ததற்குப் பிறகும் தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகமாகவே நடைபெற்றாலும், சென்ற ஆண்டு அரசுக்கு அதனால் 1 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இப்போதாவது அரசு அதைக் கலைத்து அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய

விவசாயத் தொழிலாளர்ககளுக்கு அந்த நிலத்தை வழங்கி, உச்ச வரம்புச் சட்டத்திலேவிதித்திருக்கக்கூடிய அளவுக்கு ஈடான நஷ்ட ஈட்டை அந்த நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து வசூலிப்ப தோடு மேற்கொண்டு நஷ்டம் வராமல் தடுக்கவும்: அந்தப் பகுதியிலே இருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த நிலங்களை பங்கிட்டுக் கொடுக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதையெல்லாம் அரசு ஆய்ந்துவருகிறது.

நிலக்கடலையைத் தாக்கும் கம்பளிப் பூச்சி.

720—(*வினா எண் 1729) திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கடலையைத் தாக்கும் சிவப்புக் கம்பளிப் பூச்சி முழுவதும் ஒழிக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) இல்லையெனில், அந்நிய உதவி கோரப்பட்டிருக் கிறதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலக்கடலையை தாக்குகின்ற சிவப்புக் கம்பளிப் பூச்சி மிகவும் விரைவாக வளர்கின்றன. மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டியைச் சுற்றியிருக்கிற யிபகுதியிலே, திருமங்கலம் பகுதியிலே, செக்காளம் போன்ற பகுதிலேயும் இந்தக் கம்பளிப் பூச்சிகள் அதிகமாக இருந்துக் கொண்டிருக்கின்றன. கடலை வேளாண்மையை முழுமையாகப் பாதிக்கின்ற முறையில் இந்தக் கம்பளிப்பூச்சியின் தொல்லை இருந்து வருகின்றனவே, ஆகையால் இதனை முழுமையாக அழிக்கின்ற அளவுக்கு என்ன நட வடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பயிர் பாதுகாப்பு மருந்து தெளிப்பதற்காக 120 ஹெக்டேருக்கு செலவழிக்கின்ற வகையில் 50 விழுக்காடு மானியமாகவும், 50 விழுக்காடு கடனாகவும் வழங்கப்படுகிறது. இந்தப் பூச்சிகளை கட்டுப்படுத்தக் கூடிய முயற்சிகளில், அந்தப் புழுக்கள் மண்ணுக் குள்ளேயே தங்கி வளர்ந்து மீண்டும் தோன்றுகின்ற வகையில் இருப்பதால், கோடையில் நிலத்தை உழுகின்றபோதே அந்தப்



புழுக்களை சேகரித்து அழிக்கக்கூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது, தாய் புழுக்கள் இரவில் தோன்றி மண்ணுக்குள்ளே முட்டையிட்டு வளர்ப்பதால், விளக்கு வெளிச் சங்களைக் கொண்டு அதனை அழிக்க முயற்சி மேற்கொள்ளப் படுகிறது. உயிரியல் முறையில் அதனைக் கட்டுப்படுத்த கோவை நகரத்தில் பாலி ஹைட்ரோஸில் வைரஸ் நிலையம் அமைக்கப் பட இருக்கிறது.

திரு. ஆர். தியாகராாசன்: தலைவர் அவர்களே, இப்போது மணிலா பயிரிடும் காலம். இப்போது அங்கே மணிலா பயிரிட்டு விட்டார்கள். அந்தப் பூச்சிகளை ஒழிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல வழிகளைச் சொன்னார்கள். இருந்தா லும் அந்தப் பூச்சிகள் முழுமையாக ஒழிக்கப்படவில்லை. இப் போது கொசு போன்ற பூச்சிகள் அந்த மணிலாப் பயிரில் உட் கார்ந்து அப்படியே அந்தச் சத்தை உறிஞ்சிவிடுவதால் பயிர் பாதிக்கப்படுகிறது. பூமிக்கு கீழேயும் பூச்சிகள் ஒழிக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஒருசில இடங்களில் ஒழிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் எந்த இடத்திலும் முழுவெற்றி பெற்றதாகத் தெரியவில்லை, எங்களுடைய பகுதியில் நாங்கள் அதிகமாக மணிலா பயிரிடக்கூடியவர்கள். எந்தக் காலத்திலும் உரிய பாசன வசதியை செய்து மணிலாப் பயிர் செய்வதால் இந்தப் பூச்சிகளை முழுமையாக ஒழிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே இந்தப் பூச்சிகளை முழுக்க முழுக்க எப்படி ஒழிக்கலாமென்று ஆராய்ந்து அதற்கான திட்டத்தை அரசு மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கனவே விவரித்தேன். மாண்புமிகு உறுப் பினர் இருக்கக்கூடிய மாவட்டத்தில் மணிலா பயிரிடும் விவசாயி கள் பயன்பெறும் வகையிலே தேசிய அபிவிருத்தி எண்ணெய் வித்து வாரியத்தின் மூலமாக 200 ரூபாய் ஏக்கருக்குச் செலவு என்றால் அதிலே மத்திய அரசு 100 ரூபாய் மானியமாக வழங்கி வருகிறது.

ரு. ε. என். இராமசாமி: தலைவர் அவர்களே, நிலக் கடலையை பயிர் செய்யும்போது எந்தவகையிலான பூச்சிகள் தாக்குகிறது என்று கண்டுபிடிக்க முடியாத நிலையில் இலைகள் எல்லாம் கெட்டுப்போய் விடுகிற நிலை ஏற்படுகிறது. ஆகவே விவசாயத் துறையில் போய் கேட்போம் என்றால் அதற்கு சரியான மருந்துகளை அவர்களும் சொல்ல இயலாமல் இருக் கிறார்கள். ஆகவே நிலக்கடலைப் பயிரைத் தாக்கும் பூச்சிகளை கண்டுபிடித்து ஒழிப்பதற்கு நல்லவகையான மருந்துகளை உடனடி யாக வழங்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[1986 ஜூலை 18

ஆலந்தூரில் வீடுகளுக்கு குடிநீர் குழாய்

721—(*வினா எண் 1915) திரு. ம. ஆபிரகாம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர்–பல்லவபுரம் நகராட்சியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர்க் குழாய்கள் பொருத்தும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆலந்தூர்–பல்லவபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு பழைய சீவரம், வாலாஜாபாத் ஆகிய இரண்டு இடங்களில் தலைமைப் பணியிடங்கள் நிர்ணயிக்கப்பெற்றுள்ளன. இவற்றில் பழைய சீவரம் தலைமைப்பணியிடம் முடிவுற்று இத்திட்டத்திற்கு பகுதி அளவு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. வாலாஜாபாத் தலைமைப்பணியிட வேலைகள் 1985 டிசம்பர் மாதத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வாலாஜாபாத் தலைமைப் பணியிடம் செயலுக்குக் கொண்டு வந்தால் இத்திட்டத்திற்கு தேவையான தண்ணீர் கிடைக்கும். அப்போது இவ்விரு நகராட்சிகளிலும் வீட்டிணைப்புகள் தரப்படும் என்று கருதப்படுகிறது.

திரு. ம. ஆபிரகாம்: தலைவர் அவர்களே, ஆலந்தூர்–பல்லவபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. ஆலந்தூரில் வீடுகளுக்கு குழாய் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்றும்அதேபோல பல்லவபுரத்தில் வீடுகளுக்கு குழாய் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்றும்மக்கள் விரும்புகிறார்கள். இரண்டு பகுதிகளும் சென்னை மாநகராட்சியை ஒட்டியிருக்கிற பகுதிகளாகும். மக்கள் எல்லாம் இந்தத் திட்டம் எப்போது வருமென்ற ஏக்கத்தில் இருக்கிறார்கள். அவர்கள் வீடுகளுக்கு குடிதண்ணீர் கிடைக்குமென்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். ஆகவே அந்த நம்பிக்கையைப் போக்க அமைச்சர் அவர்கள் வீடுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கிற இந்தத் திட்டத்தை போர்க் கால அடிப்படையில் எடுத்து மக்களுடைய ஏக்கத்தைப் போக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நம்பிக்கையை போக்கும் உத்தேசம் இல்லை. ஈடேற்றுவதாகத்தான் உத்தேசம் இருக்கிறது. 1985 டிசம்பர் மாதத்திற்குள் இந்தத் திட்டம் முடிக்கப்படும்.



1985 ஜூலை 18]

பத்மநாபபுரத்தில் விவசாயக் கல்லூரி.

722—(* வினா எண் 2152): திரு. வை. பாலச்சந்திரன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் நகராட்சிக் குட்பட்ட பகுதியில் விவசாயக் கல்லூரி நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கல்லூரி எப்போது நிறுவப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. பாலச்சந்திரன்: தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையின் நியாயத்தையும், அந்தப் பகுதிக்கு வேளாண்மைக் கல்லூரி தேவையென்பதையும் மனதிலே கொண்டு இனியாவது அந்த வேளாண்மைக் கல்லூரியை அங்கே அமைக்க அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வேளாண்மைக் கல்லூரி திருநெல்வேலி மாவட்டத்தில் கிள்ளிகுளத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அது நிச்சயமாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் பயன்படும்.

டாக்டர் தே. குமாரதாஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக்கொள்கிறபோது அங்கே புரபஷனல் கோர்ஸ் காலேஜ் என்று ஒன்று கூட இல்லையென்று பலமுறை எங்களுடைய மனக்குறையை சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்தில் இருக்கிறதென்று சொல்லி இருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி அமைத்துத் தர இப்போது முடியாது என்றாலும், ஒரு பழ ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக பல ஏக்கர் நிலம் அரசாங்கம் ஆர்ஜிதம் செய்கிற எண்ணத்தில் இருக்கிறதென்று அறிகிறேன். அங்கே ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியிலேயே பதில் இருக்கிறது. அங்கே பழ ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. தொடர்ந்து இன்னும் சிலவற்றை அமைப்பதற்கும் அரசு முற்படும்.

கொருக்குப்பேட்டை பகுதியில் குடிநீர்த் தொட்டி

723—(*வினா எண் 3183) : திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்துள்ள கொருக்குப்பேட்டை பகுதியில் உயர்மட்ட குடிநீர்த் தொட்டி ஒன்று அமைப்பதற்கென குடிசை மாற்று வாரியம் 1977–78 ஆம் ஆண்டிலேயே தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு பணம் அளித்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, (அ) சென்னை மாநகராட்சியின் குடிநீர் வழங்கு துறை மாநகராட்சியோடு இருந்தபோது இந்தப் பணம் அளிக்கப்பட்டது.

(ஆ) குடிசை மாற்று வாரியத்திடமிருந்து ரூ. 7.19 லட்சம் வைப்புத் தொகை பெற்றுக் கொண்ட பிறகு வினியோகக் குழாய்களும் பொதுக் குழாய்களும் கொருக்குப்பேட்டை பகுதியிலுள்ள குடிசைப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக ஓர் நிலமட்டத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம் அமைப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால், அவைகள் அமைப்பதற்கான நிலம் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறவில்லை. எனவே, ஒரு மாற்று இடத்திற்கு 1985-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் சென்னை மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து ஒப்புதல் பெற்ற பின் நிலமட்ட தொட்டி மற்றும் நீரேற்று நிலையத்திற்கான திட்டங்களுக்கு ஒப்பந்தக்காரரிடம் இவ்வாண்டு ஜூன் மாதம் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இப்பணி கூடிய விரைவில் தொடங்கப்படும்.

(முற்பகல் 9–50)

திரு. எஸ். வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, கொருக்குப்பேட்டைப் பகுதியில் இருக்கின்ற அந்தப் பகுதியிலே தொட்டி கட்டப்படுவதோடு மட்டுமல்லாமல், மேல்நிலைத் தொட்டி கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எது தேவையோ அது கட்டப்படும்.

திரு. எஸ். வேணுகோபால்: தலைவர் அவர்களே, இப்போது கட்டப்படுகின்ற தொட்டி பாரதி நகர், சிக்கந்திராபாளையம், அண்ணா நகர் போன்ற இடங்களுக்கு மட்டும் உள்ள அந்தத் தண்ணீர் பிரச்சனையை சரிக்கட்டும். ஆனால் நேதாஜி நகர், நேரு நகர் போன்ற இடங்களில் தண்ணீர் இல்லாத நிலை இருப்பதால் அங்கேயும் மேல்நிலைத் தொட்டி கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, காமராஜ் நகர், மீனாம்பாள் நகர், ஜீவா நகர் போன்ற அந்தப் பகுதிகளில் உள்ள 6 ஆயிரம் மக்களுக்காகத்தான் குடிசை மாற்று வாரியம் அந்தப் பணத்தைக் கட்டியிருக்கிறது. ஆகவே அதற்குரிய வகையிலேதான் நாம் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்.



திரு. வி. பி. சிந்தன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம் முதலிய அமைப்புகளிடமிருந்து குடிநீர், சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், மெட்ரோ நிர்வாகத்திற்கு ஏன் ஒப்படைக்கக்கூடாது? அப்படி ஒப்படைக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அதை ஒப்படைக்கக்கூடிய ஒரு கொள்கையை அரசு வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் கொள்கைப் பிரச்சினைக்குப் பதில் சொல்ல இயலாது.

திருவையாற்றில் ஆரம்பச் சுகாதார நிலையம்

724—(*வின எண் 1618): திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு மக்கள நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாற்றில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் இப்படி ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் உத்தேசம் இல்லை என்பதைப் போல சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவையாறுக்கு, பல மாவட்டங்களில் இருந்து—தியாகராஜர் உற்சவம் மற்றும் சப்த ஸ்தானம் என்பது போன்ற பல்வேறு திருவிழாக்கள் நடக்கின்றன—மக்கள் அதிகமான அளவில் வருகிறார்கள். ஆனால் இப்போது அங்கே இருக்கிற மருத்துவமனை மிகக் குறுகிய இடத்திலே இருக்கிறது. எனவே அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தி நல்ல படுக்கைகளைக் கொண்டதாக அமைத்துத் தருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச் வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறைப் பொறுத்தவரையிலும், அங்கே ஒரு பெரிய மருத்துவ மனை தேவை என்பதை மாண்புமிகு கொறடா அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள். நானும் அந்த இடத்தைப் போய்ப் பார்த்து இருக்கிறேன். இப்போது செயல்படுகின்ற அந்த மருத்துவமனை மிகக் குறுகிய சிறிய இடத்திலே இருக்கிறது. அங்கே நில ஆர்ஜிதம் செய்வது என்பது ஒரு

பிரச்சினையாக இருக்கிறது. ஒரு சென்ட் நிலத்தைக்கூட யாரும் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். எனவே வேறு சட்டம் மூலமாக நில ஆர்ஜிதம் செய்யலாமா என்று பார்த்துக் கொண்டு இருக்கிறோம். நமக்குத் தேவைப்படுகின்ற அந்த இடம் கிடைத்து விட்டால், உடனடியாக அதைப் பெரிய மருத்துவமனையாக விஸ்தரிப்பதிலே எந்தவிதமான சங்கடமும் இருக்காது.

## தாலுக்கா மருத்துவமனைகளுக்கு வாகன வசதி

725—(*வினா எண் 1894): திரு. மு. தங்கமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாலுக்கா மருத்துவமனைகளில் நோயாளிகளை ஏற்றிச் செல்ல பயன்படும் வகையில் அவசர வாகன வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

திரு. மு. தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் அரசு மருத்துவமனை ஒன்று இருக்கிறது. அது ஒரு தாலுக்கா மருத்துவமனை. அந்த மருத்துவமனைக்கு பூம்புகார், குத்தாலம் போன்ற பகுதிகளிலிருந்து மக்கள் சிகிச்சைக்காக வருகிறார்கள். அப்படி வருகின்றபோது அந்த ஏழை எளிய மக்களுக்கு அங்கே அவசர சிகிச்சை அளிக்க முடியாத காரணத்தால் தஞ்சை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லவேண்டியிருக்கிறது. அப்படி நோயாளிகளை எடுத்துச் செல்வதற்கு வேண்டிய வாகன வசதிகள் இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும், வருகின்ற ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வாகன வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவான ஒரு கேள்வியைக் கேட்டு இருக்கிறார்கள். மூலக்கேள்விக்கான விடையை நான் தற்போது அளித்து இருக்கிறேன். தற்போது 50 படுக்கைகளுக்கு மேல் உள்ள 56 தாலுக்கா மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்கப்பட்டு உள்ளது, அத்தோடு ஆக்சிடென்ட் எமர்ஜென்சி சர்வீஸ் என்று நாம் ஏறக்குறைய 8 கோடி ரூபாய் அளவிற்கு இன்றைய தினம் நல்ல புதிய வகையில் ஒரு ஸ்கீமைக் கொண்டு வந்து பல்வேறு மாவட்டங்களில் அது நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. அது விரைவில் எல்லா மாவட்டங்களுக்கும் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, சில தாலுக்கா மருந்தகங்களில், ஆஸ்பத்திரிகளில் வாகனங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவசரகாலத்திற்கு அதை உபயோகப்படுத்த முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி இருக்கும் வாகனங்களை உடனடியாக ரிப்பேர் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆம்புலன்ஸ் வண்டிகளைப் பொறுத்தவரையில் நம்முடைய நல்வாழ்வுத் துறையில் இருக்கக்கூடிய Transport டிபார்ட்மென்டைப் பொறுத்தவரையில் நம்மிடத்தில் இருக்கக்கூடிய வண்டிகளினுடைய எண்ணிக்கையில் முன்பு எல்லாம் 25 சதவீதம் Non-road worthy ஆக இருந்ததை நாம் இப்போது 11 சதவீதமாக குறைத்து இருக்கிறோம். அகில இந்தியாவிலே நாம் 2-வது இடத்தைப் பெற்று இருக்கிறோம். மகாராஷ்டிரம் 7 சதவீதமாக ஆக்கியிருக்கிறது. புது வண்டிகளை வாங்கியிருக்கக்கூடிய காரணத்தால் குறைந்து இருக்கிறது. மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது நாம் முதல் இடத்தில் இருக்கிறோம். இன்னும் குறைக்கவேண்டும் என்று நாம் திட்டமிட்டு இருக்கிறோம். அதற்காக திருச்சி போன்ற பல்வேறு இடங்களில் ரிப்பேர் செய்வதற்காக மையங்கள் ஏற்படுத்தப்பட்டு வண்டிகளை உடனடியாக ரிப்பேர் செய்வதற்காக ஏற்பாடு செய்து இருக்றோம். சில நேரங்களில் அந்த வண்டிகளை கண்டம் செய்த பிறகு தான் அதை மாற்ற முடியும். அந்த condemnation process-க்குகூட காலதாமதம் ஆகக் கூடாது. கண்டம்ன் செய்வதற்கு உரிய வண்டிகளை உடனடியாக கண்டம்ன் செய்ய வேண்டும் என்று நாம் ஆணை பிறப்பித்து இருக்கிறோம்.

திரு. மு. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது 56 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளுக்கு அவசர ஊர்திகள் இருப்பதாகச் சொன்னார்கள். மயிலாடுதுறையில் உள்ள அரசு மருத்துவ மனையில் 110 படுக்கைகள் இருக்கின்றன. அதைப்போலவே மன்னார்குடியில் உள்ள அரசு மருத்துவ மனையில் 140 படுக்கைகள் இருக்கின்றன. இதுபோன்ற மருத்துவ மனைகளில் ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு வருகின்ற ஆண்டிலாவது அவசர ஊர்தி அமைத்துத் தருமாறு பொது மக்கள் சார்பாக வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லுகிற போதே இந்த தாலுக்கா மருத்துவ மனைகளுக்கு வாகன ஊர்தி தற்போது இல்லை என்று சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்ளுவது, தாலுக்கா மருத்துவ மனை என்று சொல்லுகிற போது குறிப்பாக பெரிய நகரங்களுக்கு மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி போன்ற இடங்களில் சாதாரண விவசாயத் தொழிலாளர்களுக்கு திடீர் என்று ஆப்பரேஷன் என்று சொன்னால் நாகப்பட்டினம், தஞ்சாவூர் போன்ற இடங்களுக்கு அனுப்புகிறார்கள். ஆனால் அந்த அளவுக்கு 400 ரூபாய், 300 ரூபாய் வாடகை கொடுக்க முடியாதவர்களாக பெரிதும் பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு காலத்தைக் கடத்தாமல் அவசர உணர்வோடு இப்படிப்பட்ட பின் தங்கிய பகுதிகளுக்கு 1986–87 ஆண்டிலாவது முன்னுரிமை வழங்கி இந்த ஊர்திகளை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய இலாகாவில் 1400 வண்டிகள் இருக்கின்றன. இன்னும் கூடுதலாக நமக்கு வண்டிகள் தேவை என்பதிலே, வண்டிகள் வாங்க வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. அதனால்தான் ஏற்னெவே மூலக் கேள்விக்குபதில் சொல்லும்போது அதற்கு இல்லை என்று சொன்னதற்கு காரணம் படிப்படியாகத் தான் நாம் செய்ய முடியும். நிதி நிலைகளுடைய விஷயங்களை எல்லாம், குறிப்புகளை எல்லாம் பார்த்து அந்த எல்லைக்குள்தான் நாம் செயல் ஆற்ற முடியும். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து கவனத்தில் கொள்ளப்படும். உடனடியாக எந்த விதமான வாக்குறுதியும் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தாலுக்கா தலை நகர் மருத்துவமனை பற்றிச் சொன்னார்கள். நாகை மருத்துமனை, தாலுக்கா தலை நகரத்தில் இருக்கக் கூடிய அந்த மருத்துவ மனை மாவட்ட மருத்துவ மனை ஆகும். அந்த மாவட்ட மருத்துவ மனையில் இருக்கக் கூடிய அவசர ஊர்தி கூட மிகவும் பழுதடைந்த பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது எனவே மாவட்ட மருத்துவமனையாக இருப்பதால் அதற்கு இந்த ஆண்டில் ஒரு அவசர வாகன வசதியை புதிய வாகனத்தை வாங்கித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள கோரிக்கை உடனடியாகக் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

பன்றி வளர்ப்புக்குக் கட்டுப்பாடு.

726—(*வினா எண் 2219): திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார்கள் வளர்த்து வரும் பன்றிகளின் நடமாட்டத்தினால் மூளைக் காய்ச்சல் போன்ற தொற்று நோய் பரவ ஏதுவாகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், பன்றிகளைக் கட்டுப்படுத்தி வளர்ப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்து உள்ளதா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, (அ) மூளைக் காய்ச்கல் பன்றிகளின் மூலம் மனிதனுக்குப் பரவுகிறது என்பது உண்மை.

(ஆ) இதற்குச் சட்டத்தில் வழி வகுக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10.00)

திரு வி. எஸ். டி. சம்சுல் ஆலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித்தலைவரும், நகர சபை அதிகாரிகளும் பல முறை நடவடிக்கை எடுத்தும்கூட அதனுடைய நடமாட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் பல கேடுகள் ஏற்படுகின்றன. இதனால் சாலை விபத்துகள்கூட அநேகமாக ஏற்படுகின்றன. பல இடங்களில் புறவாசல் வழியாக வீட்டுக்குள் இவைகள் வந்து விடுகின்றன. துர்நாற்றம் உள்ள சாக்கடை நீர் உள்ள இடங்களில் அதனுடைய தொந்தரவினால் அதனுடைய துர்நாற்றம் பக்கத்தில் உள்ள இடங்களுக்கு பரவி அதனால் பல கேடுகள் விளையக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. இதை அவசரமான ஒரு கருத்தாக எடுத்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கட்டுப்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்டப் பிரிவு 249-ன் படி மாவட்ட மாஜிஸ்திரேட்டு ஆணையிட்டால் உரிமை பெறாத பன்றிகள் குறிப்பிட்ட பகுதிகளில் திரிந்து கொண்டிருந்தால், அவைகள் அழிக்கப்படும் என்று நகரசபை பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்த பின்பு, பொதுமக்கள் கூட அவற்றை அழித்துவிடலாம். நகரசபை அழிப்பதற்கும் வழிவகை இருக்கிறது. அதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற நகரங்களில் இன்றையதினம் பன்றிகள் ஏராளமாக அனுமதியில்லாமல் வளர்க்கிறார்கள். அதனாலே குடிசைவாழ் மக்களுக்கும் மற்றவர்களுக்கும் இடைஞ்சலாக இருக்கிறது, நகரசபை மூலம் அந்தப் பன்றிகளை வளர்ப்பது தடுக்கப்படுமா அல்லது லைசென்சு பெறாமல் இருக்கிறவை குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சமுண்கம்: தலைவர் அவர்களே, குடிசைவாழ்பகுதி மக்கள்தான் பன்றிகளை வளர்க்கிறார்கள் அவர்களுக்கே தொந்தரவு என்றால் அவர்கள் வளர்க்காமல் விட்டுவிட வேண்டும். ஆனால் உரிமம் இல்லாமல் வளர்க்கிற பன்றிகள் அழிக்கப்படும் என்று நகரசபை ஆணை இடவேண்டும். ஆணையிட்டவுடன் தகுந்த நடவடிக்கை எடுத்து, அவைகளை அழிக்கலாம்.

திரு ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமக்கு எல்லாம் பாலைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற பசுக்கள், எருமைகளை எல்லாம் புறநகரிலே வளர்ப்பதற்கு மத்திய அரசின் உதவியுடன் திட்டங்கள் தீட்ட தமிழக அரசு முனைந்து இருக்கிறது. அந்த வகையில் புறநகர் பகுதிகளில் இந்தப் பன்றிகள் வளர்க்கப்படுவதற்குத் தனி இடம் ஒதுக்கி அவைகளை வளர்க்க அரசு ஆவன செய்யுமா? அப்படி ஏதும் திட்டங்கள் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம்: தலைவரவர்களே, இப்போது இருக்கிற சட்டப்படியே அருகில் இருக்கிறவர்களுக்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல்தான் பன்றிகள் வளர்க்கப்பட வேண்டும் என்று சட்டவிதி இருக்கிறது. அப்படி எங்காவது வளர்க்கப்படுமானால், நகரசபைக்குத் தெரிவித்தால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அவிநாசி மருத்துவமனை.

727—(*வினா எண் 2162): திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசியில் உள்ள மருத்துவமனையை சேலூருக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): அவினாசி ஆரம்பச் சுகாதார நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலேயே அப்பணியைத் துவக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-4-84 அன்று ஜி.ஓ.எம்.எஸ். எண். 5?8-ல் Upgrading the Avinashi Primary Health Centre என்கிற ஒரு ஆணையை நாம் பிறப்பித்து இருக்கிறோம். அதற்குப் பிறகு, 'டைரக்டர் ஆஃப் மெடிகல் சர்வீஸஸ் அண்டு ஃபேமிலி வெல்ஃபேர் அவர்கள் அதை ஒரு பெரிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக ஆக்கலாம் என்ற கருத்தினை எடுத்து வைத்து இருக்கிறார்கள். அப்படிச் செய்தால், மத்திய அரசாங்கத்திற்கு இவ்வளவு நாம் முடிக்கிறோம் என்று சொல்லி இருக்கிறோம், அந்த இலக்கை நாம் எட்ட முடியும் என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி உடனடியாக நல்ல வகையிலே பயனுள்ள பெரிய ஆஸ்பத்திரியாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் அதிகமானவர்கள் மருத்துவமனைக்கு செல்ல அவதிப்படுகின்றனர். எனவே, வெகு விரைவில் மாற்றி ஏற்பாடு செய்யக் கேட்டுக் கொள்வதுடன், எத்தனை படுக்கைகள் கொண்டதாக அமையும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இதை அப்கிரேடட் ப்ரைமரி ஹெல்த் சென்டராக மாற்றுவதனால், 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக ஆக்கப்படும்.

### மேலூர் மருத்துவ மனையில் புதிய பிரிவுகள்.

728—(*வினா எண் 2315: திரு க. வெ. வீராணம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி மேலூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு (Emergency and Casuality Ward) மற்றும் விபத்துப் பிரிவு (Accidental Ward) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இல்லை.

## கீழ்கோத்தகிரி மருத்துவ மனை.

729—(*வினா எண் 3575): திரு கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கீழ்கோத்தகிரியில் அரசு மருத்துவ மனையின் கட்டுமான பணிகள் எப்போது ஆரம்பிக்கப் பட்டன?

(ஆ) அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன?

(இ) பணி எப்பொழுது முடியும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, (அ) 1984 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) 11.50 லட்சம் ஆகும்.

(இ) 1985 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு கே. உச்சி: தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக கீழ்கோத்தகிரியில் மருத்துவமனை இல்லை என்ற குறையைத் தீர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே உள்ள மருத்துவமனை எத்தனை படுக்கைகள் கொண்டதாக அமையும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையைப் பொறுத்த வரையிலே நாம் முதலிலே சாங்ஷன் செய்திருந்தோம். அந்த சாங்ஷனுடைய அடிப்படையிலே, 5 இலட்சத்து 15 ஆயிரத்து 500 ரூபாயாக இருந்தது. இப்போது 11 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயாக நாம் அதனை உயர்த்தி இருக்கிறோம். அந்த மருத்துவமனையில் 24 படுக்கைகள் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கே. உச்சி: தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையில் அவசர காலப் பிரிவு மற்றும் எக்ஸ்ரே போன்ற பிரிவுகளையும் உடனேயே அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா வகையான வசதிகளும் அந்த இடத்திலே ஏற்படுத்தப்படும். எக்ஸ்ரே என்று கேட்டு இருக்கிறார்கள். எக்ஸ்ரே பிரிவையும்கூட அங்கே ஆரம்பிக்க வேண்டும் என்றுதான் திட்டமிட்டு இருக்கிறோம். முதலிலே அதற்கு காத்திராமல், உடனடியாக மருத்துவமனை ஆரம்பித்து பிறகு ஒரு 6 மாத காலத்திற்குள்ளே எக்ஸ்ரே பிரிவையும் அங்கே கொண்டு வந்து வைக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு கே. கல்லன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல மருத்துவமனைகளில் குவார்ட்டர்ஸ் இல்லாத காரணத்தால் சரியாக இயங்கவில்லை. மருத்துவமனை கட்டுவதற்கு முன் குவார்ட்டர்ஸை கட்டுவதினால் நல்ல வசதியாக இயங்க முடியும். நீலகிரியைப் பொறுத்தவரையில் வெளியிலே இருந்து வருகிறவர்கள் அதிக நாள் அங்கே வேலை செய்வதில்லை. எனவே அங்கே வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கேள்வி கேட்டு இருக்கிறார்கள். குவார்ட்டர்ஸைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். குவார்ட்டர்ஸ் அமைக்கப்படும். இரண்டாவது கேள்வியைப் பொறுத்தவரையில் கொள்கை ரீதியாக அந்த மாவட்டத்திற்கு மருத்துவர்கள் நியமிப்பதைப் பற்றி கேட்டு இருக்கிறார்கள். அதற்கு இந்த கேள்வி நேரத்திலே பதில் கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

## கிண்டி தொழிற்பேட்டையில் புதிய தொழிற் கூடங்கள்.

730 (*வினா எண் 1226):—திரு. சா. துரைசாமி: மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி தொழிற் பேட்டையில் சிறு தொழில்கள் தொடங்க புதிதாக ''பிளாட்கள்'' வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தொழிற் கல்வி படித்து வேலையில்லாமல் இருக்கும் மாணவர்களுக்கு இந்த பிளாட்கள் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆரூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) விண்ணப்பதாரர்களின் தொழில் நுட்பத் தகுதி, தொழில் அமைப்பு, நிதி வசதிக்கான ஏற்பாடு திட்டத்தின் செயல்முறை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மேம்படுத்தப் பட்ட மனைகள் சிறு தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்படும், வேலையற்ற தொழில் நுட்பத் தகுதிபெற்ற மாணவர்களுக்கு தனியாக முன்னுரிமை வழங்கப்படுவதில்லை.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒதுக்குகின்ற மனைகளில் ஐ.டி.ஐ., பாலி டெக்னிக், பொறியியல் கல்லூரிகளில் படித்துவிட்டு வருகின்ற மாணவர்களுக்கு எல்லாம் அவர்களை உற்சாகப்படுத்துகின்ற வகையிலேயும், அவர்கள் படித்த அந்த தொழிற் கல்வியை வைத்து வாழ்க்கையில் முன்னேறுகின்ற வகையிலும் அப்படிப் பட்ட அரசு அளிக்கின்ற சலுகையில் முன்னுரிமை இல்லை யெனினும், இனிமேலாவது அரசு பரிசீலனை செய்து, புரட்சித் தலைவருடைய அரசு அப்படிப்பட்ட பிற்படுத்தப்பட்ட நிலையில் இருக்கிற மாணவர்களைக் கைதூக்கி விடுகின்ற அரசு என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் அந்தப் பணியை மேற்கொள் வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணப்பதாரர்களுடைய தொழில் நுட்பத் தகுதி, தொழில் அமைப்பு, நிதி வசதிக்கான ஏற்பாடு திட்டத்தின் செயல்முறை ஆகியவை ஏறத்தாழ சமமாக இருந்தால் தொழிற் கல்வி படித்து, வேலை அற்று இருக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதில் சிக்கல் ஏதும் இல்லை. அரசு பரிசீலிக்கலாம்.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிண்டி தொழிற்பேட்டையில் அதிகமான காலி இடங்கள் இருக்கின்றன. எனவே, அவைகளை நல்ல முறையில் பயன்படுத்தி 'டைனி செக்டார்' என்கின்ற சிறிய தொழில் கூடம் அமைக்கின்ற பணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற் கொள்வார்களா? அதோடு, மேம்பாட்டு மனைகள் நடப்பு நிதி ஆண்டிலே வழங்குகின்ற உத்தேசம் உள்ளதா? அப்படி என்றால், எத்தனை மனைகள் வழங்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 408 ஏக்கர் திரு.வி.க. தொழிற்பேட்டைக்காக 2, 3-வது 5-ஆண்டுத் திட்ட காலத்தில் கையகப்படுத்தப்பட்டது. ஏறக்குறைய தொழில் கூடங்கள், டான்சி யூனிட்டுகள், ஐ.டி.ஐ. முதலியவைகளுக்காக 220 ஏக்கர் பயன்படுத்தப்பட்டது. மேம்படுத்தப்பட்ட மனை களுக்கு 162 ஏக்கர் ஒதுக்கப்பட்டு, இப்போது பயன்படுத்தப் பட்டு வருகிறது. மீதியுள்ள பகுதி மிகக் குறைந்த பகுதி, 25 ஏக்கர் தான் இருக்கிறது. அந்த 25 ஏக்கரும் மிகவும் தாழ்வான பள்ளம், மேடான பகுதியாக இருக்கிற காரணத்தால், அந்த 25 எக்கரில் 23 ஏக்கரை, 46.18 இலட்சம் ரூபாயில் மேம் படுத்தப்பட்ட மனைகளாக மாற்ற அரசு அனுமதித்துள்ளது. இப்போது முதல் கட்டமாக 10 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்து, 1985-லே அந்தப் பணிகள் முடிவு அடையும். அதற்குப்





பிறகு மேம்படுத்தப்படுத்தப்பட்ட மனைகளாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் டைனி செக்டார் ஏறக்குறைய 110 தற்போது உள்ளது.

(முற்பகல் 10-10)

செயற்கை வைரத் தொழில்.

731—(*வினா எண். 1734): திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

செயற்கை வைரத் தொழிலை குடிசைத் தொழில் அட்ட வணையில் சேர்க்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர் களே, ஆம். தற்போது உள்ள குடியிருப்பு பகுதியாக அறிவிக்கப் பட்ட இடங்களில் 5 குதிரை திறனுக்கு மிகைப்படாத மின் இணைப்புடன் இயங்க அனுமதிக்கக்கூடிய குடிசைத் தொழில் களின் பட்டியலில் அநேக சிறு தொழில்கள் இடம் பெறவில்லை. இப்பட்டியலில் தகுதி வாய்ந்த சிறு தொழில்கள் அனைத்தையும் இடம் பெறச் செய்யும் வகையில் இப்போதுதிருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது பட்டியலில் சிறு தொழில்கள் சேர்க்கப்படும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால்,செயற்கை வைரம் செய்பவர்கள் தமிழகத்தில் அதிகம் பேர் உள்ளனர். அதிலும் அந்தத் தொழிலைப் பெரிதாகச் செய்வதற்கான பணம் அதிகமாக இல்லை. எனவே, குடிசைத் தொழில் மூலம் அவர்களைச் சேர்த்துக் கடன் வழங்கி அவர்கள் தொழில் வளர்ச்சி அடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: பேரவைத் தலைவரவர்களே, நான் இப்பொழுது குறிப்பிட்டதைப்போல தற்போதுள்ள பட்டியலில் அது இடம் பெறவில்லை; பட்டியலில் சேர்த்த பிறகு நிச்சயமாகப் பரிசீலித்து உதவிகள் செய்யப் படும்.

முதியோர் உதவித் தொகை.

732—(*வினா எண்.185):—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தகுதியுள்ள அனைத்து முதியோருக்கும் 'முதியோர் உதவித் தொகை' வழங்கும் சிறப்புத் திட்டங்கள் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கூடுதலான உதவித் தொகை எத்தனை பேருக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, (அ) அரசாணை (பலவகை) எண். 2060. சமூக நலம், நாள் 22-8-84-ன்படி, 15-8-84 வரை காத்திருப்போர் பட்டியலில் உள்ள அனைத்து நபர்களுக்கும் முதியோர் உதவித் தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) கூடுதலாகப் பயனடைந்தோரின் எண்ணிக்கை 80,393. முதியோர் உதவித் தொகைத் திட்டத்தினால், தற்போது மொத்தம் 2,80,032 நபர்கள் பயனடைகிறார்கள்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவித் தொகை வழங்கும் இத்திட்டம் சமூகநலத் துறையினுடைய திட்டமாக இருந்தாலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் பணி வருவாய்த் துறை அதிகாரிகளிடம்தான் ஒப்படைக்கப்படுகிறது. வருவாய்த் துறை அலுவலர்கள் பற்றாக்குறையின் காரணமாகவும், அவர்களுக்குள்ள வேலைப் பளுவின் காரணமாகவும் இந்தத் திட்டங்கள் தாமதப்பட்டு வருகின்றன. எனவே, சமூக நலத்துறை அலுவலர்களைக் கொண்டே இந்தத் தகுதியான முதியவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியைச் செய்ய அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எந்த இடத்தில் அம்மாதிரியான ஒரு நிலை, அதாவது சரியான முறையில் மக்களை அணுகி, உதவித் தொகை கிடைக்காத அளவிற்கு அதிகாரிகள் செய்தார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டால் அதையும் அரசு ஏற்று பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சமூக நலத்துறையே ஏற்று உதவித் தொகை வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதையும் அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது முதியவர்கள், அவர்களாகவே விண்ணப்பம் போட்டு, அதன் பிறகு அந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் கிராமப்புறங்களில் உள்ள முதியவர்களுக்கு கிட்டத்தட்ட அனாதைகளாக இருப்பவர்களுக்கு, ஆதரவற்று இருப்பவர்களுக்கு இந்தத் திட்டம் பற்றியே தெரியாத சூழ்நிலை இருப்பதால் சமூக நலத்துறையைச் சார்ந்த அலுவலர்களே கிராமங்களுக்குச் சென்று தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்ற முறையில் அரசு திட்டங்களை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமங்களில் கிராம நல ஊழியர்கள் என்று வைத்து, அதன் மூலமாக இந்தத் திட்டங்களைப் பற்றி விளம்பரப்படுத்தி மக்களுக்கு எடுத்துக்காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். பல இடங்களில் அப்படித் தெரியவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும், சமூநலத் துறை ஏற்று செயல்படுத்த வேண்டுமென்பதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் 15-8-84 வரை காத்திருப்போர் பட்டியலில் இருக்கின்ற ஏறத்தாழ எண்பதாயிரத்திற்கும் அதிகமான பேர் இதனால் பலன் அடைந்திருக்கிறார்கள் என்று கூறினார்கள். அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில் 2 இலட்சத்து எண்பதாயிரம் பேர் இதுவரையில் பயன் பெறுவதாகக் கூறுகிறார்கள், ஏறக்குறைய ஐந்து கோடி மக்கள் தொகை இருக்கின்ற தமிழகத்திலே நிறையபேர் இந்தப் பட்டியலிலே விடுபட்டவர்களாக இருக்கிறார்கள். உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், 15-8-1984—க்குப் பின்னாலே கொடுத்தவர்களுக்கு எப்பொழுது அந்த நிதி கிடைக்கும்? மாண்புமிகு திரு. செம்மலை அவர்கள் குறிப்பிட்டதுபோல, இன்னும் நிறைய பேர்கள் இருக்கிற காரணத்தாலே அத்தனை பேரையும் ஒட்டு மொத்தமாக எடுக்க அரசாங்கம் என்ன திட்டமிட்டிருக்கிறது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: 15-8—1984 முதல் 22—8-1984 வரை எத்தனை பேர்கள் காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறார்களோ, அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. விடுபட்டவர்கள் எத்தனை பேர்கள் என்று அதையும் குறிப்பிட்டால், நிச்சயமாக அவர்களுக்கும் கொடுக்கப்படும். அதற்குப் பிறகும் இருப்பவர்களுக்கு அரசு பரிசீலித்துக் கொடுக்கும்.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரிடமிருந்து ஒன்றை அறிய விரும்புகிறேன். ஆண்டுக்கு இவ்வளவு பேருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று ஏதேனும் நிபந்தனை—கோட்டா—உண்டா? அல்லது மனிதாபிமான நிலையைப் பார்த்து பரிசீலனை செய்யப்பட்டு, வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு இவ்வளவு பேர்கள் என்ற ஒரு கணக்கு இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து எவ்வளவு மனுக்கள் வருகின்றனவோ, அந்த மனுக்களின் அடிப்படையில் நம் அரசு பரிசீலித்து, அவர்களுக்கு முதியோர் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,
முதியோர்களுக்கு வழங்கப்படும் அந்த உதவித் தொகையானது
ஆண்டுதோறும் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதம் தொடர்ந்
த ற்போல் அவர்களுக்குக் கிடைக்காமல்
இப்பொழுதுகூட 3 மாதம் இருக்கிறது.
அவர்கள் அவதிப்படுகிறார்கள். உதவித் தொகை கிடைக்காமல்
காத்திருக்க வேண்டிய முதியோர்கள், அன்றாட செலவுக்கே
3 மாதங்கள் தொடர்ந்தாற்போல் இப்படி வருடத்திற்கு
கிறார்கள். இனிமேலாவது கிடைக்காமல் அவதிப்படு
அவர்களுக்கு உதவித்தொகை ஆண்டுதோறும் தொடர்ந்து
ஆவனச் செய்வார்களா என்று கொடுக்க அமைச்சர் அவர்கள்
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜனவரி, பிப்ரவரி,
மார்ச் ஆகிய மூன்று மாதங்களில் சரியான முறையில் முதியோர்
உதவித் தொகை கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள்.
எந்த இடத்தில் எவ்வளவு பேர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற
ஒரு விவரத்தைக் கொடுத்தால், அரசு அதை ஏற்று அவர்
களுக்கும் கொடுக்கப்படும். அந்த மாதிரி இனிமேல் நடக்காத
அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வருவாய்த்துறை அலுவலகத்தில் மனு செய்கின்ற
பொழுது பின்னால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க
நாம் கிராம நிர்வாக அதிகாரிகளை அனைத்துப் பகுதிகளிலும்
நியமித்திருக்கிறோம். அவர்களின் வாயிலாக வருகின்ற
விண்ணப்பங்களை, சமூக நலத்துறை பரிசீலனை செய்ய ஒரு
மாற்று ஏற்பாட்டைச் செய்வார்களா?

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதியோர் உதவித்தொகை
கிடைக்காத இடங்கள் எது என்ற விவரத்தைக் கேட்டார்கள்.
சென்னை மாவட்டத்தில் எல்லாப் பகுதிகளிலும் 3 மாத
காலமாக முதியோர் உதவித் தொகை யாருக்கும் கிடைக்க
வில்லை. ஆகவே சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரைக்
கேட்டாலே விவரம் தெரியும். ஆகவே சென்னை மாவட்டத்தில்
எல்லா இடங்களிலும் 3 மாதங்களாக முதியோர் உதவித்
தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அது கிடைக்க
அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, அரசு பரிசீலித்து அவர்கள் எல்லோருக்கும் முதியோர்
உதவித் தொகை கொடுக்கப்படும்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த முதியோர் ஓய்வு ஊதியத்திற்காக உரியவர்
களிடத்திலே மனு செய்தவுடன் ஒரு குறிப்பிட்ட காலத்தில்,
ஒரு மாத காலத்திற்குள்ளாகவோ, அல்லது இரண்டு மாத



காலத்திற்குள்ளாகவோ வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? இப்பொழுது சில பெரியவர்கள், தாய்மார்கள் கொடுத்துவிட்டு ஓராண்டுகூட காத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தவிர்க்கப் படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்களில் என்ன, என்ன கேட்டிருக் கிறார்களோ, அந்தச் சான்றிதழ்கள் எல்லாம் கொடுத்து, சரியான தகுதியின் அடிப்படையில் இருந்தால், நிச்சயமாக அவர்களுக்கெல்லாம் கிடைத்திருக்கும். ஓராண்டு காத்திருக்க வேண்டியிருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். அது மாதிரி நடக்காத அளவுக்கு அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் ஓய்வூதியங்களுக்காக நான் சட்டமன்ற உறுப்பினரானதற்குப் பின்னாலே இதுவரை 2,500 விண்ணப்பங் களிலே கையெழுத்திட்டு பரிந்துரை செய்திருக்கிறேன். ஆனால், இதுவரை யாருக்கும் கிடைக்கவில்லை. ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து அந்த விவரம் எல்லாம் இங்கே அரசுக்கு வந்தவுடன் அதை ஏற்று அரசு முடிவெடுக்கும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் பென்ஷனைப் பொறுத்தமட்டிலும் ஒரு ஜில்லாவிற்கு இவ்வளவுதான் என்று கோட்டா வைத்து, ஒரு தாலுகாவிற்கு இவ்வளவுதான் முதியோர் பென்ஷன் கொடுக்கப் படும் என்று திட்டமிட்டிருக்கிறது. மேலும் ஓய்வூதியம் பெறும் முதியோர் இறந்தால்தான் அடுத்தவருக்குக் கொடுக்கின்ற நிலை இருக்கிறது. தாசில்தாரிடமும் கலெக்டரிடமும் சொன்னால், எங்களுக்கு இவ்வளவுதான் கோட்டா வைத்திருக்கிறார்கள், அதற்கு மேல் கொடுக்க இயலாது என்று சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, முதியோர் பென்ஷன் கேட்டு அப்ளை பண்ணிய அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் எவ்வளவு மனுக்களை சேகரித்து அரசுக்கு அனுப்பு கிறாரோ அத்தனை மனுக்களுக்கும் அரசாங்கம் உதவித் தொகை கொடுக்கும்.

திரு ஏ. தங்கராசு: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது மனு செய்கிற அத்தனை பேர் களுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது என்று சொன் னார்கள். கிராமப் பகுதியிலிருக்கிற ஏழை எளிய மக்கள், விதவைகள், அனாதைகள், ஊனமுற்றவர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் மனு செய்திருக்கிறார்கள். அந்த மனுக்களைப் பரி சீலனைச் செய்து பரிந்துரை செய்யும் பணி வருவாய்த் துறைக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதால்; அவர்களுக்கு இருக்கிற வேலைப் பளுவின் காரணமாக உரிய காலத்தில் பரிசீலனை செய்து அரசுக்கு அனுப்ப முடியவில்லை. அதனால் கிராமப் புறங்களில் இருக்கிற மக்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. ஆகவே, சமூக நலத்துறை மூலம் இந்தப் பணியைச் செய்து, அதிகாரிகள் விரைவாக முடிவுச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

கடலூர் கூட்டுறவு நிலவள வங்கி.

733 (*வினா—எண் 3859)—திரு துரை அன்பரசன்: மாண்பு மிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடைளிப்பாரா—

(அ) கடலூர் கூட்டுறவு நிலவள வங்கியைப் பிரித்து கடலூர், பண்ருட்டி ஆகிய வட்டங்களுக்குக் கூட்டுறவு நிலவள வங்கிகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு துரை அன்பரசன்: தலைவரவர்களே, கடலூர் வட்டம் பண்ருட்டி வட்டம் ஆகிய இரண்டு தாலுகாக்களுக்கும் கடலூரில் தான் ஒரு கூட்டுறவு நிலவள வங்கி இருக்கிறது. அந்த நிலவள வங்கியைப் பிரித்து பண்ருட்டி தாலுகாவுக்கு தனியாக ஒரு வங்கியை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. கே.எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலை வரவர்களே, அந்த வங்கி ஏற்கெனவே நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. 30—6—1984 வரையில் 1.55 கோடி ரூபாய் கடன் பாக்கி வசூலாகவில்லை. கடந்த 3 வருடங்களாக அந்த நிலவள வங்கி நஷ்டத்தில் இயங்குகின்ற காரணத்தால் இப்படிப்பட்ட யோசனை அரசின் கவனத்தில் இல்லை.



மாதவரம் பால்பண்ணைத் தொழிலாளர்.

497—(* வினா எண் 1451) மற்றும் திரு வி. பி. சிந்தன்: திரு ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையிலிருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட நிரந்தர ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதை தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்ப சென்னை உயர்நீதிமன்றம் முடிவெடுத்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த வழக்கை தொழில் நீதிமன்றத் திற்கு அனுப்ப கால தாமதம் ஏற்படக்காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; தலைவர் அவர்களே,

(அ) தெரியும்.

(ஆ) சென்னை உயர்நீதி மன்றம் நீதிப்பேராணை விண்ணப்பம் எண்கள் 4024/83 & 175/84. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் 901 தொழிலாளர்களின் வேலை நீக்கம் குறித்துத் தொழிற் தாவாவை மறுபரிசீலனைச் செய்து உத்தரவு பிறப்பிக்கும்படி அரசுக்கு சென்னை உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்தது. அதன்படி அத்தாவாவை அரசு மறு பரிசீலனைச் செய்து எடுத்த முடிவின்படி தாவாவை சென்னை தொழில் தீர்ப்பு ஆயத்தின் தீர்ப்புக்கு அனுப்பி அரசு உயர்நீதிமன்றம் குறிப்பிட்டிருந்த காலக் கெடுவுக்குள் அரசாணை எண் 873, தொழிலாளர் துறை நாள் 30-4-85ல் உத்தரவு பிறப்பித்தது.

திரு வி, பி. சிந்தன்: தலைவரவர்களே, முறையாக நோட்டீஸ் கொடுத்து, சட்டப்படி தகவல் கொடுத்து, ஒருநாள் வேலை நிறுத்தம் செய்ததற்காக நிரந்தரத் தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்துவிட்டு, மறுநாள் வேலைக்கு சென்றபோது, அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக் கிறார்கள். அரசு சட்டப்படி 8 நாள் சம்பளத்தைப் பிடிக்கலாம். அதற்கு மாறாக அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை மறுக்கப்பட்டு, ஆண்டு கணக்கில் மறுக்கப்பட்டு, ஆதை பரிசீலனை செய்ய மறுத்தபிறகு நீதிமன்றத்திற்குச் சென்று, உயர்நீதிமன்றம் அரசு செய்தது தவறு, இது தொழிலாளர்களுக்கு விரோதமான செயல் என்று பகிரங்கமாகக் கூறிய பிறகும் இவ்வளவு தாமதம் ஏற்படக்காரணம் என்ன என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியான தகவலை அளிக்க வில்லை. நீதிமன்றம் சரியா, தவறா என்று சொல்லவில்லை. அதை 'ரெஃபர்' செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதை

அரசு செய்திருக்கிறது. எனவே, தொழில் நீதிமன்றத்தில் அந்த தாவா இருக்கிற காரணத்தால், சரியா, தவறா என்று விவாதிப்பது உகந்தது அல்ல என்ற காரணத்தால் இத்துடன் முடிக்கிறேன்.

திரு ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி என்னவென்றால் ஏறத்தாழ இரண்டு வருட காலமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக வேலை நீக்கம் செய்யப் பட்டவர்கள் பல முறையீடுகளைச் செய்ததற்குப் பிறகும், இந்த அவையிலேகூட அந்த முறையீடுகள் பற்றி உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதற்குப் பிறகும் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன? இப்படி ஒரு விஷயத்தில் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டிய பிறகுதான் ரெஃபர் பண்ணப் படும் என்பதுதான் அரசினுடைய கொள்கையா? அப்படி என்றால் இப்படிப்பட்ட காலதாமதத்தைத் தடுக்கக்கூடிய நடவடிக்கையை அரசு எதிர்காலத்திலாவது பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளம் என்பது ஒரு எஷன்ஷியல் சர்விஸ். எனவே அது அளிக்கப்பட்டது என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் எதிர்சாலத்தில் பரிசிலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணா அவர்கள் மாநில அரசு ஒருபோதும் நீதிபதியாக ஆகாது என்று வற்புறுத்தினார்கள். எனவே, ஒவ்வொரு டிஸ்மிஸல் கேஸையும் கட்டாயமாக ரெஃபர் பண்ணுவதற்கான திருத்தத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட தொழிலாளி ஒவ்வொருவரும் நேராக நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டும் என்ற வகையில் அவர்களை நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்பதுதான் புரட்சித் தலைவர் அவர்களுடைய கொள்கை. எனவே அதை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். அவர்கள் ஆய்ந்து கொண்டிருக் கிறார்கள். அவர்களுடைய ஒப்புதலை பெற்று அந்த முறை நடவடிக்கைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ராஜாக்கா பட்டியில் பால் கூட்டுறவுச் சங்கம்

498 —(*வினா எண் 1687) திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார் பட்டி யூனியன் ராஜாக்கா பட்டியில் பால் கூட்டுறவு சொசைட்டி அமைத்து அங்குள்ள ஏழை விவசாய மக்கள், கறவை மாடு வாங்கி பயனுறச் செய்யும் திட்டம் ஏதும் உள்ளதா?



மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே நத்தம் தொகுதி, சாணார்பட்டி யூனியன், ராஜாக்காபட்டியில் ஏற்கனவே உள்ள ராஜாக்காபட்டி கிராமதான சர்வோதயா பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட மானியத்துடன் 1984-85ம் ஆண்டில் 40 உறுப்பினர்களுக்கு கறவை மாட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகுதியில் இதைத்தவிர தற்போது புதிய பால் உற்பத்தி யாளர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்குத்திட்டம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்- விடைகள் முடிவுற்றன.

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### சென்னை மாநகராட்சிப் பூங்காக்கள்,

1—

வினா 76—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியின்கீழ் உள்ள பூங்காக்கள் எத்தனை?

(ஆ) அதை பாதுகாக்க மாநகராட்சிக்கு ஒரு ஆண்டுக்கு எவ்வளவு செலவு ஆகிறது?

விடை—

(அ) சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் 88 பூங்காக்கள் உள்ளன.

(ஆ) இவற்றைப் பராமரிக்க 1984–85-ம் ஆண்டில் செலவாகிய தொகை ரூ. 39,11,571.64 (இதில் ரூ. 37,21,477.05 பராமரிப்பு வேலையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு வழங்கப் படும் சம்பள செலவு ஆகும்).

### திருவில்லிப்புத்தூர் தொகுதியில் கட்டப்பெற்ற சத்துணவுக் கூடங்கள்.

2—

வினா 98— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

திருவில்லிப்புத்தூர் தொகுதியில், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1984–85-ம் ஆண்டில் எத்தனை கிராமங்களில் மதிய உணவு மையக் கட்டிடங்கள் கட்ட அரசு உத்தேசம் செய்துள்ளது?

விடை—

1984–85-ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் திருவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு சத்துணவுக் கூடங்களும், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு சத்துணவுக் கூடமும் கட்டப்பட்டுள்ளன.

3—

தொளசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையக்கட்டிடம்.

வினா 189—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் தொளசம்பட்டியில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டிடம் கட்டும் பணியின் தற்போதைய நிலை யாது?

விடை—

சேலம் மாவட்ட தொளசம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுவதற்கு 2.83 ஏக்கர் நிலம் வருவாய்த் துறையிடமுள்ளது. இது தவிர 2.17 ஏக்கர் புறம்போக்கு நிலமும் இருக்கிறது. மேலே சொல்லப்பட்டுள்ள 5 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி பொதுப் பணித் துறையினரிடம் ஒப்படைத்தப் பின்பு கட்டிடம் கட்டும் பணி துவக்கப்படும்.

4—

சேலம் மாவட்டத்தில் கதர் வாரியம் வழங்கிய கடன்கள்.

வினா 237—திரு. எஸ். சிவப்பிரகாசம் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் கதர் துறை மூலம் சிறு தொழில் துவங்க எத்தனை நபருக்கு எத்தனை வகையான தொழில்களுக்கு கடன் கொடுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) பயனடைந்த ஆதி திராவிடர் மற்றும் மற்ற இனத்தவர் எத்தனை பேர் ?

விடை—

(அ) 1984–85 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் கதர் வாரியம் மூலமாக பதினாறு வகையான கிராமத் தொழில்களுக்கு 449 நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 90 ஆதி திராவிடர்களும், 359 இதர இனத்தவர்களும் பயனடைந்துள்ளனர்.

5—

சதுரகிரி சுந்தரமகாலிங்கசாமி கோயில் நிர்வாக அலுவலகம்.

வினா 369—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

"மதுரை மாவட்டம் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் திருக்கோயில் நிர்வாக அலுவலர் அலுவலகம் இராமநாதபுரம் மாவட்டம் வத்திராயிருப்பில் இருப்பதை மதுரை மாவட்டம் சாப்டூருக்கு மாற்றுமாறு அரசு உத்தரவிட்டும் இன்னும் அலுவலகத்தை மாற்றாதிருப்பதற்கான காரணம் என்ன ?"



விடை—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்கசாமி திருக்கோயில் நிர்வாக அதிகாரியின் தலைமையிடத்தை வத்திராயிருப்பிலிருந்து சாப்டூருக்கு மாற்ற அறநிலையத் துறை ஆணையர் 1982-ல் உத்தரவிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து பெறப்பட்ட ஆட்சேபணைகளை மறுபரிசீலனைச் செய்ததில், மேற்படி திருக்கோயிலின் தலைமையிடத்தை சாப்டூருக்கு மாற்றுவதால் பலவிதமான நிர்வாக சிக்கல்கள் ஏற்படும் எனக்கருதி தலைமையிடத்தை வத்திராயிருப்பிலேயே நிர்ணயம் செய்து ஆணையரால் மறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6—

சேடப்பட்டி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டம்.

வினா 373—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சேடப்பட்டி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றிய பின்னரும் கூட பல அவசியமான வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால் அரசிடம் சிறப்பு நிதி உதவி கேட்டு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 84 வேலைகள் ரூபாய் 27,05,379 செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இதில் விடுபட்ட 25 வேலைகளை செய்து முடிக்க ரூபாய் 20.70 இலட்சங்கள் தேவை என்று உசிலம்பட்டி கோட்ட வளர்ச்சி அதிகாரி பரிந்துரை செய்துள்ளார்.

இவ்வேலைகளில் 6 வேலைகள் கிராம வேலைத் திட்டத்திலும் 3 வேலைகள் ஊரகசாலைகள் திட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. 1984–85-ஆம் ஆண்டில் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் விடுபட்டுப்போன 16 வேலைகளை கிராம வேலைத் திட்டம் அல்லது தேசிய ஊரக வேலைத் திட்டத்தில் மேற்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டு உள்ளன.

7—

காட்டுமன்னார் கோயில் சிவன் கோயிலை புதுப்பித்தல்.

வினா 383—திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோயிலில் உள்ள சிவன் கோயிலை புதுப்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

விடை—

தென் ஆற்காடு மாவட்டம், காட்டு மன்னார்குடி, அருள்மிகு அனந்தீஸ்வரர் திருக்கோயிலில் திருப்பணி செய்து புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இராஜ கோபுர திருப்பணி வேலை நடைபெற்று வருகின்றது.

8—

ஜெயங்கொண்டம் பகுதியில் நூற்பு ஆலை.

வினா 406—டாக்டர் ந. மாசிலாமணி ; மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் பகுதியில் ஒரு நூற்பு ஆலை தொடங்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம் கரூரில் ஒரு நூற்பாலை இயங்கி வருகிறது. மேலும் அம்மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயங்கொண்டம் பகுதியில் நூல் பற்றாக்குறையே இல்லையாதலால், இப்பகுதியில் நூற்பாலை தொடங்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

9—

சென்னை நகரில் சாலை விபத்துக்கள்.

வினா 419—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் 1981 முதல் 1985ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய எத்தனை சாலை விபத்துகள் நடந்துள்ளன?

(ஆ) இறந்தவர்கள் எத்தனை பேர் ?





விடை—

(அ) சென்னை நகரில் 1981 முதல் 1985 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய நடந்துள்ள சாலை விபத்துக்களின் எண்ணிக்கை 24,890.

(ஆ) இறந்தவர்களின் எண்ணிக்கை 1,554.

10—

பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சிப் பணி.

வினா 422—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்கலைக் கழகங்களின் ஆராய்ச்சிகளை மேமபடுத்த அனைத்துப் பலகலைக் கழகங்களுக்கும் கமிஷன் ஒரு திட்டம் வகுத்தது எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

விடை—

பல்கலைக் கழகங்களின் ஆராய்ச்சிகளை மேம்படுத்த பல்கலைக் கழகங்களின் ஒருங்கிணைப்பு மன்றம் (Inter University Co-ordination Council) ஒன்றை நிறுவும் கருத்துரு துணைவேந்தர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

11—

மணப்பாறையில் பெண்களுக்கு உயர்நிலைப் பள்ளி

வினா 516—திரு. க. சோலைராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் மணப்பாறையில் பெண்களுக்கு தனி உயர்நிலைப்பள்ளிக்கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் பெண்களுக்கென தனியாக ஒரு உயர்நிலைப்பள்ளி துவங்கிடக் கோரிக் கருத்துரு ஏதும் பெறப்படவில்லை என்று பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

12—

மதுரை மாவட்ட மருத்துவ மனைகளில் சித்த வைத்தியம்,

வினா 527—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் உள்ள மருத்துவ மனைகளில் 'சித்த'' வைத்திய பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதற்கு அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

விடை—

(அ) ஆம், துவக்கப்பட்டுள்ளன.

(ஆ) கீழ்க்கண்ட இடங்களில் சித்த மருத்துவ பிரிவுகள் இன்றளவில் செயல்பட்டு வருகின்றன.

1. மாவட்ட தலைமை மருத்துவமனை, திண்டுக்கல்.
2. வட்ட மருத்துவ மனைகள்.
    1. நிலக்கோட்டை
    2. உசிலம்பட்டி
    3. மேலூர்
    4. திருமங்கலம்
    5. பெரியகுளம்
    6. பழனி
3. வட்டம் அல்லாத மருத்துவமனைகள்.
    1. தேனீ
    2. கம்பம்
4. அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.
    1. அலங்காநல்லூர்
    2. சொக்காநூரணி
    3. கண்டமனூர்
    4. அம்மைநாயக்கனூர்
    5. கல்லந்திரி
    6. கன்னிவாடி
    7. கோம்பை
    8. கருங்காலக்குடி
    9. நத்தம்
    10. சின்னாளப்பட்டி
    11. கொம்புசேரி
    12. எழுமலை
    13. பாப்பன்பட்டி
    14. தொடி கொம்பு
    15. திருப்பரங்குன்றம்
    16. வெள்ளலூர்



    17. வாடிப்பட்டி
    18. வீரவீடு
    19. மனவனூர்
    20 வேடசந்தூர்.
5. அரசினர் ஊரக சித்த மருந்தகம்.
    1. சேடப்பட்டி.

| இ. நிதியாண்டில். | | 1983-84. | 1984-85. |
|---|---|---|---|
| நிர்வாகச் செலவு ரூபாய் | .. | 5,52,525 | 7,29,045 |
| மருத்துவச் செலவு ரூபாய் | .. | 1,96,545 | 2,71,610 |
| மொத்தம் ரூபாய் | .. | 7,49,070 | 10,00,655 |

13—

மதுரை மாவட்டத்தில் சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ஊனமுற்றோருக்கு நிதி உதவி.

வினா 533—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"மதுரை மாவட்டத்தில் ஊனமுற்றோர் சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு எத்தனை பேர்களுக்கு எவ்வளவு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது?"

விடை—

சமூக நலத்துறை, ஊனமுற்றோருக்கு சிறு வேலை வாய்ப்புக்காக :—

(1) வங்கி கடன் மூலம் பெட்டிக் கடைகள் அமைத்தல்.

(2) சுய வேலை வாய்ப்பு முயற்சிக்கு அரசு மானியம் அளித்தல் ஆகிய இரு திட்டங்களைச் செயல்படுத்துகின்றது. மதுரை மாவட்டத்திற்கு அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் பயன் பெற்றோர் விபரங்கள்:—

| திட்டம். | ஆண்டு. | நிதி ஒதுக்கீடு. | பயன் பெற்றோர். |
|---|---|---|---|
| | | ரூ. | |
| 1. வங்கி மூலம் பெட்டிக் கடை அமைத்தலுக்கு அரசு மானியம் | 984-85 | 6,000 | 12 |

| திட்டம். | ஆண்டு. | ஒதுக்கீடு. ரூ. | பயன் பெற்றோர். |
|---|---|---|---|
| 2. சுயவேலை வாய்ப்பு திட்டத்திற்கு அரசு மானியம் .. | 1984-85 | 1,56,000 | 120 |

14—

ஆலங்குடி முருகன்கோயில் திருப்பணி.

வினா 557—திரு. த. புஷ்பராஜ்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலூகா முருகன் கோயிலை புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஆம்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டத்திலுள்ள அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பல்வேறு திருப்பணிகள் செய்ய திட்டமிடப்பட்டு, திருப்பணிகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

15—

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தல்.

வினா 568—திரு. த. புஷ்பராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் புள்ளான்விடுதி, இராசிய மங்கலம் ஆகிய கிராமங்களிலுள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

புதுக்கோட்டை மாவட்டம் புள்ளான்விடுதி பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை 1985-86 ஆம் கல்வி ஆண்டில் அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த ஆய்வு அலுவலர்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளதாகப் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். இக்கருத்துரு மற்ற கருத்துருக்களுடன் ஆய்வு செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்துள்ளார். இதே மாவட்டம், இராசியமங்கலம் பகுதியில் உள்ள நடுநிலைப்பள்ளியை 1985-86 ஆம் கல்வி ஆண்டில் உயர்த்த கோரும் கருத்துருக்கள் ஏதும் ஆய்வு அலுவலர்களிடமிருந்து பெறப்படவில்லை என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.



16—

கோபிசெட்டிப்பாளையம் அருகே சந்தனக் கட்டை கடத்தல் குற்றம்.

வினா 646—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் அருகே 1985 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சந்தனக் கட்டையை கடத்துவதை வன இலாகா அதிகாரிகள் பிடித்தனரா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

17—

மதுரை மாநகராட்சிப் பகுதியில் மின்சார மயானம் அமைத்தல்.

வினா 656—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சிப் பகுதியில் மின்சார மயானம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்,

(ஆ) மதுரை மாநகராட்சியில் தத்தனேரி இடுகாட்டில் ரூ. 20 லட்சம் செலவில் மின்சார மயானம் அமைக்க மதுரை மாநகராட்சி முடிவு செய்துள்ளது. அதற்காக அரசிடம் கடன் உதவி கேட்டுள்ளது. அரசும் அதற்கிணங்க 1985-86 ம் ஆண்டுக்கான இரண்டாம்பகுதித் திட்டத்தில் ரூ. 10 லட்சம் மதுரை மாநகராட்சிக்குக் கடன் வழங்க முடிவு செய்துள்ளது;

18—

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி ஆக்கிரமிப்புக்கள்

வினா 669—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தைச் சுற்றிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு சென்னை மாநகராட்சி நடவடிக்கை எந்த அளவில் உள்ளது?

விடை—

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தை சுற்றியும் ஆக்கிரமிப்புகளால் தோன்றிய சுமார் 60 பெட்டிக்கடைகளை உயர்நீதிமன்ற ஆணைக்கிணங்க காவல் துறை உதவியுடன் இவ்வாண்டு பிப்ரவரி மாதம் அகற்றப்பட்டது.

19—

திரை அரங்குகள் அமைப்பதற்கான அனுமதி.

வினா 687—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சினிமா கொட்டகைகள் கட்டுவதற்கு வகுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் என்ன?

(ஆ) மருத்துவ மனைகளுக்கு அருகாமையில் சினிமா கொட்டகைகள் கட்டுவதற்கு அனுமதி மறுக்கப்படுவதுண்டா?

விடை—

(அ) தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்( சட்டம் 1955, பிரிவு 3-ன்படி எந்த ஒரு நபரும், இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற இடத்தைத்தவிர வேறெங்கும் திரைப் படங்களை திரையிடுவதற்கு உரிமை கிடையாது. பிரிவு 5-ன் படி திரை அரங்கம் அமைக்க உரிமம் வழங்கும் அலுவலர்கள் (மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னையைப் பொறுத்தவரை காவல் துணை ஆணையர்) பொது மக்களின் நலன், விண்ணப்பதாரரின் தகுதிநிலை, முன்வரலாறு (அவர் அரசுக்குச் சேரவேண்டிய வரிகளை ஒழுங்காக செலுத்தியுள்ளாரா என்பது) மற்றும் முன் அனுபவம், திரைப்படம் காண்பிப்பதற் குரிய இடப் பொருத்தம், திரைப்படம் காண்பிப்பதற்கு உத்தேசிக் கப்பட்ட அப்பகுதியின் போதுமான சூழ்நிலைகள், புதிதாக திரைப்பட அரங்குகள் திறப்பதனால் குறிப்பிடப்பட்ட அப்பகுதி அல்லது பகுதிகளுக்கு ஏற்படும் நன்மை, விண்ணப்பதாரர் தற் பொழுதோ அல்லது முந்நாட்களிலோ அப்பகுதியிலோ வேறு பகுதியிலோ திரைப்படம் காண்பிப்பதற்கு உரிமம் பெற்றிருந்தால் ஆகியவற்றை மனத்திற்கொண்டும் உத்தேசித்துள்ள இடத்தில் முன்னரே சினிமா காண்பித்து வருபவர்கள் முறையீடுகளையும், உள்ளூர் அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள். இதர கழகங் கள் தெரிவிக்கும் கருத்துக்களையும் மனதிற்கொண்டும் உரிமம் வழங்கவோ அல்லது மறுக்கவோ செய்வர். தமிழ்நாடு திரைப் படங்கள் (முறைப்படுத்தல்) விதிகள் விதி 35 (1)—ன் படி மேலே சொல்லப்பட்ட விவரங்களுடன் படிவம் A-ல் கூறப்பட்ட விவரங்களுடன் உரிமம் வழங்கும் அலுவலருக்கு தடையில்லாச் சான்றிற்கு விண்ணப்பிக்க வேண்டும். இதனுடன் திரை அரங்கின் வரை படத்தையும் சமர்ப்பிக்கவேண்டும். திரை அரங்கின் வரை படம் அதைச் சுற்றியிள்ள சாலைகள் மற்றும் 200



மீட்டர் தூரத்திற்குள் உள்ள கட்டடங்கள், பள்ளிக் கூடங்கள்' மருத்துவ மனைகள், கோயில்கள் அல்லது மசூதிகள், கிறிஸ்தவ தேவாலயங்கள், மற்றும் வழிபடும் இடங்கள் ஆகியவற்றினை தெளிவுபடுத்துவதாக அமைந்திருக்கவேண்டும். விதி 36 மற்றும் 106-ன்படி (பி) படிவத்தில் உரிமம் வழங்கும் அலுவலரிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் ஒன்றினைப் பெற வேண்டும். இச் சான்றிதழ் பெற்றபின்னர் விதி 37-ல் கூறிய நிபந்தனைகளின்படி திரை அரங்கின் வரைப்படத்திற்கு ஒப்புதல் பெறவேண்டும். வரைப்பட ஒப்புதல் பெற்ற வண்ணம் திரை அரங்குகளை அமைக்க வேண்டும். மேலும் தமிழ்நாட்டில், நிரந்தர, அரை நிரந்தர திரையரங்கங்களை கட்டுவதற்குண்டான நடைமுறை விதிகள் 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்பட (முறைப்படுத்து தல்) விதி பகுதி 1A, II(A) II (பி) மற்றும் II (C) இலும் நகரும் திரையரங்குகள் கட்டுவதற்குண்டான நடைமுறை விதிகள் பகுதி 1-A மற்றும் VII இலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஆ) மேற்கூறிய சட்ட விதிகளையொட்டி குறிப்பிட்ட தூரத்திற்குள் உள்ள மருத்துவமனைகள், பள்ளிகள், வழிபாடிடங் கள் ஆகியவை நலமுற செயற்படுவது பாதிக்கப்படுமா என்பதை கவனமாக ஆய்வு செய்தபின் திரையரங்கம் அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது.

20—

தெற்கு காரசேரி அருள்மிகு குலசேகரநாதர், அறம் வளர்த்த நாயகி கோயில் நிலங்கள்.

வினா 804—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா, தெற்கு காரச்சேரி அருள் மிகு குலசேகரநாதர், அறம் வளர்த்த நாயகி திருக்கோயிலுக்கு பாத்தியப்பட்ட நஞ்சை, புஞ்சை நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அவற்றிலிருந்து வரும் வருமானம் எவ்வளவு?

(இ) குத்தகை ஒழுங்காக வசூலிக்கப்படுகிறதா? பாக்கி யுள்ளதா?

(ஈ) ஒழுங்காக வசூல் செய்யப்படவில்லையெனில், வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) நஞ்சை நிலங்கள் 26.33 ஏக்கரும், புஞ்சை நிலங்கள் 400.26 ஏக்கரும் உள்ளன.

(ஆ)

| | ரொக்க வருமானம். | | நெல் வருமானம். கோட்டை | மரக்கால் | படி |
|---|---|---|---|---|---|
| நஞ்சை | ரூ. 2,741.00 | .. | 27 | 27 | 9 |
| புஞ்சை | ரூ. 1,870.00 | .. | .. | .. | .. |

(இ) மற்றும் (ஈ) : மானாவாரி, நிலமாக இருப்பதாலும் தண்ணீர் தட்டுப்பாடு மற்றும் மழையின்மை காரணமாகவும் விளைச்சல் இல்லாததால் குத்தகை பாக்கியுள்ளது. அரசின் ஆணை காரணமாகவும் வறட்சி காரணமாகவும் வசூல் செய்ய இயலவில்லை.

21—

வேடசந்தூர் நந்தவனத்திற்கு இலவச மின் வழங்கல்.

வினா 885—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் நகரில் விவசாயிகள் நினைவாக விவசாயிகள் அமைத்துள்ள பொதுமக்களுக்கான நந்தவனத்தில் உள்ள மோட்டாருக்கு விவசாயிகளுக்கான இலவச மின் திட்டத்தின்படி சலுகை கோரி கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை.—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

22—

மாயாறு ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 1031—திரு. எம். சிவகுமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரி ஊராட்சியைச் சேர்ந்த தெங்குமராடா கிராமத்திற்கு செல்ல மாயாறு ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

கல்லம்பாளையம்—தெங்குமராடா சாலை மேம்பாடு செய்யவும் மற்றும் மாயார் ஆற்றில் மேல்நிலைப்பாலம் கட்டுவதற்கும் மைய அரசின் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசு 1981-ல் ரூ. 150 இலட்சம் அனுமதியளித்துள்ளது. ஆனால், இந்தச் சாலை பணியானது மற்றப் பணிகளோடு ஒப்பிடும்போது முக்கியத்துவம் இல்லாததென மத்திய அரசு திட்டக் குழுவினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மாயார் ஆற்றின் குறுக்கே மேல்



நிலைப் பாலம் மட்டும் கட்டுவதற்காக தேசீய நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளரால் தற்போது வடிவமைப்பும், மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

23—

கல்வேலிப்பட்டி கிராம விவசாயிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்

வினா 1083—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், நத்தம் கல்வேலிப்பட்டி கிராமத்தில் ஏழை விவசாய மக்கள் குடியிருப்பு மனைகள் இல்லாமல் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ); கல்வேலிப்பட்டி கிராமத்தில் வீட்டு மனை இல்லாத பிற்பட்ட சமூகத்தினருக்கு (வண்ணார், நாவிதர்) வீட்டு மனைகள் வழங்க தனியாருக்குச் சொந்தமான ரி. ச. நெ. 145/1ஏ1 புஞ்சையில் 6.57 ஏக்கர் மற்றும் ரி. ச. நெ. 145/2-ல் 0.60 ஏக்கர் புஞ்சை ஆக மொத்தம் 7.17 ஏக்கர் 1984-ல் கையகப்படுத்தப்பட்டது. இதை எதிர்த்து நில உடைமையாளர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை தாக்கல் செய்து தடை உத்தரவு (டபிள்யு. எம். பி. எண் 2977/84) பெற்றனர். பின்னர் தடை உத்தரவு நீக்கி நீதிப் பேராணை மேல் முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றத்திலிருந்து சம்பந்தப்பட்ட கோப்புகள் வரப் பெற்றவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

24—

கோட்டைப்பட்டி, வேப்பம்பட்டி, கிராமங்களில் தெரு விளக்குகள்

வினா 1141—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் பிள்ளையார் நத்தம் உட்கடை கிராமங்களான கோட்டைப்பட்டி, வேப்பம்பட்டி கிராமங்களில் மின்சார தெரு விளக்குகள் பொருத்தும் திட்டம் ஆய்விலுள்ளதா?

விடை—

இல்லை.

25—

### திருப்பூர் நகரில் சோடியம் ஆவி விளக்குகள்

வினா 1175—திரு கு. சுப்பராயன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருப்பூர் குமரன் ரோடு முதல் காமராஜர் ரோடு முடிய சோடியம் வெப்பர் விளக்கு போடும் திட்டம் உள்ளத ?

(ஆ) ஆம் எனில், எப்போது போடப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருப்பூர் நகரில் சாலை சந்திப்பிலும் முக்கியமான சாலைகளிலும், பொருத்துவதற்க்காக ரூ. 6.00 இலட்சம் மதிபபில், 200 சோடியம் ஆவி விளக்குகள் வாங்க, ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசாணை எண் 327 நாள் 23-4-84-ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளது ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கான செயற்குறிப்பு நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கோ வீரய்யன், எம். செல்லமுத்து, ஜே. ஹேமச்சந்திரன் கு. சுப்பராயன், பொன் முத்துராமலிங்கம், பொ. உத்திராபதி, ஆ. கா. அ. அப்துல் சமத், என், எஸ். வி. சித்தன் ஆகியோர் ''தமிழகத்திலுள்ள 2 லட்சத்திற்கும் அதிகமான பஞ்சாலைத் தொழிலாளர்கள் 16–7–1985 முதல் வேலை நிறுத்தம் செய்துள்ளது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே' தமிழகத்தில் ஏறத்தாழ 2½ இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் சென்ற மூன்று நாட்களாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அவையும் அறியும், அரசும் அறியும், நாடும் அறியும். அங்கே பிரச்சினை என்னவென்றால் தொழிலாளர்களின் வேலை உரிமையைத் தடுத்து, தொழிலாளர்களுக்குக் கிடைக்கவிருந்த சாதகமான சலுகைகள் கிடைக்காமல் செய்ததை எதிர்த்து முதலாளிகளுக்கு அதிக இலாபம் ஏற்படுத்த வசதி செய்கின்ற வகையில் வேலை நிறுத்தத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டதை எதிர்த்து பிரச்சினைகளை கோர்ட்டுக்கு அனுப்புவதைப் பொறுத்த வரையில் அரசினுடைய முடிவை ஏற்க மறுத்தும், கடந்த காலம் போல் பேச்சுவார்த்தை மூலமாகவோ அல்லது அரசின் முன்னிலையிலே பேச்சுவார்த்தை மூலமாகவோ பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்கின்ற வகையில் ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும்தான் தமிழகத்தில் 2½ இலட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டாண்டுகளுக்கு முன்பு தொழிலாளர்கள் கூடிப் பேசி அவர்களுடைய ஊதிய உயர்வுகளை அவர்கள் வாங்கியிருக்கிறார்கள். இரண்டு தடவை இதேபோன்ற ஒரு நிலை தமிழகத்திலே ஏற்பட்டபோது, அந்த நேரத்திலே தொழிலாளர்கள் நேரிடையாக வேலை நிறுத்தப் போராட்டத்திலே ஈடுபட்டதன் விளைவாக முதலாளிகளோடு பேசி, அரசினுடைய உதவியோடு அதிகமான லாபத்தை பெற முடிந்திருக்கிறது என்பதை இந்த நாடு அறியும். ஆனால் இன்றையதினம் என்ன நடந்திருக்கிறது என்றால் 10(பி) என்ற உத்திரவை, அரசு தொழிலாளர் நலத்துறை சட்டத்தின் கீழே கொண்டு வந்து பிரகடனப்படுத்தி, அந்த வேலை நிறுத்தங்களை தடை செய்திருப்பதன் காரணமாக, அந்தப் பிரச்னைகள் கோர்ட்டுக்கு விடப்பட்டு' வேலைநிறுத்தங்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-30)

இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அவையிலே தொழிலாளர் நலத்துறையினுடைய மானியம் விவாதிக்கப்பட்ட நேரத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பெருமையோடு பேசினார்கள். 10(பி) என்பதை தமிழக அரசு கொண்டு வந்ததன் காரணமாகத்தான். வேலை நிறுத்தங்களை தடுக்க முடிந்திருக்கிறது என்று சொல்லி அதற்கு அவர்கள் ஒரு சில எடுத்துக்காட்டுகளை அந்த நேரத்திலே சொன்னார்கள். நான் அந்த விஷயங்களுக்குள்ளே போகவிரும்ப வில்லை. ஆனால் அந்த 10(பி) என்ற உத்திரவை எதிர்த்து தான் இன்று அந்த வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். ஏனென்றால் இதன் மூலம் அரசாங்கம் அறிவித்துள்ள நிவாரணமானது கோர்ட்டு தீர்ப்பின் மூலம் முதலாளிகள் பெற இருக்கும் கோடிக் கணக்கான ரூபாய்களின் கொள்ளை லாபத்திற்கு கொடுக்கப்படும் மலிவான விலையாகும் இது என்பதுதான் தொழிலாளர்களுடைய கருத்து.

இந்த 10(பி) உத்திரவு என்னும் பிரகடனத்தை இந்த அரசு முதன் முதலாகப் பிறப்பித்தபோதே, அது தமிழகத்தில் உள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை, போராட்டத்தை எதிர்த்து எடுத்த நடவடிக்கை என்பதை நாடு அறியும். அந்த நேரத்திலே போனஸ் சம்பந்தமாக போராட்டம் நடைபெற்றது. அந்த போனஸ் போராட்டத்தை தவிர்ப்பதற்கு 10(பி) உத்திரவு பிரகடனம் செய்யப்பட்டது. அதனால் வேலை நிறுத்தம் தடை செய்யப்பட்டு, போனஸ் பிரச்னை நீதிமன்றத் திற்கு விடப்பட்டது. ஏறக்குறைய 2, 3 ஆண்டுகளுக்கு பிறகு, நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு என்னவென்றால், தொழிலாளர்கள் முதலாளிகளோடு நேரிடையாகப் பேசி, பேச்சு வார்த்தை நடத்தி. எப்போதும் போல் பெறும் உரிமைகளைவிட, எப்போதும் அவர்கள் பெற்றிருந்த போனஸைவிட கம்மியான போனஸை அவர்கள் பெறவேண்டிய துரதிருஷ்டமான ஒரு நிலைமை. இந்த 10(பி) உத்திரவு போடப்பட்டு, இந்தப் பிரச்சினை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று நடத்தப்பட்டதனாலே ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், இந்தப் பேச்சு வார்த்தை சம்பந்தமாக அரசினாலே அறிவிக்கப்பட்டு, பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய செய்தி என்னவென்றால் தொழிலாளர் துறை அமைச்சர் அவர்கள்





தொழிலாளர்களின் தலைவர்களோடு பேசுவதோடு மட்டும் அல்லாமல், முதலாளிகளோடும் பேசி, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அறிகிறோம். அந்த நேரத்திலே முதலாளிகள் ஒரு பிடிவாதமான நிலையை எடுத்துக் கொண்டார்கள். (மணியடிக்கப் பெற்றது)

இன்னும் இரண்டு நிமிஷங்கள். இந்தப் பிரச்னையில் நான் வலியுறுத்திப் பேச நினைக்கிறேன்.

ஆகவே என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், வேஜஸ் அலாங் வித் ப்ரொடக்ஷன் என்று சொல்லப்படக்கூடிய, உற்பத்தி யோடு இணைக்கப்பட்ட அந்த ஊதிய உயர்வு என்னும் கொள்கையை ஒப்புக்கொள்ளுகின்ற பேச்சுக்கே இடம் இல்லை என்று தொழிலாளர்கள் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள். அனைத்துச் சங்கங்களைச் சேர்ந்தவர்களும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சங்கம் உட்பட அனைத்துச் சங்கங்களைச் சேர்ந்தவர்களும், வேஜஸ் அலாங் வித் ப்ரொடக்ஷன் என்றும் அந்த ஊதிய உயர்வு என்னும் பேச்சுக்கே இடம் இல்லைஎன்று திட்டவட்டமாக தெளிவாகஎடுத்துச்சொன்ன தற்குப் பிறகும் அப்படி ஒரு நிலையை எடுத்துக் கொண்டால்தான் இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண முடியும் என்று, ஊதிய உயர்வை அப்போதுதான் கொடுக்க இயலும் என்று முதலாளிகள் ரொம்ப பிடிவாதமாகவே இருந்ததன் காரணமாகத்தான், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பல நாட்களுக்கு தொடர்ந்து எவ்வளவோ கேட்டதற்குப் பிறகும் கூட, முதலாளிகள் அந்தப் பிடிவாதமான நிலையிலேயே இருந்ததன் காரணமாகத்தான், இப்படிப்பட்ட துரதிருஷ்ட வசமான நிலை தமிழகத்திலே ஏற்பட்டது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆகவே இந்தப் பிரச்னையில் நான் என்ன கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்றால், இந்த 10(பி) என்ற உத்திரவை போட்டதினால் தொழிலாளர்களுடைய சென்ற கால அனுபவம் என்னவென்று கேட்டால் பல இடங்களிலே இன்று இந்த 10(பி) உத்திரவு போடப்பட்டிருக்கிறது, ஆனால் நீதிமன்றத்திற்குப் போய் காலதாமதம் ஏற்பட்டு அவர்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயம் கிடைக்காமல் இருக்கிற நிலை தான் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் நெல்லிக்குப்பத்தில் 10(பி) போடப்பட்டது. என்ன முடிவு? தொழிலாளர்களுடைய எண்ணிக்கை பாதியாகக் குறைக்கப்பட்டது. அதேபோல. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் நான்கு பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தம் உரையை சீக்கிரமாக முடித்துக்கொள்ள வேண்டும்.

[1985 ஜூலை 18

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இன்னும்
ஒரு கருத்தை சொல்லி முடித்து விடுகிறேன். தொழிலாளர்
களுடைய பிரச்னை என்னவென்றால் நேரிடையாகப் பேசி ஒரு
முடிவை ஏற்படுத்த வேண்டும். நீதிமன்றத்திற்கு சென்றதை
அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நேரிடையாகவோ அல்லது
அமைச்சர் அவர்கள் முன்னாலோ பேசி ஒரு முடிவை ஏற்படுத்து
வதற்கு அரசு முன்வர வேண்டும். அந்தக் கோரிக்கையை
வலியுறுத்தித்தான் இன்றைக்கு வேலை நிறுத்தம் நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
இங்கே இருப்பதன் காரணமாக அவருக்கு சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். ஆகவே இந்த அரசு இந்தப் பிரச்சினையைப் பொறுத்த
வரையில் ஒரு சிறிய பிரச்னையாகப் பார்ப்பது சரியில்லை. அது
இரண்டு லட்சம் தொழிலாளர்களின் பிரச்சினையாக இருக்கிறது.
எதிர்காலத்தில் கூட நான் சொல்ல விரும்புவது, இந்த அரசு
வேஜஸ் லிங்க் வித் புரடக்ஷன் என்ற கொள்கையை கடைபிடிக்
கிறதென்றால்......(மணியடிக்கப்பெற்றது)

திரு. கு. சுப்பராயன் : தலைவர் அவர்களே, கடந்த
16–7–85 முதல் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 600 பஞ்சாலைகளில்
பணியாற்றுகின்ற இரண்டு லட்சம் தொழிலாளர்கள் வேலை
நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிற இந்த நேரத்தில், இந்தப்
பேரவையை ஒத்திவைத்து அதுகுறித்து விவாதிக்க வேண்டு
மென்பதை வலியுறுத்தி, குறிப்பாக தவிர்க்கமுடியாத ஒருசில
விஷயங்களை, விளக்கங்களை இங்கே முன்வைக்க விரும்பு
கிறேன்.

இதுவரையில் ஒவ்வொரு தொழிலாளர் போராட்டத்திலும்
தொழிலாளர்கள் தான் கோரிக்கைகளை முன்வைப்பார்கள்.
ஆனால் ஒரு விபரீதமான முறையில் தென்னிந்திய மில் முதலாளிகள்
சங்கம் தொழிற்சங்கங்களுக்கு எதிராக, தொழிலாளர்களுக்கு
எதிராக கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறார்கள். அந்த 15
கோரிக்கைகளில் அவர்கள் வலியுறுத்தி இருப்பது பற்றி சொல்ல
வேண்டுமென்றால் அவர்கள், நியாயத்திற்கும், நெறிமுறை
களுக்கும், சட்டத்திற்கும், மரபுகளுக்கும் முரணான முறையில்
கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறார்கள்.

நடைமுறையில் இருக்கிற வேலைப்பளுவை கூட்ட வேண்டு
மென்றும், நடைமுறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற தொழி
லாளர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்றும்,
அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிற சம்பளத்தைக் குறைக்கவேண்டு
மென்றும், இப்படி முன்னுக்குப் பின் முரணான, ஒப்புக்கொள்ள
முடியாத கோரிக்கைகளை அவர்கள் நிர்ப்பந்திப்பதன் காரணமாக
இந்தச் சிக்கல் வந்திருக்கிறது.





ஏறத்தாழ 1984 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் முடிவிற்கு
வந்துவிட்ட இந்த ஐந்தாண்டுக் கால ஒப்பந்தம், இன்றைக்கு
1985-ம் ஆண்டு ஜூலை மாதம் அதாவது ஓராண்டு காலமாகியும்
கூட இந்த நிலையில் மாற்றம் பெறவில்லை என்பதற்குக் காரணம்,
முதலாளிகளின் முரட்டுத்தனமான பிடிவாதம் தான் என்பதை
வலியுறுத்த விரும்புகிறேன், குறிப்பாக பேச்சுவார்த்தைகளில்
முதலாளிகள் என்ன சொல்கிறார்கள், என்ன சொன்னார்கள்?
தொழிலாளர்கள் கேட்பது விலைவாசி ஏற்றத்தை ஈடுகட்டுவதற்
குரிய சம்பளம் தான். ஏறிவருகிற விலைவாசியை அந்தத்
தொழிலாளர்கள் எங்கே போய் ஈடுகட்ட முடியும்? தாங்கள்
பணியாற்றுகின்ற இடத்தில் தங்களுடைய உழைப்பை விற்பதற்கு
தங்களுடைய உழைப்பிற்கு கூலி அதிகம் வேண்டுமென்று கேட்பது
தவிர்க்கமுடியாத நியாயமாகும். அந்த நியாயத்தை வலியுறுத்திய
போதுமுதலாளிகள் என்ன சொல்கிறார்கள்? அதிகமான வேலைப்
பளுவை செய்ய ஒப்புக்கொண்டால்தான் சம்பளத்தை 'உயர்த்த
முடியும் என்று சொல்கிறார்கள்.

நடைமுறையில் சம்பள உயர்வே இல்லாமல் செய்கிற வெகு
நுட்பமான வாதத்தை முதலாளிகள் முன் வைத்தார்கள். எனவே
தான் சிக்கல் ஏற்பட்டது, ஆகவே இந்தச் சிக்கலுக்குக் காரணம்
முதலாளிகளே தவிர, தொழிலாளர்கள் அல்ல. இந்த நிலையில்
மாநில அரசு என்ன செய்திருக்கிறது, 10(பி) என்ற ஆயுதத்தை
தொழிலாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்தியிருக்கிறது. 10(பி)
என்ற ஆயுதம் பயன்படுத்தப்பட்டிருப்பதை முதலாளிகள்
கைகொட்டி வரவேற்றிருக்கிறார்கள். ஆனால் அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தில் அங்கம் வகிக்கிற தொழிலாளர்களும்
இன்றைக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை
இந்த அரசுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதிலே
யிருந்து என்ன புலப்படுகிறது என்றால், தொழிலாளர்கள் என்ற
உணர்வில் சிந்தித்தால் 10(பி) போட்டாலும் கூட வேலை
நிறுத்தம் செய்து ஜனநாயக விரோதமான, சட்ட விரோதமான
நிர்ப்பந்தத்திற்கு எதிராக போராடவேண்டுமென்ற நிலை தொழி
லாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. முதலாளிகளுக்கு எதிராக
பயன்படுத்த வேண்டிய சட்டத்தை தொழிலாளர்களுக்கு எதிராக
பயன்படுத்தி வேலை நிறுத்தத்தை சட்டவிரோதமென்று தடை
செய்தும் கூட வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்
கிறது.

(முற்பகல் 10–40)

அந்த பஞ்சாலைகள் மட்டும் அல்ல. அந்தப் பஞ்சாலைத்
தொழிற்சாலைகளை நம்பியிருக்கிற நூற்றுக்கணக்கான உப
தொழில்களில் பணியாற்றக்கூடிய பல்லாயிரக் கணக்கான பேர்கள்

வேலையை இழக்கப் போகிறார்கள். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை வரலாம். எனவே இவற்றை எல்லாம் முன் கூட்டியே ஆய்ந்து ஒரு சுமுகமான நிலைமை ஏற்படுவதற்கு இன்றைய அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள 569 ஆலைகளில் உள்ள 2 லட்சம் தொழிலாளர்கள், மூன்றாவது நாளாக வெற்றி கரமாக தங்களுடைய கோரிக்கைகளுக்காக நியாயமான முறையில் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த இடைக்காலத்தில் அரசு தலையிட்டு, தொழிற் தகராறு சட்டம் 10-பி பிரிவின் கீழ் இன்றைக்கு தொழில் நடுவர் நீதிமன்றத்திற்கு இதனை அனுப்பி யிருக்கிறது. போராடிக்கொண்டு இருக்கின்ற தொழிலாளர்கள் இன்றைக்கு மையமாக வைத்து இந்தப் பிரச்சினைக்காக போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டு இருப்பதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உண்டு என்று கருதப்படுகிறது. அதிலே ஒன்று. (Productivity linked wages) புரடக்டிவிடி லிங்க்டு வேஜஸ் என்று சொல்லப்படுகிற, உற்பத்தியோடு இணைந்த ஊதியத்தைப் பற்றி முடிவு செய்யவேண்டும் என்ற ஒரு கொள்கை, இரண்டாவது 'Casuai and temporary workmen in payment of increased wages' என்கிற தற்காலிக ஊழியர்களுக்கு இடைக்கால ஊதிய உயர்வு கொடுப்பதைப் பற்றி பிரச்சினைகள் இப்போது மையமாக இருந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் 10-பி என்கிற பிரிவு இங்கே அறிமுகப்படுத்தப்பட்ட நேரத்தில் அரசாங்கத்தின் சார்பாக கூறப்பட்ட வாதங்கள், தொழிலாளர்களுக்கு நன்மை செய்யக்கூடிய வாதங்கள் என்று கூறப்பட்டது அதுவும் நம்பப் பட்டது. ஆனால் இந்த 10-பி என்ற பிரிவு நடைமுறைப்படுத்தப் பட்ட நேரத்தில், கசப்பான உண்மைகள்தான் வெளியே வந்து கொண்டு இருக்கின்றன, 1981 ஆம் ஆண்டு போனஸ் தகராறு பற்றி இந்த 10-பி அடிப்படையிலே (Refer) செய்யப்பட்டபோது, 1983-லே நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்பட்டபோது அது தீர்ப்பு அளித்து தொழிலாளர்களுக்குவிரோதமாகப் போனதுஎன்பதையும் இந்த நேரத்தில் நான் கவனப்படுத்த விரும்புகிறேன். அரசாங்கம் என்பது, ஏதோ, தொழிலாளர்கள் பிரச்சனைக்கு 10-பி பிரிவிலே நாங்கள் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டோம் என்று சொல்லி அதோடு நின்றுவிடாமல் மேலும் தொழிலாளர்களை அழைத்து, அவர்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காணத்தக்க அளவிற்கு மென்மேலும் பேச்சு வார்த்தைகள் நடத்தவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



கடந்த காலத்தில்கூட இப்படிப்பட்ட பிரச்சனைகள் வந்த நேரத்தில் கடந்த காலத்தில் முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் மில் தொழிலாளர்களை அழைத்து, மில் முதலாளிகளையும் ஒன்றாக அழைத்து நீண்டகாலம் பேசி, அதற்கு ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள் என்பதற்கு நல்ல முன்னுதாரணங் கள் ஏற்கனவே இருக்கின்றன. எனவே அந்த முன்னுதாரணங் களைப் பெற்று, 2 லட்சம் தொழிலாளர்களுடைய இந்த ஜீவாதார பிரச்சனையில் அரசு மெத்தனம் காட்டி விடாமல், 10-பி தொழில் தகராறு பிரிவைக் காட்டி விடாமல், அதிலே மேலும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதோடு, இந்தப் பிரச்சனையைப் பொறுத்தமட்டில் (Productivity iinked wages) புரடக்டிவிட்டி, லிங்க்டு வேஜஸ் என்ற அந்தப் பிரச்சனையை மையமாக வைத்து, ஆழமாக சிந்திக்க வேண்டி இருக்கின்ற காரணத்தாலும், இந்தச் சபையினுடைய மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. கா. அ அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ இரண்டு லட்சம் தொழிலாளர்கள் 600 தொழிற்சாலைகளிலே வேலை செய்பவர்கள் அரசு ஒரு முடிவு எடுத்து, அறிவித்த பிறகும்கூட வேலை நிறுத்தத்திலே இன்று ஈடுபட்டு இருக்கிறார்கள். இவர்கள் இந்த நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கக்கூடிய காரண காரியங்களை நாம் இப்போது ஆராய்வது முறையல்ல. ஆனால் 2 லட்சம் தொழிலாளர்கள் என்று சொல்லும்போது, ஒரு தொழிலாளியை நம்பி, 5 பேர்கள் வாழ் கிறார்கள் என்றால் ஏறத்தாழ, 10 லட்சம் பேர்கள் தமிழகத்திலே இதனால் இன்று பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நாள் ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் இதனாலே இழப்பு நேரிடுகிறது என்று புள்ளி விவரம் தரப்பட்டு இருக்கிறது. இந்த இழப்பை ஒரு நாள் நீட்டிப்பதுகூட தமிழகத்தினுடைய மொத்த வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கும் என்ற காரணத்தால், அதை அவசரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தவே நான் இந்த தீர்மானத்தைத் தந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, கழிந்த 3 நாட்களாகவே தமிழகத்தில் இருக்கின்ற பஞ்சாலைகளின் சக்கரங்கள் சுழலாமல் இருந்து கொண்டு இருக்கின்றன. எனவே, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல தமிழகத்திலே மிகப் பெரிய வேலை நிறுத்தமாக ஏறத்தாழ 2 லட்சம் தொழி லாளர்கள் பங்கு கொள்ளுகின்ற வேலை நிறுத்தமாக இந்த வேலை நிறுத்தம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. வேலைக்குச் செல்லாத காரணத்தால் தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 1 கோடி ரூபாய் வரை ஊதியத்தை இழக்கிறார்கள் என்ற கணக்கை தொழிற்சங்கத் தலைவர்கள் சொல்கிறார்கள். அதேபோல் தொழிற்சாலை சக்கரங்கள் சுழலாத காரணத்தால், உற்பத்தி நட்டமாக நாள் ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் ஆகின்றது

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஜூலை 18

என்று ஆலை அதிபர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். ஏற்கனவே இருந்த ஒப்பந்தம் கழிந்த 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிந்த காரணத்தால் புதிய ஒப்பந்தம் போடுவதிலே சிக்கல் ஏற்பட்டு இன்றைக்கு வேலை நிறுத்தம் வரை தள்ளப் பட்டிருக்கிறது. பல்வேறு கால கட்டங்களிலே தொழிலாளர் களின் பிரதிநிதிகளையும் ஆலை அதிபர்களையும் முதன் முறை யாக அழைத்துப் பேசி அதனால் பலன் அளிக்காமல் போகவே, பிறகு தொழிலாளர் நல இலாகா பேசி அதற்கு பிறகு மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசி இந்த பேச்சு வார்த்தை வெற்றி பெறாத காரணத்தால் இன்றைக்கு தொழில் கோர்ட்டு தீர்ப்புக்கு இது விட பட்டு இருக்கிறது. இடைக்கால நிவாரணமாக அரசு ஊதியம் அறிவித்தாலும் தொழிலாளர்கள் அதை ஏற்காத காரணத்தால் இன்றைக்கு இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண் டிருக்கிறது.

இன்றைக்குக் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேச்சு வார்த்தை நடைபெற இருப்பதாக செய்திகளை நான் செய்தித் தாள்களின் வாயிலாக அறிகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, எப்படியாவது இந்த பஞ்சாலை வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருகின்ற முறையில் இதிலே அரசு மிகுந்த அக்கறையை, ஏற்கனவே இருக்கின்ற அக்கறையை காட்டிலும் முனைந்த அக்கறையை காட்ட வேண்டும் என்ற காரணத்தாலும் இதிலே ஏற்கனவே 2 லட்சம் தொழிலாளர்கள் வாழ்க்கை பாதிக்கப்பட்டு இருப்பதாலும் இதை விட வேறு முக்கியமான பிரச்சினை தமிழகத்தில் இருக்க முடியாது என்ற காரணத்தாலும் பேரவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் 2 லட்சம் பஞ்சாலை தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச் சினையை ஒட்டி நல்ல பல உணர்வுகளை எல்லாம் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அதற்காக முதற்கண் அரசினுடைய சார்பாக நான் நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கருத்துக்களை தெரிவிக்கின்ற நேரத்தில் இந்த பஞ்சாலை தொழிலில் ஏற்பட்டு இருக்கின்ற இந்த சங் கடங்களை சிரமங்களை எல்லாம் போக்கி தமிழ்நாட்டில் துரி தமாக ஒரு தொழில் அமைதியை உருவாக்கவேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தை வெளிப்படுத்தினார்கள். அந்த நல்ல எண்ணத்தை கொண்டுவருவதற்காக அரசு கடந்த காலத்திலே பல தீர்க்கமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எதிர் காலத்திலும் அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நான் உறுதி கூறகடமைப்பட்டிருக்கிறேன்.



1985 ஜூலை 18] (திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி)

இந்தப் பஞ்சாலை தொழிலில் இன்றைக்கு ஏற்பட்டு இருக் கின்ற நிலவரங்களுக்கு அடிப்படை காரணங்களைப் பற்றி எல்லாம் ஒவ்வொரு மாண்புமிகு உறுப்பினரும் ஒவ்வொரு அம்சத்தை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். குறிப்பாக இந்த அரசு பேச்சு வார்த்தை மூலமாகவே negotiated settlement என்ற வகை யில் இந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ளவேண்டும் என் பதற்காக பல முயற்சிகளை கடந்த 2 மாத காலமாக எடுத்து கொண்டு வந்திருக்கிறது, அதனை இன்றையதினம் போராட்டக் குழு Joint Action Committee என்று அந்த வடிவத்திலே செயல் பட்டு கொண்டு இருக்கின்ற அந்த தொழிற்சங்கத் தலைவர்கள் அங்கீகரித்து இருக்கிறார்கள். ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 14 ஆம் தேதி அவர்கள் குழு இங்கே சென்னையில் ஜீவா இல்லத்தில் கூடிய நேரத்தில் அரசு தரப்பில் இன்றைக்கு தொழிலாளர் நல ஆணையாளர் ஆக இருந்தாலும் சரி, தொழி லாளர் நல அமைச்சராக இருந்தாலும் சரி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களாக இருந்தாலும் சரி அனைவருமே கடந்த 2 மாத காலத்தில் எப்படியாவது ஒரு சுமுகமான தீர்வு காண வேண்டும் என்பதற்காக எல்லா முயற்சிகளையும் எடுத்திருக் கிறார்கள். அதற்காக நாங்கள் நன்றி கூறுகிறோம் என்று அதிலே இருக்கிற அனைத்து தொழிற்சங்கங்களும், அனைத்து கட்சிகளும் கடந்த 14 ஆம் தேதி மாலை 6 மணிக்கு சென்னையில் தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10–50)

ஆக, அரசைப் பொறுத்தவரையில் எடுக்க வேண்டிய நட வடிக்கைகளையெல்லாம் எடுத்து, ஒரு தரப்பினரும் ஒரு சுமுக மான முடிவிற்கு வராத காரணத்தால், தவிர்க்க முடியாமல், வேறு வாய்ப்பு இல்லாமல், அடுத்த நிலை இதுதான், அடுத்த கட்டம் இதுதான் இந்தத் தொழில் தகராறைத் தீர்ப்பதற்கு என்று நம்புகிற காரணத்தினால், அனுபவம் போதிக்கிற கார ணத்தால், இன்றைக்கு கன்சிலியேஷனிலேயிருந்த பிரச்னைகளை யெல்லாம் அட்ஜூடிகேஷனுக்கு அனுப்பியிருக்கிறது. பேச்சு வார்த்தைகளில் தீராத பிரச்னையை ஒரு நீதிமன்றமாவது விரைவிலே, துரிதமாகத் தீர்த்து, ஒரு தொழில் அமைதியை, அதேநேரத்திலே தொழிலாளர்களின் நலனை, அதேநேரத்தில் உற்பத்திப் பெருக்கத்தை ஆக இந்த மூன்று அம்சங்களை ஒன்றுக் கொன்று சிதறாமல் இணைந்து நடத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, இந்த முடிவை அரசு எடுத்து இன்றைக்கு சுமுகமான சூழ்நிலையை பஞ்சாலையிலே உருவாக்க முயன்று கொண்டு வருகிறது.

அதன் காரணமாகத்தான் 10 (பி) என்ற அந்த இன்டஸ்டிரியல் டிஸ்ப்யூட் ஆக்டில் இருக்கின்ற அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் மீது கிளாரிபிகேஷன், இன்றைக்குத் தொழிற்சங்கத்தலைவர்

களெல்லாம் இரண்டு நாட்களாக எங்களிடத்தில், அரசினிடத்
திலே அவர்கள் தொடர்பு கொண்டு பேசுகின்ற நேரத்திலே,
அதிலே சில விளக்கங்சள் பெற வேண்டும், சில ஐயங்கள் இருக்
கின்றன என்று அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு இசைவு
கொடுத்து நேற்றையதினம் இந்தத் தகவலை நாட்டுக்கு அறி
வித்தோம். அவர்கள் அனைவரும் இன்றைக்கு வந்திருக்கிறார்
கள். இன்றைக்குப் பேசுவதாக இருந்தோம். ஆனால் இன்றைய
தினம் சேசுவல் ஓர்க்கர்ஸை நிரந்தரமாக ஆக்குவதை நீதி
மன்றம் தடை செய்திருக்கிறது. சில அம்சங்களைத் தவறு
என்று சொல்லியிருக்கிறது. அதையும் திருத்துவதற்காக,
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆணையோடு
ஒரு திருத்தத்தை, ஒரு சட்ட முன்வடிவை இன்றைக்கு
மாலையில் கொண்டுவர இருக்கின்ற காரணத்தினாலே
இன்றையதினம் அவர்களோடு கலந்து பிரச்னையைப் பேச இயல
வில்லை. நாளை பேசலாம் என்று சம்பந்தப்பட்ட அந்தத்
தொழிற்சங்கத் தலைவர்களுக்கு அறிவித்திருக்கிறோம். ஆக,
அந்தப் பேச்சுவார்த்தைகளின் மூலமாக ஒரு சுமுகமான சூழ்
நிலை, பஞ்சாலைத் தொழிலில் உருவாகும் என்று நான் மன
தாரக் கருதுகிறேன்.

அதற்காக அனைத்துத் தொழிற் சங்கங்களும் ஒத்துழைக்க
வேண்டுமென்றும், ஏனென்றால் இது ஏதோ ஒரு கட்சியினுடைய
பிரச்னை அல்ல, இது ஒரு தொழிற்சங்கத்தினுடைய பிரச்னை
அல்ல, இது ஒரு மாவட்டத்தினுடைய பிரச்னை அல்ல, பஞ்
சாலை என்பது தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு
தொன்மை மிக்க தொழில். இரண்டு இலட்சம் பேருக்கு ஆர்
கனைஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் எழுபது, எண்பது ஆண்டுகள் இருக்கின்ற
ஒரு தொழில், அந்தத் தொழிலில் ஏதாவது ஒரு தொய்வு
ஏற்பட்டுவிடக் கூடாது, ஏதாவது ஒரு சோர்வு ஏற்பட்டு
விடக் கூடாது, ஏனென்றால், அந்தச் சோர்வு ஏற்பட்டு
விட்டால் அது ஒரு சமூகப் பிரச்னையை உருவாக்கும்:
அது பொருளாதாரப் பிரச்னையை உருவாக்கும்; கட்டுக்கோப்பாக
இருக்கின்ற இந்தத் தொழிலில் ஒரு சீர்குலைவு ஏற்பட்டுவிடும்
என்ற அந்தக் கடமையுணர்ச்சியோடுதான் இன்றைக்குச் சம்பந்தப்
பட்ட தொழிற்சங்கத் தலைவர்களையெல்லாம் அருள்கூர்ந்து
அழைத்துப்பேசும் நிலை சுமுகமாக வந்து கொண்டிருக்கின்றது.
இன்றைக்குத் தொழிற் சங்கத் தலைவர்களும் இதனுடைய நியா
யத்தை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் வெளியிட்ட அந்த
10 (பி)யினுடைய பிலாசபியை ஏற்றுக்கொண்டுதான், இன்றைய
தினம் சில சந்தேகங்களை அவர்கள் பேசி அதிலே ஒரு சுமுகமான
முடிவை உருவாக்குவதற்காக முனைந்து இருக்கிறார்கள். அவர்
களுடைய நல்லெண்ணத்திற்கு மற்றத் தொழிற்சங்கத் தலைவர்கள்
அருள்கூர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அவர்கள் இன்றைக்கு It is unfortunate to mention உள்ளபடியே
சில உணர்வுகளைச் சொல்வதற்காக மெத்த வேதனைப்பட்டு,
மெத்த எச்சரிக்கையோடு, மெத்த கவனத்தோடு, சொல்வதற்கு
நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



குறிப்பாக நல்லதொரு சூழ்நிலை உருவாகி வருகிறது.
ஒருவருக்கொருவர், நிர்வாகமும், தொழிற்சங்கமும் பேசி பிரச்
னைகளைத் தீர்க்கக்கூடிய நல்ல சூழ்நிலை வருகின்ற நேரத்தில்
ஏதோ ஒரு காரணத்தினால், ஏதோ ஒரு நோக்கத்தோடு சில
உணர்வுகளை வெளியிடுவதன் காரணமாககூட சில நேரத்
திலே கடினமாக அந்தப் பிரச்னையை ஆக்குகின்ற
போக்கில் சில தலைவர்களே வெளியிலே கருத்துக்களை வெளி
யிட்டுக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து அவர்கள்
இரண்டு இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்களினுடைய வாழ்வு
பிரச்னை என்று கருதிக்கொண்டு. தங்கள் கட்சிப் பிரச்னை
என்று கருதாமல் எங்கள்மீது ஆதங்கம் இருந்தால், எங்கள்மீது
கோபதாபம் இருந்தால், அரசியலை அரசியலாக வைத்துக்
கொண்டு, அதை வேறு துறையில், வேறு முனையில் வேறு
வாய்ப்பு வருகின்றபொழுது நீங்கள் அதைச் சந்தித்து அதிலே
ஒரு தீர்வு காண வேண்டுமே தவிர, இந்தப் பஞ்சாலைத் தொழி
லாளர் பிரச்னை என்பது. தேசியப் பிரச்னை, தொழிலாளர்
களினுடைய பிரச்னை, நாட்டுப் பிரச்னை, தொழில் வளத்
தினுடைய பிரச்னை என்கின்ற கோணத்தில் அருள்கூர்ந்து நீங்கள்
ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். It is easy
to destroy but very difficult to build என்று விவிலிய நூலிலே
சொல்வதால் ஒரு சுமுகத்தை உண்டாக்குவது மிகுந்த கடினம்
ஆனால் ஒரேயொரு சக்தி மட்டும், ஒரேயொரு நபர்கூட கூடி
வருகின்ற அந்த நிலைமையைக் கெடுத்துவிட முடியும். குறிப்
பாக என்னுடைய மதிப்பிற்கும், மிகுந்த மரியாதைக்கும் உரிய
நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச்
செயலாளர், ஏறக்குறைய முப்பது நாற்பது ஆண்டுகளாகத் தமிழ
கத்தில் தொழிலாளர்களுக்காக பாடுபட்டு வரக்கூடிய நம்முடைய
திரு. உமாநாத் அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்
கிறார்கள்.

இங்கே மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்களும் மற்ற
சகோதரர்களும் சொன்னார்களே, அதே கருத்தை, 10 (பி)யைப்
பற்றி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் ரெஃபர்
செய்திருக்கக் கூடாது, நெகோஷியேஷனில் செட்டில்மெண்டில்
தீர்த்திருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிவிட்டு, இன்றைக்கு
இங்கே கருத்தைச் சொன்னார்கள், சாதக பாதங்களைப்
பற்றிச் சொன்னார்கள், அதனுடைய விளைவுகளைப் பற்றிச்
சொன்னார்கள், அவர்களுடைய நிலையைச் சொன்னார்கள்.
அது இயல்பு. அது கருத்து, அதனுடைய நிலை. ஆனால்,
அதற்கு நோக்கம் கற்பிப்பது என்பது, குறிப்பாக, அரசாங்கம்
அதிலே உள்நோக்கத்தோடு முதலாளிகளுக்குத்தான், நிர்வாகத்
திற்குத்தான், பஞ்சாலை அதிபர்களுக்குத்தான் நன்மை செய்ய
போட்டிருக்கிறது என்றெல்லாம் உள்நோக்கம் கற்பிப்பது
என்பது அவ்வளவு ஏற்புடையது அல்ல: அவ்வளவு உகந்தது
அல்ல; பிரச்னையைத் தீர்ப்பதற்கு அவ்வளவு சாதகமாக
அமையாது.

குறிப்பாக, நேற்றையதினம் மாலை முரசு என்ற ஒரு
செய்தித்தாளில் வந்திருக்கிறது, ஆழமாக நான் போக விரும்ப
வில்லை. அதிலே சொல்லியிருக்கிறார்கள், முதல் அமைச்சர்
அவர்கள் முதலாளிகளிடத்திலே பேசிவிட்டு அவர்களுக்கு நன்மை
செய்வதற்காக இந்த 10(பி)ஐப் போட்டிருக்கிறார்கள். முதலமைச்
சருக்கும் முதலாளிகளுக்கும் என்ன பேரம் நடைபெற்றது,
அந்த மர்மத்தை அம்பலப்படுத்த வேண்டும் என்று அதிலே
விவரமாக இருக்கிறது. தெளிவாக இருக்கிறது, திட்டவட்டமாக
இருக்கிறது. அந்தச் சகோதரருக்குச் சொல்லிக் கொள்வேன்,
தயவுசெய்து நோக்கம் கற்பிக்காதீர்கள். 14-ஆம் தேதி ஜீவா
இல்லத்தில், இடதுசாரி கம்யூனிஸ்ட் சகோதரர்கள் உட்பட
தீர்மானம் போட்டார்கள். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்
இருக்கிறது; முரண்பாடு அல்லவா? 14-ல் ஒரு நிலை; 17-ல் ஒரு
நிலையா? தயவுசெய்து ஆழ்ந்து யோசிக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன். அப்படி அல்ல. ஒவ்வொன்றுக்கும்
நோக்கம் சொல்வது என்றால் இறுதியிலே யார் பாதிக்கப்படு
வார்கள் என்றால், அந்த 2 இலட்சம் பஞ்சாலைத் தொழி
லாளர்கள். இன்றைக்கு அதை அரசியலாக ஆக்கிவிடுவார்
களானால், இந்தப் பிரச்னையைத் தள்ளிப் போடுவார்களானால்
வேலை நிறுத்தம் என்பது 2 நாட்களுக்கு, 3 நாட்களுக்குச்
சுலபமாக இருக்கும். ஆனால், 2 நாட்கள், 3 நாட்களுக்குப்
பிறகு வேலை நிறுத்தம் என்பது உரிமைப் பிரச்னை மட்டும்
அல்ல, சமூகப் பிரச்னையாக, தொழிலாளர்கள் பிரச்னையாக
மட்டுமல்ல, மக்களுடைய பிரச்சினையாக, சட்டம் ஒழுங்குப்
பிரச்சினையாக. பொது அமைதி பிரச்சினையாக மாறுவதற்கு
எத்தனையோ முன் உதாரணங்கள் இருக்கின்றன. அதனால்தான்
வேலை நிறுத்தம் கடைசி ஆயுதமாக தவிர்க்க முடியாமல் வேறு
வாய்ப்பே இல்லாத தன்மையில்தான்இருக்க வேண்டும் It is the last
resort. வேறு வழியே இல்லை, அரசாங்கமே ஆதரவு கொடுக்
காமல், அல்லது நாட்டு மக்களே ஆதரவு கொடுக்காமல்,
பத்திரிகைகளே ஆதரவு கொடுக்காமல், அந்த முதலாளிகளை நிர்
பந்தப்படுத்த, கலெக்டிவ் பார்கெயினிங் என்று சொல்கிறார்களே,
கூட்டு பேரம், அந்தக் கூட்டு பேரத்தினுடைய கடைசி அங்க
மாக, கடைசி ஆயுதமாகப் பயன்படுத்துவது வேலை நிறுத்தம்
என்பது. ஆனால், இன்றையதினம் வேலைநிறுத்தம் கையாளப்
படவேண்டிய அவசியம் என்ன; தயவுசெய்து சொல்லுங்கள்
இன்றைக்குக் கன்சிலியேஷனில் எந்த, எந்தப் பிரச்னைகளைச்
சொன்னார்களோ, அதனை எல்லாம் அட்ஜூடிகேசனுக்கு அனுப்பி
யிருக்கிறோம். அதிலே ஒரு மாறுபாடு. இன்றைக்கு முதலாளி
கள் கோரிக்கைகளை எல்லாம் அட்ஜூடிகேசனுக்கு அனுப்பியிருக்
கிறார்கள். நாங்கள் சொன்ன அனைத்துமே அனுப்பவில்லை
என்று சொல்லியிருக்கிறார்கள். தொழிற்சங்கத்தைப் பொறுத்த
வரை 28 கோரிக்கைகள்; நிர்வாகத்தைப் பொறுத்த
வரை 14 கோரிக்கைகள். அரசாங்கம் எப்பொதுமே அனுப்புகிற
பொழுது, எதை, எதை, டிரிபியூனலுக்கு அனுப்பலாம் என்று
ஆய்ந்து, சம்பந்தப்பட்ட, ரெலவன்ஸ் இருக்கக்கூடிய பிரச்னை
களைத்தான் அனுப்புவது வாடிக்கை. அந்த வகையிலே தான்
இன்றையதினம் நிர்வாகம் கொடுத்ததாக இருந்தாலும் சரி



தொழிற்சங்கம் கொடுத்ததாக இருந்தாலும் சரி, அனுப்பியிருக்
கிறோம். அதிலேகூட நம்முடைய அன்பிற்கும் மிகுந்த மரி
யாதைக்குமுரிய மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்கிறார்கள்
புரட்சித் தலைவர் அரசு, பெண்களுடைய வேலை வாய்ப்புக்
காக வாய் கிழியச் சொல்கிறது, ஆனால், நாங்கள் அந்தப்
பெண்கள், விமன் ஓர்க்கர்ஸ் நிலையைப் பற்றி, ஆராய வேண்டு
மென்று கோரிக்கை வைத்தோம். அதனை அவர்கள் ரெஃபர்
செய்யவில்லை. இது பெண் தொழிலாளர்களுக்குப் புரட்சித்
தலைவர் அரசு இழைக்கிற அநீதி என்று அவர்கள் கடுமையாகச்
சொல்லி இருக்கிறார்கள்.

மாண்புமிகு உமாநாத் அவர்களும் மற்றும் மாண்புமிகு
ஹேமச்சந்திரன் போன்ற சகோதரர்கள் எல்லாம் இந்தத் தொழிற்
சங்க இயக்கத்திலே 50,60 ஆண்டுகள் இருந்து அனுபவம்
பெற்றவர்கள். அவர்களுக்குத் தெரியும் இந்த விமன் ஓர்க்கர்ஸ்
பிரச்னை என்பது—வருகிற மாநாட்டிலே கூட தீர்மானம்
விரிவாக வர இருக்கிறது—30, 37 ஆண்டுகளாக இருக்கிற
பிரச்னை. அதை ரெஃபரன்சில் எப்படித் தீர்க்க முடியும்.
இது அவர்களுக்குத் தெரியும் என்றாலும்கூட. அரசியலுக்காக,
அல்லது, நாம் எடுத்த முடிவிலே ஒரு குறையைக் காண்கிறார்கள்
என்று கருதுகிறேன். என்றாலுங்கூட, அவர்கள் மறு பரி
சீலனை செய்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: அமைச்சர், உள்நோக்கம் கற்பிப்
பதாகச் சொல்கிறார்கள், உள்நோக்கம் அல்ல, நிலைமையைத்
தான் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த விளக்கம் கொடுக்க
முடியாது. It is only on the question of admi sibility. நான்
அட்மிட் பண்ணினால்தான் பேச முடியும்.

மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே,
நம்முடைய மாண்புமிகு உமாநாத் அவர்கள் இன்றைக்கு
முதலாளிகளோடு இந்த அரசு ஏதோ பேரம் பேசிக்கொண்டு
சொல்கிறார்கள் என்று.....

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலை முரசு பத்திரி
கையில் வந்ததை நானும் பார்த்தேன் பத்திரிகையில் வந்ததைப்
பற்றி இங்கே குறிப்பிட வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தொழில் அமைதியை உருவாக்குவதற்காகவும் தொழிலாளர் நலன்களைப் பேணிக் காக்க வேண்டும் என்பதற்காகவும் கடந்த காலத்தில் நான்கு முறை, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள், பனியன் தொழிலாளர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர் பிரச்சனை வந்தபோது இந்த 10(பி)யைப் பயன்படுத்திய காரணத்தால் ஒட்டு மொத்தமாக தொழில் அமைதி ஏற்பட்டதால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு இந்த 10(பி)யைப் பயன்படுத்தி ஒரு தொழில் அமைதியை உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆக, நாளை பேச இருக்கிற அந்தப் பேச்சு வார்த்தை நல்ல ஆரோக்கியமான பேச்சு வார்த்தையாக முடிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் சொல்லிய விளக்கத்திலிருந்து சபையை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுவதால் சபையை ஒத்தி வைக்க வேண்டியதில்லை என்று கூறி, முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

### 3. அறிவிப்புகள்

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவைக்கு (செனட், தமிழ் யூனிவர்சிட்டி, தஞ்சாவூர்) கீழ்க்கண்ட இரண்டு உறுப்பினர்களின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன:

(1) திரு. எஸ். இராசாராமன்

(2) திரு. த. மாரிமுத்து





முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் மேற்கண்ட இருவரும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என நான் அறிவிக்கிறேன்.

### 4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட கவன ஈர்ப்பு, அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியாகும் பருத்தியைக் கொள்முதல் செய்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கி. கிருஷ்ணமூர்த்தி, துரை கிருஷ்ணமூர்த்தி, மு. இராசாங்கம், மா. மணிமாறன் என். எஸ். வி. சித்தன், அ. ரகுமான்கான், கோ. வீரய்யன், ஜே. ஹேமச்சந்திரன், கு. ரமணி ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டத்தில் தேங்கியுள்ள பருத்தியினை அரசு மற்றும் தனியார் வியாபாரிகள் அதற்குரிய விலை கொடுத்து கொள்முதல் செய்யாததால் ஏற்பட்டுள்ள நிலை'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட (விதை நீக்கப்படாத) சுமார் 10,000 மெட்ரிக் டன் பருத்தி, விற்பனைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 37 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பருத்தி உற்பத்தியாகும் பகுதியில் மட்டும் உள்ள 12 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்பனைக்கு பருத்தி பெறப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியில் பெரும்பகுதி, அதாவது 70 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை, இந்தியப் பருத்திக் கழகத்தினால் வாங்கப்படுகிறது, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வந்த 22,000 குவிண்டால் பருத்தியில் இதுவரை இந்தியப் பருத்திக் கழகம் 15,120 குவிண்டாலையும், தனியார் வியாபாரிகள் மீதத்தையும் கொள்முதல் செய்துள்ளனர். தரத்திலுள

அடிப்படையாகக் கொண்டு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 400 முதல்
ரூ.530 வரை இந்தியப்பருத்திக்கழகம் கொடுத்துள்ளது. தற்போது
தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மூலமாகவும் இந்திய
பருத்திக் கழகம் கொள்முதல் செய்யத் துவங்கியுள்ளது.

2. தஞ்சாவூரில் பருத்தி விற்காமல் தேங்கிக் கிடக்கவில்லை.
கோயம்புத்தூரில் உள்ள ஆலைகள் மற்றும் மகாராட்டிரம்,
குஜராத் மாநிலங்களில் உள்ள ஆலைகளில் வேலை நிறுத்தம்
காரணமாக மூடப்பட்டிருப்பதால், பருத்தி வாங்கப்படாத
காரணத்தினால் பருத்தியின் விலை சற்று குறைந்துள்ளது.
நிலைமை சீர்பட்டபின் விலை ஏற வாய்ப்புண்டு. பருத்திக்கு
போட்டியில் நல்ல விலை கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும்
மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. இ. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, தஞ்சை
மாவட்டத்தில் சமீப காலத்தில் பருத்தி உற்பத்தி பயிரிடுவது
அதிகமாக இருக்கிறது, விவசாயிகள் பருத்தி உற்பத்தி செய்வது
இலாபகரமாக இருக்கும் என்று நினைந்து, குறுவை சாகுபடி
செய்ய முடியாத நிலையில், அதிகமாக பருத்தி உற்பத்தி செய்கி
றார்கள். ஆனால், அரசு கொள்முதல் நிலையங்களில் அந்த
பருத்தி முறையாகக் கொள்முதல் செய்யப்படவில்லை. தனியார்
களும் மிகக் குறைந்த விலைக்கு கேட்பதால் அந்தப் பருத்தியை
விற்கமுடியாமல், அதன் பலனை அனுபவிக்க முடியாமல் மிகுந்த
நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகையால் ஒரு போர்க்
கால நடவடிக்கைபோல் விவசாயிகளிடமிருந்து பருத்தியை
நியாயமான விலை கொடுத்து வாங்க ஏற்பாடு செய்யப்படுமா?
குறுவை பயிரிடாமல் பருத்தி உற்பத்தி செய்துவிட்டு, இப்போது
வாழ்வுக்கு தவித்துக் கொண்டிருக்கும் விவசாயிகளை அரசு
காப்பாற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே,
இந்தப் பிரச்சனை சற்று நேரத்திற்கு முன்னால் கொண்டுவரப்
பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தோடு தொடர்புடையது.
பருத்தி ஆலைகளில் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிற
காரணத்தால் விலை குறைவாக இருக்கிறது. அந்தச் சூழ்நிலை
இப்போது மாறத் தொடங்கியிருக்கிறது. அதைப் பயன்படுத்தி
உரிய நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிற
போது நடைபெறுகிற பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்
டத்திற்கும் இதற்கும் சம்பந்தம் உண்டு என்று சொன்னார்கள்.
அப்படி சம்பந்தம் உண்டு என்று சொன்னால் தஞ்சை மாவட்
டத்தில் இருக்கின்ற விவசாயிகள் பாதிக்கப்படுவது நியாயமா?
மத்திய அரசு நிர்ணயித்திருக்கின்ற விலையைவிட இன்றைக்கு
000 ரூபாய் குறைவாகப் பஞ்சு விற்கப்படுகின்றது. ஏறத்தாழ
2சன்ற ஆண்டு 750 ரூபாய் குவிண்டால் ஒன்றுக்குக் கிடைத்த





நிலையில் இந்த ஆண்டு 350 ரூபாய்க்குத்தான் வாங்கப்
படுகின்றது. நல்ல ரகம் என்று சொல்லி அதாவது சுப்பீரியர்
குவாலிட்டி என்ற வகையில் 10 கிலோ 15 கிலோ தான் 450
ரூபாய்க்கு வாங்குகிறார்கள் பெரும்பாலும் 400 ரூபாய்க்குக்
கீழேதான் வாங்குகிறார்கள். இப்படி வாங்கப்படுகின்றதே தவிர
அவை நூற்பாலைக்கு வருகின்றபோது பஞ்சு விற்கப்படுகின்ற
விலையைப் பார்த்தால் மிகவும் சங்கடமாக இருக்கின்றது.
அதாவது ஒரு குவிண்டால் விலை 1200 ரூபாய் என்ற அளவுக்கு
இன்னும் சொல்லப்போனால் எம்.சி.7 என்பதைப் பொறுத்த
வரையில் அதனை நல்ல ரகம் என்று சொல்லி நூற்பாலைகளில்
2000 ரூபாய் வரையில் விற்கப்படுகின்றது. மேலும் விதை கூட
ஒரு கிலோ 15 ரூபாய் என்று தமிழ்நாட்டிலும் 10 ரூபாய் என்று
பாண்டிச்சேரியிலும் விற்கின்றது. இப்படிப்பட்ட நிலையில்
அவர்கள் உற்பத்தி செய்கின்ற பருத்திக்கு 350 ரூபாய் 400
ரூபாய்தான் கிடைக்கின்றது என்று சொன்னால் அது மிகவும்
குறைவாக இருக்கின்றது. இவ்வாறு அந்த பாதிக்கப்பட்ட
விவசாயிகளே தொடர்ந்து தொல்லைக்கு ஆளாவது நியாயமா?
எனவே அரசாங்கமே கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு
நியாய விலை வழங்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தினால்
விவசாயிகளின் பாதிப்பு குறையும் அல்லவா? எனவே, அந்த
வகையிலே ஏற்பாடு செய்ய இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர்
அவர்களே, பருத்தியை வாங்கி பஞ்சாலைக்குத்தான் தந்தாக
வேண்டும். அதை வேறு வகையிலே பயன்படுத்த முடியாது.
ஆகவே பஞ்சாலைகளில் பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது அந்த
பாதிப்புக்கள் பருத்தியின் விலையையும் நிச்சயமாகத் தாக்கும்
என்றாலும் விவசாயப் பெருமக்கள் பாதிக்கப்படாத அளவுக்கு
ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலமாகவும், இந்திய
பருத்திக் கொள்முதல் கழகத்தின் மூலமாகவும் அவற்றைக்
கொள்முதல் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்
கின்றது. அந்த நடவடிக்கைகளை இன்னும் சரியாக, முறையாக
எடுக்கத்தக்க அளவுக்கு அரசு முயற்சியை மேற்கொள்ளும்.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் தலைவர் அவர்களே,
தஞ்சை மாவட்டத்தில் கோடைப் பயிராகப் பருத்தி சாகுபடி
செய்யப்படுகிறது. இந்த ஆண்டு அந்தக் கோடைப் பருவத்தில்
வரக்கூடிய அந்தப் பருத்தியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் இந்திய பருத்திக் கழகத்தின் மூலமாக 75 விழுக்காடு
வரையில் வாங்குவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் சரியான
தகவலை அதிகாரிகள் அவர்களுக்கு அளிக்கவில்லை என்று நான்
கருதுகிறேன். ஏறத்தாழ 75, 80 விழுக்காடு திருப்பூரில் இருக்கக்
கூடிய வியாபாரிகளும், உடுமலைப்பேட்டையில் இருக்கக்கூடிய
வியாபாரிகளும் தஞ்சை மாவட்டத்திலிருந்துதான் கொள்முதல்
செய்கிறார்கள். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பெரு
மளவுக்கு விவசாயிகளின் பருத்தியை வாங்குவதில்லை. இப்படிப்

(திரு. கோ. வீரய்யன்) [1985 ஜூலை 18

பட்ட இக்கட்டான சூழ்நிலையில் 350 ரூபாய், 400 ரூபாய் வரையில்தான் குவிண்டால் ஒன்றுக்கு விற்கப்படுகின்றது. இதன் காரணத்தால் விவசாயிகளுக்கு பல இலட்சக்கணக்கான ரூபாய் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. தஞ்சைக்கும், திருப்பூருக்கும் இடையே பஞ்சின் விலையைப் பொறுத்த வரையில் 100 ரூபாய் குவிண்டால் ஒன்றுக்கு வித்தியாசம் இருக்கின்றது. இவற்றைத் தவிர 10 நாட்களில் அல்லது ஒரு மாத அளவுக்கு அரசே அவற்றை வாங்கி வைத்துக்கொண்டு குவிண்டால் ஒன்றுக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு உதவ வேண்டும். மேலும் அவர்களுக்குக் கடன் உதவி செய்து அந்த விவசாயி களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவர்களுக்கு நியாய மான விலை கிடைக்கவும் துரித நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, அரசே வாங்கி வைக்க வேண்டும் என்று எந்தப் பொருளிலே சொல்கிறார்கள் என்பது தெரியவில்லை. இந்தியப் பருத்திக் கழகம் என்பது மத்திய அரசினுடைய அங்கம். தமிழ கத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் என்பது மாநில அரசின் அங்கம். அவற்றின் மூலம்தான் கொள்முதல் செய்யப் படுகின்றது.

## 5. அறிக்கை அளித்தல்.

### பொதுக் கணக்குக் குழு.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக்குழுவின் சார்பில் நான் கீழ்க்கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

(1) தமிழ்நாடு அரசின் 1969–70 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1980–81) தனது முந்தைய அறிக்கையில் (நான்காவது அறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நட வடிக்கை பற்றிய நிதித் துறை சம்பந்தப்பட்ட மேற்படி குழுவின் ஆறாவது அறிக்கை.

(முற்பகல் 11-10)

(2) தமிழ்நாடு அரசின் 1964–65, 1970–71 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1980-81) தனது முந்தைய அறிக்கையில் (நான்காவது அறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை சம்பந்தப்பட்ட மேற்படி குழுவின் ஏழாவது அறிக்கை.



1985 ஜூலை 18] (திரு. என். எஸ். வி. சித்தன்)

(3) தமிழ்நாடு அரசின் 1970-71 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1980-81) தனது முந்தைய அறிக்கையில் (நான்காவது அறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத் துள்ள நடவடிக்கை பற்றிய உள்துறை சம்பந்தப்பட்ட மேற்படி குழுவின் எட்டாவது அறிக்கை.

(4) தமிழ்நாடு அரசின் 1964-65, 1966-67 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1980-81) தனது முந்தைய அறிக்கையில் (நான் காவது அறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய வணிக வரிகள் மற்றும் அறநிலையத்துறை சம்பந்தப்பட்ட மேற்படி குழுவின் ஒன்பதாவது அறிக்கை.

(5) தமிழ்நாடு அரசின் 1966-67 முதல் 1971-72 ஆம் ஆண்டு களுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1980-81) தனது முந்தைய அறிக்கையில் (நான்காவது அறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டும் எடுத் துள்ள நடவடிக்கை பற்றிய தொழில் துறை சம்பந்தப்பட்ட மேற்படி குழுவின் பத்தாவது அறிக்கை.

## 6. அரசினர் தீர்மானம்.

### விதி 33-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்,"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

## 7. தமிழ்நாடு மின் வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மற்றும் 1984-85 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை ஆகியவைமீது விவாதம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் 1984–85 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றை *பேரவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மின் வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது ஆற்ற வேண்டிய என் உரையை *நூல் வடிவில் தொகுத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்குத்

*352–372 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

தந்துள்ளேன். அவற்றை சட்டப் பேரவையிலே நான் உரை
யாற்றியதாக எடுத்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள்
தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டு
கிறேன்.

தமிழ்நாடு மின் வாரியம் என்று சொல்கிறபோது அது ஒரு
பொது நிறுவனம். பொதுமக்களுக்கு நாள்தோறும், ஏன், மணித்
துளிகள்தோறும் பயன்படுகின்ற ஒரு நிறுவனம். மிகப் பெரிய
நிறுவனம். அந்நிறுவனத்தை நடத்துவது என்பது மிகக் கடின
மான காரியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும்
நன்கு அறிவர். இருப்பினும் அந்நிறுவனம் செம்மையாக
நடைபெறவேண்டும் என்பதற்காக நல்லக் கருத்துக்களை நீங்கள்
எடுத்துச் சொன்னால், அதை வரவேற்கத் தயாராக இருக்
கிறோம். இது ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அரசு ஏற்று நடத்துகிற ஒரு நிறுவனம் என்று எண்ணாமல்,
பொது நோக்கோடு அனைவரும் அணுக வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

குறைகள் இருந்தால், சுட்டிக் காட்டுங்கள் திருத்திக்
கொள்கிறோம். குற்றங்கள் இருந்தால் சொல்லுங்கள், யார்
அதற்கு உரியவர்களோ அவர்களைத் தண்டிக்கத் தயாராக
இருக்கிறோம். எனினும் இந்நிறுவனத்தைப் பொறுத்தவரையில்
தலைசிறந்த நிறுவனமாக அது தமிழகத்தில் மிளிர்வதற்கு
மேலான ஆலோசனைகளை வழங்கவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு அமர்கிறேன்.

*திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றையதினம் 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதி
நிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த
தலைவருக்கு நன்றி கூறி என்னுடைய உரையை நான் ஆரம்பிக்
கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தினுடைய மின்சார வாரியத்
தினுடைய நிதிநிலை அறிக்கை, சென்ற ஆண்டு விவாதத்திற்கு
வராத காரணத்தினாலும், இந்த ஆண்டாவது அதன் விவாதம்
ஒழுங்காக நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தோடும் இந்த
மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிதி நிலை
அறிக்கையைப் பார்க்கிறபோது, அவர்கள் கொடுத்திருக்கிற
கொள்கை விளக்கக் குறிப்புகளைப் பார்க்கிறபோது, ஆண்டுக்
காண்டு மின்சார வாரியத்தினுடைய செலவுகள் அதிகரித்துக்
கொண்டுதான் வருகின்றன என்றும், அத்தோடு நஷ்டத்தில்
இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் தான், தெளிவாகக்
காட்டுகிறது. அதற்காக மின்சார வாரியத்தில், செலவுகளைக்
குறைக்க சிக்கன நடவடிக்கை என்று ஏதாவது எடுக்கப்பட்டி
ருக்கிறதா என்று பார்த்தால் சிக்கன நடவடிக்கை என்ற முறை
யில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை
என்று முதலிலே கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



கடந்த முறையில் நடந்த 1982-83 ஆம் ஆண்டில் நடந்த
இதே மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்
தில் நான் பேசுகிறபோதுகூட, இந்த மின்சார வாரியத்தைச்
சீர் செய்ய ஒழுங்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாக
வேண்டும், சரியான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கோரி, அத்தோடு என்னுடைய பகுதியில் இருக்கக்கூடிய
சில நீர் நிலைகளிலேயிருந்து மின்சாரம் தயாரிக்க வேண்டும்
என்றும் கோரியிருந்தேன்.

நெய்வேலியிலே உற்பத்தி செய்யப்படக்கூடிய மின்சாரத்தை
தமிழகத்திற்கு செலவழிப்பதிலே அதிக முக்கியத்துவம் கொடுக்க
வேண்டும் என்று நீங்கள் அடிக்கடி சொல்லிவருகிறீர்கள்.
அதைப்போலவே மத்திய அரசிடம் மாநில அரசு கேட்டுக்
கொண்டிருக்கிறது. இன்னொன்றையும் மாநில அரசு சொல்லி
வருகிறது. உற்பத்தி செய்யக்கூடிய இடுபொருள்களின் விலை
அதிகமாக இருக்கிறது என்றும், நமக்குக் கிடைக்கக்கூடிய
பொருள்களின் விலை குறைவாக இருக்கிறது என்றும்,
அடிக்கடி சொல்வார்கள்.

அதுபோன்று இன்றையதினம் தென்னாற்காடு மாவட்டத்தில்
நெய்வேலியில் உற்பத்தி செய்கிற மின்சாரம் அந்த மாவட்டத்தில்
இருக்கிறவர்களுக்கு கொடுக்கப்படாமல் மற்றவர்களுக்கு
விநியோகிக்கப்படுகிற பரிதாபமான நிலை இருக்கிறது.
இன்றைக்கு விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கிறபோது
அதிலே பல சிக்கல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தச்
சிக்கலைத்தவிர்ப்பதற்கு சென்ற ஆண்டில் 'ஆன் தி மெயின் சர்வீஸ்'
என்ற முறையில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. அதுவும்
முறையாக செய்யப்பட்டதா என்றால் இல்லை. அங்கே
இருக்கிற இளநிலை மின்பொறியாளர்கள் பல தவறுகளைச்
செய்து கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய சின்னசேலம் தொகுதியை எடுத்துக் கொண்டால்
ஒரு கிராமத்தில் கிணறு ஒருவரின் பெயரில் இருக்கிறது.
ஆனால் மின்சாரம் கொடுத்திருப்பதோ வேறு ஒருவரின் பெயரில்
கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிணற்றில் தண்ணீர்
கிடையாது. அதுமட்டுமல்ல. சின்னசேலத்தை அடுத்த கணியாமூர்
என்ற கிராமத்தில் ஒரு கிணற்றுக்கும் மின்கம்பத்திற்கும்
இடையே 10 அடி தூரம் தான் இருக்கிறது. ஏற்கனவே ஒரு
சர்வீஸ் இருந்தாலும் மீண்டும் சர்வீஸ் வேண்டுமென்று மனு
கொடுத்திருந்தார்கள். அங்கேயிருக்கிற இளநிலை பொறியாளர்,
அவர்கள், பெயர் கலியமூர்த்தி என்று நினைக்கிறேன், தனிப்
பட்ட விரோதத்தை மனதில் வைத்து மின் இணைப்பைக்
கொடுக்கவில்லை. அடுத்து குரால் என்ற கிராமத்தில மின்சாரம்
வேண்டுமென்று சொல்லி மனுச் செய்தார்கள். அப்படி மனுச்
செய்த நேரத்தில் ட்ரான்ஸ்பார்மரில் லோட் இல்லையென்று
சொல்லி மறுத்துவிட்டார்கள். அந்தநிலையில் மின் இணைப்பு
கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. கொடுக்க வேண்டியதை

கொடுத்தால் நிலைமைகள் சீராகும் என்று சொல்கிறார்கள். அதற்கும் தயார் என்று சொன்னால் அதையும் வாங்கிக் கொண்டு மின் இணைப்பு வழங்காத நிலைமை அங்கே இருந்து கொண்டிருக்கிறது. அந்த இளநிலை மின்பொறியாளர்மீது மக்கள் பல மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இது வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அடுத்து கல்வராயன் மலைப்பகுதியில் நீர்வீழ்ச்சியை பயன் படுத்தி மின் உற்பத்தி செய்வதற்காக நான் ஒரு கேள்வியை கொடுத்திருந்தேன். அதுகுறித்த ஆய்வுகள் நடந்துகொண்டிருப் பதாகவும், நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் சொன்னார் கள். இங்கே கொடுத்திருக்கிற 1982–83-ம் ஆண்டு அறிக்கையில் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக நல்லமுறையில் நடவடிக்கைகளை மேற் கொண்டு மின்சாரம் தயாரிப்பதற்கு அரசு முன்வர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கோமுகி ஆற்றில் வீணாகப் போகும் தண்ணீரை பயன்படுத்தி அங்கே 20 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படு மென்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி செய்யவேண்டு மென்றால் அங்கே இருக்கிற அணையின் கரையை உயர்த்த வேண்டும். அப்படி கரையை உயர்த்தினால் தான் தண்ணீரை நாம் தேக்க முடியும். அந்தவகையில் செய்து மின்சாரம் தயாரிக்க நல்ல வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், சம்பந்தபட்ட துறை அதிகாரிகளும் பொதுப்பணித் துறையை அணுகி அந்த அணையின் கரையை உயர்த்தி மின்சாரம் எடுப்பதற்கு பயனுள்ள வகையில் அதனைச் செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதை குறித்து சென்ற முறை சட்டமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் கேள்வி கேட்டபோது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னதாவது 36 கிராமங்களுக்கு இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை என்று தகவலைச் சொன்னார் கள். மின்இணைப்பைக் கொடுக்கிறபோது என்னுடைய சின்ன சேலம் தொகுதியை பொறுத்தவரையில் கடந்த முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதும் கோரிக்கைகளை தெரிவித்திருந்தேன். அமகளத்தூர், ஈரியூர் என்று இரண்டு கிராமங்கள் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்றன. இதுவரையில் மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்பு கொடுக்காத கிராமங்கள் இருக்கிறதென்றால் அந்த இரண்டு கிராமங்கள் தான். அதற்கான மனுக்களை கொடுத்திருக்கிறார் கள். இதுவரையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை. இதனை அமைச்சர் அவர்கள் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து குடிசைகளுக்கு மின்இணைப்பு கொடுக்கப்படுவதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுவும் முழுமையாக கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று மனு போட்டிருந்தாலும், அங்கே இருக்கிற அதிகாரிகள் ஒரு சர்வீசிற்கு 50 ரூபாய் என்று பெற்றி ருக்கிறார்கள். இது குறித்து சம்பந்தப்பட்ட கோட்டப் பொறி யாளரிடத்தில் எடுத்துச் சொல்லியிருந்தேன். அவர்கள் இதில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்றையதினம் மின் இணைப்பு கொடுக்கிறபோது வறட்சியால், மின்சாரம் இல்லாததால் விவசாயம் பாதிக்கப் படுகிறது. அப்போது அவர்களின் வருமானம் குறைகிறது. அப்படி வருமானம் குறைகிற நேரத்தில் தங்களுடைய மின்சாரக் கட்டணத்தைக் கட்டமுடியவில்லையே என்று வேதனை படுகிறார்கள். அப்போது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. அவர்களுடைய மின் இணைப்பை துண்டித்து விடுகிறார்கள் விவசாயிகள் நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்கிறோம். ஆனால் அவர்கள் படுகிற வேதனையைப் பார்த்தால் மிகவும் கவலையாக இருக்கிறது. ஆனால் பணம் படைத்தவர்கள், மில் அதிபர்கள், தொழில் அதிபர்கள் ஆகியவர்களுடைய மின் இணைப்பை துண்டித்தால் அவர்கள் கோர்ட்டுகளுக்கு போய் விடுகிறார்கள். அதனால் நாங்கள் என்ன செய்வது என்று வாரியத்தில் கேட்கிறார்கள். அந்த வழக்குகளைக் குறித்து பணி யாற்ற தனித் துறை இருக்கிறது. அந்தப் பிரிவு தூங்கிக் கொண்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். மால்கோ நிறுவனம் 1975 ஆம் ஆண்டில் மின்பாக்கி சுமார் 9 கோடி வைத்திருந்தது. இன்றைக்கு அது சுமார் 24 கோடி அளவிற்கு உயர்ந்து அவர்கள் அந்த அளவிற்கு மின்கட்டணத்தை பாக்கி யாக வைத்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-20)

அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, அவர்கள் சொல்கிறார்கள், சுப்ரீம்கோர்ட்டுக்குச் சென்று விட்டார்கள். நாங்கள் என்னசெய்வது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள் இந்தத் துறையிலே இருப்பவர்கள் நடவடிக்கைகள் எடுத்து, அந்த வழக்குகளை எல்லாம் துரிதமாக முடிக்கவேண்டாமா? அப்படி முடித்து, மின் துண்டிப்புக்களைச் செய்யவேண்டாமா என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சொல்கிறார்கள். அலுமினிய விலைகள் உயர்
கின்றபோது நாங்கள் மின்சாரக் கட்டணத்தைக் கட்டுகிறோம்
என்று சொல்கிறார்கள். ஆனால் பிளாக் மார்க்கெட்டிலே ஒரு
விலையும், வெளி மார்க்கெட்டிலே ஒரு விலையும் கொடுக்கின்ற
காரணத்தால்தான் அவர்கள் தப்பு செய்து கொண்டு இருக்கிறார்
கள். எனவே அந்தத் தப்பை கண்டுபிடித்து அவர்களுக்கு மின்
துண்டிப்புச் செய்யக் கூடாதா?

அடுத்து சில தொழில் நிறுவனத்தைச் சார்ந்தவர்கள்,
தொழில் அதிபர்கள் மின்சாரக் கட்டணத்தை பாக்கியாக
வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஏன் அவர்கள் மீது
நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த மின்சார வாரியத்தில்
இருக்கக்கூடிய நிதிநிலைமையை, செலவுகளை நல்லமுறையில்
செய்யவேண்டும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்
என்பதற்காக நாம் மின்சார வாரியத்திலே தலைவர் ஒருவரைப்
போட்டு இருக்கிறோம். அந்தத் தலைவர் இதுவரையில்
என்ன நடவடிக்கை எடுத்தார். என்பது தெரியவில்லை.

ஒரு விஷயத்தைமட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.
அங்கே இருக்கக்கூடிய பி. ஏ. சீனிவாசன் என்பவர், அரசாங்க
வழக்குகளைப் பார்ப்பதற்காக என்று இருப்பவர். அதற்கு
ஒரு தனி அதிகாரியைப் போட்டு இருக்கிறார்கள் அவர்
ரிடையராக வேண்டியவர்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாற்றுத் தலைவர்
அவர்களே, மின் துண்டிப்புச் செய்வதற்கு நம்முடைய அரசு
பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, நடவடிக்கை, மால்கோ
நிறுவனத்தைப் பொறுத்தவரையில் மேற்கொள்ளப்பட்டது.
மின் துண்டிப்பு செய்யக் கூடாது என்று ஹைகோர்ட்டிலே
அவர்கள் அதற்கும் தடை உத்தரவு வாங்கிக் கொடுத்து
விட்டார்கள்.

திரு. எஸ். சிவராமன்: அமைச்சர் அவர்கள், தடை வாங்கி
விட்டார்கள் என்று சொன்னார்கள். அந்தத் தடையை உடைப்
பதற்காகத்தான் இங்கே அமைச்சர் இருக்கிறார்கள். அதற்கு
என்று தனி வாரியத் தலைவர் இருக்கிறார். அந்த வாரியத்
தலைவரும், அதிகாரிகளும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்
என்பதுதான் என்னுடைய கேள்வி. எனவே, அந்த கோர்ட்டி
னுடைய வழக்குகளைச் சமாளிப்பதற்கு என்று ஒரு பி. ஏ.
சீனிவாசன் அவர்களுக்கு பதவி நீட்டிப்புக் கொடுக்கப்பட்டு,
அவர்களும் தினமும் வழக்குகளுக்காக நீதி மன்றத்திற்குச்
சென்று வருகிறார்கள். அதுதான் அவருடைய வேலை. ஏன்
அவர்களுக்கு பதவி நீட்டிப்புக் கொடுக்கவேண்டும். கீழ் மட்டத்
திலே அதிகாரிகள் இல்லையா? அரசாங்கத்திலே வேலை கிடைக்கா
மல் எவ்வளவோ பேர்கள் இருந்து கொண்டு இருக்கிறார்கள்.
அவர்களுக்குக் கொடுக்கக்கூடாதா?





காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே அப்பாதுரை என்பவர் வாரியத்
தின் தலைவராக இருந்தார்கள். அவர் மின்சார வாரிய
தலைவராக இருந்தபோது, ஒரே ஒரு தலைமைப் பொறியாளரை
வைத்துக்கொண்டு, இந்த மின்சார வாரியத்தை இயக்கினார்.
ஆனால்இன்றையதினம் மின்சார வாரியத்திற்கு என்றுஒரு தலைவர்
இருந்து, அவருக்கு உதவியாக இன்றைக்கு 14 தலைமைப்
பொறியாளர்கள் இருக்கிறார்கள். அவாகள் என்ன செய்து
கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அந்தத்தலைவராக
இருப்பவரும், தலைமைப் பொறியாளராக இருப்பவரும், கலந்து
பேசி நடவடிக்கை எடுக்கிறார்களா அல்லது தன்னிச்சையாக
நடவடிக்கை எடுக்கிறார்களா என்பதும் தெரியவில்லை.

அடுத்து இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே
மின்சாரம் அடிக்கடி தடைபடுகிறது. அல்லது அதை மின்சார
வெட்டு என்று எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் வரலாற்றிலே
இல்லாத அளவிற்கு கடந்த 24-4-85 அன்றும், 17-5-85இந்த
இரண்டு நாட்களும் சென்னை நகரம் இருளில் மூழ்கியது, என்ற
கதையை நாட்டு மக்கள் அறிவார்கள். இதுவரையில் சென்னை
மாநகரம் இருளில் மூழ்கியது கிடையாது. இப்படி ஏன் இருளில்
மூழ்கடிக்கப்பட்டது, அந்த வாரியத் தலைவருக்கும் தலைமைப்
பொறியாளருக்கும் ஒத்துப் போகவில்லையா? அப்படி ஒத்துப்
போகவில்லை என்றால், அதற்கு என்ன காரணம் என்பதை
அறிய விரும்புகிறேன். அல்லது தன்னிச்சையான நடவடிக்கை
என்ற பேரில் கீழே இருக்கிற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்
கிறார்களா? எனவே தலைவராக இருந்தாலும், சம்பந்தப்பட்ட
பொறியரளர்களை அணுகி, சுமுகமாகப் பேசி நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு வெளியிலே பேசிக்கொள்கிறார்கள், இது எந்த
அளவிற்கு உண்மை என்பது தெரியாது. சட்டமன்ற உறுப்பினர்
களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்
பட்டவர்கள். அவர்கள் சொல்லுகின்ற சில காரியங்களைச்
செய்வது அதிகாரிகளுடைய பொறுப்பு. ஆனால் ஆளும் கட்சி
உறுப்பினர் ஒருவர், ஒரு நேரத்திலே சொன்னதை நான்
கேள்விப்பட்டேன். தலைவரிடம் சென்றால், சரியாகப்
பேசமாட்டேன் என்று சொல்கிறார்கள். முடிந்து விட்டது,
அனாவசியமாக பேசிக்கொள்ளவேண்டாம், தொந்திரவு செய்ய
வேண்டாம் என்றும், வெளியே போங்கள் என்றும் சொல்வதாக,
அவர்கள் வருத்தப்பட்டார்கள், ஏன் இந்த நிலை? மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மரியாதை இல்லையா? என்பதை
நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படி
இல்லை என்றால், தலைவர், தன்னிச்சையாக தனி அரசாங்கத்தை
நடத்துகிறாரா? என்பதை மிக்க வேதனையோடு குறிப்பிட்டுச்
சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த அதிகாரிகளுக்கு
அதிகாரம் யார் கொடுத்தது? என்பதையும் நான் கேட்க
விரும்புகிறேன். நாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அமைச்சர், அவர்கள் சொல்வதை அவர்கள் கேட்கிறார்களோ என்று கூட நான் சந்தேகப்படுகிறேன். காரணம் சென்ற முறை எங்களுடைய கட்சித் துணைத் தலைவராக இருந்த திரு. சித்தன் அவர்கள் கேள்வி கேட்டார்கள். தூத்துக்குடி, எண்ணூர் அனல் மின் நிலையங்களை விஸ்தரிப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து விட்டது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். ஆனால் அதை விடுத்து, தலைவர் அவர்கள் தன்னிச்சையாக தன்னுடைய விளம்பரத்திற்காக சொன்னரா, என்று தெரியவில்லை, அவர்கள் அதைப் பற்றி நிருபர்களைக் கூட்டிச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எப்போதுமே ஒன்றை பாராட்டிச் சொல்கிற போதோ அல்லது குறை சொல்கிற போதோ செய்கிற செயலை மட்டும் தான் சொல்லவேண்டுமே தவிர, வேறு தனிப்பட்ட அதிகாரிகளைப் பற்றி சொல்வது சரியாக ஆகாது. ஏன் என்றால் ஒருவரே நல்ல காரியமும் செய்ய முடியும், சில நேரங்களில் கெட்ட காரியமும் செய்யும்படி வந்துவிடும். ஆகவே, செய்கின்ற செயலை பற்றி விமர்சிப்பது என்பது ஒன்று, ஒரு அதிகாரியைப் பற்றி விமர்சிப்பது என்பது ஒன்று. தூத்துக்குடி அனல் மின் நிலையம் மற்றவைகளைப் பொறுத்தவரையில் ஏற்கனவே வந்துவிட்டன. ஆனால் செய்யப்பட்ட காரியத்தை மட்டும் தான் நான் சொன்னேனே தவிர வேறு அல்ல. ஆகையினால் மாண்புமிகு உறுப்பினர் இங்கே சீனிவாசன் அவர்களைப் பற்றி சொன்னார்கள், பதவி நீட்டிப்பு கொடுத்து இருக்கிறீர்கள் என்று. அது என்ன காரணத்தால் என்பதை நான் பதில் சொல்லுகின்றபோது அதற்கான பதிலைச் சொல்கிறேன். ஆகவே குறைகள் என்று சொல்லுகிறபோது அது என்ன செயல் என்பதைப் பற்றி வேண்டுமானால் சொல்ல வேண்டுமே தவிர ஒருவர் நல்லவர் என்றும், இன்னொருவர் கெட்டவர் என்றும் நாம் யாரையும் எந்த நேரத்திலும் முடிவு செய்வது தவறு ஆகி விடும்.

***திரு. எஸ். சிவராமன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் எந்த ஒரு தனிப்பட்டவரையும் கெட்டவர் என்று தரக்குறைவாக பேசுவதற்கு நான் என்றுமே ஆயத்தமாக இருந்தது இல்லை. நல்லவராக இருப்பவர் என்றுமே நல்ல காரியம் செய்யவேண்டும். கெட்ட காரியம் செய்வதற்காக நான் இங்கே வரவில்லை. அவர்கள் வருத்தம் அடையும்படி கூறமாட்டேன். அதில் இருக்கக்கூடிய சிக்கல்களை, நிலைமை களை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி என்கிற நிலை மையில் நான் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். அதைச் சொல்லக்கூடிய இடம் இது தான் என்பதால் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வேண்டுமானால் திருத்திக்கொள்ள லாம். இதுபோன்ற நிலைமைகளைத் தடுப்பதற்கு அரசு அதிகாரிகள், தலைமை பொறியாளர்கள் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



சிக்கனம் என்ற பெயரில் இன்றையதினம் பல நடவடிக்கை களை மேற்கொண்டிருக்கிறோம். ஆனால் அதேநேரத்தில் இங்கே விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படுகின்ற போதும், குடிசை மக்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுகின்ற போதும் இதற்கு முன்பாக கோட்டப்பொறியாளர் அவர்களுக்கு அந்தப் பொருட்களை வாங்குவதற்கான உரிமை கொடுக்கப் பட்டிருந்தது, இன்று அதை மாற்றி எஸ்.இ.—க்கு அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் கிராமத்தில் இருக்கக்கூடியவர்கள் சென்று கேட்டால் எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். எஸ்.இ.யிடம் சென்று கேட்டால் அவர்கள் தலைவரைதான் கேட்கவேண்டும் என்று சொல் கிறார்கள். ஆனால் தமிழக அரசு மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இருக்கக்கூடிய அதிகாரத்தை ஏன் இப்படி ஒரே இடத்தில் குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கவேண்டும். அப்போது தான் அங்கே இருக்கக்கூடிய நிலைமைகளை எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள், மக்களுடைய பிரதிநிதிகள் சம்பந்தப் பட்டவர்களுக்கு எடுத்துச் சொல்லி உடனுக்குடன் அந்தப் பிரச் சினையைத் தீர்ப்பதற்கு வழிவகை ஏற்படும். பெரிய காரியங்கள் செய்யும்போது மக்களுக்கு தெரியாது. சிறு சிறு காரியங்கள் தான் பொது மக்களுக்கு எளிதாக தெரியும் சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே அது போன்ற காரியங்களை பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்றையதினம் எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் மட்டும் அல்ல, திருமயம் கிராமிய கூட்டுறவுச் சங்கத்தில் பணி செய்கின்ற தொழிலாளர்களுக்கு சம்பளம் மிகக் குறைவாக கொடுக்கப்படுகின்றது. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு கொடுக்கின்ற சம்பளத்தில் பாதி அளவு கொடுக்கப்படவில்லை. இந்தக் குறையை அரசு போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இனிமேலாவது மின்சார வாரியத்தில் இருப்பவர்கள் சம்பந்தப் பட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களை நல்ல முறையில் வேலை வாங்கவேண்டும் என்றும் அரசு செய்கின்ற காரியங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு தலைவருக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். நன்றி, வணக்கம்,

***திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டு இருக்கின்ற தமிழ்நாடு மின் வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும் 1984-85 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வளர்ந்து வருகின்ற மனித சமுதாயத்தின் நவீன சாதனமாகவும் உலக வளர்ச்சியில் பெரும் பங்கு ஏற்கின்ற துறையாகவும் இருக்கின்ற மின் துறை, மக்களின் வாழ்வுக்கு அடிப்படையாக இருக்கின்ற விவசாயத் துறைக்கும், தொழில் துறைக்கும் பெரிதும் உதவியாக இருந்து வருகிறது. இந்தத் துறையில் தனிக் கவனம் செலுத்துகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தமிழகத்தினை மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக உருவாக்கி இன்றைக்கு முக்கியத்துவம் தந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 11-30)

1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வாரியம், வாரியத்தினுடைய முதலீட்டுச் செலவுக்கென ரூ.325.93 கோடி ஒதுக்கியுள்ளது. தமிழகத்திற்கு 7-வது ஐந்தாண்டுத் திட்ட முதலீடு 5,750 கோடி ரூபாய் ஆகும். இதில் மின் துறைக்கு மட்டும் 2,000 கோடி ரூபாயை ஒதுக்கி செலவிட இருக்கிறது. திட்டச் செலவிலே 34.78 சதவிகிதம் மின் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மின் வாரியம் இன்றைக்குப் பெரிய நஷ்டத்திலே இருந்து வருவதை யாரும் மறந்து விடமுடியாது. வர்த்தக ரீதியாக இந்த நஷ்டம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மட்டும் 913.25 கோடி ரூபாய் ஆகும். 7-வது திட்டக் காலத்தில் இந்த நஷ்டம் 1,414.03 கோடியை எட்டும் என்று கருதப்படுகிறது.

இவ்வளவு சிக்கல்களுக்கிடையேயும், இன்னல்களுக்கு இடையிலேயும், இந்த அரசு, புரட்சித் தலைவருடைய அரசு, எந்த அளவுக்கு இந்தத் துறையிலே சாதனை படைத்துச் செயல்படுத்தி வருகிறது என்பதை நாம் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புறங்கள், மின் இணைப்பு பெற்று இருக்கின்ற சாதனையை நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இந்தியத் திருநாட்டிலே தமிழகத்தைப் போல மின் உற்பத்தி விநியோகமாக இருந்தாலும் சரி, அல்லது பயன்படுத்துகின்ற தன்மையாக இருந்தாலும் சரி, இந்த மாநிலத்தை விட முதலிலே இருக்கின்ற மாநிலம் வேறு எதுவும் இல்லை என்று சொல்லலாம், தமிழகம் முழுவதும் இருக்கின்ற 15,735 கிராமங்களில் 15,706 கிராமங்களுக்கு இன்று மின் இணைப்பு தரப்பட்டு இருக்கின்றது.

அதேபோல் குடிசைக்கு மின் இணைப்புத் திட்டம் என்ற திட்டம் தமிழகத்திலே மட்டும்தான் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. குடிசைகளிலே வாழ்கிற ஏழை எளியவர்கள் மின்சாரத்தினுடைய பயனை இன்றைக்கு பெறுகின்ற அளவுக்கு, மாடி வீட்டிலே இருக்கிறவர்கள் மட்டுமல்ல; சாதாரண குடிசை



களிலே இருக்கிறவர்களும், இதிலே பயன் பெறவேண்டும் என்பதற்காக, புரட்சித் தலைவர் அவர்கள் இந்தப் புரட்சிகரமான திட்டத்தை 1978 ஆம் ஆண்டு செயல்படுத்தினார்கள். இன்றைய வரை தமிழகம் முழுவதும் 6.52 லட்சம் மின் இணைப்புக்கள் குடிசைகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல் விவசாய பம்ப்செட்டுகளைப் பொறுத்தவரையில், தமிழகம் முழுவதும் இன்றைக்கு 10.52 இலட்சம் மின் இணைப்புக்கள் தரப்பட்டு இருக்கின்றன. இந்திய திருநாட்டிலேயே தமிழகத்தைவிட வேறு எந்த மாநிலமும் இந்த அளவுக்கு அதிகமான மின் இணைப்புக்களைத் தரவில்லை என்பதை இந்த நேரத்திலே இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்,

அதே போல் சிறு தொழில்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்படுவதைப் பார்க்கும்போது, கிராமப்புற தொழில் வளர்ச்சியிலே குறியளவினைத் தாண்டி, நாட்டிலே சாதனை புரிந்து இருக்கிற ஒரே மாநிலம் தமிழகம் என்பதை யாரும் மறுத்து விட முடியாது. 1984 ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி நிலவரப்படி, தமிழ்நாட்டிலே 10,616 சிறு தொழில்களுக்கு மின் இணைப்பை அளிக்கவேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டது. ஆனால், மொத்தம் 12,716 சிறு தொழில்களுக்கு மின் இணைப்பு இன்றைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இது 119.78 சதவீத சாதனை ஆகும்.

தமிழகம் இன்றைக்கு மின் பற்றாக்குறை மாநிலமாக இருந்து வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். இதற்கு என்ன காரணம் என்பதை நாம் எண்ணிப் பார்க்கிறபோது, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எவ்வளவோ சிறப்பான திட்டங்களை இன்றைக்குச் செயல்படுத்திக்கொண்டிருந்தாலும், உடனடியாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியவில்லையே என்பதற்கு அடிப்படைக் காரணம், 1970 ஆம் ஆண்டுக்குப் பிறகு புதிய மின் திட்டங்களுக்கான திட்டங்களைத் தீட்டாமல், புதிய திட்டங்களுக்கு அனுமதியைப் பெறாமல், புதிய மின் திட்டங்களைச் செயல்படுத்தாமல், மின் இணைப்புத் தருவதிலே மட்டும் அக்கறை கொண்டு இருந்த அன்றைய அரசினுடைய மாபெரும் குற்றத்தினுடைய பின் விளைவுதான் இன்றைக்கு நாம் அதனுடைய பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

மின் துறையிலே கம்பி நீட்டுகிற பணியை மட்டும் மிகச் சிறப்பாகச் செய்தார்கள். ஆனால் தொலைநோக்குப் பார்வையோடு, மின் துறை வளர்ச்சிக்கு, நாட்டுக்கு தேவைக்கேற்ப செயல்திட்டங்களைத் தீட்டவோ, செயல்படுத்தவோ அன்றைய அரசு முன்வரவில்லை என்பதையும், செயல்படுத்தமுடியாத சூழ்நிலையில் இருந்தது என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு நேரத்தில் ஊழல் மன்னர்களாக இருந்தவர்கள் இன்றைக்கு நல்லவர்களை, திறமை மிக்கவர்களை, குடும்ப பாரம்பரியம் மிக்கவர்களைப் பார்த்து தேறா மன்னர்கள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே, அவர்கள் யார் என்று பார்க்கிறபோது, சமயநல்லூர் மின் நிலையத்தை சமயம் பார்த்து விற்றவர்கள், அன்றைக்கு சமயநல்லூர் மின் நிலையத்தை குறைந்த விலைக்கு விற்று இருக்கிறார்கள். அதிலே இருக்கின்ற செம்பு, இரும்பு, அலுமினியம் போன்றவற்றின் மதிப்பே பல கோடி ரூபாய் பெறும் என்று சொல்லப்படுகிறது.

ஆகவே, அப்படிப்பட்ட தவறெல்லாம் செய்ததன் விளைவாக, இன்னும் சொல்லப்போனால் அன்றைக்கிருந்த அரசு தன்னுடைய நிர்வாகத் திறமையின்மை காரணமாக இன்றைக்கு ஆளுகின்ற அரசுக்கும், மக்களுக்கும் பல சங்கடங்களை உருவாக்கிச் சென்றிருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இடுக்கி மின் திட்டத்தைப் பொறுத்தவரையில் அன்றைக்குக் கேரள அரசுடன் பேசி ஒரு 25 சதவீதமாவது நாம் பெற வேண்டுமென்ற உறுதி மொழியை அவர்கள் பெற்றிருப்பார்களேயானால் இன்றைக்கு இந்த நிலைமை இருந்திருக்காது. கேரள அரசோடு ஒரு ஒப்பந்தம், கடந்த காலத்திலே மின்சாரம் பெறுவதற்காக யூனிட்டுக்கு 10 காசு என்ற வீதத்தில், ஆண்டு ஒன்றுக்கு ஒரு காசு கூட்டி பத்தாண்டுக் கால ஒப்பந்தத்தை முடித்திருப்பார்களேயானால் தமிழக அரசு இன்றைக்குக் கேரளத்திலேயிருந்து அதிக அளவிற்கு விலை கொடுத்து மின்சாரத்தை வாங்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டிருக்காது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, யாரோ செய்த தவறுகளின் காரணமாக இன்றைக்கு நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் அரசும், மின்சார அமைச்சரவர்களும் இப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் நீக்கி செயல்படுவதற்கு நல்ல பல காரியங்களை உறுதியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே ஆண்டுதோறும் மின்வெட்டு என்பது இன்றைக்கு சகஜமாகி விட்டிருக்கிறது. புனல் மின் நிலையங்களிலே நீர்வரத்து குறைந்ததன் காரணமாகவும், அனல் மின் நிலையங்கள் அடிக்கடி பழுதுபடுகின்ற காரணத்தாலும் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. அதோடு மின்சாரத் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே அதிக இடைவெளி இருக்கின்ற காரணத்தால் இந்த நிலைமை அமைந்துவிட்டது என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தண்ணீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகள் இன்றைக்கு அநேகமாகத் தீர்ந்துவிட்டது என்றே சொல்லலாம். இந்த நிலைமையில் புதிய அனல் மின் நிலையங்களை அமைக்கவும், அல்லது ஏற்கனவே உள்ள அனல் மின் நிலையங்களை நவீனப்படுத்து



வதிலும் தனி அக்கறை செலுத்தவேண்டும். நம்முடைய தேவையை ஈடுசெய்வதற்கு இன்றைக்குக் கல்பாக்கம் அணு மின் நிலையமும், மற்ற அனல் மின் நிலையங்களும் சற்றுக் கணிசமாக உதவிக்கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நாம் மத்திய அரசினுடைய எதிர்பார்ப்பை அதிக அளவிற்கு நம்பிக்கொண்டிருக்கிறோம். மத்திய மின் திட்டங்களிலே உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தைப் பங்கிடுவது சம்பந்தமாக மத்திய அரசு வைத்து உள்ள ஒரு நெறிமுறை இன்றைக்கு நமக்குத் திருப்தி அளிக்கின்ற வகையிலே இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட மாநிலங்களில் நிலவுகின்ற பற்றாக்குறையின் அடிப்படையில் மின் சக்தியைப் பங்கிடுவதற்குப் பதிலாக மத்திய நிதியுதவியினுடைய அடிப்படையிலே மத்திய அரசு இன்றைக்குப் பங்கீட்டை அளிக்கிறது. நெய்வேலி இரண்டாம் அனல் மின் நிலையத் திட்டமோ அல்லது கல்பாக்கம் அணு மின் நிலையத்திலிருந்து கிடைக்கக்கூடிய மின்சாரமோ முழுவதையும் நமக்கே கொடுக்கவேண்டும்என்று நாம் சொல்கின்றபொழுது ஏதோ குறுகிய மனப்பான்மையோடு கேட்கின்றோம் என்ற குறை இன்றைக்குச் சொல்லப்பட்டு வருகிறது. நெய்வேலி மின் நிலையமும், கல்பாக்கம் அணு மின் நிலையமும் தமிழகத்திலே இருக்கின்றன என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் நாம் மின்சாரத்தைக் கேட்கவில்லை. தென் மாநிலங்களிலேயே பற்றாக்குறை உள்ள மாநிலம் தமிழகம்தான் என்பதால் மட்டும் நாம் அதை வலியுறுத்திக் கூறிக்கொண்டு இருக்கின்றோம்.

முந்தைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டு வந்த மின் நிதி துய்ப்பு, மாநிலங்களுக்காக மத்திய அரசினுடைய திட்ட நிதி உதவி ஆகியவற்றின் அடிப்படையில் மத்திய அரசு பெரும் அனல் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைப் பகிர்ந்து அளிக்கின்ற திட்டத்தை 1978 ஆம் ஆண்டு கொள்கை அளவிலே வகுத்துத் தந்தது. ஆனால், இதிலேதான் தமிழகம் இன்றைக்கு பாதிக்கப்படுகின்ற நிலைமைகளெல்லாம் இருக்கின்றன. திட்டங்களிலே முதலீடு செய்யத் தயாராக இருந்தும், போதுமான மின் உற்பத்தி ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் இருக்கின்ற மாநிலங்களுக்கும், மின் உற்பத்தி ஆதாரம் இருந்தும் மின் வளர்ச்சித் திட்டங்களிலே போதிய முதலீடு செய்வதற்கு மனமில்லாமல் இருக்கின்ற மாநிலங்களுக்கும் வேறுபாடு இருக்கிறது. மின் திட்டங்களிலே முதலீடு செய்யத் தயாராக இருந்தும், அதற்கான வாய்ப்புகள் இல்லாத பற்றாக்குறை மாநிலமான தமிழகத்திற்கு நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்தும், கல்பாக்கம் அணு மின் திட்டத்திலேயிருந்தும் கிடைக்கின்ற முழு மின்சாரத்தையும் பெறுவதற்கு தமிழக அரசு முழு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு எண்ணூர், தூத்துக்குடி அனல் மின் நிலையம்
போன்றவைகளில் உற்பத்தித் திறனை முழுமையாகப் பயன்
படுத்தவில்லை என்ற ஒரு குறைகூட திட்டக் குழுவினால்
இன்றைக்குக் கூறப்பட்டிருக்கிறது. அந்தக் குறையை நீக்க
வேண்டுமென்றால்—அனல் மின் நிலையங்களில் அடிக்கடி ஏதாவ
தொரு பாதிப்பு ஏற்படுகிறது—அவைகளைத் தவிர்க்க வேண்டு
மென்று சொன்னால் அதற்கு வருகின்ற நிலக்கரியை ஒழுங்கான
முறையிலே நாம் பெற்றாக வேண்டும்.

இன்றைக்கு நிலக்கரித் துறை நல்ல நிலக்கரியைத் தருகின்ற
போதுதான் இந்தப் பாதிப்பு தவிர்க்கப்படும், இன்றைக்கு
ஆஸ்திரேலியாவிலிருந்து நாம் நிலக்கரியைப் பெற்றிருந்தாலும்
அது இன்றைய தேவையைத்தான் பூர்த்தி செய்யும். நிலக்கரி
யிலே இருக்கின்ற பற்றாக்குறை நிலைமையைச் சீர்படுத்துகின்ற
அளவிற்கு நிலக்கரித் துறை சுத்திகரிப்பு ஆலையைப் பயன்படுத்தி
நல்ல நிலக்கரியைத் தர வேண்டும். அப்பொழுதுதான் அனல்
மின் நிலையங்கள் ஒழுங்காக மின் உற்பத்தியைச் செய்ய முடியும்
என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11—40)

அதே நேரத்தில் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற
தமிழகத்தினுடைய திட்டங்களுக்கு அனுமதியை மத்தியஅரசு மிக
விரைவாகத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும். ஒகேனக்கல்
மின்திட்டமாக இருந்தாலும் அல்லது தமிழகம் கேரளம், தமிழகம்
கர்நாடகத்துடன் ஒட்டியிருக்கிற, சம்பந்தப்பட்டிருக்கிற திட்ட
மாக இருந்தாலும், அவற்றை உடனடியாக முடிப்பதற்கு மத்திய
அரசு முனைந்து செயல்பட்டாக வேண்டும். ஒகேனக்கல் மின்
திட்டத்தைக் கர்நாடக அரசும் தமிழக அரசும் இணைந்து
இருந்து செயல்படுத்தியிருந்தால் இரண்டு மாநிலங்களும் பயன்
பெற்றிருக்கும். ஆனால், கர்நாடக அரசு கர்நாடகத்திலே மேக
தாது திட்டத்தை இன்றைக்கு முனைந்து செயல்படுத்திக்
கொண்டிருக்கிறது. அதன் வாயிலாக, தமிழகமும் பாதிக்கப்
படும், கர்நாடகமும் பாதிக்கப்படும். இந்த விவகாரத்திலே
மட்டும் மத்திய அரசு விரைவாக முடிவெடுக்க வேண்டும்.

இன்றைக்கு, பக்ராநங்கல் அணையைப் பயன்படுத்திக்
கொண்டு, அதிலே உற்பத்தி ஆகிற மின்சாரத்தை, பல மாநிலங்
களுக்குப் பகிர்ந்தளித்துக் கொண்டிருக்கிற மத்திய அரசு,
தமிழகத்தில் இருக்கிற பிரச்னையை விரைவாக தீர்ப்பதற்கு முழு
முயற்சியை, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், அனல் மின் உற்பத்தியைப் பெரிதும் நம்பி
யிருக்கிற தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் இன்றைக்கு
இயந்திரங்களை நம்பித்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன
இயந்திரங்களில் எந்த நேரமும் கோளாறு ஏற்படலாம்
இப்பொழுது ஒரு சில விநாடிகளில் அந்த மின் தேவையை ஏற்றுக்



கொள்ளக்கூடிய அளவுக்கு வேகமாக மின் உற்பத்தியைச் செய்ய
வேண்டுமென்றால், கேஸ் டர்பைன்கள் மூலமாகத்தான் முடியும்.
இதை வெளிநாட்டிலேயிருந்து கொண்டு வருவதற்கு அந்நியச்
செலாவணி அதிகமாக ஆகும் என்பதால, மத்திய அரசின் அனுமதி
பெறுவதற்குத் தாமதம் ஏற்படுகிறது. அதே நேரத்தில்
மராட்டிய மாநிலத்திற்கு இதற்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது.
ஆகவே, எங்கெங்கு அனல் மின் திட்டங்கள் இருக்கின்றனவோ,
அந்தத் திட்டங்களிலே, இயந்திரம் கெட்டு பழுதுபடும்பொழுது,
ஏற்படுகின்ற மின் இழப்பைச் சரிக்கட்ட கேஸ் டர்பைன் போடு
வதற்கு மைய அரசு அனுமதியை உடனடியாகத் தர வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வடசென்னை, தூத்துக்குடி ஆகிய இரண்டு
திட்டங்கள் வாரியத்தின் தலைவராக திரு. முராரி இருந்த
பொழுது, மைய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது.
1982-ல், 1983-ல், அதற்கு அனுமதி வரும் என்று எதிர்
பார்க்கப்பட்டது. ஆனால், இப்போதுதான் அனுமதி கிடைத்
திருக்கிறது. மைய அரசு இவைகளில் அனுமதி தா நாமதத்
தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற அதே
நேரத்தில், தமிழக மின்சார வாரியத்தின் தலைவரும் அதிலே
முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இங்கே பரவலாக
பேசப்பட்ட ஒரு உண்மை, அந்தத் திட்டம் 1983-ஆம் ஆண்டுக்
குள்ளே பெற்றிருக்க வேண்டும். ஆனால், அங்கே இருந்து
வருகிற — டெல்லியிலே இருந்து வருகிற அதிகாரிகளை,
இங்குள்ள தலைவரும் அதிகாரிகளும் நல்ல அணுகுமுறையிலே
வரவேற்காத காரணத்தால், நல்ல உபசரிப்பு இல்லாத காரணத்
தால், தவிர்த்து விடுகின்ற ஒரு நிலைமை இருக்கிறது என்று
சொல்லப்படுகிறது. அந்த நிலைமையை மாற்றி அமைக்க
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்கு மின் துறையைப் பொறுத்த
மட்டில் அதிகாரம் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டிருக்கிறது.
உண்மையை நாம் மறைத்து விட முடியாது. சாதாரண
மாக எஸ்.இ., சி.இ. எடுக்க வேண்டிய நடவடிக்கை முழுவதும்
இன்றைக்கு மின் வாரியத் தலைவர் ஒருவராலே செயல்படுத்தப்
படுகிற காரணத்தால், மின் வாரியம் செயல்பட முடியாமல்
போய் விடுமோ என்ற அச்ச உணர்வு ஏற்பட்டுக் கொண்டிருக்
கிறது. அதைத் தவிர்ப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்களும் மின் துறை அமைச்சர் அவர்களும் தக்க நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மின் வெட்டைப் பொறுத்தவரை சற்று தளர்த்தப்
பட்டிருக்கிறது. அதைப் பாராட்டுகின்றோம். வரவேற்
கின்றோம். அதே நேரத்தில், இன்றைக்கு விவசாயப் பெருங்குடி
மக்களும், தொழில் துறையில் இருப்பவர்களும் எதிர்பார்த்துக்
கொண்டிருப்பதெல்லாம் இன்னும் அதிக அளவில் தளர்த்த
வேண்டுமென்பது.

[திரு. தி. அன்பழகன்] [1985 ஜூலை 18

புனல் மின் திட்டங்களை நம்பிக் கொண்டிருந்த 1981 ஆம் ஆண்டு உற்பத்தித் திறன் 650 மில்லியன் யூனிட்டாகும். ஆனால், இன்றைக்கு அனல் மின் நிலையங்களுடைய உதவியோடு ஏறத்தாழ 1,000 மில்லியன் யூனிட் மின்சார உற்பத்தியைப் பெற்றிருக்கிற இந்த நேரத்தில், மின் வெட்டு தேவைதானா என்பதையும் தயவுசெய்து மின் துறை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்த்து, அதிலே தமிழக விவசாயிகளுக்கும் தொழில் துறைக்கும் நன்மை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய பகுதியில் கந்திலி என்ற இடத்தில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்து இரண்டு ஆண்டுகளுககு முன்பாக அனுமதியும் தரப் பட்டது. ஆனால், இன்றைய வரையில் அந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக எந்த வழிவகையும் செய்யப்படாமல் இருக்கிறது. உடனடியாக அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் துறையைப் பொறுத்தவரையில், அதிலே இருக்கிற ஒரு சாபக்கேடு, அதிலே சாதாரண ஹெல்ப்பரிலிருந்து வாரியத் தலைவர் வரை யாருக்கும் சட்டுப்படுவதில்லை என்ற நிலைமை யிருக்கிற காரணத்தால், அதிலே ஒரு சிறப்பான சீர்திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களானால் மின் பற்றாக்குறை மாநிலம் என்று சொல்லப்படுகின்ற தமிழகம் இன்னும் இரண்டு மூன்று வருட காலத்திற்குள் தன்னிறைவு மாநிலமாகப் பெருமை பெறும் சிறப்பு, அடையும் என்பதை மட்டும் இங்கே சொல்லி, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின் பேரிலும், 1984-85 ஆம் ஆண்டினுடைய துணை நிதிநிலை அறிக்கையின் பேரிலும் மின் துறை அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிற இந்த குறிப்பின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக் கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்த அறிக்கையின் முடிவில் "மின்சார வாரியம் என்பது பல்வகைப்பட்ட சிக்கல் களும் பிரச்சினைகளும் நிறைந்த ஒரு நிறுவனமாகும். அதன் செயல்பாட்டில் மேம்பாடுகளைச் செய்ய இடையறாத முயற்சிகள் தேவைப்படுகின்றன. மின்சார வாரியத்தின் செயல் திறனை மேம்படுத்த மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை நான் வரவேற்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள்.



1985 ஜூலை 18] [திரு. மு. இராமநாதன்]

மாண்புமிகு அமைச்சர் அவர்களே மின்சாரத் துறையில் பணி யாற்றியவர்கள். நல்ல அனுபவம் பெற்றவர்கள். இந்த அவை யிலே பேசக்கூடிய உறுப்பினர்களுக்குத் தெரிந்திருப்பதைக் காட்டிலும் கூடுதலான விபரங்களைத் தெரிந்தவர்கள். நல்ல அனுபவமும் ஆற்றலும் உடையவர்கள். ஒருவேளை உறுப் பினர்கள் அதிகமான ஆலோசனை சொல்வார்கள் என்று எதிர் பார்க்கிறார்கள் என்று கருதுகிறேன். அதைவிட இந்தத் துறை யிலே பணியாற்றி, ஓய்வு பெற்றிருக்கிற, நல்ல அனுபவம் பெற்றிருக்கிற பலர் வெளியிலே இருந்தாலும் அவர்களைக் கொண்டு கூட ஒரு அட்வைசரி போர்டு அமைத்து, அவர் களுடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சாரத் துறை எவ்வளவு முக்கியமானது என்று இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மாமன்றத்திலே கூட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் வேறு ஒரு நேரத்தில் பேசும்போது "சம்சாரம் இல்லாமல் கூட இருந்து விடலாம், ஆனால் மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாது" என்று சொன்னார்கள். அதுகூட மின்சாரத்தின் தேவையை வலியுறுத்திச் சொன்னார் என்ற கருத்தாக நான் ஏற்றுக் கொள் கிறேன். ஆனால் இங்கே தந்திருக்கிற அறிக்கையில் குறிப்பு களைப் பார்க்கும்போது ஒன்றை நான் இந்த மன்றத்தில் குறிப் பிட விரும்புகிறேன் அதாவது நிதிநிலை அறிக்கையினுடைய மதிப்பீட்டைப் படித்தேன். ஒரு எடுத்துக்காட்டு — 1985–86 ஆம் ஆண்டிற்குரிய மின்சார வாரியத்தினுடைய செலவு மதிப்பு 746.52 கோடி ரூபாய். ஆனால் வருவாய் கணக்கில் வரவு மதிப்பு 542.33 கோடி ரூபாய். பற்றாக்குறை என்று இருப்பது 204.19 கோடி ரூபாய்.

நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மின்சார வாரியம் எரி பொருளுக்காகச் செலவிடுவது 198.82 கோடி ரூபாய். வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குவதற்கு நாம் கொடுக்கின்ற விலை 201.24 கோடி ரூபாய். மின்சாரத் துறை ஊழியர்களுடைய சம்பளத்திற்கான செலவு 133.81 கோடி ரூபாய். ஆனால் இயங்க வைப்பதற்கும் திட்டங்களை இயக்கு வதற்கும் மேம்பாடு செய்வதற்கும் வாரியம் ஒதுக்கியிருப்பது 43.69 கோடி ரூபாய் இந்த 43.69 கோடி ரூபாய்தான் இயங்க வைக்கவும், மேம்பாடு செய்யவும், பராமரிப்பு செய்யவும் என்றால் எந்த அளவுக்கு மேம்பாடு நடக்கும் என்ற ஐயப் பாட்டினை, மாற்றுத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையைப் படித்த போது பல பல திட்டங்கள், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப்போல இரண்டாவது நெய்வேலி சுரங்கம், வடசென்னையில் அமையவிருக்கிற தெர்மல் பிளான்ட் அதைத் தொடர்ந்து செய்யவிருக்கிற ஒவ்வொரு திட்

பற்றியும், அனல் மின்சார வாய்ப்பு பற்றியும் 200-க்கு மேற்பட்ட சிறு மின் திட்டங்கள் இருப்பது பற்றியும், காற்றின் மூலமாக மின்சாரம் தயாரிக்கின்ற வாய்ப்பு பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். மேலை நாடுகளில் ஹாங்காங்கில் இருப்பது போல, நார்வேயில் இருப்பது போல, ஜப்பானில் இருப்பது போல, அல்லது வேறுபல நாடுகளில் முயற்சிகள் செய்வது போல, ஆங்காங்கே வாய்ப்பு இருக்கிற இடங்களில் எல்லாம் முயற்சி செய்ய வேண்டும்.

(முற்பகல் 11.50)

ஒரு விசிறியின் மூலம் மின்சாரத்தைத் தயாரிக்கலாமா என்ற வகையில் அதை அமைத்திருக்கிறோம்; அனல் மின்சாரத்தை அமைத்திருக்கிறோம்; புனல் மின்சாரத்தை அமைத்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். காலை தொடங்கியவுடன் வண்டுகள் எல்லாம் மலர்களை நாடிச் சென்று, பறந்து சென்று எங்கெங்கெல்லாம் தேன் கிடைக்குமோ அங்கெல்லாம் சென்று தேன் எடுத்து வந்து சேர்த்து வைப்பதுபோல் எந்தெந்த நாடுகளுக்கெல்லாம் சென்று பார்த்துவிட்டு வந்து இங்கேயும் அதுபோன்று பல வழிகளைக் கையாண்டு தன்னிறைவை ஏற்படுத்த முடியுமா அதாவது ஹைடல் பவர் மூலமாக ஏற்படுத்தலாமா, காற்றின் மூலமாக ஏற்படுத்தலாமா அல்லது அனல் மூலமாக ஏற்படுத்தலாமா என்றெல்லாம் பார்த்து வந்திருப்பதாக இங்கே அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கையினைப் பார்த்தபோது கிராமங்களில் பாடுகின்ற ஒரு பாட்டுத்தான் என் நினைவிற்கு வந்தது.

தத்தித் தாதூதி தாதூதித் தத்தி
துத்தித் தா ததி துதைத்தா தூதுதி
தித்தித்த தித்தித்ததாதெது தித்தித்
தெத்தா தோதித் தித்த தாது.

என்ற பாடல் என்னுடைய நினைவுக்கு வந்தது. நல்ல தேன் எங்கெங்கு கிடைக்கும் என்று தேடிச் செல்கின்ற வண்டுகளைப் போல மலர்களில் உள்ள தேனைக் கொண்டு வந்து அடைகளில் சேர்த்து வைக்கின்ற வண்டுகளைப் போல பல இடங்களிலும். மின்சாரத்தைப் பல வழிகளில் உற்பத்திசெய்து அவற்றைத் தமிழ்நாடு கிரிட்டிலே கொண்டுவந்து சேர்த்துவிடலாம் என்ற வகையில் அவர் தெரிவித்திருக்கின்ற கருத்தினைப் பார்க்கின்றபோது அவருடைய திறமையை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதேநேரத்தில் ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்களின் குறிப்பிலே இன்னொன்றும் இருக்கின்றது. மின்வாரியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தைப் பொறுத்தவரையில் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டு வரையிலான காலத்தைப் பொறுத்தவரையில் உள்ள ஐந்தாண்டு காலத்தில் ஏற்பட்ட நட்டம் 933 கோடி ரூபாய். போன ஆண்டு மட்டும் வட்டியாகக் கட்டவேண்டிய தொகை 129 கோடி ரூபாய். ஆக நான் எண்ணிப் பார்க்கிறேன். ஏதோ ஒரு திரைப்படத்தின்



பாடல் நினைவுக்கு வருகின்றது. அதாவது வரவு எட்டணா, செலவு பத்தணா, அதிகம் இரண்டணா கடைசியில் துந்தனா என்பது போல் இங்கே வந்திருக்கின்ற அறிக்கையைப் பார்க்கிறபோது நாம் நிறைவுகொள்ளத் தகுந்த நிலையில் இந்த அறிக்கை இல்லை என்பதையும் இதைப்பார்த்து ஒரு நம்பிக்கை ஏற்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. மோட்டார் பம்ப் செட்களுக்கான கனெக்ஷன் என்பதைப் பொறுத்தவரையில் 20 ஆயிரம் இணைப்புக்கள் என்றிருந்ததை 50 ஆயிரம் பம்ப் செட் என்று உயர்த்தி 50,950 கனெக்ஷன்ஸ் கொடுத்திருக்கிறோம் என்று அறிக்கையிலே தந்திருக்கிறீர்கள் ஆனால் நான் அதை மறுபடியும் புரட்டிப் பார்த்தேன். 1982—83 ஆம் ஆண்டு ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டைப் பார்த்தேன். உண்மை என்னவென்றால் 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,50,000 பம்ப் செட்களுக்கு மின் இணைப்பு தர வேண்டும் என்று மத்திய அரசு குறியீடு நிர்ணயம் செய்தது. நம்முடைய அரசு அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஆண்டுக்கு 3,000 பம்ப் செட் வீதம் கொடுக்கத் திட்டமிட்டது. அதன்படி 1980—81 ஆம் ஆண்டில் இந்த அரசு 31,856 கனெக்ஷன்ஸ் கொடுத்தது. 1981-82-ல் 2,635 கனெக்ஷன்ஸ் தந்தது. பின்னர் மத்திய அரசின் குறியீட்டைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஆண்டுக்கு 20,000 இணைப்புகளைத் தர மாநில அரசு முடிவு செய்தது. 1982-83-ல் அந்த 20,000-ஐக் கூட தராமல் 9,497 இணைப்புகள் தான் தரப்பட்டன. 1983-84-ல் வெறும் 782 கனெக்ஷன்ஸ்தான் தரப்பட்டன. இப்போது 50,950 கனெக்ஷன்ஸ் தரப்படுகின்றது என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே உண்மையிலேயே இந்த அரசு குறியீட்டை எட்டவில்லை. அதுமட்டுமல்ல; 6-வது திட்டக் காலத்தில் 2,557 கனெக்ஷனைக் குறைத்திருக்கின்றது என்பதுதான் உண்மை. ஆகவே 50,000-க்கு மேலாக 50,950 கனெக்ஷன்ஸ் கொடுத்திருக்கிறோம் என்றுசொல்வது முன்னுக்குப் பின் முரணாக இருக்கின்றது என்பதை ஆடிட் ரிப்போர்ட்டை வைத்துத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது தமிழ்நாடு அரசு மின்சார மோட்டார்களுக்கு கனெக்ஷன் கொடுப்பதில் இந்தியாவுக்கே வழிகாட்டுகின்றது என்று சொன்னார்கள். நானும் அதில் மகிழ்ச்சி கொண்டவன்தான். அதில் ஒன்றும் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் இந்த மன்றத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1937-ல் முதன்முறையாக சென்னை ராஜதானியாக இருந்த காலத்தில் வெள்ளைக்காரன் காலத்தில் பம்ப் செட் மோட்டார்களுக்குக் கனெக்ஷன் கொடுக்கத் தொடங்கினார்கள். அவன் கொடுத்த பம்ப்செட் கனெக்ஷன் 50,000.

1947-லே சுதந்திரம் பெற்றோம். 47-லேயிருந்து 67 வரையில் 20 ஆண்டுக்காலத்தில் கொடுக்கப்பட்ட மோட்டார் பம்ப் செட் கனெக்ஷன்கள் 1½ லட்சம். 1967-லே திராவிட முன்னேற்றக்

கழகம் ஆட்சி பொறுப்பிற்கு வந்தது. 67-லேயிருந்து 76 வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொடுத்த மோட்டார் பம்ப் செட் கனெக்ஷன்கள் கிட்டதட்ட 6½ லட்சம் பம்பு செட்டுகள்.

நான் இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், 1½ பிளஸ் 6½—8 லட்சம் பம்ப் செட்டு கனெக்ஷன்கள் 1976 பிறந்ததற்கு பிறகு நிறைவு பெற்று விட்டன. இங்கே ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கின்றவர்களை குறைத்து பேசவேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை. 10 லட்சத்து 52 ஆயிரம் என்று நீங்கள் சொல்லியிருப்பதற்காக சொல்கிறேன். சொல்லும்போது ஒரு வார்த்தை இதைப் பற்றி சொல்லியிருக்கக் கூடாதா என்று நீங்கள் சொல்வது போலவே நானும் சொல்ல விரும்புகிறேன்.

எத்தனையோ பிரச்னைகளை பொருந்தாத விவரங்களை எல்லாம் பேசிவிட்டு, எதற்கோ, எங்கேயோ கொக்கிப் போட்டு பேசுகிறீர்கள். அந்த ஒரு வார்த்தையைப் சொல்லி பாராட்டுவதாலே அதனாலே நட்டம் எதுவும் வந்துவிடாது.

இந்த நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து, இந்த நாட்டை பசுமை புரட்சிக்கு உள்ளிட்ட நாடாக ஆக்குவதற்கு சர்வே எடுத்தது. ஒரு கோடியே 58 லட்சம் ஏக்கர் நிலம் புஞ்சை நிலமாகவே இருக்கின்றன. அவர்களுக்கு வேறு வகையான நீர்பாசன வசதியில்லை. ஆகவே பம்ப் செட்டின் மூலம் தான் இந்த நாட்டை வளப்படுத்த முடியும் என்று கணக்கெடுத்தது எல்லாம், அதன் தொடர்பாக 6½ லட்சம் பம்ப் செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுத்தது எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை இந்த மன்றத்திற்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்டில் இன்னொரு குறிப்பு. கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கியதாக இந்த அரசு சொல்லியிருக்கிறது. 1980-லிருந்து 83-க்குள் 9 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டதாக அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். ஆனால் நான் ஆடிட்டிங் ரிப்போர்ட்டை வைத்துக் கூறுகிறேன். மின்சாரம் வழங்கப்பட்டாதாகச் சொல்லப்பட்டதே தவிர, கம்பம் நட்டு, கம்பிகள் விடப்பட்டு இருக்கின்றன. அவ்வளவுதான். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் கூட சுட்டிக்காட்டினார்கள் அதை. கம்பிகள் இழுக்கப்பட்ட அந்த இடங்களுக்கு 1984 வரை கரண்ட் வரவில்லை.

கல்வராயன் மலைப்பகுதியிலே உள்ள கிராமங்களுக்கு 1980 ஜனவரியில், மின்சாரம் வழங்க வேண்டுமென்பதற்காக, ஸ்டோர்ஸ்ஸிலே இருந்து கம்பங்கள், கம்பிகள், அதற்கு வேண்டிய சாதனங்கள் எல்லாம் எடுத்துச் செல்லப்பட்டன. ஆனால் ஆகஸ்ட் 1984 வரை வேலை நடக்கவில்லை. கரண்ட் வரவில்லை.



மேலும் மலைப்பகுதியிலே கம்பம் நட்டு கம்பிகளை இழுப்பதற்கு ஃபாரஸ்ட் ஏரியாக்களை அழிக்கவேண்டும் என்ற காரணத்தினால், காட்டை அழிக்க சட்ட சிக்கல் வந்ததனாலே, மத்திய அரசுக்கு பலமுறை வேண்டி பலமுறை மனுப்போட்டு, கடைசியில் நம்முடைய மின் வாரியம்—இந்த அரசு—சரி டீசல் பம்ப் செட்டுகளையாவது கொடுப்போம். டீசல் மோட்டார் மூலம் கரண்ட் தரலாம் என்று 20 டீசல் பம்ப் செட்டுகளை வாங்கியது.

அந்த 20 டீசல் பம்ப் செட்களை பராமரிப்பதற்கு பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்று மின் வாரியம் கேட்டுக்கொண்டது. ஆனால் தென்னாற்காடு மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர், அவ்வாறு பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் அதைக் கவனிக்க இயலாது என்று சொல்லிவிட்டக் காரணத்தினால், அந்த 20 டீசல் செட்டுகளும் நன்றாக தூங்கிக் கொண்டிருக்கின்றன. யாரால் தூங்கிக் கொண்டிருக்கின்றன? ஏன் தூங்குகிறது என்றெல்லாம் இப்போது நான் ஆராய விரும்பவில்லை.

ஏனென்றால் அமைச்சர் கொஞ்சம் திறமையானவர். அதனாலே தூங்காதே தம்பி தூங்காதே என்ற பாட்டை எங்களை விட அதிகமாகவே நெஞ்சிலே வைத்திருப்பவர். அவர்களுக்கு அதெல்லாம் தெரியாததில்லை.

இன்னும், ஒன்றை சொல்ல விரும்புகிறேன். 1980 ஏப்ரல் மே மாதங்களில் 4 கிராமங்களுக்கு மின்வசதி செய்துள்ளதாக அரசு கணக்கு காட்டியுள்ளது. ஆனால் 1975-லிருந்து 79-க்குள் வீட்டுக்கு வீடு மின்சாரம் வழங்கப்பட்டு விட்டது என்று, ஆடிட்டிங் ரிப்போர்ட்டிலே ஆடிட்டர் ஜெனரல் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அரசு சொன்ன குறிப்பிற்கும், ஆடிட்டர் ஜெனரல் சொன்ன குறிப்பிற்கும் மாறுபாடு இருக்கிறது.

இன்னும் ஒன்றை நான் சொல்லவேண்டும் என்றால், ஒரு நேரத்திலே மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். லைன் என்றாலே லாஸ் இருக்கும் என்று சொன்னார்கள். என்னுடைய கவலை எல்லாம் லைனே இல்லாமலேயே லாஸ் வருகிறதே என்று தான். அதிலே சிக்கல் இருக்கிறது. ஆகவே லைன் இருந்து லாஸ் வந்தாலும் பரவாயில்லை. மின்வாரியத் துறையிலே பயிற்சி பெற்றவர் நம்முடைய மின் துறை அமைச்சர் என்ற காரணத்தினால் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

ஜெனரேஷன், ட்ரான்ஸ்மிஷன், டிஸ்ட்ரிபியூஷன். கேரளாவிலிருந்து கரண்ட் வாங்குகிறோம். கேரளாவின் எல்லையிலிருந்து நம்முடைய பகுதிக்குள் நுழைவதற்குள் மீட்டர் வைத்து எத்தனை லட்சம் யூனிட்டுகள் தமிழகத்திற்கு செல்கிறது என்பதை பார்த்து விடுகிறார்கள். எந்த இடத்திலே தெப்ட் எந்த இடத்திலே வேறு வகையான நிகழ்ச்சிகள் எல்லாம்

நடைபெறுகின்றன என்பதை வாரியம் அறியும். ஆகவே எதற்காக
சொல்கிறேன் என்றால், இவற்றை அறிந்த நம் தமிழ்நாடு
மின்வாரியத்திற்கு ஏற்படுகிற லைன் லாஸ் 18 3/4 சதவீதம்
என்று குறிப்பு இருக்கிறது. ஆனால் இந்த 18 3/4 சதவீதம்
என்று சொன்னால் வெளியே பளிச்சென்று தெரியாது. கேரளாவி
லிருந்து, கர்நாடகாவிலிருந்து, மற்ற மாநிலங்களிலிருந்து
வாங்குகிற மொத்த மின்சாரத்தின் அளவு 37 ஆயிரம் லட்சம்
யூனிட்டுகள். இப்படி அவர்கள் வாங்குகிற 37 ஆயிரம் லட்சம்
யூனிட்டுகளில் 25 ஆயிரம் லட்சம் யூனிட்டுகள் பறிபோகிறது
என்றால் நாம் கவலைப்பட வேண்டாமா என்று கேட்க விரும்பு
கிறேன்.

இன்னொன்று நம்முடைய மின்வாரியத்தின் ஒவ்வொரு
சிஸ்டத்திலும் ஸ்டோர்கள் இருக்கின்றன. அந்த ஸ்டோர்களில்
என்ன என்ன பொருள்கள் இருக்கின்றன என்பதே தெரிவ
தில்லை. என்ன சொல்கிறார்கள் என்றால் 100 கோடியிலிருந்து
150 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் மின்வாரியத்தின்
ஸ்டோர்களில் வீணாக கிடக்கின்றன. அந்தப் பொருட்களை
நாம் பயன்படுத்துகிற நிலையில் அவைகள் இருக்கின்றனவா
என்று பார்த்தால், அதற்கான விவரம் தெரியவில்லை. கிராமப்
புறங்களில் தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு வேண்டு
மென்றால் கம்பத்திலிருந்து கம்பி வரையில் வாங்கி வரவேண்டு
மென்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. இந்த மன்றத்தில்
கேட்டுக் கொள்ள விரும்புவது, இந்த ஸ்டோர்களில் என்ன
பொருட்கள்தான் இருக்கின்றன? 100 கோடியிலிருந்து 150
கோடி ரூபாய் வரையில் மதிப்புள்ள அந்தப் பொருட்களை நாம்
பயன்படுத்த முடியுமா? அவைகள் நமக்கு பயன்படுமா?
அல்லது பயன்படுத்த முடியாத பொருட்களை வாரியம் 100
கோடி, 150 கோடிக்கு வாங்கி சேர்த்து வைத்திருக்கிறதா
என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதற்கான
விளக்கததை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து ட்ரான்ஸ்பார்மர்களைப் பொறுத்தவரையில் ஒரு
முக்கியமான பிரச்னை. பழுதுபட்ட ட்ரான்ஸ்பார்மர்கள்
மாற்றப்படாமல் கிடக்கின்றன என்பதை வேதனையோடு
சொல்கிறேன். சேலம் சிஸ்டத்தில் 100 ட்ரான்ஸ்பார்மர்கள்
அப்படி பழுதுபட்டு கிடக்கின்றன. பல கிராமங்களில் இன்னும்
ட்ரான்ஸ்பார்மர்கள் மாற்றப்படாத காரணத்தால் மக்கள்
அமேசான் காடுகளில் இருப்பதைப் போல இருட்டிலே தான்
வாழ்க்கை நடத்துகிறார்கள். நான் தெரிவிக்க விரும்புவது,
பழுதுபட்ட ட்ரான்ஸ்பார்மர்களை மாற்றுவதற்கு இதுவரைக்கும்
எந்தவிதமானநடவடிக்கையும் இல்லை. இதுகுறித்து ஒரு குறிப்பை
இந்த மன்றத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது
நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முசிறிபுத்தன் அவர்கள்
பொறுப்பேற்றிருக்கிற கமிட்டி தந்திருக்கிற ஒரு குறிப்பாகும்.
அதாவது ட்ரான்ஸ்பார்மர்கள் பழுதுபார்ப்பதற்கு கடந்த



1973-ம் ஆண்டிலே ஒரு ஓர்க்ஷாப் கட்டுவதற்கு அரசு அனுமதி
தந்தது. 1975-ம் ஆண்டு நிலம் அம்பத்தூரில் ஆர்ஜிதம் செய்யப்
பட்டு, கட்டிடம் கட்டக்கூடிய சந்தர்ப்பத்தில், நெருக்கடி நிலை
காரணமாக அது தடைசெய்யப்பட்டு நிறுத்தப்பட்டது. 1978-ம்
ஆண்டிலே அதற்கான தடை நீக்கப்பட்டது. ஆனால் 1980-ம்
ஆண்டில் ரூ.68.50 இலட்சம் செலவில் ஓர்க்ஷாப் கட்டுவதற்கு ஒரு
மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. இந்த மதிப்பீடு அதிகமாக
இருக்கிறதென்று சொல்லி ஓர்க்ஷாப்பின் திறனைக் குறைத்து
37 லட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய மதிப்பீடு தயார் செய்யப்
பட்டது. அதுவும் நிறைவேறவில்லை. மீண்டும் 1984-ம்
ஆண்டிலே அந்த மதிப்பீட்டை ரிவைஸ் செய்து ரூ.47.50 லட்சம்
செலவில் மற்றொரு மதிப்பீடு தயார் செய்திருக்கிறார்கள்.
ஆனால் இதுவரையில் ட்ரான்ஸ்பார்மர்கள் பழுது பார்ப்பதற்கு
கட்டிடம் வரவில்லை. ஓர்க்ஷாப்பும் வரவில்லை. தூங்காதே
தம்பி தூங்காதே என்று சொல்கிற நேரத்தில் இந்த திட்டம்
தூங்கிக் கொண்டிருக்கிறது.

அடுத்து தேர்தல் நேரத்தில் விவசாயிகளுக்கு பல சலுகைகளை
அறிவித்தீர்கள். நான் ஏழை விவசாயிகளுக்கு மின்சாரம்
இலவசமாக கொடுப்பதை குறை சொல்லவில்லை. ஆனால்
இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, குடிசைக்கு ஒரு
விளக்கு என்ற முறை கொண்டுவரப்பட்டு ஏழைகளுக்கு மின்சாரம்
கொடுப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதில் ஒன்றும் எங்களுக்கு வஞ்சம் கிடையாது. ஆனால்
குடிசைகளுக்கு மின்சாரம் கொடுப்பது என்ற பெயரால்,
ரேடியோ அல்லது வெட்கிரைண்டர் அல்லது வேறுவகையான
மின் உபயோகத்திற்கான காரியங்களுக்கு அடாப்டர் போட்டு,
இப்படிப்பட்ட தவறுகள் நடக்கிறதே—குடிசைவாசிகள் அல்ல—
அதை இந்த வாரியம் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையை
எடுக்கவேண்டாமா? என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு மிக முக்கியமான விஷயத்தைப்பற்றி நம்முடைய
அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்பு
கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள்
நலனில் அக்கறை கொண்டவர்கள். அட்டைப் பட்டியல் முறை
என்ற ஒரு முறை 1982 ஆம் ஆண்டிலே புகுத்தப்பட்டது. அதைப்
பற்றி விரிவாகப் பேச கால அவகாசம் இல்லை. எனவே
துணைத் தலைவர் அவர்களே, ஒரு விஷயத்தைச் சொல்ல
அனுமதிக்க வேண்டும். இந்த அட்டைப் பட்டியல் முறையில்,
ஒருவரே மீட்டர் ரீடிங் எடுத்து, அவரே பில் போட்டு,,
அவரே வசூல் செய்து, அவரே பாங்கிலே கொண்டு போய்
பணத்தை கட்டுகிற காரணத்தாலே, கண்காணிப்பு என்பது
இல்லாமல், கணக்கு வழக்கு பார்க்காமல், வசூலிப்பதை பேங்கிலே
கட்டினார்களா இல்லையா? என்று தெரியாமல் இருப்பதால்,
வாரியத்திற்கு ஏராளமான அளவிலே நஷ்டம் வந்திருக்கிறது.

உதாரணத்திற்குச் சில.(1)எம். சந்திரசேகரன், அசசர், சேலம் செவ்வாய்ப்பேட்டை, ரூபாய் 1,26,562.90 கட்டவில்லை. (2) பி. சின்னசாமி, அசசர், சேலம், அரிசிபாளையம், ரூ. 47,070.75 கட்டவில்லை. (3) ஆர். விஜயன், அசசர், சேலம், சொர்னபுரி, ரூ. 20,022.90 கட்டவில்லை. (4) கே. வெங்கட்ராமன், அசசர், சேலம், அம்மாபேட்டை, ரூ. 6,373.60 கட்டவில்லை. இந்தத் தகவல்களை எல்லாம் மேற்பார்வைப் பொறியாளர், சேலம் அவர்கள், மற்றும் இருக்கிற அரசாங்க அதிகாரிகளுடைய குறிப்பிலேயிருந்து நான் சொல்கிறேன். இதைச் சொல்லி நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அட்டைப் பட்டியல் முறை சரியாக இயங்காத காரணத்தாலே, நஷ்டம், 1982-83 மார்ச் வரையில் அதாவது, 1,28,221 இணைப்புகளில் மட்டும், ஒரு சிஸ்டத்திலே மட்டும் சரியாக மதிப்பிடாமல், குறைவாக மதிப்பீடு செய்து, வசூலிக்கத் தவறிய தொகையினுடைய அளவு 20 லட்சம். இந்தப் புதிய அட்டைப் பட்டியல் முறையால் ஏற்பட்ட நஷ்டம் 10 சிஸ்டத்திலே, அதாவது சுமார் 1,600 காசியர்கள், 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உதவியாளர்கள், அந்த அட்டைப் பட்டியல் முறையினால், பணி இல்லாமல், சும்மா இருக்கின்ற காரணத்தால், சும்மாவே இருந்து, சம்பளம் வாங்குவதில் வாரியத்திற்கு வந்த நஷ்டம் 15 கோடி என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

*திரு. வி. சுப்பிரமணியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, கர்ம வீரர் காமராஜ் அவர்கள் அமர்ந்த இந்த மாமன்றத்திலே என்னை அறிமுகப்படுத்திய எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரின் பாதங்களைத் தொட்டு, வணங்கி எனது நன்றியைக் காணிக்கையாக்கி, கண்டமங்கலம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கழகத்தவர்களுக்கும், தோழமைக் கட்சியைச் சேர்ந்த அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களை மட்டும் இங்கே நான் கூற விழைகிறேன்.

விவசாயத்தையே நம்பியுள்ள நமது தமிழ்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக குறை வருவாய் உள்ள விவசாயிகளுக்கு எல்லா வகையிலும் உதவி செய்யவேண்டும் என்ற இந்த அரசின் கொள்கைகளுக்கு இணங்க 19-5-1984 முதல் இலவச மின்சாரம் வழங்கவேண்டும் என்று அரசு தீர்மானித்து, அதன் அடிப்படையில் 72,219 சிறு விவசாயிகள் இலவச மின்சாரம் பெற்று உள்ளனர். உலகத்தில் வேறு எந்த அரசும் செய்யாத இந்தத் திட்டத்தை அமல்படுத்திய எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசை நான் நெஞ்சாரப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



அதைப்போலவே கிராமப்புறங்களில் வாழும் நலிந்த பிரிவினருக்கும் குறிப்பாக குடிசை வாழ் அரிசனங்களுக்கும் உதவி செய்கின்ற வகையில் ''குடிசைக்கு ஓர் மின் விளக்குத்'' திட்டத்தை இந்த அரசு துவக்கி, இதுவரையில் 6.52 லட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கியுள்ளது. இதற்காக அரசை நான் பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 12-10)

விவசாய மின் இணைப்புகளுக்கான விண்ணப்பங்கள் அளித்து நீண்ட நாட்களாகக் காத்திருக்கும் விவசாய விண்ணப்ப தாரர்களுக்கு மின் இணைப்பு வழங்கவேண்டுமென்ற நோக்கத்தில் ஏற்கனவே, 1984-85 ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டளவான 20,000-ஐ உயர்த்தி 50,000 பம்பு செட்டு களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமென அரசு பணித்தது. தமிழ்நாடு மின்வாரியம் குறியீட்டையும் மிஞ்சி 50,950 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கியிருக்கிறது. நான் இதற்காக அரசைப் பாராட்டுகிறேன்.

தென் ஆற்காடு மாவட்டத்தில் எனது தொகுதியில் உள்ள கண்டமங்கலம், சிறுவந்தாடு மற்றும் விழுப்புரம் தொகுதியில் உள்ள வளவனூர், கோலியனூர் ஆகிய ஊர்களிலிருந்து விவசாயிகள் டி. இ. அலுவலகத்திற்குச் செல்ல நெல்லிக்குப்பம் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே அந்த டி.இ. அலுவலகத்தை விழுப்புரத்திலோ அல்லது வளவனூரிலோ மாற்றித் தர வேண்டும் என்று அரசை வேண்டிக்கொள்கிறேன். சிறு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 'ஆன் தி லைன் சர்வீஸ்' கொடுக்கவேண்டும் என்று பணிவன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

மேலும் தென்னாற்காடு மாவட்டத்தில் ஆரம்ப நிலையில் 630 மெகாவாட் திறனுடன் கடலூரில் ஒரு அனல் மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை தமிழ்நாடு மின்வாரியம் ஆராய்ந்து திட்ட அறிக்கையும் தயாரிக்கப்பட்டு வருவதாகக் கொள்கை குறிப்பின் மூலம் அறிகிறேன். இதனை விரைவாக அமல்படுத்தி தென் ஆற்காடு மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மின் இணைப்பு வழங்க மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களை மிகப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

கிராமப்புற மின் இணைப்பில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. மாநிலத்திலுள்ள 15,735 கிராமங்களில் 1985 ஆம் ஆண்டு மே இறுதி வரை 15,706 கிராமங்கள் மின் இணைப்புப் பெற்றுள்ளன. 10.52 லட்சம் பம்பு செட்டுகளுடன் தமிழ்நாடு இந்த நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களையும் விட அதிக அளவில் பம்பு செட்டுகள் உள்ள மாநிலமாக விளங்கி வருகிறது. இதற்காகவும் நான் அரசைப் பாராட்டுகிறேன்.

1985-86-ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்டத்தில் மாநிலத்தின் மொத்த ஒதுக்கீடான ரூ. 960 கோடியில் 31.25 சதவீதம் மின்சாரத்திற்கென ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடான ரூ. 5,750-கோடியில் மின்சாரத்திற்கென 34.78 சதவீதம் செலவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்களை எல்லாம் நிறைவேற்றினால் தமிழ்நாட்டில் மின்சாரம் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் என்று நான் நம்புகிறேன்.

தற்போதைய சூழ்நிலையில் நெய்வேலி அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின் சக்தி முழுவதுமாக தமிழகத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும் என மத்திய அரசை நமது அரசு வற்புறுத்த வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

THIRU. R. RENGASAMY : Hon'ble Deputy Speaker Sir, on behalf of Indian National Congress I want to submit my views on the Budget proposal and on the working of the Tamil Nadu Electricity Board.

At the outset I want to submit that all is not well with our Electricity Board, inspite of the fact that we are having able and experienced Minister and a Chairman who is one of the best Officers, who tries to set right the Electricity Board. But some of the Engineers and officers and some of the Unions in the Electricity Board are not co-operating with him. If they co-operate with him, I think, the Chairman can do very well in the Electricity Board.

Sir, electricity is the basic Industry for all the Industries including Agriculture. Electricity has become part and parcel of our life.

For more than one decade we have power shortage. But the Government have not taken proper steps to avoid or avert power shortage.

The Government takes credit for electrification of villages and giving connection to pumpsets etc. But I would like to say Sir, that the Government have done well with regard to the distribution of power but not done well with regard to maintenance. That does not mean the Government is not paying any attention in that area but the attention is not sufficient. Government have stated that the main difficulty in shortage of power supply is inadequate supply of coal. Sir, we are having plenty of coal in the country. The coal stock we have will be enough for generations to come. That cannot be a right complaint. So, the State Government should arrange to get supply of sufficient coal from the Central Government. They should take immediate steps for this.



Then the Government also complain about the poor quality of the coal received from the Mines. My information is that our Indian coal is of good quality and equal to the best coal available in New Castle England. There may be some small Mines which may produce low quality of coal. Our Government should approach the Central Government to get good quality of coal, so that we can run this Public Sector undertaking very efficiently.

Lot of complaints are made about the non-availability of ships and lack of transportation wagons. We have to take sufficient steps, as a precautionary measure, for making better transport arrangement. We should arrange to get Railway Wagons and we should have our own ships. Once we had our own ships. But unfortunately our ships had become useless. The Government can buy 2 or 3 ships. I do not know why they are taking so long a time to decide purchasing the ships. Central Government is prepared to give sanction for purchasing of ships. Inspite of the fact that our Government is facing the difficulty of bringing the required coal from the Mines, I do not know why this delay in purchasing the ships.

Another important thing about which I want to make a mention here is Sir, about the complaints being made by our Electricity Board and our Engineers about the quality of the Machines supplied by the BHEL Company. They are said to be of sub-standard. My information is that BHEL has been supplying equipments not only to our Electricity Board but also to Andhra and so many other Boards. Recently they have supplied to Vizag. They have not made any complaint. The equipment is working very well. Recently I asked Mr. Tandon, the Chairman of the Neyveli Lignite Corporation about this and about the power position of our State. He told me that "our Board people are not paying proper attention to the maintenance of the equipments. They are going on complaining about the under-stock of coal or poor quality of coal, etc." So, I request you not to make complaints but to attend to work. Then only these can be increase in the generation of power.

(பிற்பகல் 12-20)

Then, Sir, previously we had only one Chairman and one Chief Engineer. Under them, there was a lot of development and improvement. Now we are having 14 Chief Engineers. I do not oppose the appointment of Chief Engineers. Let them appoint more Chief Engineers. But what is the work they are doing? Are they attending to generation of power. Are they attending to distribution of power? Are they attending to transmission of power? They are not doing that work at all. They are simply sitting in office and waiting their time by attending to administrative work. Most of the Chief Engineers are doing clerical work or desk work by preparing T.A. Bills so on and so forth. They are not attending to technical jobs. If they attend to technical aspects, all these difficulties would be solved.

Another point is, most of the superintending and Assistant Engineers are attending the work of transfer of Class III and Class IV employees. That is the main job they are doing. What is the necessity to transfer Class III and Class IV employees? After all, they are subordinate people and they are going to do the same work. They are being transferred every year. They are transferring thousands and thousands of employees. I can understand if the technical people are transferred from one place to another. What is the use of transferring Class III and Class IV employees? Is not waste of Government money and everything? I am not able to understand this large scale transfer of Board employees. When we represented the matter to the Chairman, he says that they are not doing their work properly. They are not obeying the orders of higher authorities and that they are not attending office and do work properly. I know there are Rules and Regulations and Standing Orders to deal with such persons. You can take action against them. But by this kind of transfer, there are chances of victimising innocent people. I have pointed out a person who was regular in attending the office, attending to work regularly and obeying the orders of higher authorities. The authorities informed me that he has not attended office and that he has not done the work and therefore, he has been transferred.

Therefore, under the pick and choose transfers, many innocent people are victimised. Therefore, I request the Board and the Government not to transfer Class III and Class IV people. There is no necessity at all for transferring them. If the Divisional Engineers and Superintending Engineers are transferred there will be meaning because they are attending to generation, distribution and transmission. Therefore, I feel that it is an important thing. When we ask the Assistant Engineers, they say that they had to carry out the orders of the superiors. If they are not doing their work properly, they can be dealt with. As I said earlier, under the existing rules and regulations and standing orders transfer will not be an answer for this question.

My submission is that in the name of transfers the technical officers are doing only that kind of work. What is the use of transferring a woman employee from Madurai to Conjeevaram? What the woman worker can do in Conjeevaram where there is no place to live? These are the difficulties the employees of the Board are facing. Such being the case, how can you have co-operation from the workers? You must take into consideration the human aspect human psychology and human tendency. If the Electricity Board Engineers have such an attitude, how can they expect co-operation from the employees? The Hon. Minister should investigate into the matter. The Chairman of the Board should also consider this aspect so as to get the co-operation of the employees of the Board.



Then much was discussed about the line loss. It was 17.60 per cent in the year 1969-70. Now it has increased to 18.75 per cent. What is the world average?

The normal line loss has been between 8 to 10 per cent. In some countries it is also less. than this Whereas we are having 18.7% which is nearly more than the double. The Government of India appointed a Committee. That Committee had gone into this question and had given its recommendations. Those recommendations have not been implemented. What is the reason? That is an important factor. Though the Committee has given its recommendations to reduce the line loss, you have not implemented those recommendations. If you had implemented these recommendations you could have reduce the line loss even if you reduce by one per cent which means we can gain crores of rupees. Therefore my request is that the Board should pay immediate attention to the line loss question. My idea is that the span length is not normal. It is on the increase and the span length should be reduced. The maintenance system should be improved. Separate feeder for H. T. connections should be installed. By this method we can reduce the line loss. How much is the power generated? How much is the power that is sold? The power generated minus the power sold is the line loss. Is it the correct account? It is not. You must see what the other Electricity Boards are following. You should have a different system to find out the real line loss and also the theft. There is a large scale theft going. I know that many factories are getting more power and paying very less. This is going on in the agricultural field also. Of course I know the Government is taking steps but that is not sufficient. My submission is, that for each system you should have a separate meter so that you can find out, how much is the power supplied to the system and how much is the power that is sold to the system. The difference is the line loss or the theft. By this method you can know the line loss in each system.

Then Sir, coming to the accounting side, with respect to the Board, I have to say that it is not good though it is not bad. The accounts maintained by the Board are not giving the full picture and it is window dressed. The figures regarding the stores do not tally with the stocks in the Stores. The stocks are not verified, To prepare the Balance sheet and the Profit and Loss Accounts it is very necessary to verify the stocks. But the stocks are not verified, at all. Even the cash balances shown by the Board are not tallying with the cash balances with the Bank. If it does not tally in any other account I can understand but if the cash balances do not tally with the cash balances with the Bank it is something different. Money is paid to the companies, to the contractors, without receiving the

materials. Sometimes we give advances. The contractors do not supply the materials. There is a lot of delay. Then amount we have to pay them is very high according to the agreement. This means, the contractors purposefully delay the supply because delay means, they get more money.

I want to make one more submission. The Engineers are controlling the Accountants. Even if the Accountants or the Accounts Clerks point out some mistakes the Engineers are not prepared to hear them or set right the mistakes. They simply ask them (Accountants and Accounts Clerks) to do whatever is said by the Engineer, otherwise they would face transfer. So, the maintenance of accounts should be separated from the Engineers.

(பிற்பகல் 12.30)

Many Engineers are purposely underquoting tariff rates, in order to get money from the consumers. We have pointed out one such incident to the Chairman of the Electricity Board and he had taken action. But that is not enough. It is still going on in many places. There should be proper check as to whether proper tariff is charged.

Regarding cost of production of electricity I would like to say that our cost of production is very high, particularly in the Thermal area. In Neyveli the cost of production per unit of electricity is 30 paise whereas it is more than Rs. 1.50 in our Electricity Board. This high cost is mainly due to increase in expenditure. Steps should be taken to reduce the cost of production.

Then I want to say something about the losses. We are incurring loss for the past so many years. We have incurred loss of Rs, 248.88 crores in the year 1983-84 and Rs. 183.44 crores in the year 1984-85. While Electricity Boards of Maharashtra, Ahmedabad, Gujarat and Andhra are making profits why do we incur so much loss? Tariff rates have also been revised on par with all over India. Then why our Board is incurring so much of loss? Despite an increase in income to the tune of Rs. 194.57 crores consequent on the revision of tariff why we incur so much of loss? There is something wrong with us, which we must try to set right.

Government has been giving subsidy to the Electricity Board up to 1981-82. From 1982 onwards the subsidy has been stopped. We do not know why you stopped that? Because of your policies of free supply of power to the huts and supply of power at concessional rate to the agriculturists the Electricity Board is incurring loss. To compensate this loss the Government should give them subsidy.

Agriculture is a very important factor from the people's point of view. Therefore I request the Hon'ble Minister to supply power to



the agriculturists continuously throughout the day. Power supply to the Agriculturists during night time is useless. Agriculturists are facing lot of difficulties due to non-supply of continuous power during day time. I request the Hon'ble Minister to take steps to supply the current to the Agriculturists continuously throughout the day and stop supplying to them during nights.

With regard to my constituency, I would like to make a few observations. In my Constituency, whenever I go to the villages, there is always complaints from the people that the street lights are not burning. In most of the lights, there are no bulbs. Even if the bulbs are there, they are not working. I can understand if the problem was there for one or two months, but it is there for years together. For years together the lights are not burning.

Coming to the last point, I would like to say a few words about the wages to the employees of the Board. It is very low compared to other States particularly like Kerala, Karnataka, Andhra and other States. We are talking proud of everything in Tamil Nadu and saying that Tamil Nadu Government is standing first in this case as far as I know, we are far below the other States. I request the Hon. Minister and Board to increase the wages of the employees of the Board. Now the negotiations are going on. I understand the offer is not more attractive. I hope the Hon. Minister and the Chairman will make it more attractive and give more wages to its employees.

We are giving electricity free of cost to agriculturists and even to poor people. What about the employees of the Board? We are supplying power free of cost to poor people and others but we are not giving free of cost to the employees who are actually generating power. This demand is a long pending one. I request the Hon. Minister and the Board to supply power free of cost to its employees. Lastly I have to say that the working of the Board is good; but I want the Board to be still more better.

With these words, I conclude my speech. Thank you.

திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற 1985–86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும் 1984–85 ஆம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையின் மீதும் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டு நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன் என்று சொன்னார்கள். அந்தச் சூழ்நிலையை இன்றையதினம் உருவாக்கி மின்சார வாரியத்தின்

மூலமாக ஏழைமக்களின் வாழ்க்கையிலே இன்சிரிப்பைக் காண்கின்ற நிலையினை ஏற்படுத்தியிருப்பதுபற்றி நான் எடுத்துக்கூற கடமைப் பட்டிருக்கிறேன். நம்முடைய அரசாங்கம் ஏழை எளிய மக்களுக்கு இனாமாக மின்சாரம் எடுத்துக்கொள்ள அதாவது கட்டண மின்றி ஏழை விவசாயிகள் மின்சாரம் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கி இருக்கின்றது. அதேபோல் ஏழை எளியவர்களுடைய குடிசைகளுக்கும் மின் இணைப்பு வழங்கி அதற்கு யாரும் கட்டணம் கட்டவேண்டியதில்லை என்ற திட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்றது.

இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு திராவிட முன் னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 6 இலட்சம் மின் இணைப்புக்கள் விவசாயிகளின் பம்ப் செட்டுகளுக்கு வழங்கப் பட்டதாகச் சொன்னார்கள், அதை எல்லாம் நீங்கள் பாராட்ட வில்லையே என்றும் சொன்னார்கள். அவர்கள் 6 இலட்சம் இணைப்புகளை வழங்கினாலும்கூட அங்கே இறைக்காத நிலையில் எத்தனை இருந்தன என்பதையும் தமிழகம் கண்டு இருக்கின்றது. ஆனால் இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் அவர்களின் ஆட்சியிலே நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் அதிகாரிகளும் மின்சாரத்தை எந்த அளவுக்கு எங்கெங்கு பகிர்ந்துக்கொடுக்கப்பட முடியுமோ அந்த அளவுக்குப் பகிர்ந்து கொடுத்து இன்றைக்கு விவசாயிகள் எல்லாம் வேண்டிய மின்சாரத்தைப் பயன்படுத்தி இயக்கிக் கொண்டு வருகிறார்கள்.

நான் இதை எல்லாம் எதற்காகக் கூறுகிறேன் என்றால் ஒரு அரசாங்கத்தைக் குறை சொல்வது என்றால் எப்படி வேண்டு மானாலும் சொல்லலாம். ஆனால் இது எந்த அளவுக்கு ஏழை, எளிய மக்களுக்கெல்லாம் பயன்படுகின்றது என்பதை எடுத்துக் கூறுவது கடினமான காரியம்.

இன்றைய தினம் மின்சாரவாரியம் நல்ல முறையில் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக இந்த நேரத்தில் நான் கூறவேண்டும் என்றால் இங்கே எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கல்ராயன் மலைப்பகுதியிலே மின்சார வாரியம் சார்பாக கம்பங்களையும், மின் கம்பிகளையும் எடுத்துச்சென்றும் அங்கே மின் இணைப்பு வழங்கப்படாமல் இருக் கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது என்று எடுத்துக் கூறினார்கள். அது அப்படி இல்லை என்பதை இங்கே நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பகுதிதான் கல்ராயன் மலை. அந்த மலையிலே ஏறத் தாழ 105 கிராமங்கள் இருக்கின்றன. அதிலே ஏறத்தாழ மின்சார வாரியத்தின் மூலமாக மின் இணைப்புக்கள் இப்போது கம்பிகள் மூலமாக வழங்கப்பட்டிருப்பது ஏறத்தாழ 50 கிராமங்கள் ஆகும். அந்த அளவுக்கு மின் இணைப்பு வழங்கப் பட்டு இருக்கின்றது.



வழங்கப்பட்ட தெருக்களிலே எல்லாம் விளக்குகள் எரிகின்றன. அதேபோல மலைவாசி மக்களுக்கு வீடுகளுக்கு ஒரு விளக்கு திட்டத்தையும் இன்றையதினம் நாம் செயல்படுத்திக்கொண்டிருக் கிறோம். அவர்கள் பேசுகிறபோது மற்றொரு குற்றச்சாட்டை யும் இங்கே எடுத்துக் கூறினார்கள். அங்கே வன இலாகாவின் மூலம் தடை விதிக்கப்பட்டதனால் மின்சாரம் எரியவில்லை என்றெல்லாம் புகார் சொன்னார்கள். உள்ளபடியே அப்படி அல்ல, அங்கே மின்சாரம் எரிந்து கொண்டிருக்கிறது. அதுவும் ஏறத்தாழ 40 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இந்நாடு என்ற இடத்திலே ஒரு போலீஸ் ஒயர்லெஸ் ஸ்டேஷன் வைப்பதற்காகக் கூட அங்கே மின் இணைப்பு வழங்க இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12–40).

இன்னொரு குற்றச்சாட்டையும் சொன்னார்கள். 20 ஜென ரேட்டர்கள் வாங்கி சும்மா தூங்கிக் கொண்டிருக்கின்றன என்று. அந்த தொலை தூரத்திலும் ஜெனரேட்டர்கள் வாங்கப்பட்டது உண்மை. ஆனால் மலைப் பகுதியில் 7, 8 மைல் தூரம் ஏறி, மலைமேலே செல்லமுடியாத இடங்களுக்கெல்லாம் ஜெனரேட் டர்களை வைத்து, மின் இணைப்பு வழங்கிக் கொண்டிருக் கிறார்கள். 15 அல்லது 16 கிராமங்கள் என்று கருதுகிறேன், அந்தக் கிராமங்களுக்கு இந்த ஜெனரேட்டர்களின் மூலமாக மின் இணைப்பை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த ஜெனரேட்டர்கள் தூங்கவில்லை, ஓடிக்கொண்டிருக் கின்றன என்பதை அவர்களுக்கு நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இந்தியாவிலேயே எங்கும் இல்லாத ஒரு திட்டத்தை கொண்டு வந்து என்னுடைய பகுதியிலே கல்வராயன் மலையிலே சோலார் மின் திட்டத்தின் மூலமாக தெருக்களுக்கு மின்இணைப்பு வழங்குகிற திட்டத்தைக் கொண்டுவந்து நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசும், நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்களும் செயல்படுத்தியிருக்கிறார்கள். இன்றையதினம் அங்கே சோலார் மின் திட்டத்தின் மூலமாக தெருக்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் இன்னும்பல நல்ல காரியங்களை நம்முடைய அரசாங்கம் செய்து கொண்டு வருகின்றது.

நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சரிடம் ஒரு வேண்டுகோளாக நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். கல்ராயன் மலைப்பிரதேசம் ஒரு மலைப்பகுதியாக இருக்கிற காரணத்தினால் மின் இணைப்பு வருகிறபோது கீழே இருந்து மின்சாரம் மேலே வருகிறபோது குறைந்து விடுகிறது. ஆகவே கல்வராயன் மலையிலே உள்ள மேகம் என்ற நீர் வீழ்ச்சியிலே, தண்ணீர் அதிகமாக மழைக்காலங்களில் வந்து வெள்ளப் பெருக் கெடுத்து, அதன் மூலம் நிறைய பகுதிகளுக்குத் தண்ணீர் வரு கின்றது. அதைப்பற்றி நான் இங்கே பலமுறை கேள்வியாக சட்டமன்றத்திலே கூட கேட்டிருக்கிறேன். அவர்கள் பதில்

அளிக்கிறபோது, அங்கே மின்சாரம் எடுப்பதற்கு வேண்டிய பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று கூறினார்கள்.

ஆனால் அங்கே அந்த முயற்சிகள் துவக்கப்படாமல்தான் இருக்கின்றன. அங்கே அந்த முயற்சிகள் துவங்கப்பட்டால், கல்வராயன் பகுதியில் மட்டும் அல்லாது, என்னுடைய கள்ளக் குறிச்சி பகுதியைச் சார்ந்த அனைத்துப் பகுதிகளுக்கும், அதிலேயிருந்து மின்சாரம் கிடைக்கின்ற நிலை ஏற்பட்டு, அந்த மின்சாரம் பயன்படும். ஏனென்றால் கீழே இருந்து அவ்வளவு தூரம் மின்சாரத்தை எடுத்துச் செல்லும்போது கொஞ்சம் சிரமம் இருக்கின்ற காரணத்தினால், அந்தத் திட்டத்தை எவ்வளவு செலவானாலும்கூட ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஒரு கோடியோ 2 கோடியோ தான் பணம் செலவாகும் என்று கூறினார்கள். அந்தத்திட்டத்தை விரைவிலே செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மலையிலே உள்ள நிறைய குடிசைகளுக்கு எல்லாம்கூட மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. மின்சார மோட்டாருக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமானால் முன்னுரிமை அடிப்படையில் எந்தவிதமான சீனியாரிட்டியும் இல்லாமல் கல்வராயன் மலையிலே இருக்கின்ற மலை வாசி மக்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு கொண்டிருக்கிறது. இன்னும் சில இடங்களிலே வழங்கப்படாமல் பாக்கி இருக்கிற நிலை ம இருக்கிறது அவற்றிற்கும் விரைவாக மின், இணைப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,ஏனென்றால் மலைப்பகுதி. அவர்களுக்கு கிணறு, ஆறு, ஏரி போன்ற நீர் நிலைகளிலிருந்து தண்ணீர் கிடைக்கக்கூடிய வசதி இல்லாத காரணத்தினாலே, அவர்கள் விவசாயம் செய்வதற்கு உதவியாக இன்னும் அந்தப் பணியை துரிதப்படுத்தி மின் இணைப்பு வழங்குவதற்காக நடவடிக்கைகள் எடுத்து ஆவன செய்து கொடுக்குமாறு இந்த நேரத்திலே நான் கட்டுக் கோள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியைச் சார்ந்த சங்கராபுரத் திலே சப்–ஸ்டேஷன் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டு, அது குறித்து நம்முடைய அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தபோதுகூட அறிவித்தார்கள். அப்போது அதற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகச் சொன்னார்கள். இப்போது இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். இதற்காக நம்முடைய அமைச்சர் அவர் களுக்கும், இந்த அரசாங்கத்திற்கும் என் தொகுதி மக்களின் சார் பாக நன்றியைத் தரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு நிலம் கையகப்படுத்துவதற்காக அரசாங்கம் முயற்சி எடுத்து, கெஜட்டிலே எல்லாம்கூட நோட்டிபிகேஷன் கொடுத்து விட்டார்கள். ஆனால் அந்த முயற்சியில் காலதாமதம் ஆவதால் மலைப்பகுதிகள் நிறைந்த அந்த இடங்களில் எல்லாம், கீழே இருந்து மின்சாரம் மேலே வர வர குறைந்து விடுகிறது.



அதை விரைவுபடுத்தி உடனடியாக ஜி.ஓ. மூலம் ஆணை பிறப் பித்து நிலத்தை கையகப்படுத்தி அந்த சப்–ஸ்டேஷனை நிறுவு வதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் அமைச்சர் அவர்கள் நான் சென்ற முறை சட்டமன்ற உறுப்பின ராக இருந்தபோது இதை அறிவித்தார்கள். இப்போது அந்தத் திட்டம் எல்லாம் முடிவடைகிற நிலையில் இருப்பதால் விரைவில் வேலையை துவக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியைச் சார்ந்த வடபொன் பரப்பி என்ற கிராமத்தில் மின்சார அலுவலகம் துவக்கவேண்டு மென்று 1981–82-ம் ஆண்டில் என்று எண்ணுகிறேன். அரசு ஆணை பிறப்பித்தது. அங்கே இருக்கிற அதிகாரிகளும், சிப்பந்திகளும் சேர்ந்து கொண்டு வேண்டுமென்றே இதுவரையில் அலுவலகம் துவக்கவில்லை. காரணம் என்னவென்று தெரியவில்லை. நம் முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்கள் வளர்ச்சியடைய வேண்டுமென்ற எண்ணத்தில் பணியாற்றி வருகிறார்கள். அந்த அடிப்படையில்தான் கிராமப்புற மின்சார அலுவலகங்களைத் துவக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது. அங்கே இன்னும் அந்த அலுவலகம் துவக்கப்படாமல் இருக்கிறது. உடனடியாக அந்த அலுவலகத்தைத் திறப்பதற்கு உரிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மூங்கில்துறைப்பட்டு என்ற இடத்திலும் ஒரு அலுவலகம் திறப்பதற்கு இப்போது ஆணை பிறப்பித்திருக் கிறார்கள். முன்னால் அறிவிக்கப்பட்ட அலுவலகமே இன்னும் திறக்கப்படாமல் இருக்கிற நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இந்த அலுவலகங்கள் திறக்கப்படுமா என்ற அளவில் மக்களிடையே ஐயப்பாடுகள் எழுந்திருக்கின்றன. அந்த அளவில் அந்த அதிகாரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு இடங்களிலும் மின்சார அலுவலகங்களைத் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சார்ந்த பொன்பரப்பட்டி என்ற கிராமத்தில் இதுவரையில் மோட்டார்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை. உடனடியாக டிரான்ஸ்பார்மர் அமைத்துக் கொடுத்து அங்கே மின் இணைப்பு வழங்கிட ஆவண செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சிதம்பரம் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சிறுமுட்டம் என்ற இடத்தில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக் கிறார்கள். அதையும் விரைவில் அமைத்துக் கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரத்தில் யூனிவர்சிட்டியெல்லாம் இருக்கின்ற காரணத்தால் 110 கி. வா. லைன் இழுத்து கொடுத்து, அங்கே மின்சாரம் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கிற அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மின் இணைப்புகளை விஸ்தரிப்பதற்கும், விரைவாக சப்-ஸ்டேஷனை அமைப்பதற்கும், கல்வராயன் மலைப்பகுதியில் நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் எடுப்பதற்கும் துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்,

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகிறபோது நேரம் அதிகம் கிடைக்காது என்பது எனக்குத் தெரியும். இருப்பினும் சில முக்கியமான பிரச்னைகளை இங்கே விவாதத்தில் தெரிவித்து இந்த அவை முன்னும், அமைச்சர் முன்னும் கொண்டு வருகிற அளவில் நான் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் தன்னடக்கத்துடன் ஏதாவது குறைகள் இருந்தால் கூறுங்கள், குறைகளைத் தீர்ப்பதற்கு நாங்கள் தயார் என்று சொன்னார்கள். நிறைகளுக்கு அவர்களை நான் பாராட்டுகிறேன். அதனுடைய விளக்கத்திற்குச் செல்ல எனக்கு நேரமில்லை. நான் குறைகளை மட்டும் தான் இப்போது பேசுகிறேன். அவ்வாறு பேசும்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எதிர்த்துப் பேசுவதாக அமைச்சர் அவர்கள் நினைக்க வேண்டாம். இது தமிழகத்தினுடைய பிரச்னை மட்டுமல்ல, மேற்கு வங்கத்தினுடைய பிரச்னையும் கூட, இது கேரளாவினுடைய பிரச்னை மட்டுமல்ல மகாராஷ்டிரத்தின் பிரச்னையும் கூட; ஒரு அனைத்திந்திய பிரச்னை என்ற அடிப்படையில் இதை இங்கு நான் பேசுகிறேன்,

1947-ம் ஆண்டிற்கு பிறகு குறிப்பாக 1952-ம் ஆண்டில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றத் துவங்கிய காலத்திலிருந்து எல்லா ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இந்த மின் துறை புறக்கணிக்கப்பட்ட காரணத்தால் நாம் இந்த அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறோம். ஈதிலே பெரிய குற்றவாளி மத்திய அரசு என்றால் இந்தப் பக்கத்திலே உள்ள காங்கிரஸ் நண்பர்கள் என்னை கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

நம்முடைய மொத்த மின் உற்பத்திக் கருவியினுடைய திறன் 3,344 மெகாவாட். ஓர் அளவிற்கு, 2,400 மெகாவாட் உற்பத்தி செய்கிற நிலைமை உருவாகுமேயானால் ஓரளவிற்கு என்று



நான் சொல்கிறேன், நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். ஆனால் துரதிருஷ்டவசமாக 1,400 மெகாவாட், சராசரியாக உற்பத்தி செய்யவாரியத்தால் முடியவில்லை. இதற்கு மேல் மின் திருட்டு, லைன் லாஸ், இன்னும் ஏற்படுகிற கோளாறுகள் பற்றிய விவரங்களுக்குள் நான் போகவில்லை. இத்தனை குறைபாடுகளையும் தீர்ப்பது எப்படி என்பது முக்கியமான பிரச்சனை, அதைத் தீர்க்கிற முறையில் நம்முடைய மின் வாரியம் செயல் பட்டுக்கொண்டு இருக்கிறதா என்பது என்னுடைய கேள்வி. என்னுடைய பதில், இல்லை, இல்லை இல்லை என்பது தான். இந்த நெருக்கடியைச் சமாளிக்கிற ஆற்றலோ திறமையோ இந்த வாரியத்தினுடைய தலைமைக்கு இல்லை என்பது என்னுடையபணிவான கருத்து. மாநிலத்தினுடைய உயிருக்கும் உயிராக இருக்கிற இலாக்கா மின் இலாக்கா. என்னுடைய முழு விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்படுகிற இலாக்காக்கள் இரண்டு, ஒன்று போலிஸ் இலாக்கா, இரண்டாவது மின்சார இலாக்கா, இந்தஇரண்டு இலாக்காக்களும் திறமையாக நடைபெற்று இருந்தால், இன்னும் பலபிரச்சனைகளையும் தீர்த்து இருக்க முடியும்.

ஆறு ஐந்தாண்டு திட்டங்களில், நம் மாநிலத்தை மட்டும் குறிப்பிடுவதாக நினைக்க வேண்டாம், மொத்தமாக35 சதவீதம் கூட திட்டமிட்டதில் நம்மால் நிறைவேற்ற முடியவில்லை. தமிழகத்திலேயும் ஏறக்குறைய இதே நிலைதான், ஏன் நம்மால் இப்படி திட்டமிட்டு திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை என்றால் அது நிர்வாகத்தினுடைய திறமையின்மையை எடுத்துக் காட்டுகிறது- நிர்வாகத்தினுடைய செயல் முறைகளை எடுத்துக் காட்டுகிறது; வழி காட்டுகிறவர்கள் தலையிட வேண்டிய நோக்கில் தலையிடாத காரணத்தாலே இந்தச் சிக்கல் ஏற்படுகிறது. நான் திறமையற்ற நிர்வாகம் என்று சொல்லும்போது, யாரையும் குறை கூறவேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது, 1,022 கோடியே 80 லட்சம். ஆனால் செலவிடப்பட்டது, 960 கோடியே 67 லட்சம். 62 கோடியே 73 லட்சம் செலவழிக்க முடியாமல் போய்விட்டது. ஒதுக்கப்பட்ட பணத்தை முழுமையாகச் செலவழிக்காத ஒரு நிலைமை ஏற்படுகிறது என்று சொன்னால் மின்வாரியத் தலைவரை பாராட்டுதா, அல்லது வண்டு சீப் இன் ஜினியரை பாராட்ட வேண்டுமா? அல்லது வண்டு போல்சுற்றிக் கொண்டிருக்கிற நம்முடைய அமைச்சர் அவர்களை நான் பாராட்ட வேண்டுமா என்று எனக்குப் புரியவில்லை. ஒதுக்கப்பட்ட தொகையை செலவழிப்பதிலே சிக்கல் ஏன்?

காலதாமதத்தை எடுத்துக் கொண்டால் அதிலே நமக்கு ஏற்படுகின்ற இழப்பினுடைய கணக்குகளைப் பற்றி நான் பல கணக்குகளை, புள்ளி விவரங்களை இங்கே வைத்திருக்கிறேன். நேரம் இல்லை அதனால் பேசவில்லை. காலதாமதத்தினாலே, இந்த சேர்வலாறு திட்டம் 20 மெகாவாட்டுக்கு திட்டமிடப்பட்டது. 1974-ல் அன்றையதினம் 8 கோடி ரூபாய் இந்த திட்டத்திற்காக செலவழிக்கப்படும் என்று சொல்லப்பட்டது.

8 கோடியிலே இதை முடித்திருக்க முடியும். ஆனால் 1985 ஆம் ஆண்டுக்குள்ளே இதைமுடிப்பதற்கு 41 கோடி ரூபாய் ஆகும் என்று சொல்லப்படுகிறது. 11 ஆண்டு காலத்திற்குள்ளே 33 கோடி ரூபாய் அதிகமாக செலவழிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங்கள் ஏராளம். நேரம் இல்லை. அமைச்சர் அவர்களுக்கு இந்த விவரம் முழுவதும் தெரியும் என்ற காரணத்தால் நான் விட்டு விடுகிறேன்.

அது மட்டுமல்ல, நிலக்கரியைப் பற்றி இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். மத்திய அரசு நிலக்கரி வினியோகத்திலே போதுமான கவனம் செலுத்தவில்லை. ரயில்வே இலாக்கா விற்கும், நிலக்கரி இலாகாவிற்கும் அடிக்கடி வருகிற சண்டைகளைப் பற்றி நாம் பத்திரிகையிலே பார்த்துக் கொண்டு இருக்கிறோம். நல்ல நிலக்கரியைக்கூட வழங்குவதற்கு முடியவில்லை. கான்ட்ராக்ட்காரர்களே பொறுப்பிலே விட்டு, அதிலே அவர்கள் கல்லையும் மற்ற பொருட்களையும் நிரப்பி, நிலக்கரியை அனுப்புகிறார்கள். நம்முடைய நிலக்கரிக்கு ஒரு தன்மை உண்டு. இந்த அண்ணா தி. மு. க. ஆட்சியோ, கம்யூனிஸ்ட் ஆட்சியோ அல்லது காங்கிரஸ் ஆட்சியோ நினைத்தால் அந்த நிலக்கரியினுடைய குணத்தை மாற்றிவிட முடியாது. அதிலே சற்று மாய்ச்சர் அதிகம். ஆனால் இந்த நிலக்கரியை உபயோகப் படுத்துகிற முறையிலே பாய்லர்கள் தயாரிக்கப்படுகிறதா? எங்கேயோ, மேற்கு ஜெர்மனியிலே, அல்லது வேறு ஒரு நாட்டிலே தயாரிக்கப்படுகிற மாடலை வைத்து அந்த நாடுகளில் கிடைக்கும் நிலக்கரிக்கு ஏற்ப பாய்லர்கள் தயாரிக்கப்பட்டு நாம் உபயோகிக்கிறோம்,

நம்முடைய நிலக்கரியின் தரத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு, அதனுடைய குணத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு அதனுடைய குணாதிசயங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு பாய்லர்கள் தயாரிக்கப்படுமானால் பாயிலர்கள் வெடித்து அல்லது பல்வேறு குறைபாடுகள் ஏற்படக்கூடிய நிலைமைகள் வந்திருக்காது.

அதுமட்டும் அல்ல, சேர்வலாறு திட்டத்தில் இப்போது ஏற்பட்ட நெருக்கடிக்கு, முன்பு பேசும்போது நான் மாண்புமிகு அமைச்சருக்கு நினைவு இருக்கும் என்று பேசியது இறேன், 2 பக்க விவரங்கள் என்னிடம் இருக்கின்றன, நினைக் வருத்தத்துடன் நான் சொல்கிறேன். இந்த நெருக்கடிக்குக் காரணமானவர்களைத் தூக்கில் போடவேண்டும் என்று சொன் னால் சபாநாயகர் அவர்கள் ஒருவேளை அந்த வார்த்தையை உபயோகிக்கக்கூடாது என்று கண்டிப்பார்கள் என்று நினைக்கிறேன். இருப்பினும், நான் சொல்கிறேன் போல்ட் போட வேண்டிய இடத்திலே அதாவது about 15, 16 bolts not used, as the b lts could not be traced out. அது மட்டும் அல்ல. அதனால் அந்த ஹோல்ஸை அடைக்க முடியவில்லை. அதுமட்டுமல்ல Non-preparat.on to meet the inflow, the damage in rainy season even though it has been scheduled 10 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இந்த நெருக்கடி பற்றிஅடிக்கடி எச்சரிக்கை செய்யப்பட்டும் அதற்கான



தயாரிப்புகள் செய்யப்படவில்லை, USAGE OF 6MM Plat inste d of 36, 40 MM Plate for plging the pen Stocke pipe இப்படி தான் உபயோகப்படுத்த வேண்டும் அந்த Pen Stoke Pipe அமைச்சருக்கு அது தெரியும் என்று நினைக்கிறேன், Plugging the Pen Stoke Pipe உபயோகப்படுத்த வேண்டிய தரம் உள்ள மெட்டல் உபயோகப்படுத்தாமல் காண்டிராக்டர்கள் வேலை செய்து இருக்கிறார்கள். இன்னும் பல விவரங்கள் இருக்கின்றன, அதற்குள் நான் போக வில்லை. இப்படிப்பட்ட கான்ட்ராக்டர்களால் ஏற்படுத்தப்பட்ட நாசங்கள், நஷ்டங்கள் பற்றி அரசு இங்கே நமக்கு கொடுத்து இருக்கக்கூடிய Report of the Comptroller and Auditor General of India (Commercial Side) for the year 1982-83 லிருந்து 10, 15 உதாரணங்களை நான் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நான் கருதினேன்,

நேரம் இல்லாத காரணத்தினால் நான் அதற்குள் செல்ல வில்லை, காண்டிராக்டர்களை யார் ஊக்குவிக்கிறார்கள். தவறு செய்கிற காண்டிராக்டர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கிறீர்கள் அந்த காண்டிராக்டர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையை வசூலிப்பதில் தவறு ஏற்படுகிறது என்று ஆடிட்டில் சுட்டிக் காட்டுகிறார்கள். எத்தனை லட்ச ரூபாய்கள்எத்தனை கோடி ரூபாய்கள் அவ்வாறு விரயம் செய்யப்பட்டிருக்கின்றன என்று, கூறப்பட்டுள்ளது ஆகவே, இந்த கான்ட்ராக்டர் முறையை ஊக்குவிப்பதிலேயும், காண்டிராக்டர்களைக் கட்டவிழ்த்துவிட்ட காரணத்தாலும், காண்டிராக்டர்கள் விதிப்படி செய்கிறார்களா என்று பார்த்து தலையிட வேண்டிய தருணத்தில் தலையிடாத காரணத்தாலும் ஏராளமான நாசங்களும், நஷ்டங்களும் ஏற்படுகின்றன.

தூத்துக்குடி அனல் நிலையத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள், Hydrogen leakage-ஆலும் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது என்று அதில் சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக இத்தகைய நிலையங்களில் Hydrogen leakage ஏற்படுவது இல்லை, இது ஆச்சரியமாக இருக்கிறது. Hydrogen leakage ஆல்பிப்ரவரி மாதத் திலிருந்து அங்கே 3-வது யூனிட்டு வேலை செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் இதனால் 210 மெகாவாட் உற்பத்தி தடைப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள் அது திருத்தப்பட்டுவிடும் என்று சொல்கிறார்கள். நிச்சயமாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிற அந்தக் கூற்றை நான் ஏற்றுக்கொள்ள வில்லை. தாமதம் இன்னும் ஏற்படும் என்பது என்னுடைய கருத்து. உரிய நேரத்தில் தலையிடாத காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்னும் ஒரு விஷயத்தை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். பக்கத்திலே உள்ள மாநிலங்களுடன் இணைப்போடு பேசி தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை முறையாக பேசித் தீர்க்காமல் இருப்பதும் நம்முடைய குறைபாடு ஆகும்,

[திரு. வி. பி. சிந்தன்] [1985 ஜூலை 18

ஒக்கேனக்கல்லில் 800 மெகாவாட் பாண்டியாறு, புன்னம்புழா
நெல்லித்துறை போன்ற இப்படிப்பட்ட திட்டங்கள் பற்றி
15 ஆண்டுகளாக பேசிக் கொண்டு இருக்கிறோம், இன்னும்
நிறைவேற்ற முடியவில்லை. அவற்றை நிறைவேற்றுவதற்கான
இறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசினுடைய உதவியுடன்
இந்த 3, 4 மாநிலங்களின் முதலமைச்சர்களோ மின்துறை
அமைச்சர்களோ மின்துறை அதிகாரிகளோ இணைந்து பேசி
பக்கத்து மாநிலங்களிலிருந்து கிடைக்க வேண்டிய கிடைக்கக்
கூடிய மின்சார வசதியைப் பெறுவதற்கு முயற்சிகள், திறமை
யாக எடுக்கப்படவில்லை என்பதையும் நான் இங்கே சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

எனக்கு நேரம் இல்லாவிட்டாலும் உலக வங்கியிடமிருந்து
பெறக்கூடிய கடனைப் பற்றியும் நான் இங்கே குறிப்பிடாமல்
இருக்க முடியாது, இப்போது எதற்கெடுத்தாலும், டிரெயினேஜ்
போடுகிற திட்டமானாலும் அல்லதுவீடு கட்டுகிற திட்ட
மானாலும் அல்லது கழிப்பறைகள் ஏற்படுத்துகிற திட்ட
மானாலும், உலக வங்கியினுடைய கடனைப்பெறுவது ஒரு
வாடிக்கையாக மாறிவிட்டது. அதனுடைய விளைவு என்ன?

ஒரு லட்சத்து 7 ஆயிரம் தொழிலாளர்கள் இந்த வாரியத்திலே
பத்து ஆண்டுகளுக்கு முன்பு வேலை செய்து கொண்டிருந்தார்கள்
இந்த பத்து ஆண்டுகளுக்குள்ளே இந்த வாரியம் விரிவு அடைந்து
இருக்கிறது. பல கிராமங்களுக்கு மின்சாரம் எடுத்துச் செல்லப்
பட்டிருக்கிறது. ஆனால் இன்று நம்முடைய தொழிலாளிகளு
டைய எண்ணிக்கை 82 ஆயிரம் மட்டும் தான்.

ஐந்தாண்டு திட்டக் குழுவைச்சேர்ந்த நிபுணர் தூத்துக்குடியிலே
ஒரு விழாவுக்கு வந்தபோது அமைச்சர் அவர்களை வைத்துச்
சொன்னார்கள், 60 ஆயிரம் பேர்களை வைத்து நீங்கள் இந்த
வேலையைச் செய்ய வேண்டும் என்று. போர்டு தலைவரிடம்
நான் அதைக் கேட்டபோது, அவர் சொன்னார், 60 ஆயிரம்
பேரை வைத்து இந்த வேலை வாங்க முடியாது. கான்டிராக்ட்
முறையிலே தொழிலாளர்களை வைத்து நாங்கள் அதைச் செய்
வோம் என்று.

தமிழகத்திலே அதிகப்படியான வேலைவாய்ப்பு கொடுக்கிற
ஒரு துறை இது. உலக வங்கியிலிருந்து நீங்கள் கடன் வாங்க
வாங்க, அவர்கள் தொழிலாளிகளுடைய எண்ணிக்கையைக்
குறைக்க வேண்டும் என்றும், கட்டணத்தை உயர்த்த வேண்டும்
என்றும் கட்டளைகளை விதித்துக் கொண்டிருக்கிறார்கள்.
அந்தக் கட்டளைகளுக்கிணங்க, நாம் மின் கட்டணத்தை
உயர்த்தி, தொழிலாளிகள் எண்ணிக்கையைக் குறைப்பதன்காரண
மாக தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கே மிகப் பெரிய
கேடு ஏற்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.



1985 ஜூலை 18] [திரு. வி. பி. சிந்தன்]

இப்போது மூன்று ஆண்டுகளுக்குள், ஏறத்தாழ 252 கோடி மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனால் சாதாரண மக்கள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல. மின் கட்டணத்தை உயர்த்தவே கூடாது என்று நான் பேசுவதாக அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டாம்.

உதாரணமாக, சிறு சிறு கட்சி அலுவலகங்களுக்கு, தொழிற் சங்க அலுவலகங்களுக்கு ஒரு யூனிட்டுக்கு 87 பைசா வசூலிக்கப் படுகிறது. நான் ஒரு கட்சியைச் சேர்ந்தவன் என்பதற்காக அதை இங்கே குறிப்பிடுகிறேன், இப்படிப் பல முறைகளிலே இந்தப் பிரச்சினைகள் சிக்கல் ஆகிக் கொண்டிருக்கின்றன.

நிலக்கரியைப் பற்றி மீண்டும் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். அந்நிய நாடுகளிலிருந்து நிலக்கரி கொண்டு வந்து அனல் மின் நிலையங்களை எல்லாம் சிறப்பாக ஓட்டுவேன் என்று முதல் அமைச்சர் சில மாதங்களுக்கு முன்பு இங்கே குறிப்பிட்டார்கள்.

அந்நிய நாடுகளுடைய பொருட்களை ஒரு காலத்தில் எதிர்த்து அப்பொருட்களை உபயோகப்படுத்தக்கூடாது என்று சிறைக்குச் சென்றவன் நான், அந்த உணர்விலே நான் பேச வில்லை, இப்போது அந்நிய நாட்டிலிருந்து ஒரு கப்பல் நிலக்கரி உத்தரவு போட்டு வரவழைக்கப்பட்டு இருக்கிறதே, அது எவ்வளவு அதிகப்படியான தரம் உள்ளது, அதனுடைய சக்தி எந்த அளவுக்கு உயர்ந்தது என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சொல்லட்டும்.

அந்த நிலக்கரியினுடைய தரத்தைப் பார்த்தால் நல்ல தர மான நிலக்கரி என்று சொல்வதற்கில்லை. அதற்கு ஏராளமான செலவு செய்ய வேண்டிய நிலைமை நமக்கு ஏற்படும். மத்திய அரசிடம் சற்று சண்டை போடவேண்டும். என்னுடைய அருமை நண்பர் காங்கிரஸ் உறுப்பினர் ரங்கசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல தட்டினால் திறக்கப்படும் என்று பைபிளிலே சொல்லுகிற முறையிலே மத்திய அரசினுடைய கதவுகள் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும், (குறுக்கீடு) அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன் ஆகவே பலமாகத் தட்ட வேண்டும் அந்தக் கொள்கையை மாநில அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு மேல் இந்தத் துறையிலே சில குறைபாடுகளைச் சொல் வதற்கு, (குறுக்கீடு) தலைவரவர்களே, சுருக்கமாகப் பேசு கிறேன். ஒரு சில குறைபாடுகளை இங்கே சொல்லக் கடமைப் பட்டவன் என்ற காரணத்தினாலே . . — . .

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. வி. பி. சிந்தன் I am not yielding, Let him speak after I finish. I do not want to waste my time.

இதிலே விஜிலென்ஸ் பிரிவு என்று ஒருபிரிவு அமைக்கப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு)

If I do not yield, there is no point of order. He can spcak after me. அந்த விஜிலென்ஸ் பிரிவில் ஒரு ஐ. ஜி. உட்பட சூப்பிரண்டு என்று இப்படி ஒரு பெரிய பட்டாளம் உருவாக்கி இருக்கிறார்கள். அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள்? தொழிற்சங்கங்களினுடைய வேலையைப் பராமரிப்பதும் தொழிற்சங்கத் தலைவர்களைப் பழி வாங்குவதும் தொழிற்சங்க உரிமைகளைப் பறிப்பதுமான வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

மின் திருட்டைப் பிடிப்பதற்காகவா இந்த இலாக்கா உருவாக்கப்பட்டிருக்கிறது? கான்ட்ராக்டர் கொள்ளை அடிப்பதைத் தடுப்பதற்கா இந்த இலாகா உருவாக்கப்பட்டிருக்கிறது? லஞ்சம் என்று சொன்னால் அமைச்சர் என் மீது கோபப்பட வேண்டாம் அதிகப்படியான லஞ்ச ஊழல் நடக்கிற ஒரு இலாகா இது. அதைத் தடுப்பதற்கா இந்த போலீஸ் இலாகா பயன்படுத்தப் படுகிறது? பல ஆண்டுகளாக அந்த இலாகாவுடன் நெருங்கிய தொடர்புள்ள காரணத்தாலே நான் இங்கே சொல்கிறேன், அந்த விஜிலென்ஸ் இலாகா இன்றைய தினம் அவசியமற்ற ஒரு இலாகாவாக, செய்ய வேண்டிய பணிகளைச் செய்யாத இலாகாவாக, செயல்பட்டுக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, தொழிற்சங்க உரிமைகளிலேயும் சொல்லலாம். எண்பதாயிர திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் போக்குவரத்துத் துறையிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த எண்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் யாராவது ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தால் அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவது உண்டா? ஒரு தர்ணா நடத்தினால், மின்வாரியத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படுகிறது. ஒரு பொதுக்கூட்டம் நடத்தினால், நாம், எந்த நாட்டிலே வாழ்கிறோம் என்று எனக்குப் புரியவில்லை, பாதுகாப்பு இலாகாவைச் சேர்ந்த ஆவடி டேங்க் ஃபாக்டரித் தொழிற்சாலை வாசலிலே நான் பேசுகிறேன், அங்கே தொழிலாளிகள் வேலை நேரத்திலே உண்ணாவிரதம் இருக்கிறார்கள்; தர்ணா நடத்துகிறார்கள்; பாதுகாப்பு இலாகாவிலே; சென்னை துறைமுகத்தில் இது நடக்கிறதா? ஆனால் நம்முடைய சேர்மனைப் பொறுத்த வரையிலும் அத்தகைய எந்த தொழிற்சங்க நடவடிக்கையும் இங்கே நடக்கக்கூடாது என்ற ஒரு நிலையை எடுக்கிறார்கள், தொழிற்சங்க உரிமைகளைப் பறிப்பதன் மூலமாக இந்த 82,000 தொழிலாளர்களுக்கு நீங்கள் ஊக்கம் அளிக்கிறீர்களா?

அந்தத் தொழிற்சங்கத்திலே பணியாற்றுகின்ற முன்னணி ஊழியர்களைக் கூட இடமாற்றம் செய்வது; அவர்களை வேண்டுமென்றே வேலை நீக்கம் செய்வது, அதற்குப்பிறகு கோர்ட்டுக்குச் சென்றதற்குப் பிறகு டிஸ்மிஸிலே தவறு என்று கோர்ட் சொல்ல வேண்டியது., ஆக இப்படி நீதிமன்றங்கள் சொல்ல வேண்டிய நிலை [illegible]



ஊர் மாற்றத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் அடிக்கடி சொல்வார்கள்; மனைவியும் கணவனும் ஒரு இடத்திலே வேலை செய்கிறார்கள் என்று சொன்னால், அவர்களைப் பிரிக்கக்கூடாது என்று. அந்தக் கொள்கையையும் மீறி எத்தனை சம்பவங்கள், கணவன் கூனூரிலேயும், மனைவி கன்னியாகுமரியிலேயும். இப்படி ஆயிரக் கணக்கானவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், ஆங்கிலேயர்கள் ஆட்சி நடத்திய காலத்தில் ஐ.சி.எஸ். அதிகாரிகளுக்கு ஒரு பயிற்சி கொடுக்கப்பட்டிருந்தது, அடிக்கடி ஊழியர்களை மாற்றினால் தான் நிர்வாகத்திறமை அதிகப்படும் என்று, அந்த வரிசையிலே நிற்கின்ற ஒரு தலைவர் இந்த மின்வாரியத்திலேயிருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் தான் இந்த ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஆயிரம் அல்ல, இரண்டாயிரம் அல்ல பல்லாயிரக் கணக்கான ஊழியர்கள் நெடுந்தூரம் மாற்றப்படுகிறார்கள். நான் மீண்டும் சொல்கிறேன், அவர்களுடன் இது சம்பந்தமானதொழிற் சங்க பேச்சுவார்த்தைகளில், பஞ்சாலைகளிலே ஏற்பட்ட நெருக்கடியை போல் ஏற்படுத்தக்கூடாது. ஏதோ அமைச்சருடைய கட்டளையையும் மீறுகின்ற முறையிலே அந்த நிர்வாகம் இருந்து கொண்டு, செயல்படுகின்ற ஒரு தோற்றம் எங்களைப் போன்றவர்களுக்கு, ஏற்படுகிறது. நெருங்கி இருக்கின்றவர்களுக்குத் தானே காய்ச்சல் தெரியும், ஆகவே நான் சொல்கிறேன். அமைச்சரையும் மீறி அந்த அதிகாரி சொல்கிறாரா என்ற ஒரு அச்சம் ஏற்படுகிறது, பல அனுபவங்களில். என்னுடைய அனுபவங்களைச் சொல்வதற்கு நேரம் இல்லை. ஆகவே, அந்த ஊழியர் களின் பிரச்னைகளையும் தீர்த்து வைக்க வேண்டும்.

தொகுதியைப் பற்றி நான் பேச விரும்பாவிட்டாலும், ஊருக்கெல்லாம் விளக்குகள் என்று சொல்கிறார்கள். தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இன்று மாலை வேண்டுமென்றால் என்னுடைய தொகுதிக்கு—தமிழகத்திலே 2,75,000 வாக்குகளைக் கொண்ட மிகப்பெரிய தொகுதி, இந்தச் சென்னை நகரத்தினுடைய பக்கத்திலே இருக்கின்ற வில்லிவாக்கம் தொகுதியில் உள்ள 25 கிராமங்களுக்கு அமைச்சர் வருவதற்குத் தயாராக இருந்தால், இன்று மாலை, முன்னறிப்பு இல்லாமல் சென்று பார்க்கலாம். எத்தனையோ கிராமங்ளிலே கம்பங்கள் கம்பங்களாக நிற்கின்றனவே தவிர விளக்குகள் எரியவில்லை என்பதைக் காண்பிக்கிறேன். கேட்டால் பஞ்சாயத்துகள் பணம் கட்டவில்லை, ஆகவே, நாங்கள் மின்சாரம் கொடுக்கவில்லை என்று வாரியம் சொல்கிறது. அவர்களைக் கேட்டால் அவர்கள் போடுகின்ற கணக்கு தவறு, ஆகவே நாங்கள் கொடுக்க முடியாது என்று. பஞ்சாயத்துகள் சொல்லுகின்றன இத்தகைய நிலைமையிலே இந்த நிர்வாகத்தைத் திருத்தி அமைத்து மின்வெட்டைத் தீர்ப்பதற்கான கொள்கைகளைப்பற்றி நான் சொன்னேன், மின்வெட்டைத் தீர்ப்பதற்கு நாடு முழுவதும் உள்ள திட்டங்களை மீண்டும் மீண்டும் துரிதப்படுத்த வேண்டும் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும், இது ஏதோ ஒரு கட்சியினுடைய குறை

பாடு என்ற முறையில் நான் சொல்லவில்லை; ஆனால் அந்தக் கொள்கைகளை மாற்றியமைக்கின்ற ஒரு முயற்சியிலே, மற்ற மாநிலங்களுடன் இணைந்து தமிழக அரசும் செயல்பட வேண்டும்; நிர்வாகத்தைத் திறமையாக நடத்துவதற்கு இப்போதுள்ள கான்சன்ட்ரேட்டட் பவர் ஒரு ஆளுடைய கையிலே இருக்கிறது. அப்படி இருக்காதீர்கள். அதிகாரத்தைக் கொஞ்சம் பரவலாகக் கொடுங்கள். அந்தந்த இடத்திலே செய்ய வேண்டிய வேலைகளைச் செய்ய எஞ்ஜினியர்களை ஊக்குவியுங்கள்; கான்ட்ராக்டர்களைக் கொஞ்சம் கட்டுப்படுத்துங்கள் என்று கூறி, தலைவரவர்களுடைய அனுமதியுடன் அமர்கிறேன்.

திரு ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவையின் துணைத் தளநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் பேசுகின்றபொழுது நடுவண் அரசோடு நம்முடைய தமிழக அரசு சண்டையிட வேண்டுமென்று சொன்னார்கள். நடுவண் அரசுக்கு கதவு இல்லை என்று சொன்னார்கள். தட்டுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்கிறார். நடுவண் அரசின் கதவு எப்பொழுதுமே திறந்து கிடக்கிறது; அங்கே சண்டையிடத் தேவையில்லை.

(பிற்பகல் 1—10)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த உறுப்பினர் பேசும்பொழுது அவரிடம் பேசச் சொல்லுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு நடைபெறுகின்ற மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்கு முதலாவதாக உங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் எடுத்திருக்கிற இந்த பட்ஜெட் கூட்டத் தொடரில், இறுதியாக மின்சார வாரியத்தைப் பற்றி விவாதிக்க எடுத்திருக்கிறோம் என்றால், உண்மையிலே தமிழகத்தின் இறுதியான நிலவரத்தில்தான் மின்சார வாரியம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இப்படி எடுத்திருக்கிறார்களோ என்ற ஐயப்பாட்டை உண்டாக்குகிற விதத்தில் இதை எடுத்திருக்கிறார்கள்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற, விளக்கக் குறிப்புகளில், பல்வேறுவிதமான கொள்கைகளைப் பற்றி குறிப்பிட்டிருந்தாலும், அவற்றிலுள்ள குறைகளை, நிறைகளைப் பற்றி பலவிதமான கருத்துக்களை எடுத்து வைத்துள்ளனர். அதனைப் பின்பற்றி நானும் ஒன்றிரண்டு கருத்துக்களை இங்கே எடுத்து வைக்காமல் இருக்க முடியாது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், சிறு தொழில் நடத்த, படித்த பட்டதாரிகள் ஆர்வமுடன் வந்தால், அவர்கள் தங்கள் தொழிலுக்கு மின்சாரம் வேண்டுமென்று கேட்டால், 3, 4 ஆண்டுகள் ஆகியும் மின்சாரம் கிடைக்காத சூழ் நிலையில், தொழில்களைத் தொடங்க முடியாத நிலையில், பணத்தைத் திருப்பிக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.



அதுபோல், ஓலை போட்ட வீடுகளாச, 7, 8 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகளுக்கு இன்னமும் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை.

அது மட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்தில், ஆதி திராவிடர்களுக்கு 1983-84-ல் 358 மின் இணைப்புகள்தான் கொடுக்கப்பட்டதாகக் கூறி இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 12,000-க்கு அதிகமான ஆதி திராவிடர் குடும்பங்கள் அங்கே இருக்கும்போது, 358 ஆதி திராவிடர் இல்லங்களுக்கு மட்டும் மின் இணைப்புக் கொடுத்திருப்பது, என்ன விகிதாச்சாரபடி கொடுத்திருக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

அது மட்டுமல்ல, 1984-85-ல் 50,000 பம்ப் செட்களுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று அரசு நிர்ணயித் தாகவும், மின்சார வாரியம் 50,950 பம்ப் செட்களுக்கு இணைப்பு கொடுத்திருப்பதாகவும் பெருமைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் 396 பேர்கள் மனு கொடுத்து, தகுதியானவர்கள் 396 பேர்கள் என்று நிர்ணயிக்கப்பட்ட பிறகு, 1984-85 ஆம் ஆண்டு அங்கே கொடுக்கப்பட்டது வெறும் 27. 59,950 மின் இணைப்புகள் கொடுத்த இந்த நிர்வாகம், கன்னியாகுமரி மாவட்டத்தில், விவசாயத்திற்கென்று மனு போட்டவர்களுக்கு மொத்தம் கொடுத்ததே 27 என்றால் அது என்ன சதவிகிதத்தில் அடங்கி யிருக்கிறது. அப்படி என்றால் ஒட்டு மொத்தமாக, அந்த மாவட்டத்தைப் புறக்கணிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்தக் குறையினை நிவர்த்தி செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அது மட்டுமல்லாமல், தெரு விளக்குகள் எல்லாம் குழல் விளக்குகளாக அமைக்கப்படுமென்று குறிப்பிடுகிறார்கள். எங்கள் பகுதியில், இன்னும் ஏராளமான தெருக்களில் குழல் விளக்குகள், டியூப் விளக்குகள் அமைக்கப்படவில்லை என்று நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, பெருவாரியான கம்பங்கள் இரும்புக் கம்பங்களாகப் போடப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடற்காற்று அதிகமாக அடிக்கிற காரணத்தால், இரும்புக் கம்பங்கள் இற்றுப் போகின்றன. எந்த நேரத்தில் அவை சரிந்து அபாயம் ஏற்படுமோ என்ற சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால். 10, 15 தினங்களுக்கு முன்பாக குளச்சல் பகுதியில், காற்று அடித்து, கம்பம் சாய்ந்து 2 பேர்கள் மரணம் அடைந்திருக் கிறார்கள் மின்சாரம் தாக்கி. இப்படிப்பட்ட சூழ்நிலை யில், தமிழகம் முழுவதும் மின்சாரம் இருந்தாலும், பின் தங்கிய பகுதியாக கன்னியாகுமரி விளங்குகிறது. அதைக்

கவனிக்கவே இல்லை. அதை முன்னேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்ற, அந்த இரும்புக் கம்பங்களை மாற்றி, சிமெண்ட் மின் தூண்களை அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பஞ்சாயத்துக்கள் பணம் கட்டவில்லை என்பதற்காக தெரு விளக்குகள் எரியாத சூழ்நிலை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டமே இருட்டில் மூழ்கியிருப்பதுபோல் தோன்றுகிறது. உங்களுக்குள்ள கொடுக்கல்-வாங்கல்களை நீங்கள் கவனித்துக்கொள்கிறீர்களே தவிர பொது மக்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலையை உணர்ந்ததாகத் தெரியவில்லை. பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருக்கின்ற வகையில் நீங்கள் 'ரீ கன்சிடர்' பண்ணி, பஞ்சாயத்து பணம் கட்டினாலும் கட்டாவிட்டாலும் தெருவிளக்கு எரிய உத்தரவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் 1965-ல் 18,00 பேர் மின்சாரத்தை உபயோகப்படுத்தினார்கள். அந்த நேரத்தில் ஆரம்பிக்கப்பட்ட உப நிலையங்களைத் தவிர புதிதாக ஒன்றுகூட அமைக்கப்படவில்லை. கிட்டத்தட்ட இப்போது 1,20,000 பேர் மின்சாரம் பயன்படுத்துகிறார்கள். 18,000பேர் பயன்படுத்திய காலத்தில் இருந்த அதே அளவுக்குத்தான் இன்றைக்கும் துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. புதிதாக ஒன்றுகூட அமைக்கப்படவில்லை. அப்படியானால் அந்தப்பகுதியில் மின்சார நிலவரம் எப்படி இருக்கும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதற்கு முன்னால் காப்பிக்காடு என்ற இடத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டு. அதற்கு மதிப்பீடு எல்லாம் தயாரிக்கப்பட்டது, என்ன காரணத்தாலோ அது பின்னர் கைவிடப்பட்டிருக்கிறது. இட்டைப் போக்க மின்சாரம் கொடுக்கிறோம். ஆனால் அங்கே எப்போது பார்த்தாலும் இருளாகவே இருக்கிறது. விளக்கு எரிந்தாலும் வெளிச்சம் இல்லை; இருளாகத்தான் இருக்கிறது. அந்த அளவுக்கு வோல்ட்டேஜ் மிகவும் மோசமாக இருக்கிறது,

இன்னும் சொல்ல வேண்டுமென்றால் எங்கள் மாவட்டத்தில் கோதையாறு திட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு பெருமளவு மின்சாரத்தை எடுத்துச் செல்கிறார்கள், அப்படிக் கொண்டு போகும்போது, எங்கள் மாவட்டத்திற்குத் தேவையான அளவு கொடுத்துவிட்டு, மீதியைக் கொண்டு போங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, ட்ரான்ஸ்ஃபார்மர்கள் 1965-70-க்குள் அமைக்கப் பட்டவைதான். அதற்குப் பின்னால் புதிதாக சக்தி வாய்ந்த ட்ரான்ஸ்ஃபார்மர் எதுவும் அமைக்கப்படவில்லை. அதனால் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் வெளிச்சம் இல்லாத



சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக கருங்கல், திருத்தங்கல், ஆலவஞ்சி, தொடுவெட்டி, நட்டாலம், திக்கணங்கோடு போன்ற இடங்களில் ட்ரான்ஸ்பார்மர் அமைத்து 20 வருடங்களுக்கு மேலாகி விட்டது. அதனால் அங்கே வெளிச்சம் இல்லாமல் மிகவும் மோசமாக இருக்கிறது. பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கும் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கும் வீட்டில் படிப்பதற்குக்கூட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனால் ஒன்று கன்னியா குமரி மாவட்டத்திற்கு மின்சாரம் தருவதை ஒழுங்காகத் தாருங்கள், இல்லை என்றால் ஒரேயடியாக புறக்கணித்து மின்சாரத்தைத் தராமல் விட்டுவிடுங்கள். ஏதோ மின்சாரம் தருகிறோம் என்று சொல்லி, கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் மின்சாரம் கொடுத்திருக்கிறோம் என்று எண்ணுகின்ற அடிப் படையில் தரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவுக்கு நாங்கள் எல்லாம் வருத்தப்படக்கூடிய அளவுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் மின்சாரப் பற்றாக்குறை இருக் கிறது.

இப்போதெல்லாம் அங்கே மழை பெய்வது அபூர்வம். லேசாக எப்போதாவது மழை பெய்ய ஆரம்பித்தால் ஃபியூஸ் ஆகிவிடுகிறது. ட்ரான்ஸ்பார்மர் கெட்டுவிட்டது என்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும்.

ஒரு சர்க்கிளின் மையப்பகுதி என்று எடுத்துக்கொண்டால், உதாரணத்திற்கு கருங்கல் என்று எடுத்துக்கொண்டால், கிட்டத் தட்ட 15 கிலோமீட்டர் தூரத்தில் ஏதாவது ஒரு அபாயம் ஏற்பட்டு விட்டால் அங்கே சென்று பார்க்க பஸ்ஸை எதிர் பார்க்க வேண்டியிருக்கிறது. இரவு நேரங்களில் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் போய்ப் பார்க்க வசதி இல்லை. ஆகையால் ஒரு ஜே. இ-யின் கீழ் செயல்படுகிற மின்சார அலுவலகத்திற்கு ஒரு ஜே. இ-யின் கீழ் செயல்படுகிற மின்சார அலுவலகத்திற்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்படி யானால்தான் ஆபத்து ஏற்படும்போது, ஃபியூஸ் போய் இருட்டாக இருக்கும்போது போய் சொல்லி, அந்தப் பகுதிக்குப் போய் பார்த்து, தேவையான வசதிகளைச் செய்ய மின்சாரப் பணியாளர் களுக்கு வசதி இருக்கும். எனவே, அத்தகைய போக்குவரத்து வசதியை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத் துறையில் பணியாற்றுகின்ற தொழி லாளர்கள் சார்பாக ஒரு பெரிய கோரிக்கையை வைத்திருக் கிறார்கள். ட்ரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில் பணியாற்று கின்ற ஸ்டாஃப்களுக்கு பஸ்ஸில் ஃப்ரீயாகப் போய்வர வசதி இருக் கிறது. அதைப்போன்று மின்சாரத் துறையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு, அவர்கள் பயன்படுத்துகின்ற மின்சாரத் திற்கு கட்டணம் இல்லாமல், அதை இலவசமாகக் கொடுக்கும் திட்டத்தை அறிவித்து, அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத் துறை சம்பந்தமாக இந்தப் பேரவையில் தந்திருக்கிற புத்தகத்தின் இறுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிக்கல்கள் நிறைந்த இந்தப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும், உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பும் தேவையாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1—20)

எங்கள் பகுதியில் வேடிக்கையாக ஒன்று சொல்வார்கள். 'இடியாப்பத்திலே இருக்கின்ற சிக்கலை எடுத்துவிட்டு நூல் போல் நீட்டி விடுகிறேன் என்று சொல்வது பைத்தியக்காரத்தனம்' என்று சொல்வார்கள். அப்படி இடியாப்பம் போல் இருக்கின்ற சிக்கல்களை நாமெல்லாம் சேர்ந்து எப்படி தீர்த்து வைக்க முடியும்? எனவே நல்ல பல அதிகாரிகளை வைத்து இந்தச் சிக்கல்களை எல்லாம் தீர்த்து வைக்கின்ற வகையில் நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதால் தயவுசெய்து கருணை கூர்ந்து எங்கள் பகுதிக்கு வெளிச்சத்தைத் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான, மக்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு துறை சம்பந்தப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். இங்கே இந்த புத்தகத்தைக் கொள்கைக் குறிப்பு என்ற முறையிலே, நடந்திருக்கின்ற வேலைகள், நடைபெற இருக்கிற திட்டங்கள் என்ற கண்ணோட்டத்தோடு பரிசீலித்துப் பார்க்கிறபோது நம்பிக்கையூட்டுகிற அறிகுறி தென்பட்டதாகத் தெரியவில்லை. தன்னுடைய வாழ்க்கையை முடித்துக்கொள்வதற்குத் துடிக்கிற ஒரு மனிதனுடைய கடைசி முனகல்போல் இருக்கின்றது. 7—வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முடிவிலாவது அல்லது 8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முடிவிலாவது தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை இல்லாத ஒரு நிலை ஏற்படும் என்ற நம்பிக்கையோடு சொல்கிற அந்தத் தன்னம்பிக்கை கூட இந்தத் துறைக்கு இல்லை என்பது வருத்தத்திற்குரியதாகும். அதற்கு இந்த மாநில அரசு மட்டுமே காரணம் என்று நான் குற்றம் சாட்ட விரும்பவில்லை,

மத்திய அரசுக்கு அதற்காக மிகப்பெரிய பொறுப்பும் கடமையும் உண்டு என்பதையும் நான் நினைவுகூர்ந்த நிலையில் இருந்து தான் இந்த விமர்சனத்தை முன் வைக்க விரும்புகிறேன். மத்திய அரசு பல திட்டங்களை ஊறப்போட்டிருக்கிறது, கிடப்பிலே போட்டிருக்கிறது என்று சொன்னாலும் கூட மத்திய அரசு மேற்கொள்கிற பொருளாதாரக் கொள்கை நிலைகளின் காரணமாக ஏற்பாட்ட விலைவாசி ஏற்றம் இந்த மாநிலத் திட்டங்களை எந்த



அளவுக்குப் பாதித்து இருக்கின்றது என்பதும் இதே கொள்கைக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. ரொம்ப மென்மையாகச் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கின்றது. அமைச்சரவர்கள் கூட அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி விலைவாசி ஏற்றத் தால் ஏற்படுகின்ற பள்ளங்களை நிரப்புவதற்கு ஒரு மனு போட்டிருக்கிறார்கள் என்று தான் நான் கருதுகிறேன். உண்மையிலேயே மத்திய அரசு இத்தகைய நெருக்கடியான நிலையில் மாநிலங்களின் தேவையை உணர்ந்து உதவுவதாகத் தெரியவில்லை என்பதை நடைமுறையில் பார்க்கிறபோது அந்த மத்திய அரசோடு உரிய விதத்திலே போராடி நம்முடைய நியாயங்களை நிலை நாட்ட வேண்டிய அவசியத்தை இந்த மாநில அரசு உரியபடி உணரவேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். மத்திய அரசால் பல திட்டங்கள் முடக்கப்பட்டிருந்தாலும் காலத்தில் உரிமங்கள் வழங்கப்படவில்லை என்றாலும் கூட இந்த மாநில அரசு தன்னுடைய அதிகார எல்லைக்குள் நடத்தி இருக்க வேண்டிய கடமைகளை ஒழுங்காக நடத்தி இருக்கின்றதா என்பதைப் பரிசீலித்துப் பார்க்கிற போது, பருவமழையில் தெளிவு இல்லை; ஆகவே மின்சாரப் பற்றாக்குறை பற்றிய தெளிவும் இந்த அறிக்கையிலே இல்லை என்று சொல்லிவிடுகிறது. ஒரு பொறுப்புள்ள அரசுக்கு மின்சார நெருக்கடிக்கு என்ன காரணம் என்பதைக் கண்டுபிடித்துச் சொல்வது மட்டும் கடமை அல்ல. ஒரு பொறுப்புள்ள அரசு, இருக்கின்ற நெருக்கடிகளை உணர்ந்து அவற்றைத் தீர்க்கக்கூடிய மார்க்கங்களை முன் வைக்க வேண்டும்.

இந்த நெருக்கடிகளைத் தீர்க்க வேண்டுமென்று தானே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிக்கு மக்கள் அனுப்பினார்கள். மக்கள் எவ்வளவு நம்பிக்கையோடு உங்களை அனுப்பினார்களோ அந்த நம்பிக்கைக்குரியபடி இந்த நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் திட்டங்களை முன் வைத்திருக்கிறீர்களா? அனல் மின் நிலையத்திற்கு வேண்டிய நிலக்கரி விலையேற்றம், எரிவாயு விலையேற்றம், மத்திய அரசு மாநில அரசின் மீது கருணைப் பார்வை செலுத்தவில்லை. ஆகவே அடிக்கடி உருவாக்கத்தான்படும் என்றுசொல்லித்தப்பித்து கொள்வது பிரச்சினையைத் தட்டிக் கழிப்பதாகத்தான் இருக்குமே தவிர பிரச்சினைக்குத் தீர்வாக அமைவதில்லை. எனவே தான் நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் அனல் மின் நிலையமானாலும் சரி— நீர் மின்நிலையத்திற்கு வாய்ப்பே இல்லை என்று சொல்லியாகி விட்டது—அணு மின் நிலையமானாலும் உருவாக்கப்படக்கூடிய திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்த முற்படுகிறபோது அவற்றில் நாம் எவ்வளவு கோரி பெற இருக்கிறோம் என்பதைச் சொல்லவேண்டும். வெறுமனே காகிதத்தில் இவ்வளவு திட்டங்கள் வந்திருக்கின்றன என்று சொல்வதால் மட்டுமல்ல; காரியார்த்தமாக நடைமுறை அனுபவத்தில் உணர்ந்தால்தான் அவற்றைப் புரிந்துகொள்ள முடியும். அதற்கு என்ன வழி என்பதைத் தெரிவிக்கவேண்டும்,

இந்த மாநில அரசினுடைய நடைமுறைகள் எவ்வளவு பழுது பட்டிருக்கின்றது என்பதைக்குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இராமகுண்டத்தில் நமக்குரிய, இந்த மாநிலத்திற்குரிய பங்கைப் பெறுவதற்கு 400 மின் கம்பித் தொடர்களை அமைத்துப் பெற்றுக்கொள்வதில் இன்னும் காலதாமதம் ஏற்படுகின்றது.

மின்சார பற்றாக்குறை என்றைக்கும் இல்லாத அளவுக்கு அதிகப்பட்டிருக்கும்போது, இந்த மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க நமக்கு உரிய பங்கை பெறுவதற்குக் கூட சாதனங்கள் அமைக்கப்படுவதில் காலதாமதப்படுத்துகின்ற போக்கு, இந்த அரசு இந்த மின் நெருக்கடியைத் தீர்த்து, மக்களுக்கு உதவுவதில் எவ்வளவு அக்கறை அற்றப் போக்கை கடைபிடிக்கிறது என்பதற்கு உதாரணமாக அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட் வைக்கப் பட்டிருக்கிறது. அது எதற்கு வைக்கப்படுகிறது? உறுப்பினர்கள் அதைப் படித்து, இந்த மாநில அரசைப் பற்றி, இந்த மாநில அரசின் நடவடிக்கைகளைப் பற்றி, அந்தத் துறைகளின் இயக்க முறைகளைப் பற்றி, செலவினங்களைப் பற்றி, ஆடிட்டர் என்ன விமர்சனங்களை வைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து அவற்றை பேரவையில் எடுத்து வைக்கத்தான். ஆனால் அது எப்பொழுது வைக்கப்படுகிறது? இந்தக் கொள்கை குறிப்பு நேற்று மாலை 9 மணிக்கு கொடுக்கப்படுகிறது. அதேபோல இதுவும் நேற்றுதான் இந்த மேஜையில் வைக்கப்பட்டிருக் கிறது. இது எல்லாம் எதற்காக? ஏதோ சடங்கை பிரதானமாகக் கொண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவே தவிர, உணர்வு பூர்வமாக அவற்றைப் படிக்க வேண்டும், நமக்கு உதவ வேண்டும் என்ற அக்கறை அதில் ஏன் இல்லை என்றுதான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இன்னொரு விஷயம். சேர்வலாறு பற்றி நம்முடைய மாண்பு மிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கூறினார்கள். ஆனால் அதைப் பற்றி ஒரே ஒரு பேரகிராப் தான் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவுதானா விஷயம். அந்த சேர்வலாறு திட்டத்தில் நான் சந்தேகிக்கிறேன். வெறும் வெள்ளத்தால் மட்டும் அங்கே கெட்டு விடவில்லை. நுட்பம் அற்ற தகுதியற்ற இயந்திரங்களை அங்கே வாங்கியதால், அவற்றை மூடி மறைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த வெள்ளத்தையே சாதகமாக்கிக் கொண்டதாக பரவலாக கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. ஆகவே தான் இந்த நேரத்திலே உங்கள் மூலமாக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அந்த சேர்வலாறு திட்ட நடைமுறை களைப் பற்றிய ஒரு நிபுணர் குழு அமைத்து முழுமையாக ஒரு ஆய்வு நடத்த வேண்டும், விசாரணைகளை நடத்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.





ஏனென்றால் இந்த அரசாங்கம் முதலிலே அந்தத் திட்டத்திற் காக நிதி ஒதுக்குகிற போது அதற்கு 8.34 கோடி ரூபாய் செலவு ஆனால் இன்றைக்கு அதனுடைய கால தாமதத்தால் ஏற்பட்டிருக் கிற விலை என்ன? 40.20 கோடி ரூபாய் செலவு ஆகிறது. அந்த திட்டச் செலவு அதிகரிப்பதற்கு யார் காரணம், அரசாங்கத் தினுடைய காலத்தில் செயல்படாத போக்குதான் அந்த நிலைமைகு காரணம். அத்தோடு சரியான மதிப்பீடும் இல்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து தூத்துக்குடி, தூத்துக்குடியைப் பற்றி ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டில் இருக்கிறது. ஆகவே அதை நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. அதில் பல்வேறு குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் இன்றைக்கும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

மேலும், இந்த மின் துறையைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டினுடைய மின்சாரத் தேவையைப் பற்றி இந்தத் துறைக்கு ஒரு கண்ணோட்டம் கிடையாது. ஒவ்வொரு வளர்ந்து வரும் நாட்டிற்கும் விஞ்ஞான பூர்வமான கண்ணோட்டம் இருக்க வேண்டும். சந்தர்ப்பத்திற்கு தக்கபடி தேவையான போது, பேசிக் கொள்வது, ஆனால் நடைமுறையில் பயன்படுத்துவது இல்லை. வளர்ந்து வருகின்ற தமிழ்நாட்டினுடைய மின்சாரத் தேவை என்ன? அதனுடைய வளர்ச்சி விகிதம் என்ன? இன்றைய தேவை என்ன? இவற்றை எல்லாம் அறியவேண்டும். வெறும் இணைப்பு களைக் கொடுத்துவிட்டோம் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள், அவர்களே அவர்கள் முதுகில் தட்டிப் பெருமைப்பட்டுக் கொண்ட காட்சி என்றைக்கும் மகிழ்ச்சிக்குரியது அல்ல. திராவிட முன்னேற்றக் கழக அரசை மட்டும் வெறுமனே கம்பி போட்டிருக் கிறார்கள் என்று சொல்கிறீர்களே, நீங்களும் தான் பல இடங் களில் கம்பி நீட்டியிருக்கிறீர்கள், பிரச்சாரத்திற்கு உரிய திட்டங் களை எல்லாம் அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப்பின்னால், உருப்படி யான மின்சார உற்பத்தி திட்டம் ஏதாவது செயல்பட்டு வந்திருக் கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் என்ன சொல்கிறீர்கள், அது சரி இல்லா மல் கெட்டுப் போய்விட்டது, இங்கே தண்ணீர் வரவில்லை. பருவ மழை இல்லை. அணு மின்சார திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லை என்று எங்கோ சுமையை தள்ளி வைத்துவிட்டு, தவறுகளிலிருந்து தப்பித்துக் கொள்கிற, தடம் காட்டுவதில் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்களே தவிர, மக்களின் பிரச்னைகளை, தீர்ப்பதிலே உங்களுக்கு எந்தவிதமான புத்திசாலித் தனமான அணுகுமுறையும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல இறுதியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்பு கிறேன். மின்சார வினியோகத்திற்காக போடப்பட்டிருக்கிற கம்பி கள் காலத்தில் மாற்றப்படுவதில்லை. அதேபோல இன்றைக்கும்

தமிழ்நாடு முழுவதும் பல இடங்களின் கம்பங்கள் இருக்கிறன்றன. ஆனால் பல்புகள் இருக்காது. வெளிச்சம் இருக்காது. அறிக்கையிலே பார்ப்பீர்களேயானால், இத்தனை கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த அறிக்கையை மட்டும் வைத்துப் பயன் இல்லை. தமிழ்நாட்டில் நடைமுறையில் மின்சார கம்பங்களில் பல்புகள் இருக்கின்றனவா, எங்காவது குறையிருப்பின் அது குறித்து மக்களின் மனுக்கள் வந்தால் அது முறையாக தீர்க்கப்படுகிறதா என்பதை எல்லாம் பரிசீலிக்க வேண்டும்.

முழுமையாக பல்வேறு கருத்துக்களைச் சொல்வதற்குரியளவில் கத்தை கத்தையான விஷயங்கள் இருந்தாலும்கூட அவை உரிய நேரமில்லை என்கிற காரணத்தால் சொல்லப்படவில்லையே தவிர, அவைகள் எல்லாம் ஒழுங்காக இருக்கின்றன என்று அர்த்தம் இல்லை. சொல்ல வாய்ப்பில்லை என்பதால் சொல்லப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து இந்தத் துறையை முறைப்படுத்தவும், தமிழ்நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் முழுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் நாளை காலை தொடரும். இன்று பிற்பகல் சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்திகள் வரப் பெற்றுள்ளன.

1. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1985).



2. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1985).

3. 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1985).

### 8. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

### (அ) சென்னை மாநகர் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 36/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் சட்டம், தமிழ்நாடு 1859ஆம் ஆண்டு மாவட்டக் காவல் சட்டம் ஆகியவைகளை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த சட்டமுன்வடிவைப் பார்க்கின்றபோது, ஒரு சாதாரண சிறிய சட்டமாக, ஒன்றிரண்டு சிறிய திருத்தங்கள் இருப்பது போல் காட்சியளிக்கின்றது. ஆனால் இதன் விளைவு மிகக் கடினமாக, கொடுமையாக இருக்குமென்று நான் எண்ணுகிறேன். இந்தச் சட்டமுன்வடிவை திடீரென்று இப்போது தமிழகத்திலே கொண்டு வர வேண்டியதன் அவசியம் ஏன் வந்துவிட்டது என்று எனக்குத் தெரியவில்லை. இந்தச் சட்டமுன்வடிவு பயப்படுகின்ற அளவுக்கு, எதிர்பார்க்கின்ற அளவுக்கு இங்கே சென்னையில் புதிய அபாயம் கொள்ளை, அல்லது பலாத்காரம் அல்லது அதிலே ஈடுபடக்கூடிய செயலைச் செய்யக் கூடியவர்கள் அதிகமாக ஆகிவிட்டனரோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது. அப்படி ஏதாவது அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அல்லது ஏற்கனவே இருக்கின்ற சட்டங்கள் மூலம் இந்தக் குற்றங்களைத் தடுப்பதற்கு அதிகாரம் இல்லை என்று அரசு கருதுகிறதா என்று தெரியவில்லை. பொதுவாக, காவல் துறையினரிடம் பல்வேறு ஆயுதங்களை கொடுத்து வைத்திருக்கிறோம்.

---

*1985 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஜூலை 18

கடந்த 2, 3 நாட்களாக இந்தப் பக்கத்திலே இருந்து எழுப்பப்பட்ட விவாதங்களைப் பார்க்கின்றபோது. தமிழகத்திலே ஆங்காங்கு நடைபெறுகின்ற துப்பாக்கிப் பிரயோகம், அத்துமீறிய நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றபோது, கூடியிருக்கின்றவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது பற்றியவைகளையும், தடி அடி, கண்ணீர்ப் புகை, காலி தோட்டாக்களை ஆகாயத்தை நோக்கிச் சுடுவது போன்ற முறைகளைக் கையாளாமல் காவல் துறையினர் திடீரென்று எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் சுட ஆரம்பித்திருப்பதை இந்தப் பக்கத்திலே உள்ள அனைவரும் விமர்சனம் செய்வதை அறிவீர்கள். ஏற்கனவே காவல் துறை யினரிடம் கொடுக்கப்பட்டுள்ள கூர்மையான ஆயுதங்களுடன், மேலும் மிகக் கூர்மையான ஆயுதங்களை ஒப்படைப்பது அவ்வளவு பொருத்தமாக இராது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள காரண காரிய விளக்கத்திலே, "சென்னை மாநகரில் ஒரு நபரின் நடவடிக்கை, செயல் அல்லது ஒருவர் உயிருக்கு அல்லது உடமைக்கு பீதி அபாயம் அல்லது தொல்லை விளைவிப்பதாக இருந்தால் அல்லது அல்லது வன்முறையில் ஈடுபட்டு குற்றம் ஒன்றை பலாத்காரம் என்று நம்புவதற்கு போதுமான ஆதாரங்கள் இருந்தால் செய்கிறார் மூலமாக ஆணை பிறப்பித்து அந்த நபரை எழுத்து குறிப்பிட்டுள்ள அளவிற்குள் சென்னை மாநகரிலிருந்து ஆணையில் யேற்றுமாறு ஆணையிட காவல்துறை கமிஷனருக்கு வெளி அளிக்கிறது. அதிகாரம்

அதைப்போலவே, சென்னை மாநகரிலிருந்து, ஒட்டி அமைந்துள்ள மவட்டம் அல்லது மாநகரை அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து மாவட்டங்களிலிருந்து அத்தகைய அதிகாரங்களைச் வெளியேறுமாறு ஆணையிட கமிஷனருக்கு இந்தச் சட்டத்தின் செலுத்துவதற்குக் காவல் துறைக் கொடுக்கிறீர்கள். எனவே நான் மூலமாக நீங்கள் அதிகாரம் கொள்ள விரும்புவதெல்லாம், உங்கள் மூலமாக தெரிந்து இவைகளையெல்லாம் இப்போதையச் சட்டத்தின் மூலம் இல்லையா என்பதை நான் தடுத்து நிறுத்துவதற்கு போதிய அதிகாரம் மேலும். ஒரு குற்றம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நபர். இன்னொரு இடத்திலே செய்வார் என்று எதிர்பார்க்கின்ற ஒரு மாட்டார் என்பதற்கு என்ன இந்தக் குற்றத்தைச் செய்ய என்னால் புரிந்து கொள்ள உத்தரவாதம் இருக்கிறது என்பதை முடியவில்லை.

உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் இந்த ஊரிலேயிருந்து குற்றம் செய்கிறவர்களை இந்த ஊரில் நீங்கள் இருக்க வேண்டாம். இன்னொரு ஊருக்கு போங்கள் என்று உத்தரவிடுவீர்களானால், அந்த ஊருக்குப் போய் அவர்கள் குற்றம் செய்யமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது? அது எப்படி இருக் இறது என்றால் எங்களுக்குத் தெரியாத ஒரு இடத்தில் சௌகரிய மாகச் செய்து கொள்ளுங்கள் என்று சொல்கிற மாதிரி இருக் கிறது. வெள்ளையர்கள் காலத்திலே தான் அப்படிப்பட்டவர் களை அந்தமானுக்குக் கொண்டு போவார்கள் ஆனால் நம்முடைய ஜனநாயக மரபு இருக்கிற இந்த நேரத்திலே வெளியேறுங்கள்



1985 ஜூலை 18] [திரு. என். எஸ். வி. சித்தன்]

என்று அவர்களைச் சொன்னார்கள், அவர்கள் வெளிநாடுகளுக்குப் போகவில்லை, வெளி மாநிலங்களுக்குக்கூடப் போகவில்லை, இன்னொரு இடத்திற்குப் போய் அதே குற்றத்தைச் செய்ய மாட்டார்கள் என்பதற்கு என்ன காரணங்களைச் சொல்லமுடியும்?

ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கடத்திவிடுவதாலேயே அவர் குற்றம் செய்யமாட்டார் என்று எப்படி நம்பமுடியும். நம்முடைய அரசியல் சட்டத்திலே ஒருவர் எங்கே வேண்டுமானாலும் வசிக்கலாம் என்ற உத்திரவாதம், உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு நபரை குற்றம் செய்வார் என்று எதிர்பார்த்து வேறு இடத்திற்கு அவரை மாற்றுவது அரசியல் சட்டம் கொடுத்திருக்கிற அந்த உரிமையைப் பறிப்பது ஆகாதா? இந்த மாதிரித் தவறுகளைத் தடுக்கவேண்டுமானால் சி.ஆர்.பி.சி. யில் Habitual offenders என்ற பிரிவு இருக்கிறது. அதைத் திருத்தி இன்னும் கொஞ்சம் கடுமையாகக் கொண்டுவரலாம். ஆகவே இந்தச் சட்டத் திருத்தம் என்ன நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று எங்களுக்குப் புரியவில்லை. ஆகவே எங்கள் கட்சியின் சார்பாக நான் இதை எதிர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1888 ஆம் ஆண்டு மூன்றாவது சட்டத்தில் உள்ள சென்னை நகரக் காவல் சட்டத்திலேயும், 1859 ஆம் ஆண்டு 24-வது சட்டத்திலேயும் உள்ள ஷரத்துக்களைத் திருத்துவதற்காக இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதன் மூலமாக 1962ஆம் ஆண்டு 52 ஆவது சட்டம், சுங்கச் சட்டத்தில் உள்ள 135 ஆவது பிரிவை இன்றைக்கு ஒரு முறை குற்றம் செய்து தண்டிக்கப்பட்ட ஒருவர் மீண்டும் அந்தக் குற்றத்தைச் செய்வார் என்று நம்பப்படுகிற காரணங்கள் இருக்குமானால் அவரைச் சென்னை நகரக் காவல் சட்டத்திலே உள்ள 51ஆவது ஏ பிரிவின் கீழ் தண்டிப்பதற்கு அல்லது சென்னை நகரைவிட்டு அவரை அப்புறப்படுத்துவதற்கு சென்னை மாநகரப் போலீஸ் கமிஷனர் அல்லது டெபுடி கமிஷனருக்கு அதிகாரம் வழங்குகிற திருத்தச் சட்டந்தான் இந்தத் திருத்தச் சட்டமாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை எடுத்துத் தெரிவித்ததைப் போல், 'Correct me if I am erroneous. Convince me if you have got solid reasons' என்று எடுத்துச் சொன்னார்கள். அதைப்போன்று எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை, எண்ணங்களை, சிந்தனைகளை இந்த மாமன்றத்திற்கு எடுத்து வைக்கிறோம். தேவையானால் அந்தச் சட்டத்தை நிறுத்திக் கொள்ளுங்கள், இல்லையானால் இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் செய்து கொள்ளுங்கள் என்று மட்டும் என்னுடைய முன்னுரையாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1888 ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாநகரத்தினுடைய சட்டமாகக் கொண்டு வரப்பட்ட வெள்ளையர்களுடைய காலத்திலே கொண்டுவரப்பட்ட 51—ஏ ஷரத்து என்ன சொல்கிறது என்றால் சென்னை மாநகரில் மக்களுக்குப் பதட்டமான நிலையை உண்டாக்கத்தக்க அளவுக்கு பயங்கரமாக ஒருவர் குற்றத்தைச் செய்வார் என்று தெரிந்தால் அவரைப் போலீஸ் கமிஷனர் இந்த மாநகரத்திலிருந்து வெளியே அப்புறப் படுத்தலாம் என்று தெரிவிக்கிறது. ஆனால் இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தச் சட்டம் 1962 ஆம் ஆண்டு சுங்கச் சட்டத்திலே உள்ள 135ஆவது பிரிவில் ஒருமுறை ஒருவர் குற்றம் செய்து விடுவாரானால் மறுமுறையும் அவர் குற்றம் செய்வார் என்று நம்புவதற்குக் காரணங்கள் இருக்கின்றன என்ற நிலை இருக்குமானால் அவரை போலீஸ் கமிஷனர் 2 ஆண்டுகளுக்கு மிகாமல் இந்த நகரத்தைவிட்டு அப்புறப்படுத்தலாம் என்ற சட்டத் திருத்தத்தைத் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(மாலை 4—10)

அந்த 135வது பிரிவு சுங்கச் சட்டம் என்ன சொல்கிறது. இந்த Dutiable goods and Prohibited Goods வரி விதிக்கப்பட்ட பொருள்களாக இருந்தாலும், தடை விதிக்கப்பட்ட பொருள்களாக இருந்தாலும், Restricted goods. நிபந்தனைக்கு உட்பட்ட பொருட்களாக இருந்தாலும், அல்லது அந்தப் பொருட்களுக்கு வரி கட்டவில்லை என்றாலும், அல்லது தடை விதிக்கப்பட்ட பொருட்களை கையகப்படுத்துவதாக இருந்தாலும், அந்தப் பொருட்களை வாங்கினாலும், விற்றாலும், மறைத்து வைத்திருந்தாலும் அல்லது எடுத்துச் சென்றாலும் கூட அந்தக் குற்றத்தை அந்தத் தனி நபர் செய்தவராக, இந்த 135-ஆவது ஷரத்துப்படி கருதப்படுவார். அப்படிப்பட்ட ஒருவர் மீண்டும் குற்றம் செய்வார் என்று கருதினால், அவரை ஊரை விட்டுக் கடத்தலாம் என்று சட்டத் திருத்தம் சொல்கிறது. இந்தச் சட்டம் எதற்காக இப்போது தேவைப்படுகிறது.

நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அரசாங்கத்தின் சார்பாக அவர்கள் எல்லாம் கடத்தல்காரர்கள் 135-வது பிரிவிலே குற்றம் செய்தவர்கள் கடத்தல்காரர்கள் என்ற காரணத்தாலே, கடத்தல் காரர்களைத் தண்டிப்பதற்கு நீங்கள் வாதாடலாமா என்று கூட கேட்கலாம். நான் இலக்கிய நயம்படத் தெரிவிக்க விரும்புகிறேன். கடத்தல்காரர்கள் என்பவர்கள் யார்? சங்க இலக்கியத்திலே கனியன் பூங்குன்றனார் சொல்வார். ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று சொல்வார்கள். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சங்க இலக்கியப் பாடலுக்கு இந்தக் கலியுக வாரிசாக வந்தவர்கள்தான் கடத்தல்காரர்கள். சென்னை மாநகரத்திலே அவர்கள் இருந்தாலும், கன்னியாகுமரி கோடி முதல் காஷ்மீர் முகட்டு வரை எந்த இடத்திற்கு அவர்களை நீங்கள் அப்புறப்படுத்தி னாலும்கூட, அந்தந்த இடத்திற்குத் தேவையான அந்தந்தப்





பொருட்களை அவர்கள் நடத்திச் செல்வார்களேயல்லாமல், சென்னை மாநகரத்தை விட்டு அவர்களை அப்புறப்படுத்தி விடுவதன் காரணமாக கடத்தலை நிறுத்தி விடலாம் என்ற அளவிற்கு இந்த அரசு நிச்சயமாக முன் வராது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே ஒரு காரண காரிய நோக்கத்தோடு, நீங்கள் சட்டத்தை திருத்த வேண்டும். இந்தக் கடத்தல்காரர்களை கடத்தல் தொழிலிலிருந்து தடுப்பதற்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறீர்கள், இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொல்லி விட்டால் நடைமுறையில் அவர்கள் எங்கு இருந்தாலும், இந்தக் கடத்தலைச் செய்வார்கள் என்ற நிலை இருக்கும் நேரத்தில் ஏன் இப்போது தேவையில்லாமல் சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள் என்பது என்னுடைய வாதம். இதுபோன்று எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன.

பல்வேறு சட்டங்கள் இருக்கின்றபோது நீங்கள் எதற்காக புதியதாக ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இன்றைக்கு இதே கஸ்டம்ஸ், சுங்கச் சட்டத்திலே 135—ஏ என்ற பிரிவு இருக்கிறது. அந்த 135-ஏ என்ற பிரிவு என்ன சொல்கிறது. பிரப்பரேசன் ஸ்டேஜிலே ஒரு குற்றத்தைச் செய்வதற்கு முன்னாலே—நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள்: ''Intention, Preparation, Attempt and Commission''. எனவே குற்றத்தைச் செய்தால், தண்டனை என்று இருக்கிறது, முயற்சித்தால் தண்டனை என்று இருக்கிறது. ஆனால் இந்த பிரப்பரேசன் ஸ்டேஜிலே தயாரான நிலையிலே தண்டனையை பெரும்பாலும் கொடுப்பதில்லை.

ஆனால் இந்தச் சுங்கச் சட்டம் 135-ஏ பிரிவுப்படி, தயார் நிலையில் உள்ளவர்களுக்கும்கூட, தண்டனை வழங்கலாம் என்ற அளவிற்கு 135-ஏ கடுமையாக இருக்கின்ற நேரத்தில் நீங்கள் எதற்காக இந்தச் சட்டத்தை இப்போது கொண்டு வருகிறீர்கள், இந்தச் சட்டத்திலே அவர்கள் தவறு செய்கிறார்கள் என்ற காரணத்தால், கமிஷனருக்கு அதிகாரத்தை வழங்கி, ஊரை விட்டு கடத்த வேண்டும் என்று சில சட்டத் திருத்தங்கள், என்ன காரணத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. சட்டங்கள் அதிகமாக கொண்டு வருவது ஒரு நல்ல அறிகுறியாக ஆகாது என்பதை நான் சொல்லவில்லை. ஒரு பெரிய ஆங்கில எழுத்தாளர், மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்தமட்டில், அவர்கள், டி.பி.ஸ்மித் என்பவர் சொல்கிறார்: The better the Society, the less laws there will be. In Haven there be no law and the lion will lie down with the lamb. The values of an unjust society will reflect themselves in an unjust law. The worse the society the more law there will be. In Hell there will be n thing but law and due process will be mcticulously observed. என்று சிறந்த ஆங்கில எழுத்தாளர் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1985 ஜூலை 18

அதிகமான சட்டங்கள் சமுதாயத்திலே, அரசாங்கத்தாலே, உருவாக்கப்படுகின்றது என்றால், என்ன பொருள் இதற்கு என்றால், சமுதாய அமைப்பு சரியில்லை என்று பொருள்படும். எனவேதான் அதிகமான சட்டங்கள் தேவையில்லை. கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். தென்பாண்டிச் சீமையிலே அதிகமாகச் சொல்வார்கள். அறுக்க முடியாதவன் ஒருவன் இடுப்பைச் சுற்றி 52 அறுவாளைத் தொங்கவிட்டு இருந்தானாம். ஒரு அறுவாளை எடுத்துக் கொண்டு சென்று, கதிரை அறுக்க முடியாதவன் 52 அறுவாளை இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந்தால், அது கேலிக்குரிய ஒன்றாகும்.

அது போல் தான் இருக்கின்ற சட்டங்களிலேயே இதே முயற்சிக்கு தண்டனை வழங்கவேண்டும் என்று பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன இந்த சுங்கச் சட்டத்திலேயே பிரிப்பரேஷனுக்கு அதாவது தயார் நிலையில் இருந்தால்கூட அதற்கு தண்டனை வழங்க வேண்டும் என்ற நிலை இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில், இப்படி பல்வேறு சட்டங்கள் இருக்கின்ற சூழ்நிலையில் எதற்காக தேவையில்லாமல் இந்த சட்டத்தினை நீங்கள் கொண்டு வருகிறீர்கள் என்று எனக்குப் புரிய வில்லை.

இன்னும் நான் தெளிவாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு அடிப்படை உரிமைகளைப் பற்றி பேசுகிறோம். இந்திய அரசியல் சட்டம் நம்முடைய பிரஜைகளுக்கு குடிமக்களுக்கு எல்லாம் ஜீவாதார உரிமைகளை வழங்குகிறது. இந்திய அரசியல் சட்டத்தின் 3-ஆவது அத்தியாயத்தில் பல்வேறு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

14ஆவது ஆர்ட்டிகல் என்று சொல்லுகின்ற சட்ட ஷரத்தில் இந்திய அரசியல் சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது; "equal protection, equality before law" சட்டத்திற்கு முன்னால் எல்லோரும் சமம் ஆகும். சட்டத்தால் சமமான பாதுகாப்பு ஒவ்வொரு குடிமகனுக்கும் தரவேண்டும் என்று 14ஆவது ஷரத்து சொல்கிறது.

19ஆவது ஷரத்து என்ன சொல்கிறது. எங்கு வேண்டுமானாலும் இந்திய குடிமகன் "wherever he like he can reside and settes in India.." இந்தியாவில் எங்கு விரும்பினாலும் அவன் வாழலாம், தங்கலாம் என்ற உரிமை தரப்பட்டிருக்கிறது.

அதுபோல சட்ட ஷரத்து 20—ல் உட்பிரிவு 2—ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால். ஒரு தனி மனிதன் குற்றம் செய்தால்கூட அந்த தனி மனிதனுக்கு ஒரு முறைதான் தண்டனை தரவேண்டும் என்றும் 2-ஆவது முறை தண்டனை வழங்கக் கூடாது என்றும் Indian Constitution-இன் 20-ஆவது சட்டப்பிரிவின் உட்பிரிவு 2-ல் தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறது எனவே, இந்திய அரசியல் சட்டத்தினுடைய 14ஆவது பிரிவு, 19ஆவது பிரிவு, 20ஆவது பிரிவின் உட்பிரிவு 2 ஆகியவைகளையெல்லாம் மீறி இன்றைக்கு இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டு வர வேண்டிய அவசியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை.



1985 ஜூலை 18] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

இன்னும் ஒன்றை நீங்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். 1888 சென்னை காவல் சட்டம் ஆனாலும், 1859 மாவட்ட காவல் சட்டம் ஆனாலும் எந்த சூழ்நிலையில் எப்போது இயற்றப்பட்டது? வெள்ளைக்காரன் இந்தியாவை ஆண்டபோது காவல் துறையால் தான் எல்லாம் முடியும், எல்லா நிர்வாகமும் காவல் துறை மூலம் தான் செய்ய முடியும் என்று காவல் துறையை நம்பி ஆண்ட காலத்தில் உருவாக்கப்பட்ட சட்ட ஷரத்துக்களுக்கு மீண்டும் உயிர் கொடுப்பது என்பது எந்த வகையில் நியாயம் ஆகும்.

இந்திய குடிமகனுக்கு அனைத்து ஜீவாதார உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று இந்திய அரசியல் சட்டத்தை தொகுத்த தேச பிதாக்களின் எண்ணங்களுக்கு இந்தச் சட்டம் விரோதமாக இருக்கிறதா இல்லையா என்பதை நீங்கள் அருள் கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே 51-ஏ ஏற்கனவே இருந்த 1888-ன் 3-ஆவது சட்டத்தில் உள்ள அந்த பிரிவைக்கூட ரத்து செய்ய வேண்டும் என்பது என்னுடைய வாதம் ஆகும். ஆகவே, ரத்து செய்ய வேண்டும் என்ற சூழ்நிலையில் இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் மீண்டும் ஒரு ஷரத்தைக் கொண்டு வந்து எங்கோ சுங்கச் சட்டத்தில் தவறு செய்பவர்களை நீங்கள் ஊரை விட்டே கடத்த வேண்டும் என்று சொல்லுகின்ற இந்த வாதம் இந்த சட்ட திருத்தம் தேவை அற்றது, முறை அற்றது, ஜீவாதார உரிமைகளுக்கு எதிரானது என்று நான் பட்ட வர்த்தனமாக தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட டெல்லியில் இந்தச் சட்டம் இருக்கிறது. பம்பாயில் இருக்கிறது, கர்நாடகத்தில் இருக்கிறது என்று வாதிடக் கூடும். அவர்களுக்கு மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இருக்கின்ற காரணத்தால் இங்கே போட வேண்டும் என்று நியாயம் இருக்கிறதா? நாம் ஒரு கூட்டாட்சியை வழங்கிக் கொண்டு இருக்கிறோம், நம்முடைய மாநிலத்திற்கு எது தேவை எது சரி என்பதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும். ஏதோ ஆந்திராவில் இருக்கிறது, கர்நாடகாவில் இருக்கிறது என்பதற்காக இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வர வேண்டும் என்ற நியாயம் இல்லை.

இன்னும் தெளிவாகச் சொல்கிறேன். இந்திய உச்ச நீதி மன்றத்தில் தீர்ப்பளித்து இருக்கிறார்கள். இது அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது அல்ல என்று கூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாதிடலாம். உச்ச நீதி மன்றத்தினுடைய நீதிபதி தீர்ப்பு சொல்லிவிட்ட காரணத்தினாலேயே அது தான் முடிந்த முடிவு என்று யாரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இன்றைக்கு வள்ளுவன் குறளுக்கே குற்றம் சொல்லுகின்ற காலம், ஆண்டவனுடைய நியதிகளுக்கே எதிராக சொல்லுகின்ற காலம். எனவே, சமுதாய வாழ்க்கை நெறிகள் எப்படி இருக்கிறதோ அதற்கு

ஒப்ப நீதிமன்றங்களுடைய தீர்ப்பு அமைந்தால்தான் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்படுமே அல்லாமல் சமுதாய வழக்க ஒழுக்க நெறிகளுக்கு மாறுபட்டு இருந்தால் அந்த நீதி மன்றத்தினுடைய தீர்ப்புகளை தூக்கி எறிய சமுதாயம் கடமைப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இன்றைக்கு அடிப்படை உரிமைகளுக்கு ஜீவாதார உரிமைகளுக்கு எதிரான இந்த சட்டத்தை திருத்தச் சட்டத்தை கொண்டு வருவதிலே எந்த நியாயங்களும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை

(மாலை 4–20.)

இன்னும் ஒன்றைத் தெளிவாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு ஜீவாதார உரிமைகளை எல்லாம் மறுக்கின்ற அளவுக்கு இந்தச் சட்டம் இருக்கிறது ஒன்றை மட்டும் நான் சொல்லி விடை பெற விரும்புகிறேன்.

நீங்கள் விசாரணை இல்லாது தண்டனை வழங்குவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் தயாராக இருக்கக்கூடாது. மிசாச் சட்டங்கள்—விசாரணை இல்லாது தண்டனை; குண்டர் சட்டம்—விசாரணை இல்லாது தண்டனை; விசாரணை இல்லாது தண்டனை வழங்க முற்படுவீர்களேயானால், அது தான் சர்வாதிகார சாம்ராஜ்யம், சர்வாதிகார சமவெளி ஆகும் எதுவானாலும், விசாரித்து தண்டனை வழங்க வேண்டும்.

எப்படி நாம் அங்காடிகள் செல்கின்ற நேரத்தில், 'இது ரெடிமேட் ஆடைகள் அங்காடி' என்று போட்டு இருக்கிறதோ, அதைப்போல், 'ரெடிமேட் கன்விக்ஷன் சென்டர்' தயாரிக்கப் பட்ட தண்டனை நிலையங்களை இந்தச் சட்டத்தின் மூலம் அருள் கூர்ந்து உருவாக்காதீர்கள் என்று உங்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று, நாம் இப்படி ஜீவாதார உரிமைகளை டைல்யூட் பண்ணுகிற அளவுக்கு, ஜீவாதார உரிமைகளுடைய அந்த உணர்வுகளை மழுங்கச் செய்கின்ற அளவுக்கு இப்படி சட்ட திருத்தங்களைக் கொண்டு வராதீர்கள். வேதியியல்-கெமிஸ்ட்ரியில் ஒன்று சொல்வார்கள்; Colourless, tasteless, odourless என்று சொல்வார்கள். அது போன்று நம்முடைய ஜீவாதார உரிமைகள் எல்லாம் மனம் இல்லாமல், நிறம் இல்லாமல், உருக்குலைந்து, ஊனமுற்றுப் போகும் என்பதைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற, 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவினை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைக் கூறி முன்வருகிறேன்.



மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ''ஸ்மித் காலத்திலிருந்த சமுதாய நிலைமையையும் இன்று இருக்கிற நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்க மறந்துவிட்டார்'' என்று கருதுகிறேன். சட்டங்கள் குறைவாக இருக்க வேண்டும்; என்று சொல்லப்பட்ட காலத்தில் குற்றம் இழைக்க வேண்டும்; திட்டமிட்டு குற்றங்களைச் செய்ய வேண்டும்; என்று சட்டங்களை ஏமாற்றி குற்றங்களைப் புரிவதற்கு துணிவு பெற்றிருக்கிறவர்கள் குறைவாக இருந்திருக்கக்கூடும். ஆனால் இன்றைய கால கட்டத்தில், 'கனிஷ்கா' விமானம் நொறுக்கப்பட்ட நேரத்தில், நாம் குற்றவாளிகளுக்காக பரிந்து பேசுவது, நாம் ஏதோ ஜனநாயகத்தில் ஒரு அழிவுப் பாதையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதற்குத்தான் அது அச்சாரமாக அமையுமே தவிர, ஜனநாயக ஆதரவாக அமையாது என்பதை நான் முதலிலே அவருக்குப் பதிலாக சொல்ல விரும்புகிறேன்.

ஸ்மித் காலத்திற்கு முன்னாலே வாழ்ந்த வள்ளுவப் பெருந்தகை கூட, ''கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்'' என்று சொன்னார்கள். ஆக, கொடியவர் சிலரைக் கொலைத் தண்டனையால் வெந்து தண்டிப்பது, பயிரைக் காப்பாற்ற களையைக் களைவதற்குச் சமம் என்று சொன்னார்கள்.

ஆக, தீய கொடியோரைத் தண்டிப்பது என்பது அரசியல் சட்டத்தில் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிற ஆதார உரிமை ஆகும். ஆக, அரசியல் சட்டத்தின் 21 ஆவது ஆர்ட்டிகிள், நம்முடைய குடிமக்களுக்கு, ''Protection of life and Personal liberty'' என்று வழங்குகிறபோது, "No person shall be deprived of any of his personal liberty except according to procedure established under law." என்று தான் வரையறுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

ஆக, ஒருவருடைய சுதந்திரம் என்பதும், மனித உரிமை என்பதும் சட்டத்திற்கு உட்பட்டதுதான் என்பதை நாம் பல காலங்களில் மறந்து விடுகிற காரணத்தினால் தான், குற்றங்கள் கூடிக் கொண்டு வருகிறது. குற்றங்கள் கூடுகிறபோது, அரசு தன்னுடைய கடமையாக, இதுபோன்று கூடுதலாக சட்டங்களை குற்றவாளிகளைத் தண்டிக்கிற முறையிலேயும், குற்றங்களைத் தடுக்கிற முறையிலேயும் கொண்டு வர வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

குற்றவாளிகள் ஒரு பக்கம் பெருகிக் கொண்டு இருக்கிற போது, இங்கே ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டு அரசியலை நடத்திக் கொண்டிருக்கிறவர்கள்கூட, பல நேரங்களில் ஜன நாயகத்தை காக்க வேண்டிய, சட்டம்-ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய நீதிமன்றங்களை சோதனைக்கு உள்ளாக்குகின்றோம்.

நாம் குற்றவாளிகளா, இல்லையா என்பது அல்ல பிரச்சினை. ஒரு நீதிமன்றத்தை நாம் மதிக்கத் தவறிவிட்டால்—நீதிமன்றத் திற்கு வருகிறவர்கள் யாருமே தன்னை குற்றவாளிகள் என்று ஒத்துக்கொள்வது இல்லை. அப்படி இருக்கிறபோது, நீதிமன்றம் கொடுக்கிற ஆணையை குற்றவாளி அல்லாத நான் மதிக்க மாட்டேன். அதற்கு கட்டுப்பட மாட்டேன் என்று சொல்ல வருகிறபோது, சட்டம் எங்கே காக்கப்படும்? ஜனநாயகம் எங்கே காப்பாற்றப்படும்? என்பதை நாம் உணரத் தவறிவிடக் கூடாது.

ஆக, அந்த வகையில்தான் இன்றைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்ற இந்தச் சட்டம் ஏதோ புதியதாகக் கொண்டுவரப் பட்ட சட்டத்தைப் போல, புதிதாக மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியில்தான் அறிமுகப்படுத்திய சட்டத்தைப் போலவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கூடப் பேசியது எனக்கு வியப்பாக இருக்கிறது. இன்றைக்கு கொணடு வரப்பட்டு இருக்கின்ற இந்த சிட்டி போலீஸ் ஆக்ட் என்பது பிரிட்டிஷ்காரன் காலத்தில் கொண்டுவரப்பட்டு தொடர்ந்து இருந்துவருகின்ற சட்டமாகும். ஆனால் இந்தத் திருத்தம் என்பது, சட்டத்தை மீறி ஒருவர் குற்றம் செய்கிறார் என்று சொல்கின்றபொழுது அவரை மாநகர எல்லையிலிருந்து கடத்துவது என்பது நாம் போட்ட சட்டம் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துராமலிங்கம் அவர்கள் சொன்னது அத்தனையும், ஜனநாயக விரோதமானது, சர்வாதிகாரமானது என்று சொன்னது அனைத்தும் அவர் தலைவர் கலைஞர் காலத்திலேயும் இங்கு நடைமுறையில் இருந்த சட்டம்தான். அது ஜனநாயக விரோதமானது, ஜனநாயகத்தை அழிப்பது, சர்வாதிகாரத்திற்கு ஒப்பானது என்று அதை அவர்கள் கருதுகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே, இது சர்வாதிகாரத்திற்குப் பாதை வகுக்கும் திட்டம் அல்ல.

1952-இல் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. 52 அமென்ட்மெண்ட் மூலம் இந்த 52—ஏ, 52 பிரிவு இங்கே புகுத்தப் பட்டிருக்கிறது. அப்படி கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டத்தில் இருந்த நியாயம் எதுவும் இன்றைக்கு மறுக்கப்படவில்லை.

விசாரணை இல்லாமல், ஒருவரைக் கடத்தி விடுகின்ற தன்மை இந்தச் சட்டத்தில் இல்லை. விசாரணைக்கு வழிவகுக்கப்பட்டிருக் கிறது. ஆனால், விசாரிப்பவர், சிட்டி கமிஷனராக இருப்பார். அந்தக் கமிஷனர் குற்றம் செய்பவர்களுக்கு, தண்டிக்கப்பட வேண்டியவர்களுக்கு, கடத்தப்பட வேண்டியவர்களுக்கு உரிய அவகாசம் கொடுத்து, இன்னும் சொல்லப்போனால், வழக்கறிஞரை வைத்துக்கூட அவர்கள் வாதாடி உரிமை தரப் பட்டிருக்கிற ஒரு சட்டம்தான் இது.



1952 இல் எப்படி ஜனநாயகத்தை மீறுவதாக ஆகாதோ, அப்படி சர்வாதிகாரத்தை இங்கே நிலைநாட்டுவதாக அமையாதோ, அதைப்போலத்தான் இன்றைக்கும் அந்த வழி வகைகளுக்காக இந்தச் சட்டம் பயன்படுத்த முடியாது. 51—ஏ, 1952 இல் இது அமென்ட் செய்யப்பட்டபோது இருக்கின்ற அதே நிலையில்தான் "The Commissioner may by an order in wri ing signed by him direct a person so to conduct himself as has been neces- sary to the Commissioner or require such person to prevent such alarm, danger or harm; the Commissioner may require such person to remove himelf outside the city within such time as may be specified in the order" என்று இருக்கிறது. ஆகவே, சென்னை மாநகரத்தைவிட்டு வெளியேற்றும் அதிகாரம் 1952-லேயே இந்தச் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், இன்றைக்கு ஜன நாயகத்தைப் பற்றிப் பேசுகின்றவர்கள், இது ஜனநாயகத்திற்கு விரோதமான சட்டப்பிரிவு என்று இதை எடுத்துவிட முன்வர வில்லை, அது இருந்து கொண்டுதான் இருந்தது. அந்தக் காலத்தில் கூட இந்தச் சட்டத்தின்மூலம் துஷ்பிரயோகம் நடந்தது; காவல் துறை அதிகாரிகள் வேண்டுமென்றே யாரையாவது கடத்தி பழி தீர்த்துக் கொண்டார்கள் என்று சொல்லவரவில்லை; அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழகமும் இதைப் பயன்படுத்த வில்லை அல்லது பயன்படுத்தத் துணியவில்லை; அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்யவில்லை என்றால் புரட்சித் தலைவர் ஆட்சியில் உள்ள நாங்களா இதை துஷ்பிரயோகம் செய்யப் போகிறோம் என்பதை உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பாருங்கள். உங்களுடைய என்பதை நாம் நடைமுறைப்படுத்தி, குண்டாஸ் ஆக்ட் 500 பேர்கள் குண்டாஸ் ஆக்டிலே கைது செய்யப் இட்டத்தட்ட வீரமணியை தாக்கியதாக ரவி என்பவர் பட்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். கூட அரசியல் சார்புடையவர்கள் இந்த எந்தவொரு நிகழ்விலாவது செய்திருக்கிறோம் என்று யாருமே குண்டாஸ் ஆக்டிலே கைது அப்படிச் சொல்வதற்கு இடம் சொல்ல முடியாது. ஆகவே, நிச்சயமாக விட்டிருக்கமாட்டீர்கள். இருந்திருந்தால் நீங்கள் அரசியல் நோக்கத்தோடு கொண்டு அப்படி எந்தச் சட்டத்தையும் தலைவரவர்கள் ஆட்சியில் யாரையும் வந்து மாண்புமிகு புரட்சித் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் பழி வாங்கியதாக சரித்திரமே திரு. முத்தையா அவர்கள் சொன்னதைப்போல, அப்படி துஷ்பிரயோகம் செய்யப்பட்டு பழி வாங்கப்பட்ட நிகழ்ச்சிகளின் பட்டியலைச் சொல்கின்ற நிகழ்ச்சியில் ஈடுபட்டால் அதற்குக் காலம் நிறைய ஆகும். அதுபோன்ற நிகழ்வு தற்போது இல்லை என்பதற்கு குண்டாஸ் ஆக்டின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளே முன்னுதாரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கனவே நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட் இருக்கிறது. அது மத்திய அரசின் சட்டம்தான். ஐ.பி.சி.யில் இல்லாத சட்டங்களே இல்லை. அந்த இன்டியன் பீனல் கோட்–இன் வரையறைக்குட் பட்டு, ஜனநாயக நெறிக்கு உட்பட்டுக் கட்டுப்பட்டால், சி.ஆர்.பி.சி., ஐ.பி.சி., போன்றவைகள் மதிக்கப்பட்டு, நீதி மன்றங்கள் மதிக்கப்பட்டு, இந்த நாட்டு மக்கள் ஒத்துழைக்கத் தயாராகிவிட்டால் மற்ற சட்டங்கள் எதுவும் நமக்கு நிச்சயமாகத் தேவையில்லை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நிலைமைகள் அப்படி இல்லை. இருக்கின்ற சட்டத்தை எத்தனகய ஒருவகையிலேயும் மீறத் தயாராகின்றபொழுது, எப்படியும் சட்டத்தை மீறுவேன் என்று சொல்கின்றபொழுது, எப்படியும் குற்றங்களைத் தடுப்போம் என்ற முடிவுக்கு அரசு வருவதில் தவறு இருக்க முடியும் என்று நான் கருதவில்லை.

(மாலை 4–30)

ஆக, அந்த வகையிலே குற்றவாளிகள் மட்டும் அல்ல, குற்றத்தைத் தூண்டக் கூடியவர்கள், எப்படியும் நீங்கள் அந்தக் குற்றத்தைச் செய்யுங்கள் என்று தூண்டுவதைப் போல இன்று நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆக, அதன் விளைவு தான் கடுமையான, கூடுதலான இந்தச் சட்டங்கள். அந்தச் சட்டத்திலே ஒன்றுதான் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தச் சட்டம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டும்; இது சரியான நேரம் என்கிற காரணத்தால் அதைச் சொல்கிறேன். ஐ.பி சி.யிலே எல்லா குற்றங்களையும் தடுக்கிற பிரிவுகள் இருப்பது உண்மை. அதிலே, ஆப்சின் பிரசுரங்களைத் தடுப்பதற்கான கடுமையான பிரிவுகளும் இருக்கின்றன.

Sections 292, 293 and 294–Sale of obscene books, sale of obscene, objects, sale of obscene acts and songs. என்று இருக்கிறது. ஒருபக்கம் இருந்தாலும், சமுதாயத்தை, இளைஞர்களை, மாணவ, மாணவிகளை, எண்ணங்களை, உணர்வுகளை மாசுப்படுத்துகிற எந்த ஒரு வெளியீட்டையும் தடுக்க வேண்டுமென்பதற்காக ஐ.பி.சியிலே ஒரு செக்ஷன் இருக்கிறது. அது தண்டிக்கப்படக் கூடிய குற்றம் என்று இருக்கிறது. ஆனால் நிலைமை என்ன என்பதை நீங்கள் அருள்கூர்ந்து பார்க்கவேண்டும். நான் ஏதோ பத்திரிகையைக் குறை கூற வேண்டும், அதுவும் மாற்றுக் கட்சிக் கருத்துக்களை பெரிதும் விரும்பிப்போடுகிற பத்திரிகையைக் குறை கூற வேண்டுமென்பதற்காக இதைச் சொல்வதாக தயவுசெய்து யாரும் கருதிவிடக்கூடாது. ஆனால் அந்தப் பத்திரிகையில் ஒன்றை மட்டும் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். சட்டத்தை நாம் எப்படி துணிந்து மீறுகிறோம் என்பதற்காக, அது கோவையிலேயிருந்து வெளி வந்து கொண்டிருக்கிற மாலைமுரசு பத்திரிகை. மாலை முரசு என்ற அந்த ஏட்டிலேயே நடுநிலை நாளிதழ் என்று போடப் பட்டு, பலகாலம் நம்முடைய பெரியவர் ஆதித்தனார் அவர் களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர் நடத்துகிற காரணத்தினாலே





மக்களால் பெரிதும், நடுநிலை செய்தித்தாளாக, அரசியல் சார்பற்ற நாளிதழாக இன்னும்கூட கருதப்பெற்று, வீடுகளிலே படிக்கப்படும் பத்திரிகை. அந்தப் பத்திரிகையிலே—மாண்புமிகு தலைவருடைய அனுமதியோடு—நான் ஒன்றை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன். பத்திரிகையிலே வந்து விட்டது, அந்த மன்றத்திலே சொல்வதிலே எந்தக் குறையும் இருக்காது என்று கருதுகிறேன். 28–6–. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையைப் பற்றி பேச வேண்டாம்; பத்திரிகையை மேற்கோள் காட்டியும் பேச வேண்டாம்.

திரு. மா. சின்னராசு: அதை வைத்துப் பேசவில்லை, உதாரணத்திற்காகச் சொல்கிறேன். அதில் இருப்பதை வைத்து நான் பேசவில்லை.

Mr. SPEAKER: What has appeared in Press is no evidence.

திரு. மா. சின்னராசு: அதை நான் ஆதாரமாகவோ, எவிடன்சாகவோ சொல்லவில்லை. சுட்டிக்காட்டுகிறேன். ஒரு சமுதாயத்திலே கேடுகள் தடுக்கப்பட வேண்டுமென்பதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன். அதிலே ஓரிடத்தில்—நமக்கு அதிர்ச்சி ஊட்டக்கூடிய விஷயம் அது–சிவபெருமான் அந்தக் காலத்திலேயே டெஸ்ட் டியூப் பேபியை உற்பத்தி செய்திருக்கிறார் என்று வந்திருக்கிறது. எனக்கு நா கூசுகிறது. டெஸ்ட் டியூப் பேபியை உற்பத்தி செய்தார் என்று சொன்னதோடு மட்டும் அல்லாமல், அதற்கு ஒரு விளக்கப் படத்தை அந்தப் பக்கத்திலே போட்டு இருக்கிறார்கள். அதை ஒரு சாதாரணமான குடும்பத்திலே இருக்கிற தாய் பார்த்தால், அருவருக்கத்தக்க வகையில் இருக்கும். அந்த ஒரு விஷயத்தை மட்டும்தான் சொல்லியிருக்கிறேன். அவ்வளவு பன்ஜண்டாக இருக்கும் படிப்பதற்கு. மற்றவற்றை யெல்லாம் சொல்ல முடியாது. அப்படி ஒரு டாக்டர் பெயரிலே, சந்தான கிருஷ்ணன் என்ற டாக்டர் பெயரிலே போட்டிருக் கிறார்கள். நாம் எந்த நோக்கத்தோடு இதுபோன்ற ஆப்சீன் பிரசுரங்கள் வரக்கூடாது என்று தடுக்கிறோமோ, அதைத் தடுக்கும் வகையில், பக்கம், பக்கமாக எழுதப்பட்டு உள்ளது.

அதை மட்டும்தான் நான் சொல்லி இருக்கிறேன். இன–செக்ஸ்– புத்தகத்திலே எதையெல்லாம் பார்க்கக் கூடாது, குழந்தைகள் படிக்கக்கூடாது என்று நினைக்கிறோமோ, அதையெல்லாம் அந்தப் பத்திரிகையிலே விளம்பரம் செய்திருக்கிறார்கள், அது தாராள மாக விற்பனை ஆகிறது. இப்படி நான் சொல்வதற்குக் காரணம், இதை ஏதோ தெரியாமல் செய்துவிட்டார்கள் என்பது அல்ல. திட்டமிட்டே, இது தமிழகத்திற்குக் கேடு விளைவிக்கிறது அதைத் தடுக்க ஒரு சட்டம் இருக்கிறது என்று தெரிந்துங்கூட, இவ்வளவு மோசமான பிரசுரங்களை, நாட்டிலே நாம் தவழ

விட்டிருக்கிறோம் என்றால், அந்தக் குற்றத்தை நாம் தூண்டு
கிறோம், குற்றத்தைத் தெரிந்தே, விரும்பி செய்கிறோம் என்பது
தான் பொருளே தவிர வேறல்ல. உதாரணத்திற்கு இதை நான்
சொன்னேன். இது போல் சட்டங்கள் மீறப்படுவதும் குற்றங்கள்
துணிந்து செய்யப்படுவதும், இன்று நாட்டிலே மலிந்து கொண்டிருக்
கின்றன. ஆக, அந்த வகையில் நாம் எல்லாம் இருக்கிற
சட்டங்களை வைத்துத் தடுக்க முடியவில்லை என்கிற பொழுது
தான் அதற்காகப் புதிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டு
மென்ற நோக்கத்தோடு செயல்பட வேண்டியிருக்கிறது.

ஆகவே, பத்திரிகைகளை, அதற்குரிய உரிமைகளை,
சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற அளவிலே பேசுகிற
அதே நேரத்தில். பத்திரிகை ஒரு சமுதாயத்தினுடைய கேட்டிற்கு,
குற்றம் என்று நம்மால், ஐ.பி.சி.யில் சொலலப்பட்ட குற்றங்
களை விளைவிக்கிற பிரசுரமாக, ஒரு இருப்பிடமாக அமைந்து
விடுகிறது—அந்த அடிப்படையிலே நான் சொல்கிறேன். ஆக,
நம்மைப் பார்த்து ஏதோ பத்திரிகைக்காரர்கள் குறை கூறிவிட்ட
காரணத்தால் நானும் குறை கூறுகிறேன் என்று தயவுசெய்து
யாரும் எண்ண வேண்டிய அவசியம் இல்லை என்று பத்திரிகை
யாளர்களுக்கு நான் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

இறுதியாக நான் குறிப்பிட விரும்புவது, இன்றைக்கு இருக்கிற
அத்தனைச் சட்டங்களும் போலீஸ் துறை கமிஷனர் மூலம்
நிறைவேற்றப்படுகின்றன, இந்தத் திருத்தச் சட்டத்தில்
அவருக்கு ஜுடிஷியல் பவர் கொடுக்கப்படுகிறது. இது இன்று
தான் கொடுக்கப்படுகிறது என்பது அல்ல. பழைய சட்டங்களில்
மாவட்ட ஆட்சித் தலைவர், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு ஜுடிஷியல்
பவர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று இன்றைக்கு
போலீஸ் கமிஷனருக்கு நீதி அதிகாரத்தைக் கொடுக்கிறோம். நீதி
அதிகாரத்தை அவருக்குக் கொடுப்பதால் அவர் நீதியை மீறி
நடப்பார், காவல்துறை அதிகாரிகள் அதிகாரத்தை துஷ்பிரயோகம்
செய்வார்கள் என்று அச்சப்பட வேண்டியதில்லை.

அப்படி என்றால் நீதிபதியாக இருந்தாலும்,
இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும் அவர்களுக்கு எல்லாம்
கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்ய
இடம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. ஆனால் அவர்கள்
எல்லாம் அப்படி துஷ்பிரயோகம் செய்வதில்லை. ஆக,
மனிதனுக்குக் கொடுக்கிற அதிகாரம் ஜனநாயக முறைப்படி
உரிமைகளைக் காப்பாற்றக் கொடுக்கிற அதிகாரம் என்றுதான்
நாம் கருத வேண்டும். அதிகாரிகளிடம் கொடுக்கப்படுகின்ற
அதிகாரத்தை முழு அளவில் அவர்கள் துஷ்பிரயோகம் செய்
வார்கள் என்று அச்சப்பட்டால் எந்த நிர்வாகமும் நடத்த
முடியாது, குற்றத்தைத் தடுக்க முடியாது. ஆகையால் இந்தச்
சட்டத்தைக் குறைகூற ஒன்றும் இல்லை. இதிலே முறைகேடாக



ஒன்றும் இல்லை. 1952-லே இருந்த ஜனநாயகவாதிகள்
1968-லே இருந்த ஜனநாயகவாதிகள் நடைமுறைப்படுத்திக்
கொண்டிருந்த சட்டங்களைப் போலதான் இந்தச் சட்டமும் நடைமுறைப்படுத்தப்படுமே தவிர, யாரும் துஷ்பிரயோகம் செய்ய
முறைப்படுத்தப்படுமே தவிர, யாரும் துஷ்பிரயோகம் செய்ய
மாட்டார்கள். கடத்தல்காரர்களைத் தண்டிக்க கொண்டுவரப்
பட்டிருக்கிற ஒரு சட்டத்தைக் குறை கூறுவது என்றால் கடத்தல்
காரர்கள் மீது எதிர்க்கட்சியினருக்கு அவ்வளவு பற்றுதல் ஏன்
என்று எனக்குத் தெரியவில்லை. மற்றவர்களை விசாரிக்காமல்
தண்டிக்கலாம், மற்றவர்களை நகரத்தை விட்டுக் கடத்தலாம்.
அப்படி இருக்கிறபோது கடத்தல் குற்றம் செய்தவர்களை மீண்டும்
அந்தக் குற்றத்தைச் செய்யத் துணியாத முறையில் நகரத்தை
விட்டுவெளியேற்றுவது ஜனநாயக விரோதம் இல்லை. அதை நான்
ஏற்றுக் கொள்கிறபோது இதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கடத்தல்காரர்கள்—இன்னும் சொல்லப்போனால்—அபியம்
போன்ற போதைப் பொருள்களைக் கடத்துகிறார்கள். வெடி
மருந்துகளைக் கடத்துகிறார்கள். இவற்றை எல்லாம் பார்க்கும்
போது மக்களுடைய பாதுகாப்புக்குக் கடுமையான நடவடிக்கை
எடுக்க வேண்டும். அதற்குக் கடுமையான சட்டம் அவசியம் என்று
இந்த நேரத்தில் சொல்லி, குற்றத்தைத் தூண்டுவதை, குற்றத்தை
எளிதாக்குவதை இந்தச் சட்டம் கட்டுப்படுத்தும் என்பதை
எடுத்துக்கூறி, அப்படிப்பட்ட குற்றங்களில் ஈடுபடுகின்றவர்
களுக்கு இது ஒரு எச்சரிக்கையாக அமையும் என்று கூறி, எனக்கு
அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி, என்னுடைய கருத்துக்களை
முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தச்
சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால் ஆழமாகப் பரிசீலிக்க
வேண்டிய ஒரு சட்டம் இது என்று நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். ஏனென்றால் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால்
நம்முடைய நாட்டில் ஒரு போலீஸ் ராஜ்யம் அமைக்கப்படுவதற்குக்
கூட அஸ்திவாரமாக அமையும் வாய்ப்புகள் இதில் இருக்கின்றன
என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கான விவரங்
களை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தினுடைய சரத்து என்ன? 'Whenever the
Commissioner has reason to believe that any person in the City of
Madras who has been convicted of an offence. . . .என்று இருக்கிறது.
இதில் an offence ஒருதடவை ஒரு குற்றம் செய்தால்கூட 'அஃபன்ஸ்'
என்று இருக்கிறது. இன்று நடைமுறையில் பார்க்கிறோம். வெளி
நாட்டுக்குச் சென்று வரும்போது டேப் ரிக்கார்டர் அல்லது
ரேடியோ கொண்டுவந்தால்கூட கஸ்டம்ஸில் பிடிக்கப்பட்டு
அவருக்கு ஃபைன் அளிக்கப்படுகிறது. இது இன்று மனப்பூர்வமாக
செய்யக்கூடிய ஒரு குற்றம் அல்ல. சில இடங்களில் இருக்கிற நிலை
காரணமாக டேப் ரிக்கார்டர் அல்லது ரேடியோ கொண்டுவரப்
படுகிறது. எலக்ட்ரானிக் கூட்ஸ் கொண்டு வரக்கூடாது என்று
தெரியாதவர்கள் அதைக் கொண்டுவரும்போது கஸ்டம்ஸில்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஜூலை 18

இருக்கிற சில அதிகாரிகள், விஷயத்தைச் சொன்னால் விட்டுவிடுகிறார்கள். சில அதிகாரிகள் இல்லை, இல்லை. குற்றம் செய்திருக்கிறீர்கள் என்று சொல்லி, அவர்கள்மீது கேஸ் போட்டு தண்டனை வழங்குகிறார்கள். இப்படி தண்டிக்கப்பட்டவரை இன்று ஒரு மாமூல் குற்றவாளி என்று சொல்ல முடியாது. ஆனால் இப்படிப் பட்டவர்களுக்குக் காவல்துறை விரும்பினால் தொந்தரவு கொடுக்க வாய்ப்பு இதில் இருக்கிறது என்பதையும், எப்படி எல்லாம் இந்த நாட்டிலே நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுவதற்கும் இதைச் சொன்னேன்.

(மாலை 4–40)

இன்றைக்கு ஒரு விஷயத்தைத் தெளிவாக சொல்ல வேண்டியிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர்கூட ஒரு சிறந்த கிரிமினல் வழக்கறிஞர். மாஸ்டர் ஆப்லா என்ற சட்டங்களில் பட்டத்தைப் பெற்றிருக்கிற அவர் நன்றாக அறிவார். இன்று கிரிமினல் லா என்ற ஃபிலாசஃபி கூட ஒரு குற்றவாளி குற்றம் செய்து விட்டால் அவனை நிரந்தரக் குற்றவாளியாகத் தள்ளி விடுவது என்பதல்ல. 'Reformatory is the Criminal law philosophy' அது தான் கிரிமினல் லாவினுடைய ஃபிலாசஃபி. அந்த முறையில் இந்த விஷயத்தைப் பார்க்க வேண்டும். ஒரு தடவை ஏதோ சில சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக கஸ்டம்ஸ் ஆக்டிலே தண்டிக்கப் பட்டால் அவனை, போலீஸ் அதிகாரிக்குக் கிடைக்கக் கூடிய ரிப்போர்ட்டை வைத்து Reason to believe that any person என்று சொல்லப் பட்டிருக்கின்றது. இன்று நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். குண்டாஸ் ஆக்டிலே கூட சில போலீஸ் அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்கள் சில பெட்டிஷன்ஸ் கொடுத்து விட்டதன் காரணத்தால் சம்பந்தம் இல்லாத நிரபராதிகளை எல்லாம் பிடித்து கடைசியில் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று விடுதலை வாங்கிக் கொண்டு வருகின்ற நிலைமைகள் எல்லாம் இருந்திருக்கின்றன. போலீஸ் அதிகாரிகள் அவர்களுடைய கையிலே அதிகாரம் இருக்கின்றது என்ற ஒரே காரணத்தாலும், அவர்களுக்கு வேண்டியவர்கள் சொல்கிறார்கள் என்பதாலும் இப்படி நடவடிக்கை எடுப்பதைப் பார்க்கிறோம். அதற்கான எடுத்துக்காட்டுகளை என்னால் சொல்ல முடியும். அப்படி சிலரை குண்டாஸ் ஆக்டிலே போட்டு கஷ்டப்படுத்தி அதற்குப் பிறகு அவர்கள் மனு கொடுத்ததற்குப் பிறகும் கூட இன்று போலீஸ் அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கெல்லாம் ஆமாம் சாமி போடக்கூடிய சில ஜூடிஷியல் ஆஃபீஸர்ஸ் மற்றும் சில ரிட்டையர்ட் ஜூடிஷியல் ஆஃபீஸர்ஸ் இருக்கிறார்கள். அதன் காரணத்தால் அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படுபவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இன்று போட்டிருக்கின்ற சட்டத்தைப் பொறுத்தவரையில் இதனை நிறைவேற்றியதற்குப் பிறகு இப்படிப்பட்ட சில நிலைமைகள் இந்த நாட்டிலே ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



1985 ஜூலை 18] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சில நேரங்களில் இன்ட்ரோடக்ஷன் ஸ்டேஜிலே இங்கே ஒரு விவாதம் நடத்தப்பட்ட நேரத்தில் அதற்குப் பதில் சொல்லக் கூடிய முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று கான்ஸ்டிட்யூஷனிலே கூட ரீசனபிள் ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் என்ற முறையில் போடப்படலாம். என்று உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு இருக்கின்றது. மேலும் ஒரு தீர்ப்பிலே ரீசனபிள் ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் போடுவதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கின்றது என்று வந்திருக்கின்றது என்று சென்னார்கள். நாங்கள் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதே நேரத்தில் உச்ச நீதி மன்றம் இன்னொரு விஷயத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. அதாவது ஒருவருடைய அடிப்படை உரிமைக்கு அதாவது ஃபண்டமென்டல் ரைட்ஸ் பாதிக்கப்படக்கூடிய நேரத்தில் ரீசனபிள் ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் ஏற்படுத்தக்கூடிய நேரத்தில் மற்ற எந்தச் சூழ்நிலைகளிலும் அதைத் தடுப்பதற்கான, தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளும், சட்டங்களும், ஏற்பாடுகளும் இல்லாத ஒரு நேரத்தில்தான் ரீசனபிள் ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் ஏற்படுத்தலாம் என்று தெள்ளத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாறு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்திருக்கிறது.

அரசு ஒரு விஷயத்தைப் பரிசீலிக்க வேண்டும். இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் கூடச் சொன்னார்கள். மிசா இருக்கின்றது. என். எஸ். ஏ. இருக்கின்றது. கிரிமினல் ப்ரசீஜர் 151 செக்ஷன் இருக்கின்றது. இப்படிப்பட்ட சட்டங்களைப் பயன்படுத்த வேண்டுமானால் அவர்களைத் தடுப்பதற்கான வாய்ப்பு இன்றைக்கு அரசுக்கு இருக்கின்றது. இந்தச் சட்டத்தில் செக்ஷன் 6(b) யில் கூட என்ன சொல்லப்படுகின்றது என்றால் 'If any person directed under sub-section (1) or sub-section (4) to or remove himself outside the City of Madras fails or refuses to do so or re-enters the said City while such direction is in force, the Commissioner may, in lieu of or in addition to prosecuting such person under clause (a), cause him to be arrested and removed in police custody to such place outside the said City as he may direct' அதாவது வெளி மாவட்டத்திற்குக் கொண்டு போய் அங்கே அவனைக் காவலில் வைக்கக் கூட இதிலே இடம் இருக்கின்றது. ஆகவே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் இன்றைக்கு மிசா, என். எஸ். ஏ. போன்ற சட்டங்களைப் பயன்படுத்துவது கூட சரியல்ல என்று என்னைப் போன்றவர்கள் சொன்னாலும் கூட நாட்டிலே அந்தச் சட்டங்கள் இன்றைய அளவிலேயும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டு தான் வருகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அந்த முறையில் அந்தச் சட்டங்களைப் பயன்படுத்திக் கூடத் தடுக்கலாம்.

அதே நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். குண்டாஸ் ஆக்ட் இன்று சில நேரங்களில் சில நிரபராதிகளைப் பிடித்து அவர்களைப் போலீஸ் அதிகாரிகள் கஷ்டப்படுத்துகின்ற வகையில் துபிஷ்ரயோகம் செய்கின்ற அளவுக்குப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஒரு தேர்தல் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் ஒருவரைத் தேர்தல் வேலையிலிருந்து விலக்கி வைக்க வேண்டுமென்றால், அப்படி வேறு ஒருவர் ஒரு பெட்டிஷன் கொடுத்தால் கூட அவனை அந்த இடத்திலிருந்து வேறு மாவட்டத்திற்கு உதாரணமாக சென்னை மாநகரிலிருந்து கன்னியாகுமரி போன்ற இடத்திற்குக் கூட அவனைக் கடத்தி விடுவதற்கு போலீஸ் அதிகாரிக்கு வாய்ப்பு கொடுக்கக் கூடியசட்டமாக இது அமைகின்ற அபாயமும் ஆபத்தும் இருக்கின்றது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்தக் காலங்களிலே இந்தச் சட்டத்தை நிறைவேற்றாமலேயே மாற்று முறைகளிலே இந்த விஷயத்தை நடைமுறைப் படுத்துவதற்கான வாய்ப்பு இந்த அரசுக்கு போதுமான அளவுக்கு உண்டு; அதற்குத் தேவையான சட்டங்களும் உண்டு.

இன்னொரு இடத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

'No order passed by the Commissioner under Sub-Section (1) or section (1) (a) or by the State Government under Sub-Section hall be called in question in any court except on one or more of the following grounds......' என்று இருக்கிறது.

அதாவது அதிலே இருந்து எந்த எவிடன்ஸ்ஸூம் கிடைக்கப் படவில்லை என்ற அந்தக் காரணத்தைச் சொல்லிப் போடலாம் என்று சொல்லப்படுகிறது. இன்று காவல் துறையைச் சார்ந்தவர்கள் நினைத்தால் எவ்வளவு எவிடன்ஸ் வேண்டுமானாலும் உண்டாக்கிக் கொள்வார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்கே நன்கு தெரியும். ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் இன்று காவல் துறையைச் சார்ந்தவர்கள் எப்படி எல்லாம் எவிடன்ஸ்ஸுகளைக் கொண்டு வருகிறார்கள் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே இந்த எவிடன்ஸ் என்பது ஒரு பிரச்னை அல்ல. காவல் துறையைச் சார்ந்தவர்கள் வேண்டுமானால் இதையெல்லாம் துஷ்பிரயோகப்படுத்தி, அவர்களுக்கு விருப்பமற்றவர்களை, அல்லது சில இடங்களிலே இருக்கிற அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களை அல்லது சில ஆட்களுடைய இன்பிளுயன்ஸ்ஸிலே, அந்த இடத்திலே இருந்து விலக்கி விடுவதற்கு, மாற்றி விடுவதற்கு, இந்தச் சட்டம் ஒரு ஆயுதமாக, ஒரு கருவியாக, காவல் துறையின் கையிலே, இந்த அரசினுடைய கையிலே அமையும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





ஆகவே இப்படிப்பட்ட ஒரு சட்டத்தில் ஒரு ரீசனபிள் ரெஸ்டிரிக்ஷன் என்பது உச்ச நீதிமன்றத்தினுடைய கருத்துப்படி மற்றைய சட்டங்களிலேயும், மற்றைய ஏற்பாடுகளிலேயும் காரணங்கள் இல்லாத நிலையில்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதிலே, ஒருவருடைய அடிப்படை ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கக் கூடிய முறையிலே இருக்க வேண்டும். ஆனால் வெள்ளைக்காரன் காலத்திலே ஏற்பட்ட இந்தச் சட்டத்திற்கு, வெள்ளைக்காரன் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட அந்தப் போலீஸ்காரர்களின் நிலையிலேயே வைத்து, இப்போது இந்த ஜனநாயக ஆட்சிக் காலத்தில், ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவது என்பது, தற்போதைய காலகட்டத்திற்குச் சரியானது அல்ல; நேர்மையானதும் அல்ல என்றுசுட்டிக் காட்டி மேற்கூறப்பட்ட காரணங்களினாலே இந்தத் திருத்தந்தை வாபஸ் வாங்க வேண்டும். இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சிக்கக் கூடாது என்று பணிவன்புடன் கேட்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மென்மை நிறைந்த சட்ட அமைச்சர், வன்தன்மை நிறைந்த ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் உண்மையிலேயே இந்தத் திருத்தம் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைப் பற்றி சுருக்கமாகக் குறிப்பிட்டிருக் கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சின்னராஜ் அவர்கள், கடத்தல் போன்ற குற்றங்களை தடுக்கின்ற இந்தச் சட்டத்தை ஏன் ஒத்துக் கொள்ளாமல் எதிர்க்கிறீர்கள் என்கிற மாதிரிதான் கேட்டார்கள். ஒவ்வொரு சமுதாயத் திலேயும் குற்றங்கள் தோன்றுவது என்பது இயல்பு. ஆனால் தோன்றுகிற குற்றங்களைத் தவிர்ப்பதற்கு உரியவழி முறைகளும் காலத்தால் அவ்வப்போது மாற்றப்படுகின்றன என்பதை நான் அவர்களுடைய சிந்தனைக்குச் சொல்ல விரும்புகிறேன். எப்படி வேண்டுமானாலும் குற்றத்தைத் தடுக்கலாம்என்றால், அதைக் காட்டிலும் அந்தக் குற்றவாளிகளைச் சுட்டுக் கொல்கிற ஒரு சட்டம் கொண்டு வந்தால் கூட குற்றவாளிகள் ஒழிந்து விடு வார்கள். அதை அருமைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் ஏற்றுக் கொள்ள முடியுமா?

எப்படி வேண்டுமானாலும் தண்டிக்கப்படுவது என்பது நாகரிக உலகத்தால் நிராகரிக்கப்பட்ட ஒன்று என்பதால் தான் இப்படித்தான் தண்டிக்கப்பட வேண்டும் என்று தண்டனை முறைகளே மாறி வருகிறபோது அதற்கு ஒத்தாற் போல் நம்முடைய சிந்தனையையும் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நான் அவரிடத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

திரு. மா. சின்னராசு ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூக்கு தண்டனை என்பது வள்ளுவர் காலத்தில் இருந்தே ஒத்துக் கொள்ளப்பட்டு வந்திருக்கிற ஒரு தண்டனையாக இருக்கிறது. சுடுவதற்கும், தூக்கிலே போடு வதற்கும் நிறைய வித்தியாசம் ஒன்றும் கிடையாது. அந்தத் தண்டனை ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட தண்டனை. குற்றங்கள் களையப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய சட்டம் கொண்டு வரப்படுகிறது.

(மாலை 4–50)

திரு. கு. சுப்பராயன் : ஒரு நல்ல கருத்தை இப்போது எடுத்துச் சொல்கிற ஒரு வாய்ப்பினைத் தந்தமைக்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். உலகம் முழுவதும் தூக்கு தண்டனை ரத்து செய்யப் பட வேண்டும் என்ற போராட்டத்தை, நீதிபதிகளே தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் அவர் களுடைய நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே யார் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதல்ல. தண்டனையின் வடிவம் என்ன என்ற அடிப்படையிலே தான் இங்கே நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. அதுவும் யாருக்கு இவர்கள் அதிகாரத்தை வழங்குகிறார்கள் என்பதைப் பார்க்கிற போது உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. பாரதி பாஞ்சாலி சபதத்தில் சொல்வான். பாஞ்சாலியை சூதாட்டத்தில் இழந்து விட்டதைப் பற்றிக் கூட பாரதி கவலைப்படவில்லை. ஆனால் துரியோதனன் கூட்டத்திடமா நீ இழந்தாய் என்று வேதனையோடு, ஐயோ, இவருக்கு அடிமை செய்தாயே, என்று துடிப்பான்.

அதே போல நீங்கள் யாருக்கு இந்த அதிகாரத்தைத் தந்திருக் கிறீர்கள்? காலம் காலமாக நாட்டுமக்களை ஒடுக்கியே தங்கள் கைகளில் வைத்திருக்கிற தடிகளில் இன்னமும் ரத்தவாடை வீசுகிற போலீஸ்காரர்களிடம் அல்லவா அதிகாரத்தைத் தந்திருக் கிறீர்கள்; போலீஸ்காரர்களின் நேர்மையைப் பற்றி சந்தேகிப் பதற்காக நான் வருத்தப்படுகிறேன். சட்டமன்ற மரபுகளின் அடிப்படையிலே இந்த வளையத்திற்குள் நின்று வேண்டுமானால் நான் மரபுபடி பேசிக் கொண்டிருக்க முடியும். ஆனால் காலையில் மட்டுமல்ல, கடந்த பல தினங்களாக போலீஸ்காரர் கள் பற்றி பேசப்பட வில்லையா? நேர்மைக்கும், போலீஸ் துறைக்கும் சம்பந்தமில்லை என்ற அளவிற்கு மக்கள் சந்தேகிக்கிற நிலைமையெல்லாம் வந்திருக்கிற இந்த நேரத்திலே இவ்வளவு கடுமையான சட்டங்களை நீங்கள் அவர்களை நம்பி கொடுக்கிறீர்களே? இந்த அரசாங்கத்தின் நம்பிக்கைக்கு பாத்திர மாக அவர்கள் நடப்பார்களா? நடப்பார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா? உங்கள் நம்பிக்கை நிச்சயமாக உண்மையாக இருக்காது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் 1952– லிருந்த ஜனநாயக ஆட்சியும், 1967-லிருந்த ஜனநாயக் ஆட்சியும் இந்தச் சட்டத்தைத் தான் வைத்திருந்தது என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்திற்கு மூலக்கருவை வழங்கி யவன் வெள்ளையன். 1958–ம் ஆண்டில் அந்த ஜனநாயக வாதி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தான். ஆகவே அந்த ஜன நாயகவாதி இந்த நாட்டிலே இருந்து விட்டுப் போகட்டும் என்று இந்த மண்ணிலே யாரும் விட்டுவிட்டோமா? அத்தகைய தண்டனைச் சட்டங்களாலே தன்னுடைய சுரண்டல் ஆட்சியை, ஒரு வலிமையான ஆட்சியை உருவாக்கிக் கொண்டு இருந்தார் களே, அந்த ஆட்சி வீழ்த்தப்படவில்லையா? என்றைக்குமே ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எண்ணிக்கையிலே பெரும்பான்மை இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் எண்ணத்திலே உங்களுக்கு வலிமையில்லை என்பதாலேதான், பலவீனர்கள் தான் இத்தகைய ஆயுதங்களைத் தாங்குவார்கள் என்ற அடிப் படையில், உங்கள் நெஞ்சிலே பலவீனமும், ஆத்திரமும், அதே போல பழி வாங்குகிற உணர்ச்சியும் இருக்கிற காரணத்தாலே தான், இத்தகைய தண்டனைச் சட்டங்களிலே நீங்கள் குடி போகிறீர்கள். இது விநாச கால விபரீத புத்தி என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன். இத்தகைய உணர்வுகளை நீங்கள்கைவிட வேண்டும். இத்தகைய சட்டங்கள் இல்லாமலேயே தண்டிக்க முடியும்

மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் புலமை பெற்ற வழக்கறிஞர். அவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வில்லையா? ஐ. பி. சி. யில் இதற்கு இடமில்லையா? இருக்கிற சட்டங்களாலே குற்றங்களைத் தடுப்பதற்குரிய வாய்ப்பு இருக்கிறபோது நம்முடைய இயலாமையை மூடி மறைத்துக் கொள்வதற்கு பதிதாவாக இத்தகைய தண்டனைச் சட்டங்களை போட்டுக் கொள்ளலாமா? நாகரிக உலகிலே கேலியாக, கிண்டலாக, சிரிப்புக்குள்ளாகிற நிலை வராதா என்பதைத் தயவு செய்து மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் கமிஷனர் யார்? இந்த போலீஸ் கமிஷனர் என்ன புத்தரா? * மகாத்மாவா? சாதாரண மனிதர் தான் இந்தப் போலீஸ் கமிஷனர். இந்தப் போலீஸ் கமிஷனர் கையிலே, ஒரு தனிப்பட்ட நபர் கையிலே, இந்த அதிகாரத்தை நீங்கள் கொடுத்தால், நீங்கள் துஷ்பிரயோகம் செய்கிறீர்கள், மாநில அரசு துஷ்பிரயோகம் செய்கிறது என்று நான் குற்றம் சாட்டவில்லை. இந்த மாநில அரசு என்ன செய்யும் தெரியுமா? அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்யும் போது, ஆணி வேரை அறுக்கும் போது, எதிர்க்கட்சிகள் அதைச் சட்டமன்றத்திலே அல்லது மக்கள் மன்றத்திலே எடுத்துச் சொல்கிற போது நீங்கள் தவிர்க்க முடியாத நிலையில் நியாயப்படுத்த வேண்டிய நிலை வருமல்லவா? அப்போது இந்தப் பழியும், பாவமும் ஆளும் கட்சியைச் சேராதா? ஆகவே பழி பாவத்தைச் சேர்த்துக் கொள்கிற ஒரு சட்டத்தை நீங்கள் கைவிட வேண்டும். இந்தத் திருத்தத்தைக் கொண்டு வரக் கூடாது என்று குறிப்பாக வலியுறுத்த விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

அதே போல இந்தச் சட்ட சரத்து என்பது அரசியல் சாசனம் வழங்கியிருக்கிற அடிப்படை உரிமையை பறிப்பதாகும். குற்ற வாளியா, இல்லையா என்பதைப் பற்றி கவலையில்லை. எந்த ஒரு மனிதனுக்கும் இந்தியாவிலே எங்கும் போய் வாழ முடியும் என்ற நிலை இருக்கிற போது, அவர்கள் அநேகமாக இந்தப் பேரவையில் இருக்கிற அறிஞர்களைக் காட்டிலும் பேரறிஞர்கள்தான். அவர்கள்தான் இந்த அரசியல் சாசனத்தை வகுத்திருக் கிறார்கள் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்றே கருதுகிறேன். அவர்களாலே வகுக்கப்பட்டிருக்கிற இந்த விஷயங்களில், அந்த அடிப்படை உண்மையை நாம் பறிக்கிற மாதிரியான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து பேரவையின் நேரத்தை விரயமாக்கினால், யாராவது ஒருவர் கோர்ட்டிலே வழக்கு தாக்கல் செய்து சட்டம் செல்லாது என்ற தீர்ப்பு அதன் மேல் தருவார்களானால் இந்தப் பேரவையின் மதிப்பு மிக்க நேரம் வீணாகுமல்லவா ? அது பற்றி சிந்திக்க வேண்டாமா என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

போலீசைப் பொறுத்தவரையில் அரசியல் சட்டத்தை மையமான உள்ளடக்கமே குற்றவாளி தப்பித்துக் கொண்டாலும், நிரபராதிகள் தண்டிக்கப்படக் கூடாது என்பது தான். 99 குற்றவாளிகள் தப்பித்துப் போய் விட்டாலும், ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக் கூடாது என்பதுதானே. ஆனால் என்னைக் காட்டிலும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சிறப்பான வழக்கறிஞர் என்ற முறையிலேயும், மனிதர்களைக் கடிப்பதிலே தேர்ச்சி பெற்ற போலீசோடு பழகியவர்கள் என்ற முறையிலேயும், அவர்கள் எவ்வளவு உண்மைக்கு முற்றிலும் புறம் பான வழக்குகளை எல்லாம் ஜோடனை செய்வார்கள், அவற்றைப் பாதுகாப்பார்கள், சட்ட நியாயங்களைப் பாது காப்பதைக் காட்டிலும், சட்ட விரோதங்களைக் காப்பதில் எவ்வளவு தேர்ச்சி பெற்றவர்கள் என்பதை அவர்கள் மிக நன்றாக அறிவார்கள். நீங்கள் அறிந்தே, தெரிந்தே, கொலை காரர்கள் என்டதைப் புரிந்தே, கொலைக் கத்தியைத் தீட்டிக் கொடுக்கிறீர்களே இது நியாயம் தானா என்பதைக் கேட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * என்ற வார்த்தை சாதாரண மனிதன் என்று மாற்றப்படுகிறது. அது உள்நோக்கம் கற்பிக்கிற மாதிரி இருக்கிறது.

திரு. கு. சுப்பராயன் : துணைத் தலைவர் அவர்களே, சாதாரண மனிதன் என்று பொருளில் அந்தச் சொல் வழக்கிலே இருக்கின்ற ஒன்று. நாம் எப்படிப் பார்க்கிறோம் என்பதைப் பற்றி அல்ல. பேரவை உறுப்பினர்கள் சாதாரணமான அர்த்தத்திலே இதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். இதிலே எந்தவிதமான உள்நேர்க்கமும் இல்லை,

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படி உள் நோக்கம் இல்லை என்றால் * சாதாரணமான மனிதன் என்று சொல்வதில் ஒன்றும் தப்பில்லை. அந்த வார்த்தை வேண்டாம்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 51—ஏ, பிரிட்டிஷ் காரன் காலத்திலே இருந்தது என்று சொன்னார்கள். இந்த வெள் கடத்தும் சட்டம் 1952-ல் கொண்டு வரப்பட்டது என்றுதான் சொன்னேன். பிரிட்டிஷ்காரன் காலத்திலே இருந்த சட்டம் அல்ல.

திரு. கு. சுப்பராயன் : துணைத் தலைவர் அவர்களே, 51-ஏ—வைப்பற்றி நான் சொல்லவில்லை. அவற்றுக்கு ஆதாரத்தை வழங்கிய மூலச் சட்டத்தை 1888—ல் இயற்றியவன் பிரிட்டிஷ்காரன் என்றுதான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, பிரிட்டிஷ்காரன் காலத்திலே போடப்பட்ட சட்டம், இடையிலே சுதந்திரத்திற்காக போராடியவர்களை வெளியேற்று வதற்காகப் போடப்பட்ட சட்டம். இது கடத்தல்காரர்களை, சமுதாயத்திலே குற்றங்களை, பொருளாதாரக் குற்றங்களை செய்கின்ற கடத்தல்காரர்களை வெளியேற்றுகிற சட்டம். அத்தோடு இதை இணைத்துப் பேசுவது சரியாக இருக்காது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இந்தச் சட்டமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களைக் காட்டிலும் சட்டம் இயற்றுபவர்கள் அறிவாளிகள் என்று நான் கருதுகிறேன். இவர்கள் அறிவாளிகள் இல்லை என்ற கருத்துப்படி பேசியிருக்கிறார்கள். இது எந்த வகையில் நியாயம். அவர்கள் முந்தி பிறந்தார்கள், முந்தி சட்டம் இயற்றினார்கள். நாம் இப்போது தான் பிறந்து இருக்கிறோம். ஆகவே ஆகவே இப்போது தான் சட்டம் இயற்ற முடியும். ஆகவே அந்த வரியை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் அறிவாளி கள் என்று தான் சொன்னார்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, இதைக் கூட ஒரு பிரச்சனையாக எடுத்துப் பேசுவது நல்லது என்று கருதுகிறேன். முந்தைய தலைமுறையை விட அடுத்த தலைமுறை புத்திசாலி என்று நாம் ஏற்றுக் கொண்டு, அதன்படி நடந்தால் தான் முன்னேற முடியும்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க மாற்றப் பெற்றது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் காலம் காலமாக போற்றி வருகிற ஒரு விஷயமாக இருப்பதை அவர்கள் தவறாக புரிந்து கொண்டு இருப்பதால் நான்மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஏன் என்றால், இது ரெக்கார்ட் ஆகிற விஷயம். ஒவ்வொரு நிமிட மும் சதா மாறி வாழ்ந்து வருகிற இந்த உலகத்தில் கடந்த காலத்தைக் காட்டிலும், நிகழ்காலத்தை, எதிர் காலத்தைத் தூண்டுகிற ஒவ்வொன்றுமே, சிறப்பானவை, புத்திசாலித்தன மானவை, கூர்மையானவை என்பதை நான் அங்கீகரிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல்-தமிழ்நாடு மாவட்டக் காவல் திருத்தச் சட்டத்தைப் பற்றி ஆய்வு செய்கின்ற போது, சில பொதுவான கருத்துக்களை நான் இந்து முன்னணியின் சார்பாக சொல்வதற்குக் கடமைப் பட்டு இருக்கிறேன். இந்து முன்னணியைச் சேர்ந்த எனக்கு இந்த மசோதாவிலே என்ன வேலை என்று கேட்கக்கூடும். ஆனால் இன்றைக்கு இந்த மண்ணிலே இந்து முன்னணி இயக்கம் பிறவி எடுத்து, உலா வருவதற்குக் காரணமே நம்முடைய காவல் துறைதான் என்பதால், அவர்களைப் பற்றி விமர்சனம் செய் வதற்குப் பொருந்தமான உரிமை எனக்கு உண்டு என்று நான் கருதுகிறேன். பொதுவாக சட்டம், ஒழுங்கு சிறப்பாகவும், சீராகவும், பாதுகாப்பாகவும், பராமரிப்பதற்கும், குற்றம் புரிவோரின் கொடுமைகளுக்குச் சாதாரணக் குடிமக்கள் ஆளாகி, அதன் காரணமாக ஏற்படுகின்ற அல்லல்களைத் தவிர்க்கவும் திரும்பத் திரும்ப குற்றம் புரிவோரை பாதுகாப்பு உணர்வோடு கண்காணித்துக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் காவல்துறையின் கைகள் கட்டப்படாத வகையில் அதிகாரம் வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றுதான். ஆனால் இந்தக் கடமை என்ற பெயராலே அதிகாரம் என்ற பெயராலே காவல் துறைக்கு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமு மாக அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு வந்தால், அதன் முடிவு கசப்பான சரித்திரப் படைப்பாக மாறிவிடக் கூடாது என்பதை நான் சார்ந்திருக்கிற இந்து முன்னணியின் சார்பாகச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாலை 5-00)

ஜனநாயக மாண்பிலிருந்து இந்த அரசோ அல்லது வேறு அரசுகளோ காவல்துறைக்கு அதிகாரம் அதிகமாகக் கொடுப்பதன் மூலமாக தங்களை சிறிது சிறிதாக விலக்கிக்கொண்டு ஒரு போலீஸ் ராஜ்ஜியத்தை உருவாக்குவதற்கு வழி வகுத்துவிடுமோ என்ற அச்சம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் காவல் துறைக்குக் கொடுப்பதை தவிர்த்து இருக்கலாமே என்று கருதக்கூடிய ஒரு உரிமையை ஒரு அதிகாரத்தை இந்த சட்டத் திருத்த முன்வடிவின் மூலமாக நாம் கொடுக்கிறோம். ஆகவே இந்த அரசு தவிர்க்கக்கூடிய பல அதிகாரங்களை காவல்துறைக்குக் கொடுத்து வருகிறது என்ற குற்றச்சாட்டை நான் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன்.



ரீசன்ஸ் டு பிலீவ் என்ற வார்த்தைகளின் கோர்வை ஒரு அபாயகரமான சர வெடியாகும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காவல் துறையின் கடந்தகால செயல்பாடுகள் இந்த வார்த்தைகளின் கோர்வை அதிகார துஷ்பிரயோகத் திற்கும் அரசின் நல்ல பெயரை களங்கப்படுத்துவதற்கும் பயன் பட்டு வந்திருக்கிறது என்பதற்குக் கட்டியம் கூறுவதாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ரீசன்ஸ் டு பிலீவ் என்ற வார்த்தைகளின் கோர்வை இன்றைக்குக் காவல் துறையைச் சேர்ந்தவர்களால் எந்த அளவுக் குப் பயன்படுத்தப்படுகிறது? அவர்கள் நடுநிலையோடு நின்று நடுநிலை நோக்கோடு அவர்கள் முடிவு எடுக்கிறார்களா என்று சொன்னால் இல்லை. அப்படிப்பட்ட முடிவை காவல்துறை அவ்வப்போது எடுப்பதற்குத் தவறி விடுகிறது. அந்த நிலையி லிருந்து அது மீறி விடுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தான் இன்றைக்கு உங்கள் முன்னால் நான் கூட ஒரு சட்டமன்ற உறுப்பினராக நின்று கொண்டு இருக்கிறேன் என்று கருதுகிறேன்.

கிட்டத்தட்ட 8 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டு காலம் வழக்கறிஞராக பணி ஆற்றிய என்னை என்னுடைய கறுப்புக் கோட்டை தூக்கிப் போட்டுவிட்டு காவியைக் கழுத்தில் போட்டுக் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் உலா வருவதற்கு என்னைக் கொண்டு சேர்த்த காவல் துறைக்கு, அரசாங்கம் காவல்துறைக்கு அதிகமாக கொடுத்த அதிகாரத்தைப் பயன் படுத்தி அந்தக் காவல் துறை தன் கையில் குண்டாந் தடியால் என்னுடைய உடல்களை எல்லாம் பதம் பார்த்த காரணத்தால் தான் நாம் எந்தச் சட்டத்தை நீதிமன்றத்தில் பேசினோமோ அந்தச் சட்டத்தை முறை அற்ற வகையில் ஏற்றுக்கொள்ளாத வகையில் எங்களுக்கு எதிராகப் பயன்படுத்தி அங்கே ஒரு பசுக் குட்டிப் போட்டால்கூட அதற்குக் காரணம் பாலச்சந்தராக இருப்பானோ அதற்கு காரணம் இந்துவாக இருப்பார்களோ அதற்கு காரணம் இந்து முன்னணியாக இருக்குமோ என்று கருதி எங்கள் மீது ரீசன்ஸ் டு பிலீவ் என்ற வார்த்தையின் கோர்வையைப் பயன்படுத்தி வழக்குகள் போட்ட காரணத்தால், ஏன் இன்னும் சொல்லப்போனால் குற்ற விசாரணை முறைச் சட்டம் 107 பிரிவின் கீழ் எங்கள் மீது போடப்பட்டு இருக்கிற வழக்குகள் ஏராளம். கொலை முயற்சி வழக்குகள் ஏராளம் இன்றைக்குச் சட்டமன்றம் முடிந்து நாங்கள் வெளியே வந்தால் நாங்கள்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வழக்குகள் பற்றிப் பேச வேண்டாம்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண்டைக்காடு கலவரத்தின் போது இந்துக்கள் பாதிக்கப்படுவதை உணர்ந்து பாதிப்புக்குக் காரணமாக இருந்த கிருத்துவர்கள் மீது இந்த அரசு

நடவடிக்கை எடுத்தது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா? அப்படி இருக்கும் போது இந்த அரசைப் பொறுத்த வரையில் இந்துவாக இருந்தாலும், கிருத்துவர்களாக இருந்தாலும், முஸ்லீம்களாக இருந்தாலும் யார் மீதும் பாகுபாடு இல்லாமல் யார் தவறு செய்கிறார்களோ அவர்கள் மீது வழக்குத் தொடுக்கின்ற பாங்கில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவரின் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய இயக்கத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் இந்த அரசினுடைய செயல்பாட்டுக்கு உடன்பாடு கருத்து கொண்டவர்கள் என்று வெளியில் அறிவித்தவர்கள் நாங்கள். நடந்து முடிந்த மண்டைக்காடு சம்பவத்திற்குப் பின்னால் ஏன் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூட தெரியும் கன்னியாகுமரியில் மூன்று பேரைக் கடலில் தூக்கிப்போட்டு கொன்றுவிட்டார்கள் என்று சொல்லி 3 பேரின் மனைவிமார்கள் தங்களுடைய மாங்கல்யங்களைக் கழற்றி விட்டு கண்ணீர் சிந்திக்கொண்டு குடிசைகளில் இன்றைக்கு கடந்த மாதம் நடந்த சம்பவம் காரணமாக இருந்து கொண்டிருக்கிறார்கள், அதற்கு நடவடிக்கை இல்லை. இந்து என்ற காரணத்தால் தூக்கனாம்பட்டு பகுதியில் ஒரு தாயின் தாலியை அறுத்து இன்றைக்கு இந்தக் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. ஒரு இந்து என்ற காரணத்தால் என்னுடைய அலுவலகத்தில் 2 குண்டுகளை வீசி கிட்டத்தட்ட 1 லட்ச ரூபாய்க்கு அங்கே சேதாரம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு இதுவரை நியாயமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனாலும் இந்த அரசு காவல்துறையின் நடவடிக்கைக்குப் பொறுப்பு இல்லை. அரசுக்குத் தெரியாது அப்படி நடந்து கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கையில் நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே 'ரீசன்ஸ் டு பிலீவ்' என்ற வார்த்தையை காவல் துறை தவறாக பயன்படுத்துகின்ற காரணத்தால் அதைத் தவறாக பயன்படுத்தி எப்போதும் சிந்தனைக்கு ஆழ்படுத்திக்கொண்டு எப்போதும் தவறான முடிவை எடுத்துக் கொண்டு காவல்துறை செயல்பட வேண்டும் என்ற சந்தர்ப்பம் கலவரத்தின்போது வருகிறதோ அந்த நேரத்தில் கூட சிந்திக்கவோ, சிந்தனைக்குத் தன்னை ஆட்படுத்தாது எதை எதை செய்தால் இப்படிப்பட்ட விளைவுகள் வருமோ என்பதைக் கூட நோக்கிப் பார்க்காது அவர்கள் சட்டத்தைப் பயன்படுத்துவதன் மூலமாக இன்றைக்குக் கன்னியாகுமரி மாவட்டத்திலே மாற்ற முடியாத கறை எங்களுடைய மனதிலே மட்டும் அல்ல. மற்ற மதத்தினர் மனங்களிலேயும் எற்பட்டு இருக்கிறது,





'ரீசன்ஸ் டு பிலீவ்' என்று சொல்வதிலே இன்னொன்று நான் சொல்வேன், 7 (1) (ஏ) கிரிமினல் லா அமென்ட்மென்ட் ஆக்ட்டின்படி காவல் துறையைச் சேர்ந்தவர்கள்; ஆயிரம், ஆயிரம் இளைஞர்கள் மீது வழக்குகளைப் போட்டார்கள். அந்த வழக்கிலே என்ன சொன்னார்கள் என்றால், இந்துக்கள் மீது வழக்குகள் போடுவதாக இருந்தால், அங்கே இருந்த இந்துக்கள் சர்ச்சின் அருகிலே சென்று அந்த சர்ச்சை உடைப்பதற்குத் திட்டம் தீட்டி இருந்தார்கள் என்று கருதிய காரணத்தினால் அவர்கள் மீது வழக்கு போட்டோம் என்றார்கள்.

கிறிஸ்தவர்கள் மீது வழக்குகள் போடுகிற போது, அவர்கள் இந்துக்கள் ஆலயங்களின் அருகிலேசென்று அதை உடைப்பதற்குத் திட்டங்கள் தீட்டியதாக நாங்கள் கருதுகிற காரணத்தினால் அந்த வழக்கு என்றார்கள், தயவு கூர்ந்து படித்துப் பார்க்க வேண்டும்.

அனைத்து எஃப்.ஐ.ஆர். இலும் அப்படித்தான் இருக்கிறது. இந்துக்களுக்கு எதிராகக் கொண்டு வருகிற அந்த எஃப்.ஐ.ஆர். இந்து சர்ச்சை உடைக்க முயற்சித்தான் என்று உள்ள அந்த எஃப்.ஐ.ஆர்.-ஐ, கிறிஸ்துவ சகோதரர் படித்தால் அவர்கள் கோபம் கொள்ள நியாயம் உண்டு. இப்படிக் கலவரத்தைத் தூண்டுகிற அளவுக்கு அங்கே கன்னியாகுமரி மாவட்டத்திலே நடந்து விட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பில்-லிலே உள்ளதைப்பற்றி மட்டும் பேசி முடியுங்கள்.

திரு. வை. பாலச்சந்திரன்: இதற்கு எல்லாம் காரணம் அந்த 'ரீசன்ஸ் டு பிலீவ்' என்ற வார்த்தையைப் போடுவதுதான். அந்த வார்த்தையைப் போடுவதினாலே, அது சரவெடியாக இருக்கிறது, அது அணு வெடியாக மாறிவிடக் கூடாது. நாட்டைத் தகர்த்துவிடக் கூடாது.

அது நாட்டில் எங்களைப் போன்ற இயக்கங்கள் அழிவதற்கு மீண்டும், மீண்டும் வழி வகுக்கிறது. அது நாட்டுக்குச் சில நேரத்தில் சோதனை ஏற்படுத்தினாலும், ஏற்படுத்திவிடக்கூடும் என்பதை மனதிலே அரசாங்கம் கொள்ள வேண்டும். கடந்த கால சம்பவங்கள் சரித்திரங்கள் அரசாங்கம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவை, அதுமட்டுமல்ல, காவல் துறைக்கு அதிகமான அதிகாரத்தை கொடுக்கிற கொள்கையை அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு ஆய்வில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் தற்போது இந்தச் சட்டத்தினுடைய தேவை என்ன என்ற வினாவையும்,

குற்றம் புரிகின்றவர்களை, அதுவும் குறிப்பாக, கள்ளக் கடத்தலிலே ஈடுபட்டு தண்டிக்கப்பட்டவர்கள் மீண்டும் தவறு செய்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது, அவர்களை வெளியேற்றுவதற்கு தற்போது ஒரு சட்டம் தேவையா என்று பேசினார்கள். இதைத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும், ஏதோ தமிழகத்தில் மட்டுமே தற்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிற சட்டம் என்ற உணர்வு தவறான உணர்வு என்பதைச் சுட்டிக் காட்டுவது எனது கடமை என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும், ஏற்கனவே மராட்டிய மாநிலத்திலும். குஜராத் மாநிலத்திலும், ஆந்திரப் பிரதேசத்திலும், அவை போல் கர்நாடக மாநிலத்திலும், டெல்லியிலும் நடைமுறையில் இருந்துவருகிற சட்டம்

இந்தச் சட்டம் வருவதற்கு மூல காரணம் என்ன என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுக்கு சொல்வது தேவை என்ற முறையில் இதைச் சொல்கிறேன். மைய அரசு, மாநில அரசுக்கு ஒரு தாக்கீதை அனுப்பி இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த சட்ட முன்வடிவை கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது, இதிலே தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். எதற்காக இந்தச் சட்டம் வேண்டும் என்பதை மைய அரசு தெளிவுபடுத்தி இருக்கிறது.

"The damage to the Indian economy by way of smugging activities is well known to the Government. Attracted by easy money which the game of smuggling yields, more and more people are known to have taken to smuggling, thereby rendaring the task of anti-smuggling of forces in the country more difficult. Although the Government of India have been taking various preventive steps in the matter of checking the menace of smuggling, it has not been possible to eradicate this evil altogether. There are instances where smugglers convicted by the Court for offences of smuggling have taken to smuggling again and again. In other words, after a smuggler has been convicted and has served his terms of imprisonment. there is no other measure with the Government to prevent him from indulging in smuggling activities. The powers made available to the Bombay Police under the Bombay Police Amendment Act, 1970, it is felt will serve as a very powerful measure which can go a long way towards curbing the activities of smugglers by alienating some of the members of the gang from the rest for a sufficiently long period of not more than 2 years." பம்பாயிலே இருக்கிற சட்டத்தை மைய அரசு சுட்டிக் காட்டுகிறது. The return of an





(மாலை 5-10)

externee to the area from which he had been externed during the period when the externment order is in force, is an offence punishable under Section 142 of the Bombay Police, 1950, with imprisonment upto a period of 2 years. The measure is particularly helpful in curbing the activities of smugglers groups operating near the coast lines and port cities provided the Police Forces of other States are also equipped with the same powers என்று தெளிவாகச் சொல்லி; இதன் அவசியத்தை வலியுறுத்துகின்ற அடிப்படையில் தான் இந்தச் சட்டத்தை தமிழக அரசும் தற்போது கொண்டு வருகிறது என்பதை நான் அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உறுப்பினர்கள் பேசும்போது, மற்றும் ஒன்றைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் ஹேமச்சந்திரன் அவர்கள், சுப்பராயன் அவர்கள் அடிப்படை உரிமைகளுக்குப் புறம்பான முறையில் இந்தச் சட்டம் அமைகிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்திய நிலையில் இதற்கு நான் விளக்கத்தைத் தந்திருக்கிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரைக்கும் நான் ஏற்கனவே சொன்னதைப்போல Externment provision is already being provided in several Acts in several States என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்த அதிகாரத்தைப் பொறுத்தவரைக்கும் Offences against coins and currencies என்ற முறையிலே பல மாநிலங்களில் இருக்கின்றன.

Offences against Human Body, Offences against property என்றிருக்கிறது, அதைப்போலவே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் Prohibition Act, Suppression of Immoral Traffic Act, The Gambling Act, Prevention of Begging Act, Offences under Opium Act என்று சொல்லக்கூடிய சட்டத்திலே மீண்டும் தவறுகளை செய்கிறபோது, Externments is already being provided for என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த எக்ஸ்டிரன்மென்ட் புரவிஷன், ஜீவாதார உரிமைகளை, அடிப்படை உரிமைகளை பாதிக்குமா என்பது குறித்து நீதிமன்றத்திலே எழுப்பப்பட்டு உச்ச நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அந்த அடிப்படையில், 1952 ஆம் ஆண்டு A.I.R. 1952 Supreme Court P. 321 தெளிவாக ஜீவாதார உரிமைகளுக்கு எக்ஸ்டிரன்மென்ட் புரவிஷன் வெளியேற்றப்படுகின்ற குற்றத்திற்கு தண்டிக்கப்பட்டு. அந்தப் பகுதியிலே இருந்துகொண்டு தொடர்ந்து குற்றங்களை செய்து, ஸ்மக்லிங் ஆக்டிவிடீஸ், மற்றும் இதுபோன்ற குற்றங்களைச் செய்கிறபோது நாட்டுக்கோ: அரசுக்கோ, மக்களுக்கோ இன்னல்கள் ஏற்படும் என்பது தெரியுமானால், அவரை வெளியேற்றுவது ஜீவாதார அடிப்படை உரிமையை பாதிக்காது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

1973 லே உச்ச நீதிமன்றம் ஏ.ஐ.ஆர். 1973, பக்கம் 630லே
தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "There can be no doubt
that the provisions of Section 27 (1) of the Bombay Act was made
in the interest of the general public and to protect them against
dangerous and bad character whose presence in a particular locality
may jeopardise the peace and safety of the citizens. The restriction
that this law imposes upon the rights of free movement of a citizen
are reasonable and come within the purview of Clause 5 of Article 15
of the Constitution" என்று சொல்லப்பட்டிருக்கிறது.
போலவேதான், இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும்; அதைப்
மாண்புமிகு உறுப்பினர் பொன்முத்துராமலிங்கம்
பேசுகின்றபோது சொன்னார்—ஒரு தண்டனை அவர்கள்
மறுபடியும் தண்டனை அளிக்கின்ற வகையில் பெற்ற பிறகு
முன்வடிவு இருக்கிறதே, அது சரிதானா என்று கேட்டார். இந்தச் சட்ட
தவறு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன், அது
ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்சிலேயும் பீரிஆம்பிளிலும்
சொல்லப்பட்டிருக்கிறது. தெளிவாக

"Section 51-A of the Madras City Police Act 1888 (Tamil Nadu
Act III of 1888) empowers the Commissioner of Police to pass an order
in writing directing a person whose movements or acts in the City of
Madras are causing alarm danger or harm to person or property or
that there are reasonable grounds for believing that such person is
is engaged in the commission of any offence involving force......"
எனவே, ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவர்கள் மீண்டும் தவறுகள்
செய்யக்கூடிய நடவடிக்கைகளிலே ஈடுபடுகின்றபோதுதான்,
அவர்களுக்குத் இந்தத் தண்டனை அளிக்கப்படுகிறதே ஒழிய
ஏற்கனவே செய்த தவறுகளுக்கு ஏற்கனவே இழைத்த குற்றத்
திற்கு தண்டனை பெற்ற பிறகு. அதே குற்றத்திற்காக தண்டனை
இங்கே குறிப்பிடப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்பு
கிறேன். அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்
சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார். Question of
res judicata does not arise ஒரேயொரு குற்றத்தை. உதாரணமாக,
வெளிநாட்டுக்குச் சென்று திரும்பி வருகின்றபொழுது, 'innocent
person' ஒரு டேப்ரிக்கார்டரைக் கொண்டு வருகின்றபொழுது
அந்தக் குற்றத்திற்காக, தண்டனை பெற்றுவிட்ட பிறகு இதில்
உட்படுத்தப்படுவார்களா என்று கேட்டார்கள். 'The scheme of
the Act as a whole should be gone into to arrive at a conclusion'.
என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன், 'reason to believe'
என்பதை பீஸ்மீலாக ஒரு வரியைப் படித்துவிட்டு பிரச்சனை
களை அணுகக் கூடாது, இந்தச் சட்டத்திற்கு உட்பட்டு
தண்டிக்கப்பட்டிருப்பவர்கள்.' habitual offenders' என்பதை நான்
தெளிவாக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்
சந்திரன் அவர்கள் சொன்னதை, நான் அந்த முறையில் அவர்
கள் கருத வேண்டாமென்று சொல்லிக்கொள்கிறேன்,



குண்டாஸ் சட்டம் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டதைப் போல இதுவும் துஷ்பிரயோகப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் குண்டாஸ் ஆக்டைப் பொறுத்தவரைக்கும் கட்சிக் கொள்கை பேதங்களுக்கு அப்பால் நின்று சமுதாயத்திற்குத் தீங்கிழைக்கின்ற யாரானாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நடுநிலை நோக்கோடு அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை ஒத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 800 பேர் 900 பேர்கள் குண்டாஸ் ஆக்டில் மூன்று விதமான சட்டங்களுக்கு உட்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருப்பவர்களில் பலர்ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அரசியல் கட்சிகளுக்கு எதிராக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுமா என்ற ஐயப்பாட்டை ஹேமச்சந்திரன் எழுப்பினார். தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கள்ளக்கடத்தலில் ஈடுபட்டு தண்டிக்கப்பட்டவர்கள் மீண்டும் அந்தத் தவறை, அத்தகைய பொருளாதாரக் குற்றங்களைத் தொடர்ந்து செய்து அந்நியச் செலவாணிக்குப் பங்கம் விளைவிக்கின்ற பொழுது இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுமே யொழிய மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் அரசியல்வாதிகளுக்கு எதிராக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படும் என்று கொஞ்சம் சந்தேகம் கொள்ள வேண்டாம், சட்டத்திலே வழிவகை ஒரு சிறிதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள், காவலர்கள் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபொழுது தவறு செய்துவிடுவார்கள் என்ற தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். அதற்கு இதில் இடமிருக்காது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். காரணம், இந்தச் சட்டத்திலே 'The object can never be taken by the said Commissioner or equivalent officer' என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். வழக்கறிஞர்கள் மூலம் தங்கள் நிலையை வாதிட புரொவிஷன் இருக்கிறது.

The aggrieved person is entitled to appear before the Commissioner or Deputy Commissioner for that purpose and also can produce the witness before him for examination என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். ஒருவேளை அந்தத் தீர்ப்பிலே தங்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கும் என்று அவர்கள் நினைக்குங்கால் அரசுக்கு மேல் முறையீடு இருக்கிறது. நீதிமன்ற தடை. இருப்பதைப்போன்ற உணர்வு வெளியிடப்பட்டது. அது தவறு. செக்ஷன் 5-இலே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு கட்டங்களிலே, reasonable and ample opportunities were provided for the alleged persons முறையிலேயும், 'that the procedure laid down in sub-section (2) was not followed என்று இருந்தால் நீதிமன்றம் சென்றுவிடலாம், ஒரு பகுதியிலிருந்து கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாகத் தண்டிக்கப்பட்டார்கள் மீண்டும் அந்தத் தவற்றினை

செய்கின்றபொழுது, செய்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பொழுது, 'that there was no material upon which the order could have been based' என்ற நிலை வருகின்றபொழுது, மெட்டீரியல் இல்லாமல், அடிப்படை ஆதாரம் இல்லாமல் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் நீதிமன்றத்திற்கு உடனடியாகச் செல்லலாம், அதுதான் தெளிவாக்கப்பட்டு இருக்கிறது. 'Whenever they indulge in such acts, which result in distubance to public peace and tranquility' and when there was no material on which the order could have been based என்றால் நீதிமன்றங்களுக்குச் செல்வதற்குத் தக்க வழிவகைகள் இந்தச் சட்டத்திலே தரப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

இந்த நிலையில் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் மைய அரசு மாநில அரசுக்கு ஏற்கனவே அனுப்பிய தாக்கீதின் அடிப்படையில், பல மாநிலங்களில் ஏற்கனவே இருக்கின்ற நடைமுறையையொட்டி, இந்தச் சட்டம், பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபட்டு தண்டிக்கப்பட்டவர்கள், கள்ளக்கடத்தலில் ஈடுபட்டு தண்டிக்கப்பட்டவர்கள்—அத்தகைய குற்றங்களில் ஈடுபட்டு தண்டிக்கப்பட்டவர்கள்—மீண்டும் இந்தத் தவறுகளில் ஈடுபட்டு, நாட்டின் பொருளாதாரத்திற்கு, நாட்டின் நலனுக்கு நாட்டு மக்களின் நலனுக்குப் புறம்பாகச் செயல்படுகின்றபொழுது அவர்களை அந்தத் தவறான நடவடிக்கைகளிலிருந்து தடுப்பதற்காக காபிபோசாவில் உள்ளுக்குத் தள்ளுகின்றது என்ற சட்டம் இல்லை.

(மாலை 5-20)

என். எஸ். ஏ.வில் உள்ளுக்குத் தள்ளுகிற சட்டம் அல்ல இந்தச் சட்டம். பிரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்டில் உள்ளுக்குத் தள்ளுகிற சட்டம் அல்ல இந்தச் சட்டம். மாறாக அவர்கள் தவறு செய்கிற இடத்தில், தங்கி இருக்கிற இடத்தில் இருந்து கொண்டு, அதற்கான சூழ்நிலையை உருவாக்கி, பக்கபலமாக, அதற்கு உதவிகரமாக வைத்துக்கொண்டு, தொடர்ந்து அந்தக் குற்றங்களைச் செய்யாமல் இருக்க அந்தப் பகுதியிலிருந்து வேறு ஒரு பகுதிக்கு உச்ச கட்டமாக ஈராண்டுக் காலத்திற்கு அவர்கள் வெளியேற்றப் பட வேண்டுமென்ற முறையிலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லி, அவை இந்தச் சட்டத்தை இயற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985-ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."





தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு—2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

"In clause 2, in sub-clause (ii), the proposed new sub-sections '(1-A)" and "(1-B)' shall be omitted."

"Delete the word and figure (1-A)" wherever it occurs,'

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின்முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"1985-ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) தொழில் நிறுவனங்க (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்த சட்டமுன்வடிவு, 1985.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்த சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் ஆய்வுக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்த சட்டமுன்வடிவைப் பொதுவாக நான் ஆதரிக்கிறேன். ஆயினும் சில குறிப்பான விளக்கங்களையும் தகவல்களையும் சொல்ல வேண்டுமென்ற முறையிலே 3 கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒன்று, கடந்த 1982-ல் ஹைகோர்ட்டில் அடிக்கப்பட்டிருக்கிற சட்டத்திற்கு கோர்ட் ஆணையிலிருந்து பாதுகாப்பளிக்கிற முறையிலே கொண்டு வரப்படுகிறது. அதிலும் குறிப்பாக, பதிலி, மற்றும் அப்ரென்டிஸ் என்ற முறையில், குறிப்பாக மானேஜ்மென்ட் அப்ரென்டிஸ் என்ற முறையில் அந்த பதிலி மற்றும் மானேஜ்மெண்ட் அப்ரெண்டிஸ் என்ற இரண்டு தரப்பினரும் சட்டம் வழங்குகிற அனுகூலத்தைப் பெறத் தகுதியற்றவர்கள் என்ற முறையிலே ஹைகோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது. ஆகவே, இங்கே ஆய்விலே வைக்கப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவு பதிலி, மற்றும் மானேஜ்மென்ட் அப்ரென்டிஸ் என்று சொல்லப்படுகிற வருஷக்கணக்கில் பணியாற்றுகிற அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறதா, நிவர்த்தி அளிக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, நிரந்தரமாக்குகிற விஷயம். சங்கங்களுக்கும் மானேஜ்மென்டிற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தங்களைப் பொறுத்தவரையில், அக்ரிமென்டை வடிவம் செய்வதற்கு ரைட்டிங் வோட் கொடுக்க வேண்டுமென்பதை நான் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

*1985ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



அதேபோல், இத்தகைய வரவேற்கத்தக்க சட்டங்கள் இயற்றப்படுகிற அதே நேரத்தில், மாநில அரசும் குறிப்பாக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் தனியார் துறைகளிலே நிரந்தரமாக, நிர்ப்பந்திக்கிற முறையில், அரசுத் துறையில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கும் இந்தச் சட்ட அனுகூலம் நடைமுறையில் பொருந்துகிற முறையில் கறாராக அமுலாக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

இப்படிப்பட்ட சட்டங்கள் வந்தாலும் கூட அமுல்படுத்தாத நிலைமை இன்றைக்கும் இருக்கிறது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் இப்போது இங்கே இல்லை. அவர்களிடம் நேரிலேயே நாங்கள் சொல்லியிருக்கிறோம். இத்தகைய ஒரு சட்டம் நாட்டிலே இருந்தாலும் கூட திருப்பூர் வளர்மதி கூட்டுறவு சிறப்பங்காடியில் பணியாற்றுகின்ற 17 தொழிலாளர்கள் இன்றுவரையில், வருடக்கணக்கில் அவர்கள் பணியாற்றியும் கூட, நிரந்தரமாக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அப்படி அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டம் நாட்டிலே நிலவுகிறபோது கூட மாற்று அரசியல் இயக்கங்களில் அவர்கள் அங்கம் வகிக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் சில நிர்ப்பந்தங்களைத் தோற்றுவிக்கலாமா? அரசுத் துறையில், குறிப்பாக இத்தகைய சட்டங்கள் வந்தவுடனே அரசுத் துறையைச் சேர்ந்த பொறுப்புகளிலே, நிர்வாகங்களிலே ஒரு உத்தரவு போட்டு அமுலாக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அமுலாக்கப்படுகிறதா என்பதை செக் பண்ண வேண்டும். இந்தக் கருத்தை வலியுறுத்தி, அரசுத்துறைகளில் பணியாற்றுகின்ற அனைத்துத் தொழிலாளர்களையும் நிரந்தரமாக்குகின்ற வகையில் இந்தச் சட்டத்தைப் பொருந்துமாறு செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தச் சட்டத்தின் வாயிலாக ஒருசில கருத்துக்களை அவை முன் வைக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல கொண்டு வந்திருக்கிற சட்டம் கடந்த 4 ஆண்டுகளாக அமுல்படுத்துவதிலே இருக்கக் கூடிய சிக்கல்களை தவிர்ப்பதற்காக கொண்டுவந்திருப்பது உள்ளபடியே நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு காரியம்தான். ஆனால் இந்தத் திருத்தத்தின் மூலம் எதிர்பார்க்கிற பலன் ஏற்படுமா என்றால் நிச்சயமாக ஏற்பட வாய்ப்பு இல்லை என்று வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

தொழிற்சாலை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். பல இடங்களில் 480 நாட்கள் பணியாற்றியிருந்தால் அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தச் சட்டத்தைத் தமிழ்நாட்டில் கொண்டுவந்தபோது உள்ளபடியே நாங்கள் பூரிப்பு அடைந்தோம். அதிலே வித்தியாசம் ஒன்றும் இல்லை. ஆனால் இதில் இருக்கிற சந்து பொந்துகளில் ஒளிந்துகொண்டிருக்கிற முதலாளிகளைக் கண்டுபிடித்து, தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்வதற்கான இந்தத் திருத்தம் மிகச் சாதாரண திருத்தம்தான்.

நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அங்கே இருக்கக்கூடிய பல பஞ்சாலைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இன்றையதினம் நிரந்தரமற்ற பதிலிகளாக, அவர்களுக்கு என்று எந்தவிதமான உரிமையும் பெறக்கூடிய நிலைமை இல்லாமல் தினசரி அத்துக் கூலிகளாக இருப்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று வேஸ்ட் காட்டன் தொழிற்சாலை தொழிலாளர்கள், இஞ்சினியரிங் தொழிற்சாலை தொழிலாளர்கள் எல்லாம் பல ஆண்டுகள் பணியாற்றியும் அவர்களுக்கு என்று பெறக்கூடிய நிரந்தர உரிமையைப் பெறமுடியவில்லை. ஆலை முதலாளிகள் தொழிற்சாலை ஆய்வாளர்களை விலைக்கு வாங்கி வைத்திருக்கிறார்கள். பல இடங்களில் தொழிற்சாலை ஆய்வாளர் வருவதற்கு முன்னால் முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு வருகிறார்கள். அப்படி வருகிறபோது, அவர்கள் வருவதற்கு முன்னால் அந்தத் தொழிலாளர்களை ஒளித்து வைத்துக்கொள்கிறார்கள் அல்லது வெளியே போக வைத்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கி அந்தத் தொழிலாளர்கள் தொழிற்சாலை ஆய்வாளரை சந்திக்க முடியாமல் செய்துவிடுகிறார்கள். எனவே அரசாங்கம் சட்டத்தின் மூலமாகச் செய்யமுடியாத சலுகைகளை, உரிமைகளை தொழிலாளர்கள் போராடித்தான் பெறவேண்டிய நிலைமை இருக்கிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் அரசு அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். தொழிலாளர்களுடைய உரிமையைப் பாதுகாக்கிற அரசாங்கமாக இருக்க வேண்டும். அந்த வகையிலே ஒப்பந்தம், அவார்டு, உடன்படிக்கை இவற்றை எல்லாம் மீறி நடக்கின்ற முதலாளிகளை இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் நிச்சயமாக நிர்ப்பந்தித்து, தொழிலாளர்களை நிரந்தரமாக்குகின்ற நிலைமையை உருவாக்குகிற சட்டத்தை நாங்கள் வரவேற்கிற அதேநேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாலை 5-30)

இன்றையதினம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அரசாங்கத்தினுடைய பொது நிறுவனங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல் அரசாங்கத்திலே என்.எம்.ஆர் என்ற தொழிலாளர்கள் இலட்சக்கணக்கான பேர் அத்துக்கூலிகளாக இருக்கின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். முதலாளிகளை வற்புறுத்தி நாம் சட்டங்களைக் கொண்டு வருகின்ற அதே நேரத்தில் அரசாங்கம் எம்ப்ளாயராக இருக்கின்ற நிறுவனங்களைப் பொறுத்தவரையில் பல தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலைமையை மாற்றித் தீரவேண்டும். நாம் ஒரு மாடலாக, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்ற வகையில் இருக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





முதுநிலைப் பட்டதாரிகள்,—இன்றையதினம் மேல்நிலைப் பள்ளிகள் துவங்கப்பட்டு 7 ஆண்டுக்காலம் ஆகியும் கூட அவர்கள் எல்லாம் நிரந்தரப்படுத்தப்படாமல் தற்காலிகப் பணியாளர்களாக இருக்கின்ற நிலைமையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட குறைகளை எல்லாம் போக்கி முதலாளிகளுக்கெல்லாம் நாம் ஒரு முன்னோடியாக இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டி அமர்கிறேன்.

திரு. ஆர். செங்காளியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யவேண்டும் என்ற வகையில் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்ட முன்வடிவை முழு மனதோடு நான் வரவேற்றுப் பாராட்டி என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அதாவது நம்முடைய அரசாங்கம் இரண்டாண்டுகளில், 480 நாட்கள் வேலை பார்த்திருந்தால் அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் பெர்மனன்ட் செய்யப்படவேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்து அதனை அந்தத் தொழிலாளர்கள் நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய அளவில் செய்தார்கள். ஆனால் ஆலை முதலாளிகள் கோர்ட்டுக்குச் சென்று அதைத் தடுத்து விட்டார்கள். அதுபற்றி நான் நேரடியாக அமைச்சரிடத்திலே சொன்னபோது நிச்சயமாக இந்தக் குறைபாடுகளைக் களைந்து மீண்டும் நல்லதொரு சட்டத்தை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வந்து பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறேன் என்று உறுதி கூறினார்கள். அவ்வாறு எங்களுடைய வேண்டுகோளை ஏற்று இதனைக் கொண்டுவந்திருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இந்தத் தமிழகத்தில் சுமார் 500 பஞ்சாலைகளுக்கு மேல் இருக்கின்றன. புதிய புதிய ஆலைகளும் இன்று வந்து கொண்டே இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை ஆலை முதலாளிகள் அத்துக்கூலியாக வைத்துக்கொண்டு அவர்களிடத்திலே அதிகப்படியான வேலை வாங்கிக்கொண்டு

இருக்கிறார்கள். அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற ப்ராவிடன்ட் ஃபன்ட் மற்றும் தொழிலாளர்களுக்கான இன்சூரன்ஸ் போன்றவை எதுவும் அவர்களுக்குக் கிடைக்க வில்லை. அதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி இந்த சட்டத்தின் மூலம் அதைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். 480 நாட்கள் இரண்டாண்டுக் காலத்தில் வேலை பார்த்திருந்தால் இந்தச் சட்டத்தைக் கண்டிப்பாக நிறைவேற்றியாகவேண்டும் என்று கொண்டுவந்திருக்கின்ற சட்டம் வந்தவுடனே ஆங்காங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் சரியான முறையில் இந்தச் சட்டத்தை அமல்நடத்துகிறார்களா என்று பார்க்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். எங்கெங்கெல்லாம் ஆலை முதலாளிகள் ஏமாற்றிக்கொண்டு இருக்கிறார்களோ அங்கெல்லாம் அதிகாரிகளை அனுப்பி இந்தச் சட்டம் சரியான முறையில் தொழிலாளர்களுக்குப் பயன்படுகின்ற முறையிலே நடைமுறைப்படுத்தப்படுகின்றதா, இந்தச் சட்டத்தின் பலன் கிடைக்கின்றதா என்று உன்னிப்பாக கவனிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கத்தின் மூலம் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளும், கூட்டுறவுப் பஞ்சாலைகளும் இருக்கின்றன. இன்று கூட்டுறவுத் துறையில் பல தொழில்கள் நடத்தப் படுகின்றன. அங்கே சிலர் இவ்வாறு 480 நாட்கள் வேலை பார்த்திருந்தாலும் கூட அவர்களை நிரந்தரம் செய்யாத நிலைமை இருக்கின்றது. மேலும் அரசாங்கம் தன்னுடைய நிறுவனங்களின் கீழ் இருக்கக்கூடிய ஆலைகளிலும் எல்லா தொழிலாளர்களுக்கும் அவர்கள் இதனை அமல்நடத்தக்கூடிய அளவில் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் நடத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் குறித்த சட்ட முன்வடிவின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

முதலாளி இல்லாமல் ஒரு நிறுவனம் இருக்க முடியும். ஆனால் தொழிலாளர்கள் இல்லாமல் இருக்க முடியாது என்பதை இந்த அரசாங்கம் உணர்ந்திருக்கிற காரணத்தால், தொழிலாளி வயிறு காய்ந்தால் உலகமே இருண்டு போய்விடும் என்ற தத்துவத்தை அண்ணா தி.மு.க அரசு அறிந்திருக்கிற காரணத்தால், இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழக்கூடிய தொழிலாளிக்குப் பாதுகாப்புத் தர வேண்டும் என்கிற உயரிய எண்ணத்தால், ஆண்டவன் எனக்கொரு முதலாளி அவனுக்கு





நான் ஒரு தொழிலாளி என்ற அண்ணாயிசத் தத்துவத்தை உள்ளடக்கி வைத்திருக்கிற காரணத்தால், இருப்பவர் இழந்திடத் தேவையில்லை, உழைப்பவர் உயர்ந்தால் போதும் என்கிற உயரியக் கொள்கைத் தத்துவத்தை உலகத்திற்கு எடுத்துச் சொல்லக்கூடிய வகையில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள், எதிரி எந்த ரூபத்தில், எந்த இடத்தில் வந்தாலும் அந்த இடத்தில் அதற்கேற்ப சந்திக்க வேண்டிய நிலையில், உருவாக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டத் திருத்த முன் வடிவு இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து அதனை நான் வரவேற்கிறேன்.

ஏற்கெனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பல்வேறு எண்ணங்களையும், உணர்வுகளையும் சொல்லியிருக்கிறார்கள் இந்தச் சட்டமுன்வடிவினைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சி என்ற நிலையிலே இருக்கக்கூடியவர்கள் கூட, இதை வரவேற்று இருக்கிறார்களே தவிர எதிர்க்கவில்லை. அவர்கள் என்னென்ன உணர்வுகளைப் பெற்றிருக்கிறார்களோ, அந்த உணர்வுகளை நாங்களும் பெற்றிருக்கிறோம் என்பதை அவர்களுக்கு உணர்த்துகின்ற வகையிலே இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்களே இந்த மன்றத்திலே ஒரு முறை பேசுகிறபோது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முழுமையாக நான் ஒரு கம்யூனிஸ்ட் என்று சொல்லியிருக்கிறார்; அவர் அப்படிப்பட்டவர் என்று கூட ஒரு சூழ்நிலையில் சொல்லியிருக்கிறார்கள்.

அண்ணாயிசத் தத்துவத்திலே கம்யூனிசமும் இணைந்திருக்கிறது என்பதற்கு இந்த சட்டமுன் வடிவைக் கொண்டு வந்ததே ஒரு உதாரணம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டப்படி குறிப்பிட்ட நாட்களுக்கு வேலை செய்திருந்தால் அவர்களை நிரந்தரமாக்கவேண்டும் என்ற சட்டம் இருக்கிறது. அதை அந்த பொறுப்பிலே இருக்கக்கூடிய முதலாளிகள், நிறுவனத்தினர், அந்த எண்ணிக்கைக்கு வரவிடாமல் தவிர்க்கக்கூடிய நிலையில் பல்வேறு சூழ்நிலைகளையும் சிக்கல்களையும் உருவாக்கி, 480 நாட்களுக்கு ஒரு தொழிலாளி வேலை செய்ய வேண்டும் என்று அந்தச் சட்டத்திலே இருந்தால், தொடர்ந்து அந்தப் பணியைச் செய்யக்கூடிய வகையில் காரண காரியங்களை இல்லாமல் ஆக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி விடுவதால், அவர்களின் பணி அந்தச் சட்டத்தின் முன் அடிப்பட்டு போய் விடுகிறது;

ஆகவே அப்படிப்பட்ட அந்தச் சட்டத்தை பாதுகாக்கக் கூடிய ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே இந்த சட்டமுன் வடிவினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தின் சந்து பொந்துகளை அடைக்கவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(டாக்டர் கே. சமரசம்) [1985 ஜூலை 18

அது மட்டும் அல்ல, இந்தச் சட்டத்திலே, 1985ஆம் ஆண்டு இந்த நேரத்திலே கொண்டு வரப்பட்டிருந்தாலும் கூட, 1982 ஜனவரியிலே இருந்து அமலுக்கு கொண்டு வரக்கூடிய அளவுக்கு செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், ஏற்கனவே திட்டமிட்டு சதி செய்தவர்கள் இதிலிருந்து தப்பிக்க முடியாமல் நடைமுறையில் தொழிலாளர்களுக்கு எந்த வகையிலே பாதுகாப்பு கொடுக்க முடியுமோ, அந்த வழிகளில் எல்லாம் கொடுத்து இந்தச் சட்டமுன் வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றால் இந்த ஆட்சியின் இதயம் எங்கே இருக்கிறது என்பதை அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அது மட்டும் அல்ல, ஒரு தொழிலாளிக்கு என்னென்ன வகையிலே நல்ல முறையில உதவி செய்யமுடியுமோ அந்தந்த வகையில் எல்லாம் உதவிகள் கிடைப்பதற்கு, நல்ல வழி முறைகளை வகுத்து இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு தொழில் நிறுவனத்தில் ஒரு தொழிலாளி வேலைக்கு சேர்கிறார் என்று சொன்னால், அவருடைய பெயருக்கு ஒரு ஐடென்டிபிகேஷன் கார்டு முழுமையான விவரங்களோடு உடனடியாக கொடுக்கப்பட வேண்டும். அதிலே அவருடைய பெயர், அவர் வேலைக்கு அமர்த்தப்பட்டபோது இருந்த வரிசை எண், புகைப்படம், முகவரி, சேர்க்கப்பட்ட நாள் போன்ற அனைத்து விவரங்களும் இருத்தல் வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள்.

இதனால் அந்த நிர்வாகம் அந்தத் தொழிலாளி தொடர்ந்து பணி ஆற்றிக் கொண்டிருக்கும்போது, இடையிலே ஏதாவது காரணம் காட்டி அவர்களைப் பணியிலிருந்து நிறுத்தி, அதன்பிறகு நிறுவனம் தொடர்ந்து நல்ல முறையில் செயல்பட்டால், 480 நாட்களுக்குள்ளாகவே தகுந்த காரணங்கள் இல்லாமல் அவர்கள் பணியிலிருந்து நீக்கப்படக் கூடிய நிலைமை வருமானால் அப்படிப்பட்ட சூழ்நிலை சதிசெய்து உருவாக்கப்பட்டால், அந்த தொழிலாளிக்கு பாதுகாப்புக் கொடுக்கக் கூடிய வகையில் இந்தச் சட்டமுன்வடிவு இருக்கும் என்று நம்புகிறேன். அந்த வகையில் அதன் விதிமுறைகளை உருவாக்கித் தரவேண்டும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே அவர்களை வேலை செய்ய விடாமல் தடுக்கக்கூடிய வகையிலே நிர்வாகம் திட்டமிடும்போது, தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய வகையிலே, அவர்களுடைய பணி தொடர, நீடிக்க வழி வகை செய்யக்கூடிய வகையிலே, மாண்புமிகு முதல்வர், எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியின் கீழ் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இந்த நல்ல சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கூறி அதை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.



1985 ஜூலை 18]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் வரவேற்கக் கூடிய அதே நேரத்திலே இந்தச் சட்டத்தினாலே பிரச்னைகள் முழுவதும் முடிந்து போய்விடும் என்றோ, அல்லது பிரச்னைகளே ஏற்படாது என்றோ கருதக் கூடாது, என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதிலே அடிப்படையான பிரச்னை தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களை வேலைக்கு சேர்க்கக்கூடிய நேரத்தில் அவர்களை அந்நிறுவனத்தின் தொழிலாளர்கள் என்று ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் அவர்களுக்கு கார்டோ, சர்விஸ் என்ட்ரியோ, டோக்கனோ அல்லது அந்த மாதிரி ஒரு ஏற்பாடோ இல்லாததன் காரணமாக பல பேக்டரிகளில் அப்பிரண்டைஸ் என்றும், லேர்னர் என்றும், கேஷுவல் லேபர் என்றும், லோகல்ஸ் என்றும், டெய்லி வேஜஸ் என்றும் பல்வேறு பெயர்களில் தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக்கொண்டு அவர்கள் அங்கே வேலை செய்தார்கள் என்பதற்கு எந்தவிதமான அத்தாட்சியும் இல்லாத அளவுக்கு, வேலைக்கு வைத்திருக்கிறார்கள்

(மாலை 5-40)

ஆகவே இந்த 480 நாள் என்ற சட்டத்தின் பலன் அவர்களுக்கு கிடைக்கவேண்டுமென்றால், அவர்கள் தொழிலாளர்கள் என்பதற்கு அல்லது அவர்கள் வேலை செய்தார்கள் என்பதற்கு ஏதாவது ரெகார்டுகளை கொடுக்கிற முறையில் ஒரு ஏற்பாட்டை கொண்டு வந்தால் தான் அந்தச் சட்டத்தின் பலனை அவர்கள் அனுபவிக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டு வந்ததற்குப் பிறகு கூட இந்தச் சட்டம் அமலாக்கப்பட முடியாத நிலையில் முதலாளிகள் இருந்து வருகிறார்கள் என்பது எதைக் காட்டுகிறது என்றால் மனப்பூர்வமாக இந்தச் சட்டத்தை இம்ப்ளிமெண்ட் பண்ணாமல், தொழிலாளர்களை நிரந்தரம் செயயாமல் இருப்பதற்கான அஸ்திவாரத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கு சாதகமாக நம்முடைய லேபர் டிபார்ட்மெண்டில் இருக்கிற இன்ஸ்பெக்டரேட்டும் இருந்து கொண்டிருந்தது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டத்தில் பட்டுப் பூச்சித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற ஒரு ஆலை இருக்கிறது. அங்கே பெண்கள் தான் வேலை செய்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று மனு கொடுக்கப்பட்டது.

இரண்டு வருடம் அந்த மனுவின் மேல் நடவடிக்கை எடுக்காமல் தட்டிக் கழித்துவிட்டு, இன்றைக்கு நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்ததற்குப் பிறகு அந்த இன்ஸ்பெக்டரேட் என்ன பதில் கொடுத்திருக்கிறார்கள் என்றால், உயர்நீதிமன்றம் இந்தச் சட்டம் செல்லாது என்று சொல்லிவிட்டதன் காரணமாக இந்தப் பிரச்னையில் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி

இருக்கிறார்கள். இப்படி முதலாளிகள் அதை மனப்பூர்வமாக இம்ப்ளிமெண்ட பண்ணாமல் இருப்பதும், அதற்கு சாதகமாக இலாக்காவிலே இருக்கிற ஒரு சில அதிகாரிகள் இருந்ததை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தப் பிரச்னை என்னவென்றால் இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று சொல்கிற போது தொழிலாளர்கள் பாக்டரியில் வேலை செய்தால் அவர்களுக்கு கியாரண்டியான ஒரு அத்தாரிட்டி கொடுக்கப்பட வேண்டும். இன்ஸ்பெக்ட்ரேட், அரசு, இரண்டும், அதை அமல் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு அவைகள் தயாராக இருக்க வேண்டும்.

இன்னொரு பிரச்னை. இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு முதலாளிகள் மட்டும் மறுக்கவில்லை, அரசு முதலாளிகளாக இருக்கிற இடங்களில் கூட நடக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் என்பதால் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்தில் அப்ரெண்டிஸ் டிரைவர் என்ற முறையில் 4 வருடம், 5 வருடங்களாக ஆட்களை வைத்திருக்கிறார்கள். அதைப்போல ரிசர்வேஷன் கவுண்டரில் கிராஜுவேட்களை கூட அப்ரெண்டிஸ் என்ற முறையில் 230 ரூபாய் சம்பளத்தில் வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அன்றைக்கு கூட இந்த நிலையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். ஆகவே நான் சொல்ல விரும்புவது....

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நாங்கள் தினந்தோறும் தொழிலாளர்களைப் பார்த்து பேசிக் கொண்டுதான் இருக்கிறோம். இந்தப் பிரச்னை பற்றி கூட பேசி அதிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக அப்ரெண்டிஸ் ஒர்க்கர்களாக அங்கே வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சில இடங்களில் அப்படி இருப்பது உண்மைதான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் இருப்பவை அத்தனையும் நார்ம்ஸ்க்கு மேலே இருக்கிறது. அதற்கு என்ன காரணமென்றால் கிளரிக்கல் அப்ரென்டீஸ்களாக மற்ற அப்ரென்டீஸ்களாக வேலை பார்க்கிறவர்கள் ஒரு ஆண்டு காலத்திற்குப் பயிற்சி பெற்று பிறகு வெளியே அனுப்பப்பட வேண்டும். ஆனால் அவர்கள் வெளியே போனால் வேறு வேலை இல்லையென்று ஒட்டு மொத்தமாக கேட்டுக் கொண்டதால் அவர்களுக்கு ஏதாவது வேலை கொடுத்து, நார்ம்ஸ்க்கு மேலே அவர்களை இங்கே பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அது தவறு என்று, சட்டப்படி நியாயமாக இருக்க முடியாது என்று, நார்ம்ஸ்க்கு மேலே அப்படி இருக்கக் கூடாது என்ற காரணத்தால் தான் எப்படியாவது அவர்களுக்கு புதிய இடங்களை உருவாக்கி கொடுக்கவேண்டுமென்று நடவடிக்கைகளை இப்போது படிப்படியாக எடுத்துக் கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதைத் தெரிந்துதான் இருக்கிறார்கள். ஆகவே நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே நார்ம்ஸ்க்கு குறைத்து வைத்துக்கொண்டிருக்கவில்லை என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.



திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களோடு விவாதத்திற்குப் போக விரும்பவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதிலே விவாதிப்பதற்குரிய சில விஷயங்கள் இருந்தாலும் நேரம் இல்லாத காரணத்தால் நான் அதற்குள் போகவில்லை. ஒரு விஷயம் மட்டும் சொல்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். இல்லையென்றால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரிசர்வேஷன் கவுண்டர்களில் நார்ம்ஸ்க்கு உள்ளே தான் இந்த மாதிரியான ஆட்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். இதை குறையாகச் சொல்வதற்கோ, குற்றம் சாட்டுவதற்கோ சொல்லவில்லை. இந்தத் தொழிலாளர்கள் வேலை பார்க்கிற போது வேலை செய்தார்கள் என்பதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லாத நிலையில் இன்றைக்கு இருந்து கொண்டிருப்பதால், இப்படி வேலைக்கு எடுக்கிற தொழிலாளர்கள் 5 நாட்கள், 10 நாட்கள் வேலை செய்தாலும் கூட அவர்களுக்கு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, இன்றைக்கு நார்ம்ஸ்க்கு மேலே இருப்பதன் காரணமாக அவர்களை வெளியே அனுப்பி விட்டாலும் கூட, தேவைப்படுகிற போது இவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கிற முறையிலே உள்ள ஒரு நடவடிக்கை இருந்தால் தான் இந்தச் சட்டத்தினுடைய பலன் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்.

அந்தக் காரணத்தால், இன்று பொதுத்துறையிலே இருக்கக் கூடிய நிர்வாகம், தனியார் துறைக்கு ஒரு மாதிரியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, ஆசையோடுதான் இந்த விஷயத்தை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே அப்படிப்பட்ட நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்க வேண்டும். இன்று நிர்வாகங்கள் என்ன செய்கிறது என்றால், இன்று லோகல், கேசுவல் என்று இவைகளை எல்லாம் விட்டு, இப்போது கான்ட்ராக்ட்டுக்கு போகக் கூடிய ஆபத்து கூட இன்றைக்கு வந்திருக்கிறது. இது அமைச்சருக்கு நன்கு தெரியும். இன்று பிரச்னை என்னவென்றால், இதிலே ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்ததினால் மட்டும் இந்தப் பிரச்னை தீரவில்லை. நிச்சயமாக அரசு உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்கு மேலே சுப்ரீம்கோர்ட்டிலே அப்பீல் போட வேண்டும். இல்லை என்றால் நாளைக்கு இந்தத் திருத்தத்தின் மேலே சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் தடுத்து நிறுத்தக் கூடிய ஒரு ஆபத்து ஏற்படலாம். ஆகவே இந்தத் திருத்தம் ஒரு பக்கத்திலே கொண்டு வந்தாலும் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்பீல் ஒன்றைச் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்று 1,600 ரூபாய் வரை உள்ளவர்களுக்கு இன்று பெனிபிட் கிடைக்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தினுடைய முறையிலே இன்று திருத்தம் வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இன்று 1,000 ரூபாய் என்று இருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையும் 1,600 ரூபாய் என்று திருத்துவதற்கான ஒரு திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை எல்லாம் தெரிவித்து இருக்கிறார்கள். பொதுவாக இங்கே கருத்துக்களை வெளியிட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவருடைய அரசு கொண்டு வந்த இந்தத் திருத்தத்தை வரவேற்று இருக்கிறார்கள். அதற்காக ஒரு முறை நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். தற்காலிகத் தொழிலாளர்களாக இந்தத் தொழில் நிறுவனங்களில் பல இடங்களில் பல ஆயிரம் பேர்கள் இருந்து வருகின்ற ஒரு அவலத்தைப் போக்குவதற்காக, அவர்களுக்கு ஒரு நிரந்தரத் தன்மையை உருவாக்குகின்ற ஒரு நல்ல நோக்கத்தோடு 4 ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பிறகு ஒரு முதலாளியினால், நீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சினை எடுத்துச் செல்லப்பட்டு, 4 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த ஆண்டுத் தொடக்கத்தில் பிப்ரவரித் திங்களில் ஒரு தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல விவரங்களை எல்லாம் சொல்லி இருக்கிறார்கள்.

நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அந்த நீதிமன்ற வழக்கின் விளைவாக அந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதிலே சற்றுக் காலதாமதம் ஏற்பட்டது இன்றைக்குத் தீர்ப்பு வந்திருக்கிறது. அந்தத் தீர்ப்பில் 5அம்சங்கள் சொல்கிறார்கள். சென்னை உயர்நீதிமன்றதீர்ப்பு 5 அம்சங்களைக் கொண்டதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னதைப் போலவே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதைப் போலவே, மாண்புமிகு உறுப்பினர் செங்காளியப்பன் அவர்கள் சொன்னதைப் போலவே ''கன்டினியுவஸ் சர்வீஸ்'' குறிப்பாக 2 ஆண்டுகளில் 480 நாட்கள் இருந்தால், அவர்கள் தற்காலிகத் தொழிலாளர்களாக இல்லாமல் நிரந்தரமாக ஆக்கப்படவேண்டும் என்பது சட்டத்தின் நோக்கம். அரசின் நோக்கம். இதற்கு முன்பாக 240 நாட்கள் அடைவதற்கு முன்பாகவே கூட, 230 நாட்கள், 235 நாட்கள் என்று வருகிற போது ஏதாவது ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து, நிர்வாகம் அந்தத் தொழிலாளியை நீக்கிவிட்டு, வேறு ஒரு தொழிலாளியை வைத்து,அவர்களை தற்காலிகத் தொழிலாளியாக வரையறுத்துக் கொள்வது, என்ற அந்தப் போக்கைப் போக்குவதற்காகத்தான் இந்தச் சட்டத்தின் 3வது பிரிவில் 'எக்ஸ்பிளநேசன்' என்ற பகுதியில் விளக்கமாகச் சொல்லியிருந்தோம் ஆனால் நீதிமன்றம் அது விளக்கம் இல்லை. அதில் ஆம்பிகுட்டி இருக்கிறது. அதில் தெளிவு இல்லை என்று சொன்ன காரணத்தினாலே



இந்த அவையில் இன்றைக்கு மிகத் தெளிவாக 'கன்டினியுவஸ் சர்வீஸ்' என்பதற்கு விவரமாக விளக்கமாக, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதைப் போல் நீதிமன்றத்திற்குச் சென்றாலும் கூட, மீண்டும் நம்முடைய இந்தச் சட்ட முன்வடிவைப் பாதிக்காத அளவிற்கு, இன்றைக்கு விளக்கத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்த விவரத்தை எல்லாம் வைத்திருக்கிறோம்.

(மாலை 5-50)

அது ஒரு திருத்தம். 5ல் இது ஒன்று.

இரண்டாவது, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சுப்பராயன் அவர்கள் சொல்லும்போது ஒரு தகவலைச் சொன்னார்கள். சட்டம் என்று மட்டும் இருக்கிறது. இந்தச் சட்டத்தினுடைய பயனை அவார்டு வாங்கியவர்கள் செட்டில்மெண்டு செய்து கொண்டவர்கள், அக்ரிமெண்டு செய்து கொண்ட தொழிலாளர்களுக்கு எல்லாம் இந்த சட்டத்தினால் பலன் கிடைக்கவில்லை. இது ஒரு பலகீனமாக இருக்கிறது. இது ஒரு குறையாக இருக்கிறது என்று நீதி மன்றம் சொல்லியதை, அதையும் திருத்துகின்ற வகையில் இன்றைக்கு சட்டம் மட்டும் அல்ல, லா என்பது மட்டும் அல்ல அவார்டாக இருந்தாலும் சரி செட்டில்மெண்டாக இருந்தாலும் சரி, அக்ரிமெண்டாக இருந்தாலும் சரி, எதுவும் தற்காலிக தொழிலாளியை நிரந்தரத் தொழிலாளியாக ஆக்குவதற்கு தடையாக நிற்கக் கூடாது என்ற ஒரு திருத்தத்தை இந்தச் சட்டப் பேரவையிலே இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். ஆக இரண்டு திருத்தங்கள் ரிப்பீல்கள்.

ஒன்று, ஏற்கனவே சொன்னது போல கன்டினியுவஸ் சர்வீஸில் தெளிவு இல்லாமல் இருந்தது. அந்தத் தெளிவை இந்தச் சட்டமுன்வடிவு உருவாக்குகிறது. அதுபோல அவார்டு பற்றி செட்டில்மெண்டு பற்றி, அக்ரிமெண்டு பற்றி எல்லாம் மூலச் சட்டத்திலே இல்லாமல் இருந்ததை இன்றைய திருத்தச் சட்டத்திலே கொண்டு வந்து இருக்கிறோம். ஆக 2 பாதுகாப்பும் நம்முடைய தற்காலிக தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல கவசமாக, கேடயமாக அமையும் என்று கருதுகிறேன். மற்றும் 2 அம்சங்களில் நீதிமன்றம் சொல்லியிருக்கிறது—ஒன்று ஒரு நிர்வாகம் ஒரு தற்காலிகத் தொழிலாளி சென்று விட்டால் அல்லது நீக்கி விட்டால் அந்த இடத்திற்கு வேறு ஒரு தொழிலாளியை வைப்பதற்கு அந்த எம்ப்ளாயருக்கு உரிமை உண்டு. அந்த முதலாளிக்கு உரிமை உண்டு, அது அடிப்படை, பண்டமெண்டல் ரைட், அது ஜீவாதார உரிமை, அவரை யாரும் தட்டிக் கேட்கக் கூடாது என்று நீதி மன்றம் சொன்னது. ஆனால் தமிழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அதை ஏற்கவில்லை. அப்படி வைப்பவர்களை 90 நாட்களுக்குள் ஒரு தொழிலாளியை நீக்கி அந்த இடைப்பட்ட காலத்தில் இன்னொரு தொழிலாளியை வைத்தால் நீக்கப்பட்ட அந்தத் தொழிலாளிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அவரைத் தான் வைக்க வேண்டும். முதலாளிக்கு நிச்சயமாக உரிமை கூடாது. அது அடிப்படை உரிமை அல்ல. இது ஜீவாதார உரிமை அல்ல.

ஆகவே, இது ஏற்புடையது அல்ல. அது சமூக நீதி கொண்டது அல்ல. அது தொழிலாளர் வர்க்கத்திற்கு உகந்தது அல்ல என்று கருதி இன்றைக்கு 90 நாட்களுக்குள் நீக்கி விட்டால் மீண்டும் வேறு ஒருவரை வைக்கும் நேரத்தில் நீக்கப்பட்டவரைத் தான் வைக்க வேண்டும். ஆனால் நீதிமன்றம் அது ஜீவாதார உரிமை, முதலாளிக்கு உரிமை உண்டு, அதில் தலையிடக் கூடாது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு இன்றைக்கு அப்பீல் செய்ய, இந்த அரசு முடிவு செய்து அதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நான்காவது, நம்முடைய கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகளில் பதிலி என்று இன்றைக்கு மாற்றுத் தொழிலாளர்களாக பல ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அதேபோல் அப்பரன்டிஸ்கள், பயிலுனர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்றைக்கு இந்தச் சட்டத்திலே பாதுகாப்பு இல்லை. அவர்களை நீதிமன்றம் இன்றையதினம் ஓர்க்மென் தொழிலாளியாக ஏற்றுக் கொள்ளமுடியாது. தொழிலாளர்கள் என்பதற்கு வேறு இலக்கணம் இருக்கிறது, இந்தப் பதிலிகளும், பயிலுனர்களும் ஆக இன்றைக்கு பணி ஆற்றுகின்ற இந்த பல்லாயிரம் பேர்கள் தொழிலாளர்கள் அல்ல, 'He cannot be a workman' இந்தச் சட்டப் பாதுகாப்பு அவனுக்கு கிடையாது என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்து இருக்கிறது.

அதையும் இந்த அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு உடன்படவில்லை. நாம் உறுதியாக எப்படி மூலச் சட்டம் கொண்டு வரும்போது நின்றோமோ அந்த நிலையில் நின்று அதையும் சுப்ரீம் கோர்ட்டுக்கு ஸ்பெசல் லீவ் எடுத்து இன்றைக்கு அங்கே வாதிட்டு இந்த உண்மையை நிலைநிறுத்த தமிழக அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆக 2 அம்சங்களில் இன்றைக்கு நீதி மன்றங்களுக்குச் செல்கிறோம். 2 அம்சங்களில் இன்றைக்குச் சட்டமுன்வடிவாகக் கொண்டு வந்து உங்களது ஒப்புதலைப் பெற சட்டதிருத்தத்தை கொண்டு வந்து இருக்கிறோம். குறிப்பாக நான் ஏற்கனவே சொன்னது போலவே கன்டினியூவஸ் சர்வீஸ் என்பதற்கு ஒரு திருத்தம், அதேபோல் இந்த அவார்டு செட்டில்மெண்ட், அக்ரிமெண்டு இவைகளை உள்ளடக்குவதற்கு ஒரு திருத்தம். ஆக 2 திருத்தங்கள்.

அதேபோல் இந்தப் பதிலிகளுக்கும், பயிலுனர்களுக்கும் இவர்களையும் தொழிலாளர்களாகக் கருத வேண்டும் என்பதற்காக உச்ச நீதிமன்றத்திற்கும், அதேநேரத்தில் நான் ஏற்கனவே சொன்னது போல் முதலாளிகளுக்கு இந்த 90 நாட்களில் நீக்கி விட்டால், வேறு ஒரு தொழிலாளியை வைப்பதற்கு உரிமை கிடையாது. நீக்கப்பட்ட அவனைத்தான் வைக்க வேண்டும் அது தான் முறை, அதுதான் சமூக நீதி, ஆகவே, இன்றைக்கு நீதி மன்றம் மறுக்கிற அதனை எதிர்த்து இந்த 2 வகையில் இன்று உச்ச





நீதிமன்றத்திற்கு செல்லுகின்ற அந்த முயற்சிகளை அப்பீல் என்ற வகையிலும் ஏற்கனவே சொன்னது போல இந்த கன்டினியூவஸ், சர்வீஸ் மற்றும் லா, சட்டம் என்பதை உறுதிப்படுத்த அவார்டு, செட்டில்மெண்டு, அக்ரிமெண்டு, இவைகளுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்ற வகையில் ஒரு திருத்தத்தையும், ரிப்பீல் என்ற வகையில் இரண்டும், அப்பீல் என்ற வகையில் இரண்டும் ஆக நான்கிற்கு இப்படிச் செய்து இருக்கிறோம்.

கடைசியாக, 'retrospective effect' என்பது செல்லாது என்று ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அதை 5-வது அம்சமாகச் சொன்னார்கள். அதற்கும் நாம் விளக்கம் அளித்து, இன்றைக்கு நீதிமன்றம் அதனை அங்கீகரிக்கிற வழியில் சொல்லி இருக்கிறோம். இந்தச் சட்டம் 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுக்க விழைகிறது என்ற விதியை உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்ட தேதிக்கு முன்பு வேலை செய்த நாட்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, தொழிலாளிகளை நிரந்தரம் ஆக்கலாம் என்று இருப்பினும், இந்தச் சட்டம் 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' என்று கருதக்கூடாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்து இருக்கிறது. ஆக, அந்த வகையிலேயும் இன்றைக்கு நமக்கு சாதகமாக இருக்கிறது.

உயர்நீதி மன்றம் சொன்ன இந்த 5 அம்சங்களிலும், இரண்டு அப்பீல், இரண்டு ரிப்பீல் என்றும், இன்றைக்கு ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் என்பதற்கு விளக்கம் கொடுத்து நிறைவுபடுத்தப்பட்டிருக்கிறது. என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு எடுத்துச் சொன்னது போல, சட்டம் உருவாக்குவது மட்டும் அல்ல. அதை இம்ப்ளிமென்ட் செய்வதிலே தான், என்ஃபோர்ஸ் செய்வதிலே தான், வெற்றியே பதிந்து இருக்கிறது.

அதற்கு இங்கே இருக்கிற இயந்திரங்கள், செயல்படுத்துகின்ற இயந்திரங்கள், ஃபேக்டரி இன்ஸ்பெக்டர்கள், மற்ற, மற்ற அதிகாரிகள் எல்லாம் இந்த அரசு எந்த ஒரு சமூக நோக்கத்தோடு, சமூக நீதியை தொழிலாளர் சமுதாயத்திற்கு கொண்டு வரவேண்டும் என்று சட்டத்தின் வாயிலாக விழைகிறதோ, அவைகளை எல்லாம் செயல்படுத்துவதற்கு அவர்கள் உறுதுணையாக இருக்கவேண்டும். அங்கே தவறு செய்பவர்கள், அக்கறையற்று இருப்பவர்கள். விரோதமாக இருப்பவர்களைக் கண்காணிக்க வேண்டும்.

அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல ஒரு பொது நோக்கோடு சொன்னார்கள். அவைகளையும் மனதிலே வைத்துக்கொண்டு சட்டங்கள் கொண்டுவருவது ஒரு கடமை, அதற்குப் பிறகு சட்டம் நியாயமாக, விரைவாக. எந்தத் தொழிலாளி, தற்காலிகத்தொழி

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1985 ஜூலை 18

லாளி நிரந்தரமாக்கப்படவேண்டும் என்ற நோக்கத்திற்காக கொண்டு வரப்படுகிறதோ, அவனுக்கு அந்தச் சட்டத்தின் பயன் செல்வதற்கு எல்லா வகையான முயற்சிகளையும் எச்சரிக்கையாக எடுப்போம் என்று உறுதி சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை அருள் கூர்ந்து நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல், திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1985) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**இ. மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1985.**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1985)" ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

---

*1985 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15 ஆம் தேதிய தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1985 ஜூலை 18]

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநில வருவாயைப் பெருக்குகின்ற நோக்கோடு இந்தச் சட்ட முன்வடிவு முன்மொழியப்படுகிறது என்று நோக்க காரண விளக்க உரையிலே குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. மாநில வருவாய்களைப் பெருக்குகின்ற நோக்கோடு காலாண்டு வரியை உயர்த்துவது என்று அரசு முடிவு செய்து, இந்தச் சட்ட முன்வடிவு முன்மொழியப்பட்டு இருப்பதாகக்குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

வருவாயை உயர்த்துவது என்பதில், மாநில அரசின் வருவாயை அதிகப்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்து, உரிய நடவடிக்கைகள் எடுப்பதில் ஆட்சேபணை இல்லை. வருவாய்களை உயர்த்துவதற்கு வரி போட வேண்டியது தான். அதிக வருவாய்க்கான வகைகளைச் செய்யவேண்டியது தான். ஆனால் இதிலே சீட்டுகளுக்கு விதித்து இருக்கக்கூடிய வரியை மேலும் கூடுதலாக்கக்கூடிய முறையிலே வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வரி விதிக்காமலேயே, வருமானத்தை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கான வழிகள் எல்லாம் இருக்கிறது. அவகளை எல்லாம் அரசு ஆய்ந்து, அந்த முறையிலே முயற்சித்தால் அந்த வரிகள் விதிக்காமலேயே வருமானத்தை அதிகப்படுத்த முடியும் என்பதை இந்த நேரத்திலே உங்கள் மூலமாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், 60 சீட்டுகள் இருககக்கூடிய வண்டியிலே நடத்துநர், ஓட்டுநர் தவிர, மற்ற இருக்கக்கூடிய சீட்டுகள் மேலும் வரி விதிக்கப்படுகிறது. அந்த 60 சீட்டுகள் மேலே தான் எப்போதும் வரி உயர்த்தப்படுகிறது. ஆனால் நடைமுறையிலே 100 பேர்கள், 120 பேர்கள் அந்த வண்டிகளிலே ஏற்றப்படுகிறார்கள்.

(மாலை 6–00)

அப்படி ஏற்றப்படுபவர்களுக்கெல்லாம் எந்தவிதமான வரியும் விதிப்பதில்லை. அந்த வருமானம் தனியாருக்குக் கிடைத்தாலும் அரசு பொது கார்ப்பொரேஷன் ஆக இருந்தாலும் அதிலே வருவதற்கு வாய்ப்பு இல்லை.

லாரியிலே கூட 4 டன் எடை ஏற்றிச் செல்லக்கூடிய லாரி என்றால் 4 டன் எடைக்குத்தான் வரி விதிக்கப்படுகிறது. ஆனால் நடைமுறையில் அவர்கள் 5, 6 டன் எடை எல்லாம் எடுத்துச் செல்கிறார்கள். அதன் மூலம் அதிகப் பணம் பெறுகிறார்கள். அதற்கான வரி இந்த அரசுக்கு வர கூடிய வாய்ப்பு இல்லை. வேன்களிலும் அதேபோல் 12 இருக்கைகள் என்று கணக்கிட்டு அதற்கு, வரி விதிக்கப்படுகின்றது. ஆனால் 18 பேர்கள் வரையிலே இருக்கைகளை வைத்து, அதற்கு அவர்கள் பணம் வசூலிக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதற்கு அரசுக்கு வரி வருவதற்கில்லை.

(திரு. கோ. வீரய்யன்) [1985 ஜூலை 18

ஆம்னி பஸ்களைப் பொறுத்த வரையில், டூரிஸ்ட் பஸ் என்று போர்டு போட்டு, ரெகுலர் சர்வீசாகவே தமிழகத்திலே நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். சென்னை மாநகரத்திலே. எழும்பூர் இரயில் நிலையத்திற்கு எதிரிலே சென்று பார்த்தால். நடப்பதற்குக்கூட இடம் இல்லாமல் 'ஆம்னி பஸ்' என்று போர்டு போட்டுக் கொண்டு ரெகுலர் சர்வீசாகவே நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதிலே ஏற்படக்கூடிய வரி இழப்பைக் கணக்கிலே கொண்டு அவற்றிற்கு வரியைப் போட்டு வசூலிக்க முயற்சி எடுத்தால் அரசுக்கு வருவாய் அதிகரிக்க வழி இருக்கிறது.

வரி வசூலிப்பதில் குறைபாடுகள் இருப்பதாகக்கூடச் சொல்லப்படுகிறது. அவற்றை நீக்கி முறையாக வசூலிப்பதால் கூட இன்றைக்குக் கூடுதலாக வருமானம் ஈட்ட முடியும். வரியை முறையாக வசூலிக்க உரிய நடவடிக்கைகள் எடுத்தால் வருமானம் பெருக வாய்ப்பிருக்கிறது என்று தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரியை உயர்த்துவதன் மூலம் பயணிகள் கட்டணம் மேலும் உயர்த்தப்படுமோ என்ற அச்சம் மக்கள் மனதிலே ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. வரியை உயர்த்துவதற்கு முன்னாலேயே கட்டணத்தை சமீபத்திலே உயர்த்தியிருக்கிறோம். இந்த வரியை உயர்த்தியதற்குப் பின்னால், இதன் காரணமாக மீண்டும் கட்டணங்கள் உயரக்கூடுமோ என்று மக்களுக்கு அச்சம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

பயணம் செய்பவர்களுக்கு வசதிகள் பெருக்கப்படாத நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன மக்களுக்கு சங்கடங்கள் இருக்கின்றன. பிய்ந்துபோன இருக்கைகளில் பயணிகள் அமர்ந்து செல்லக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன.

பயணிகளுக்கு வசதிகளை அதிகமாக்கவும், வரியை உயர்த்தாமலே, இருக்கக்கூடிய வரிகளை முறையாக வசூலிப்பதன் மூலமும், அதிக இருக்கைகள் வைத்திருக்கின்றவர்களிடம் அதிக இருக்கைகளுக்குரிய கட்டணத்தை வசூலிப்பதன் மூலமும், அரசு தன் வருவாயைப் பெருக்கிக்கொண்டு வரியை உயர்த்துவதைத் தவிர்க்கக் கூடிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி.

*திரு.மா. மணிமாறன்: துணைத் தலைவர் அவர்களே, அரசின் வருவாயைப் பெருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவைக் குறித்து நானும் ஒரிரு வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன்.

அரசுக்கு வருமானம் அதிகம் வரவேண்டுமென்பது தவிர்க்க முடியாதது. முன்னாலே டீசல் விலை உயர்வினால் கட்டணம் உயர்த்தப்படுகிறது என்று சொன்னோம். இப்பொழுது இதை அதிகரிக்கின்ற காரணத்தினால் மீண்டும் பஸ் பயணக் கட்டணத்தை அதிகரிக்கக் கூடாது என்றும், அதற்கு இது ஒரு ஆதாரமாக அமைந்து விடக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூலை 18] (திரு. மா. மணிமாறன்)

எங்கே பார்த்தாலும் தனியார் பேருந்துகளில் பயணிகளை எவ்வளவு வேண்டுமானாலும் ஏற்றிக்கொள்கிறார்கள். ஆனால் கார்ப்பொரேஷன் பஸ்ஸில் எப்பொழுதாவது அப்படி ஏற்றிக் கொள்கிறார்கள். பெரும்பாலும் தாராளமாக ஏற்றிக்கொள்வது இல்லை. விழாக் காலங்களில் அவ்வாறு அனுமதிக்கிறார்கள். தனியார் பேருந்துகளில் தாராளமாக ஏற்றிக் கொள்கிறார்கள். அதிகமாக வருமானம் பெற்றுக் கொள்கிறார்கள். தேர்தல் நேரங்களில் ஒருசில அரசியல் கட்சிகளை அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிற காரணத்தால், அவர்களும் வளரட்டுமே என்று அந்த எண்ணத்தில் அவர்களைத்தாராளமாக பயணிகளை ஏற்றிக் கொள்ளை அடிக்கவும் அனுமதிக்கிறார்கள், கட்டணத்தை ஏற்ற அனுமதிக்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

வரியை ஏற்றாமல் வசதிகளைப் பெருக்குவோம் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதிலிருந்து கொஞ்சம் மெள்ள மெள்ளத் தள்ளி வந்தாலும் நான் கேட்டுக் கொள்கிறேன், வசதிகளைப் பெருக்காவிட்டாலும், சாலைகளையாவது துப்புரவாகவும், சீராகவும் வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள். பயணிகளும், கார்களும், வாகனங்களும் செல்லக் கூடிய நேரங்களில், கஷ்டப்படாமல் செல்லக்கூடிய வகையில் சாலைகள் இல்லை என்பதை மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கீழத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள சாலைகளைப் பார்த்தால் தார்ச் சாலைகளாக இருந்தவைகள் எல்லாம் இன்றைக்குத் தரைச் சாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தால் வாகனங்கள் அதில் எந்த அளவிற்குப் போக முடியும்? லோடு அதிகமாக ஏற்றிச் செல்லக்கூடிய நேரத்தில் மழைக்காலத்தில் தார்ச் சாலைகளில் இருந்த தார் அப்புறப்படுத்தப்பட்டு தரைச் சாலைகளாக இருப்பதால் அவ்வப்பொழுது லாரிகளுக்கும் பஸ்களுக்கும் விபத்து ஏற்படுகிறது. எதை வேண்டுமென்றாலும் ஏற்றுங்கள், ஆனால் சாலைகளைப் பராமரித்து வைத்துக் கொள்ளுங்கள் என்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தார் போடுகின்றபொழுது நாம் பார்த்திருக்கிறோம். சாதாரணமாக தார் எப்படிப் போடுவார்கள் என்றால் ஜல்லியில் தாரைக்கலந்து போடுவார்கள், அதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இப்பொழுது முதலில் ஜல்லியைத் தரையில் பரப்பி விடுகிறார்கள். அப்படி ஜல்லியைப் பரப்பிவிட்டு தாரைக் காய்ச்சி, தாரைத் தெளிப்பதுபோல தெளித்து ரோலரை விட்டு போடுகிறார்கள் என்பதைச் சர்வ சாதாரணமாகப் பார்க்க முடியும். இதனால் குண்டும் குழியும் நிறைய ஏற்பட்டு அவைகள் விபத்துகளுக்குக் காரணமாக இருக்கின்றன என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. மா. மணிமாறன்) [1985 ஜூலை 18

குறிப்பாக நான் கேட்டுக் கொள்கிறேன், எந்த அளவிற்கு நீங்கள் உயர்த்தினாலும் சாலை பராமரிப்பை, அதிலும் குறிப்பாகக் கீழத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள சாலைகளைப் பொறுத்தவரையில் சிறப்பான முறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளைப் பராமரிப்பதோடுகூட, அகலப்படுத்த வேண்டிய பாலங்களை அகலப்படுத்தி, வாகனங்கள் வசதியாகச் செல்லக் கூடிய வகையில்.... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் சில சட்ட முன் வடிவுகள் இருக்கின்றன. சட்ட முன்வடிவின் மீது பேசுவதாக எனக்குத் தெரியவில்லை. சாலைகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் அமைச்சரிடத்தில் நேரிடையாகச் சொல்லிக் கொள்ளுங்கள்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில வருவாயைப் பெருக்குவதற்காத் நமது போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் வரியைப் பல்வேறு வகையான பிரிவுகளில் உயர்த்துவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். வருவாயைப் பெருக்காமல் ஒரு மாநிலத்தில் உள்ள மக்களுக்குத் தேவையான வசதிகளைப் பெருக்க முடியாது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால்வரியை உயர்த்துகின்றபொழுது அது கட்டுப்பாடாகவும், ஒழுங்காகவும் சீர்திருத்தமாகவும் இருக்க வேண்டும். பலபேர் இதைப் பயன் படுத்தி, இந்த சட்டத்தை ஏமாற்றுகின்ற வகையில், சர்க்காருக்கு வர வேண்டிய அந்த வருமானத்தை மறித்து ஒவ்வொரு நபரும் பெருக்கிக் கொள்ளக் கூடிய ஒரு நிலைமை வளர்ந்துகொண்டே வருகிறது. அந்த நிலைமையைத் தடுக்கவேண்டும்.

இன்றைக்கு 60 சீட்டுகளுக்கு வரி உயர்த்தப்படுகிறது. அதே நேரத்தில் இன்றைக்கு நமது அரசுப் பேருந்துகளிலேயே 100 பேர், 120 பேர், 90 பேர் என்று அளவின்றி ஏற்றிச் செல்லுகின்ற நிலை உள்ளது. இதையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லாரியில் ஐந்து டன்கள் என்று அதிகாரிகளிடத்தில் எடை போட்டுச் சொல்கிறார்கள். ஆனால் பத்து டன்களை ஏற்றுகிறார்கள். அந்த ஐந்து டன்களுக்கு வர வேண்டிய வருமானத்தை அரசாங்கத்திற்கு வரவிடாமல் ஏதோ ஒரு வகையிலே மறைமுகமாக எப்படியோ அது போய்க்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் ஒழுங்குபடுத்தினால்தான் அரசு எதிர்பார்க்கக்கூடிய வருவாய் அதிகமாகக் கிடைக்கும். சரக்கு வண்டிகளுக்கும் வரியை உயர்த்துகிறீர்கள். இரண்டு சக்கர வண்டி, மூன்று சக்கர வண்டிகளில் நகரங்களில் சரக்குகளைத் தள்ளிக்கொண்டு போகிறார்கள். அவைகளுக்கு முனிசிபாலிட்டிகளில் வரி போடுகிறார்கள். சின்னச்சின்ன வண்டிகள் போகின்றபொழுது இந்த



1985 ஜூலை 18] [திரு. பொ. உத்திராபதி]

சரக்குகள் மூலம் வாங்கப்படும் வரி மக்கள் தலையில்தான் விழும் சர்க்காருக்கு 10 சதவீதம் வருகிறது என்றால், அந்தச் சரக்குகளின் மூலம் இடைத்தரகர்கள் பெறுவது 90 சதவீதம் என்ற முறையில் சர்க்காருக்கு வர வேண்டிய வரியை போசடி செய்யக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே எதிர்காலத்தில் இதை ஒழுங்குபடுத்தி, செம்மைப்படுத்தி, இடைத்தரகர்கள் தங்கள் சொந்த வருவாயைப் பெருக்கிக்கொள்ளாமல், அரசாங்கத்திற்கு போடும் வரி அரசாங்கத்திற்கே வருகின்ற அளவிற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

(மாலை 6-10)

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களாலே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே எடுத்துச் சொல்ல அனுமதித்ததற்குத் தங்களுக்கு முதலிலே நன்றி சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டதற்கிணங்க இன்றைக்கு அரசினுடைய வருவாயைப் பெருக்குகின்ற அந்த நோக்கத்தோடு இந்த வரி விதிப்புக் கொண்டு வரப்படுவதை உள்ளபடியே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வரியைப் பொறுத்த வரையில் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், இந்த வரி விதிப்பதன் மூலம் ஒரு வேளை, கட்டணம் உயருமோ என்ற அச்சத்தை எல்லாம் இங்கே வெளிப்படுத்தினார்கள். ஏற்கெனவே, மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்றபொழுது கூட அமைச்சர் அவர்கள் இதுபற்றி மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் இனிமேல் கட்டணம் உயர்த்தப்படமாட்டாது என்ற அந்த உத்தரவாதத்தினைக்கூட இங்கே கொடுத்திருக்கிறார்கள். எனவே, இந்த வரி விதிப்பின் மூலம்பஸ் கட்டணம் நிச்சயமாக இதற்குமேல் இனிமேல் ஏறாது என்கிற வகையிலே இன்றைக்கு அரசு ஏழைகளைப் பாதிக்காத வகையிலே, அதை மிகவும் கண்காணித்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் சொல்கிறபொழுது, இப்படிப்பட்ட வரிவிதிப்பின் மூலம் என்ன செய்ய இருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, அவருடைய தொகுதியிலே இருக்கிற பாதைகளை எல்லாம் சரி செய்ய வேண்டுமென்றுகூட கேட்டுக்கொண்டார்கள். எனவே. இப்படிப்பட்ட வரி விதிப்பதனுடைய நோக்கமே அப்படிப்பட்ட சாலைகளை பழுதுபார்ப்பதற்கும், மேலும் மக்களுடைய வளர்ச்சிப் பணிகளைச் செய்வதற்கும் என்பதை அவர்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள். எனவே, இந்தச் சமயத்தில் நம்முடைய மாண்புமிகு

[திரு. செ. செம்மலை] [1985 ஜூலை 18

அமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறை பொறுப்பையும் கையிலே வைத்திருக்கின்ற காரணத்தாலே அவருக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நான் ஏற்கனவே போக்குவரத்து மானியக் கோரிக்கையிலே பேசும்பொழுதுகூட அந்தக் கருத்தை வலியுறுத்திச் சொன்னேன். இன்றைக்கு மோட்டார் வாகன வரி மூலம் நம்முடைய அரசுக்கு அதிக வருவாய் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது அந்தப் பணம் முழுவதும் பொதுவாக மக்களுடைய வளர்ச்சிப் பணி என்கிற வகையிலே செலவழிக்கப்படுகிறதே தவிர சாலை பராமரிப்பிற்கென்று அந்த வருவாயிலிருந்து ஒரு ஒதுக்கீடு இதுவரை செய்யப்படவில்லை. எனவே, வரியாக பணம் தருகிற அந்த வாகனங்கள் செல்கிற சாலைகளை நல்ல முறையிலே பராமரிக்கப்படவேண்டும். இல்லையென்றால் அந்த வாகனங்கள் செல்கிற சாலைகள் மேடு பள்ளங்களாக, குண்டு குழிகளாக இருந்தால் வாகனங்களுக்கு அதிகச் சேதாரம் ஏற்படுவதையும் தேய்மானம் ஏற்படுவதையும் நாம் பார்க்கிறோம். எனவே, அந்த வரி விதிப்புக்கு ஆட்படுகிற வாகனங்கள், அவை தனியார்களுடையதாக இருந்தாலும் சரி, அல்லது போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்துகளாக இருந்தாலும் சரி, அவை நல்ல முறையிலே பராமரிக்கப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எப்படியாவது, அவருடைய தனித் திறமை காரணமாக, அரசாங்கத்திடம் வாதாடி, ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை, குறைந்தபட்சம் 25 சதவீதம் இந்த வரியிலிருந்து வருகிற பணத்தைப் பராமரிப்புக்கு என்று ஒதுக்கி, அந்தச் சாலைகளை நல்ல முறையிலே பராமரிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைத்து, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைப் பெரும்பாலும் இங்கே, பேசிய அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் வரவேற்றுத்தான் பேசி இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். இன்னும் சொல்லப்போனால், அதை இன்னும் வலியூட்ட வேண்டுமென்ற வகையிலேகூட கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலமும் கடந்து விட்ட காரணத்தால் மிகச் சுருக்கமாக நான் முடிக்க விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். பேருந்துகளிலே, கூடுதலாக டிக்கட்டுகளை ஏற்றிச் செல்கிறார்கள் என்பதையும் அதே போன்று லாரிகளிலே கூடுதலாக எடைகளை ஏற்றி விடுகிறார்கள் என்பதையும் இங்கே அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இவை எல்லாம் கட்டுப்படுத்த வேண்டிய ஒன்றே தவிர, அப்படி ஏற்றுகிறார்கள் என்பதற்காக, அதற்கு அங்கீகாரம் கொடுப்பது ஆபத்தான சூழ்நிலையை விளைவிக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு பேருந்து எவ்வளவு பயணிகளை ஏற்றிச் செல்லலாம் என்பதை நாம் அலசிப் பார்த்து, ஆய்ந்துதான் முடிவு எடுத்து அதற்கேற்ப இப்பொழுது அமைத்திருக்கிறோம்.



1985 ஜூலை 18] [திரு. சு. முத்துசாமி]

எனவே அரசாங்கம் இதிலே வந்து நின்று, அதற்கு மேலே ஏற்றக்கூடியதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர அவர்கள் ஏற்றுகிறார்கள் என்பதற்காக அதற்கான கட்டணத்தை வசூலித்துக் கொண்டு, அதற்கு அங்கீகாரம் கொடுப்பது சரியாக இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில் கூட இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். சாதாரணமாக அன்பாகப் பேசிச் சொல்லும்போது, அதிகமாக நாம் கவனிக்காத நேரத்தில் சிலவற்றைப் பேசிவிட்டு போய்விடுவார்கள். அந்த வகையிலேதான் இப்போது சில வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார்கள். தனியார் பேருந்துகளில் நிறைய பயணிகளைஏற்றி செல்கிறார்கள். அரசாங்கம் தெரிந்தும் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுகிறது. தேர்தல் காலத்திலே அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்ற முறையிலே சில கருத்துக்களை மெதுவாகச் சொல்லிவிட்டு இப்போது வெளியிலே போய் இருக்கிறார்கள்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட ஒரு எண்ணம் இருந்தால் ஏன் இந்த வரியை இப்போது உயர்த்த வேண்டும் என்பதை நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களுடைய அனுபவத்தை எல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருப்பது அவ்வளவு சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் கட்டணம் உயர்த்தப்படுமா என்ற சந்தேகம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கிறது. நிச்சயமாக அப்படிப்பட்ட சந்தேகம் வரவேண்டிய அவசியம் இல்லை. இந்த அரசைப் பொறுத்தவரையில் எவ்வளவோ பிரச்சினைகளுக்கிடையிலும் கட்டணத்தை உயர்த்தாமல் சமாளித்து வந்த பிறகு, [illegible] முடியாத நிலைமையில்தான் உயர்த்தியிருக்கிறோம். ஆகவே இது கட்டண உயர்வுக்கு வழிவகுக்குமோ என்ற எண்ணம் எந்தக் காரணத்தினாலும் வரவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாலை வசதிகளைப் பற்றிச் சொன்னார்கள். சாலை வசதிகளைப் பொறுத்தவரையில் இந்த அரசு வந்த பிறகு எவ்வளவு கூடுதலாக சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். பராமரிப்பு என்பதைப் பொறுத்தவரையில் எத்தனையோ கிலோ மீட்டர் கூடுதலாக இந்த அரசு வந்த 8 ஆண்டு காலத்தில் பராமரிப்பு செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் மாண்புமிகு உறுப்பினர்கள்அறிவார்கள். வேறுஎந்த ஆட்சியிலும் செய்ய முடியாத அளவுக்கு இந்த அரசு செய்திருக்கிறது. பராமரிப்பு மட்டுமல்லாமல் கூடுதல் நீளத்திற்கு சாலைகளையும் அமைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1985 ஜூலை 18

மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் அதைப் போன்ற கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். திரு. செம்மலை அவர்கள் இதிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை இந்த ரோடுகளுக்கு ஒதுக்க முடியுமா என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே அரசாங்கம் ரோடு அமைக்க பணத்தை ஒதுக்கி இருக்கிறது என்றாலும் இதிலிருந்து ஒரு சதவீதத்தை ஒதுக்க வேண்டுமென்ற அளவுக்கு இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. எதிர்காலத்தில் இதுபற்றி சிந்திப்போம் என்று தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி.

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) வரி விதிப்புத் திருத்தச் (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி விதிப்புத் திருத்தச் (காலவரையறை பொருந்ாது என்பது) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 25/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

* 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1985 ஜூலை 18]

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தில் நான் இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் நல்ல சட்டம் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு இரண்டு மாதத்திற்குள் உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்துகொள்ள வேண்டுமென்று இருக்கிறது. இல்லை என்றால் வழக்கு தொடர முடியாது. ட்ரிபியூனல் அப்பீல் இரண்டு மாத இடைவெளிக்குள் உயர்நீதி மன்றத்தில் தொடர முடியவில்லை அல்லது தொடர முடியாமல் போய்விடுகிறது என்றால் அதற்கு என்ன காரணம் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

(மாலை 6-20)

அப்படி வர முடியாததற்கான காரணம் என்ன? அலுவலர்கள் போதவில்லையா? அல்லது அதிகாரிகள் போதவில்லையா? எனவே எத்தனை ஆண்டுக் காலத்திற்கு நாம் நீட்டித்துக் கொடுத்தாலும் தப்பு செய்கிறவர்கள் தொடர்ந்து தப்பு செய்து கொண்டுதான் இருப்பார்கள், தப்பித்துக் கொள்ள நினைப்பவர்கள் தப்பித்துக் கொண்டுதான் இருப்பார்கள். எனவே அவர்களை யாராலும் வெல்ல முடியாது ; அவர்களை யாராலும் தடுக்க முடியாது. தவறு செய்யவேண்டும் என்ற நோக்கம் உடையவர்களைப் பொறுத்தவரையில் எந்த சட்டம் வந்தாலும் அவர்கள் அதிலே இருந்து தப்பித்துக் கொள்கின்ற வழியினைக் கண்டுபிடித்து அதிலே தப்பித்து விடுவார்கள். எனவே அந்த அடிப்படையில் இதுபற்றிய உண்மை நிலவரங்களைப் பற்றி ஆராய வேண்டும். அதாவது அதிகாரிகள் போதவில்லையா அல்லது அலுவலர்கள் போதவில்லையா என்பதை ஆராய வேண்டும். ஏன் இதை இரண்டு மூன்று மாத காலத்தில் கொண்டுவர முடியவில்லை? அதிகாரிகள் போதவில்லை என்றால் அவர்களுடைய எண்ணிக்கையை அதிகரித்து, அந்த அதிகாரிகளின் வேலைப் பளுவைக் குறைக்கவேண்டும். காலவரையறையை நீட்டித்துக் கொண்டே போனால் கடைசியில் மூன்றாண்டுக் காலம் வரையில் நீட்டித்தாலும் அரசாங்கத்தினுடைய நோக்கம் நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற நிலைமைதான் ஏற்படும்.

எனவே இந்தச் சட்டத்தைத் திருத்தினாலும், எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், இருப்பவர்கள் நல்லவர்களாக இருந்தால் எந்தச் சட்டமும் தேவையில்லை. ஆனால் அதிகாரிகள் தவறு செய்பவர்களாக இருந்தால் எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் எதுவும் செய்துவிட முடியாது என்பதை உணர வேண்டும். எனவே இம்மாதிரி சட்டம் தேவையில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. மா. மணிமாறன்] [1985 ஜூலை 18

இதிலே கொடுக்கப் பட்டிருக்கின்ற பட்டியலை நான் பார்த்தேன். அட்டவணையில் சேர்க்கின்ற நேரத்தில் பல பட்டியல்களைக் கொடுத்திருக்கிறார்கள். குதிரைப்பந்தயம் வருகிறது; தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் வருகின்றது இப்படி பல சட்டங்கள் வருகின்றன. ஆனால் அவற்றின் நோக்கம் நிறைவேற்றப்படுகின்றதா என்றால் நிறைவேற்றப்படுவதில்லை எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்படுகின்றதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படுவதில்லை. குதிரைப் பந்தயத்தைப் பொறுத்த வரையில் நடக்கின்ற தவறு தொடர்ந்து நடக்கின்றது இவற்றை ஒழிக்க வேண்டாமா? அவற்றை ஒழிக்க எந்தவிதமான முயற்சியும் கிடையாது. கேளிக்கை வரிச் சட்டத்திற்கான திருத்தத்தைச் சேர்த்திருக்கிறார்கள்.

நமக்கும் தெரியும், எப்படிப்பட்ட சினிமாக்களுக்கு கூட்டம் போகிறது என்று. அப்படிப்பட்ட சினிமாக்களைக் காட்டுகின்றவர்கள் காட்டிக்கொண்டு தான் இருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட படங்களைப் படம் ஓடிக்கொண்டு இருக்கின்ற நேரங்களிலேயே காட்டுகிறார்கள். அப்படிப்பட்ட படத்தைப் பார்ப்பவர்கள் அவற்றை பார்ப்பதற்காக உள்ளே சென்று பார்க்கிறார்கள் பார்ப்பவர்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். படம் காட்டுகின்றவர்கள் காட்டிக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் இதுபற்றி அரசின் கவனத்திற்கு வந்தால் நாம் என்ன செய்கிறோம் என்றால் லைசன்ஸை ரத்து செய்கிறோம். லைசன்ஸை ரத்து செய்வதால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் தான் வராமல் போகும். அவர்களைப் பொறுத்தவரையில் ஒன்றும் இல்லை. எனவே நான் என்ன கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்றால் அப்படிப்பட்ட படங்களைப் போட்டு எந்த அளவுக்கு அவர்கள் வசூலிக்கிறார்களோ அதைவிட இரண்டு, மூன்று மடங்கு கூடுதலாக அவர்களிடத்திலிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுத்தால் தான் நன்றாக இருக்கும்.

மேலும் அவர்கள் எழுதுகின்ற கணக்குகளைப் பார்த்தால் இரண்டு கணக்குகள் இருக்கும். கணக்கே எழுதாத நிலைமையும் இருக்கின்றது; அதே நேரத்தில் பல கணக்குகள் எழுதுகின்ற நிலைமையும் இருக்கின்றது. எனவே தவறு செய்கிறவர்கள் தொடர்ந்து செய்துகொண்டே தான் இருக்கிறார்கள், அவர்களைத் தடுக்க நாம் என்ன செய்திருக்கிறோம் என்பதை ஆராய வேண்டும். சட்டங்களைத் திருத்துவதை விட மற்ற காரியங்களில் உரிய கவனத்தையும் அக்கறையையும் செலுத்த வேண்டும் என்று கேட்டு கொண்டு, இப்படி எதற்கெடுத்தாலும் சட்டத்தைத் திருத்துவதும், புதிய சட்டங்கள் கொண்டு வருவதும் என்ற நிலைமைக்குப் பதிலாக மற்ற காரியங்களைச் செய்வதில் அக்கறை காட்டினால் இந்த ஆட்சிக்கும், நாட்டுக்கும் நல்லது என்பதைச் சொல்லிக் கொண்டு அடிக்கடி சட்டத்திருத்தங்களையும், சட்டங்களையும் கொண்டு வருவது நன்றாக இருக்காது என்று சொல்லி அமர்கிறேன்.



1985 ஜூலை 18]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டும், அவர்கள் ஏதோ லிமிட்டேஷன் என்ற காரணத்தைச் சொல்லி தப்பித்துக் கொள்ளக் கூடாது என்ற நோக்கத்துடன் இந்தச் சட்டம் கொண்டு வரப் பட்டிருக்கின்றது. அரசினுடைய வருவாயைப் பெருக்குவது சம்பந்தமான சட்டங்கள் இந்தச் சட்டங்கள். சில தவறுகளை ஏற்படுத்துகின்றவர்களைக் காப்பாற்றிவிடக்கூடாது, அவர்களைத் தண்டிக்கவேண்டும் அவர்கள் மேல் வழக்கு போடவேண்டும் என்ற உணர்வு இருப்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அதே நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வியாபாரிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்குச் சிரமங்களை ஏற்படுத்தக் கூடிய முறையில், அதாவது இந்தச் சட்டங்களை நடைமுறைப் படுத்தக்கூடிய நேரத்தில் அவர்களுக்குச் சிரமங்கள் ஏற்படுத்தக்கூடிய நிலைமை இல்லாத வகையில் தகுந்த பாதுகாப்பு வியாபாரிகளுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த லிமிடேஷனை சட்டத்திலிருந்து விதிவிலக்கை கொடுத்து எவ்வளவு வருஷங்கள் ஆனாலும் கூட, லாங்பீரியட்ஸ் ஆனாலும் கூட, குற்றங்களின் மேலே கேஸ் போடுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய முறையிலே இந்தச் சட்டம் அமைகிறது. இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், பொருளாதார சம்பந்தமாக சில குற்றங்களைப் பொறுத்த அளவிலே அதை ஆய்வு செய்வதிலேயும், கண்டு பிடிப்பதிலேயும் காலதாமதமும், சிரமங்களும் ஏற்படும் என்பதை நான் மறுக்கவில்லை. அதே நேரத்திலே பல வருடங்களுக்குப் பிறகு, 10 வருடம் 15 வருடம் ஆனதற்குப் பிறகும் கூட, அந்தக் குற்றங்களுக்கு கேஸ் போடுவதற்கான அனுமதி உள்ள ஒரு நிலை இருப்பதாவது சரியாக இருக்காது.

வேண்டுமானால் ஏற்கெனவே உள்ள சட்டத்திலே 2 வருடம் 3 வருடம் என்று காலம் இருப்பதை, இன்றைக்கு இருக்கக்கூடிய தன்மையின் அடிப்படையிலே, லிமிட்டேஷனை சற்று உயர்த்திக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாமே தவிர, இப்படி ஒரேயடியாக லிமிட்டேஷனே இல்லாமல் செய்யக்கூடாது. ஆகவே அந்த முறையிலே திருத்தங்கள் செய்வதுதான் சரியாக இருக்கும். அப்படி இல்லாமல் லிமிட்டேஷன் இல்லை என்று சொல்லி ஒரேயடியாக அந்தச் சட்டத்தின் கீழே வரக்கூடிய வழக்குகளுக்கு விதிவிலக்கு கொடுப்பது வியாபார சமுகத்தைப்பொறுத்த அளவிலே பாதிப்பு ஏற்படுத்துவதாக அமையும். அல்லது அதிகாரிகள் அதை சில காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அல்லது மற்றைய விரோத உணர்வோடு அவர்கள் மீது கேஸ்களைப் போடுவதற்கான அபாயமும், ஆபத்தும் இந்த சட்டத்திலே இருக்கிறது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஜூலை 18

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை.)

ஆகவே, அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகள் காரணமாக வியாபார சமுகத்திற்கிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தும் வகையில் இந்தச் சட்டத்திருத்தம் காரணமாக இருக்கிறது. இந்த சட்டத்தின் கீழே வரக்கூடிய குற்றங்களை தடுக்கக்கூடிய முறையில் வழக்குகளைப் போடக் கூடிய நிலைமையில் அது உண்மையில் அமையாது என்பதையும், அதற்கு தகுந்த அளவிலே பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏதாவது அரசு எடுக்கவேண்டும் என்றும் கேட்டு கொள்கிறேன். அந்த முறையிலே இந்தச் சட்டத்தை அமல் படுத்தக்கூடிய நேரத்தில் இதை ஒரு பிரத்யேகமான கவனத்தோடு அமல்படுத்த வேண்டும் என்று கேட்டு என்னுடைய கருத்துக் களை தெரிவிப்பதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

* **மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே கால வரையறை பொருந்தாது என்ற சட்டமுன் வடிவினைக் கொண்டு வந்து அதன் மேல் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி முடித்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் கொண்டு வரப் பட்டதன் நோக்கம், இன்று இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் காலவரையறை இருக்கின்ற காரணத்தால், வரி விதிப்புச் சட்டத்தின் கீழ், பொருளாதாரக் குற்றங்கள் பலவற் றிற்கு குறிப்பிட்ட காலத்திற்குள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியவில்லை என்பதாலும் அதனால் பல்வேறு வழக்குகளைத் தொடர முடியாமல் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்கிற அந்த அடிப்படையிலும், இந்தச் சட்ட முன்வடிவினைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சட்டத் திருத்த முன்வடிவினைக் கொண்டு வருவது நம்முடைய மாநிலத்திலே மட்டும் அல்ல, இதற்கு முன்பு 1974 ஆம் ஆண்டு மைய அரசு, சென்டிரல் ஆக்ட் 12/1974 என்ற அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, அங்கே மத்திய விற்பனைவரிச் சட்டத்திலிருந்தும், வருமானவரிச் சட்டத்தி லிருந்தும் அதுபோன்ற வேறு பல சட்டங்களிலிருந்தும், அங்கே பொருளாதார குற்றங்கள் நடைபெறுகிற நேரத்தில், கால வரை யறையை நீட்டி, நீதிமன்றத்திற்குச் சென்று, சிறப்பாக வரியை வசூலிப்பதற்கான வகையைச் செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து மகாராஷ்டிரா மாநிலம் கூட இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இப்போது தமிழக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால், இது முதல் தடவை அல்ல. இதற்கு முன்னாலே இதே மாமன்றத்திலே இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டு, இந்த அவை யிலேயே நிறைவேற்றப்பட்டதற்கும் பிறகு, சட்டமன்றம் கலைக்க பட்டதன் காரணமாக அது திரும்பக் கொண்டு வரப்பட்டு, தப்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 ஜூலை 18] [திரு. தா. வீராசாமி]

(மாலை 6-30)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் பேசுகிறபோது, இங்கே பொருளாதார குற்றங்களை பற்றி சொல்கிறபோது, ஏன் அரசு அதிகாரிகள் வேகமாக இதன் மேல் காரியங்களை ஆற்றவில்லை என்று கேட்டார்கள். இது அரசின் அதிகாரிகளால் அல்லது வரிவிதிப்பு துறையில் இருக்கிற தீர்ப்பாயங்களால் வழக்கு தொடரப்பட்டு தீர்க்கப்படுபவை அல்ல. இவை கிரிமினல் வழக்குகள் என்றும், நீதிமன்றங் களுக்குச் செல்ல வேண்டும் என்றும் உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அந்த வகையில் குற்றங்களைத் தெரிந்து, தெரிந்த பிறகு அதனை ஆய்ந்து, பிறகு அதனை புலனாய்விற்கு விட்டு பிறகு குற்றங்களை அறிந்து நீதிமன்றங்களுக்குச் செல்வதற்குள் 6 மாதங்கள் அல்லது ஒரு வருடம் அல்லது 3 ஆண்டுகள் என்று இருக்கக்கூடிய அந்த காலவரையறை போதவில்லை என்ற காரணத்தால், இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் இருக்கிற பல்வேறு வரி விதிப்புச் சட்டங்களின் கீழ் 5000-க்கு மேற்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் எடுத்துச் சென்று அவைகள் மேல் வழக்கு தொடர முடியவில்லையென்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்,

எனவேதான் அப்படிப்பட்ட பொருளாதார குற்றங்களி லிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்ளாமல் அவர்களிடமிருந்து வரியை வசூலிப்பதற்கு இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப் பட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் பேசுகிற போது கால வரையறையைப் போக்குகிற வகையில் சட்டதிருத்தம் கொண்டு வந்து, பிறகு இதை பல ஆண்டுகள் நீட்டித்து நீதிமன்றங்களுக்குப் போகிற நிலைமை ஏற்படக்கூடாது என்று சொன்னார்கள், இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வருகிற நோக்கமே வருவாய் இழப்பு ஏற்படக்கூடாது என்பதற்காகவும், பொருளாதார குற்றங்களைப் புரிகிறவர்கள் தப்பித்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகவும் தான் கொண்டு வந்திருக்கிறோம். இதனால் கால நீட்டிப்பு அரசு துறை செய்து, அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தாது என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். வேண்டிய நேரத்தில் சட்டத்தின் மூலமாக முறையாக அரசு செயல்படும் என்பதைக் கூறிக் கொண்டு இந்த சட்ட முன்வடிவை ஏற்றுக் கொள்ளும்படியாக கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புத் திருத்தச் (காலவரையறை பொருந்தாது என்பது) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1

Mr. SPEAKER : The question is :

'Clause I do form part of the Bill'.

THE HON. THIRU T. VEERASWAMY : Mr. Speaker, Sir, I move the following amendment: "That in clause 1, insub-clause (1), for the expression 'Tamil Nadu Taxation Laws Amendment (Inapplicability of Limitation) Act, 1985, substitute the expression 'Tamil Nadu Taxation Laws (Inapplicability of Limitation) Act, 1985."

The amendment was put and carried.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 1, திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப்பட்டது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புத் திருத்தச் (கால வரையறை பொருந்தாது என்பது) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1985), திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.





(உ) பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல் கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு 1985.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத், தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 46/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டிகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள், ஆகியவர்களை முறைப்படுத்துவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் உரிமம் வழங்குவதற்கும் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள், இங்கே கொடுக்கப்பட்ட காரண காரிய விளக்கங்களைப் பார்க்கிறபோது தமிழ் நாட்டில் உள்ள டிங்கர் கடைகள், மோட்டார் வண்டி வகைகளைப் பழுது பார்க்கும் பட்டறைகள் மற்றும் பழைய இரும்புத் துணுக்குக் கடைகள், போக்குவரத்திற்கும் சுகாதாரச் சீர்கேடுகளுக்கும், பொது மக்களுக்குத் தொல்லை அளிப்பதுமாயிருக்கின்றன, சில நேரத்தில் தெரிந்தோ அல்லது தெரியாமலோ, திருட்டுப் பொருட்கள் மேற்சொன்ன இடங்களில் வாங்கப்படுகின்றன, மற்றும் பொது மக்களிடையே விற்கப்படுவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என சொல்லப்பட்டு இருக்கிறது.

மேற்படி கடைகளை உரிமம் வழங்கும் முறையின் கீழ் கொண்டு வருவதன் மூலம் ஒழுங்கு முறைப்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் முன் மொழியப்பட்டு இருக்கிறது. இன்றையதினம் இப்படிப்பட்ட வியாபாரிகள் தவறு செய்தால் போலீஸ் நடவடிக்கை எடுத்து அவர்கள் மீது இப்போதே கூட நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள், அல்லது அவர்களுக்கு அபராதம் போன்றவற்றை விதித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதே மாதிரியாக பட்டறைகள் வைத்துக் கொண்டிருப்பது போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்தால், அவர்களையும் போக்குவரத்து போலீசார் விடுவதில்லை. அவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து வழக்கு தொடர்ந்து தண்டனை—அபராதம் போன்ற

*1985 ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 17ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

வற்றை வாங்கிக் கொடுக்கிறார்கள். எனவே இதற்கு என்று ஏற்கெனவே சட்டம் இருக்கின்ற போது புதிதாக ஒரு சட்டம் கொண்டு வந்து மேலும் அந்த வியாபாரிகளை பல தொல்லைகளுக்கு ஆட்படுத்துவது நல்லதாக இருக்காது என்று நான் கருதுகிறேன். மேலும் அவர்களுடைய கடைகளை உரிமம் வழங்கும் முறையின் கீழ்கொண்டு வந்து ஒழுங்குமுறைப்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அவர்கள் உரிமம் வாங்குவதற்கு முறையாக விண்ணப்பம் செய்ய வேண்டும் என்றும், அந்த வியாபார இடம், அல்லது மோட்டார் பழுது பார்க்கும் பட்டறைகள் அல்லது டிங்கர் கடைகள் ஆகியவற்றின் வரைபடமும், அதை வரையறுக்கக்கூடிய முறையில் அவைகள் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

இந்தத் தொழிலைச் செய்து கொண்டு வரும் வியாபாரிகள் பல்லாண்டுக் காலமாக பல இடங்களில் புதுப்பேட்டை, அண்ணா சாலை போன்ற பகுதிகளிலும், மூர் மார்க்கெட் போன்ற இடங்களிலும் அவர்கள் வியாபாரம் செய்து கொண்டு வருகிறார்கள். மேலும் மாலை நேரங்களில் கூட இப்படிப்பட்ட பழைய இரும்பு வியாபாரிகள் தங்களுடைய தொழிலைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். இதிலே கிட்டத்தட்ட 200-க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வியாபாரம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இன்றைய தினம் அந்த இடத்திலே வரைபடத்தை வைத்து, எதிர்காலத்தில் அதற்கான உரிமத்தைப் பெற்று அவர்கள் வியாபாரம் செய்ய வேண்டும் என்று சொன்னால், அவர்கள் எல்லாம் படிக்காதவர்கள், ஏழை எளியவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தான் அந்த வியாபாரத்திலே இன்றைக்கு ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல் மோட்டார் சாமான்கள் வாங்குகிற பழைய இரும்பு வியாபாரிகள் கூட இன்றையதினம் அவர்கள் கடைகளை நீண்ட காலத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டு விட்ட காரணத்தால் இந்தப் புதிய சட்டத்தின் காரணமாக அவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகக் கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால் எதிர்காலத்திலே நிர்வாகத்திற்கு இது நல்லதாக இருந்தாலும் இன்றையதினம் அவர்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாத வகையில் இந்தச் சட்டம் அமைக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மாலை நேரத்தில் வியாபாரம் செய்கிற, அந்தப் பழைய இரும்பு வியாபாரம் செய்கிற அவர்களும் கூட இந்த உரிமத்தை வாங்க வேண்டும் என்று சொல்வது அவர்களை மிகவும் கஷ்டப்படுத்துவதாகும். எனவே அவர்களுக்காவது இந்த அரசு விதிவிலக்குக் கொடுத்து, அந்த உரிமம் பெறுவதிலேயிருந்தும், போலீஸ் அனுமதி பெறுவதிலேயிருந்தும் விதிவிலக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்தச் சட்டத்தின் மூலமாக அவர்கள் எதிர்காலத்திலே மாநகராட்சி அதிகாரிகளிடமும், போலீஸ் அதிகாரிகளிடமும் சென்று பல தொல்லைகளுக்கு ஆளாகின்ற வகையில்



இருக்கும். அவர்களுக்கு பல தொல்லைகளைக் கொடுப்பதாக இந்தச் சட்டம் அமைகிறது. இது போலீஸ்காரர்களுக்கும், மற்றும் மாநகராட்சி அதிகாரிகளுக்கும் மேலும் அதிகாரத்தைக் கொடுத்து—மேலும் பல சலுகைகளை அளிப்பதோடு—அவர்களிடமிருந்து உரிமம் வாங்கவேண்டும் என்று சொல்வதால், ஏழை எளிய மக்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்ற நிலைமையை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள். பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் முறைப்படுத்தல் சட்ட முன்வடிவின் மீது எனக்கு முன்பாக பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் அவர்கள், இந்தச் சட்டமுன்வடிவு காவல்துறைக்கும், மாநகராட்சி அதிகாரிகளுக்கும் சலுகைகள் தரும் என்று சொன்னார்கள். அவர்கள் ஒன்றை மறந்து விட்டார்கள். சென்னை மாநகர் மக்கள் இந்த 'tinker Shop'களினால் இந்த காயிலாங்கடை வியாபாரிகளால் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அவர்கள் ஏனோ மறந்து விட்டார்கள். சென்னை மாநகர் மக்களின் நலனைக் கருதி மிக அற்புதமான இந்தத் திட்டத்தை நீங்கள் பாராட்ட வேண்டும்.

(மாலை 6—40)

இன்றைக்கு நகர்ப்புறங்களில் அருமையாக கட்டப்படுகின்ற நகரங்களில் கூட இடையில் ஒரு 'Motor Lorry Auto Shop' என்று கண்டபடி அமைத்துக் கொண்டு அங்கே வசிக்கின்ற மக்களுக்கு எல்லாம் தொல்லை கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியில் வசிக்கின்ற மக்கள் பெரும் கவலைப் படுகின்றார்கள். இதற்கு எல்லாம் விடிவு இல்லையா என்று கேட்டுக் கொண்டு இருக்கிற ஒரு சூழ்நிலையில் இந்த அற்புதமான திட்டத்தை கொண்டு வந்து இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசை, உள்ளாட்சித் துறை அமைச்சரை பாராட்ட வேண்டும். அதை விடுத்து அவர்கள் ஏதோ குறை சொல்வதற்காகவே, எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே எதிர்க்கிறார்கள்.

நீங்கள் பார்ப்பீர்களானால் சென்னை மாநகரில் அனைத்து இடங்களிலும் கண்ட மேனிக்கு அவர்கள் விரும்புகின்ற இடங்களில் எல்லாம் 'auto mechanic shop' என்று அமைத்துக் கொண்டு லாரி, கார்களை வீட்டு பழுது பார்க்கின்ற காரணத்தால் பொதுமக்கள் எவ்வளவு பாதிக்கிறார்கள். சுற்றுப்புற சூழல் பாதிக்கப்படுவது மட்டும் அல்லாமல், அங்கே இரவு நேரங்களில் அவர்கள் லொட்டு லொட்டு என்று அடித்து தூங்குவதற்கு தொல்லை கொடுத்துக் கொண்டு, போக்குவரத்து நெரிசலை உருவாக்குகின்ற முறைகேடுகளை மாற்றுவதற்காக இது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதே போல், இன்றைக்கு நல்ல தொழிலை செய்து கொண்டு இருக்கிற இந்த காயிலாங்கடை வியாபாரிகளை அவசர நேரங்களில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் காவல் துறையினர் அவர்களை அழைத்துச் சென்று வழக்கு பதிவு செய்கின்ற சூழ்நிலையை மாற்றுவதற்கு, யாரோ ஒரு சிலர் செய்கின்ற தவறுக்கு உண்மையாக தொழிலைச் செய்கின்ற இந்த காயிலாங்கடை வியாபாரிகளின் மீது வழக்கு பதிவு செய்கின்ற அந்த சூழ்நிலையை மாற்றுவதற்காகத் தான் இன்றைக்கு இந்த ஒரு அற்புதமான சட்டமுன்வடிவை கொண்டு வந்து இருக்கிறோம்.

ஏன், இன்றைக்கு டீ கடைக்கு லைசென்ஸ் வழங்குகிறோம். அதே போல் எல்லாக் கடைகளுக்கும் உரிமை வழங்குகிறோம். உரிமை வழங்குவதில் என்ன தவறு? முறைப்படுத்திச் செய்வதில் என்ன தவறு? எதற்கும் ஒரு முறை வேண்டும். நெறி வேண்டும் என்ற அந்த அடிப்படையில் இந்தச் சட்டமுன்வடிவு வருகிறதே தவிர யாரையும் பழி வாங்குவதற்கோ அல்லது தங்களுக்கு வேண்டியவர்களுக்கு சலுகை அளிப்பதற்காகவோ அல்ல என்பதை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக் கொள்வது: சென்னை மாநகரில் இருக்கின்ற காய்கறி கடை உள்ள கொத்தவால் சாவடியை நகருக்கு அப்பால் கொண்டு சென்றிருக்கிறீர்கள். அந்த 'பேசின் பாலம்' பகுதியில் உள்ள இரும்பு வியாபாரத்தை எல்லாம் மணலியின் அருகே கொண்டு போக இருக்கிறீர்கள். அதைப் போலவே இந்த ஸ்பேர் பார்ட்ஸ் சாமான்கள் விற்பதையும் இந்த 'auto mechanic works' போன்ற பணிகளைச் செய்வதற்கு 'ஆட்டோ நகர்' என்ற நகரை அமைத்து சென்னை மாநகருக்கு அப்பால் தென் சென்னை, வடசென்னை என்று பிரித்து இரண்டு, மூன்று இடங்களில், தாம்பரத்திற்கு அருகிலோ அல்லது போரூருக்கு அருகிலேயோ இந்த இடத்தை நீங்கள் அமைத்துக் கொடுத்தால் நிச்சயமாக சென்னை மாநகர் மக்கள் நம்மை பாராட்டி வாழ்த்துவார்கள்.

ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லும் போது இங்கே சென்றால் அனைத்துப் பொருட்களையும் வாங்கிக் கொள்ளலாம், இங்கே சென்றால் எல்லா விதமான ஸ்கூட்டர், கார், லாரி, என அனைத்து வாகனங்களையும் பழுது பார்க்கலாம் என்ற அந்த முறையை ஒரு குறிப்பிட்ட இடங்களில் மெக்கானிக் பார்ப்பதற்கும், ஸ்பேர் பார்ட்ஸ் சாமான்கள் வாங்குவதற்கும் அங்கே இருக்கின்ற கடைகளுக்கு எல்லாம் உரிமத்தை வழங்கி அங்கே தான் இருக்கவேண்டும்; வேறு எங்கேயும் இருக்கக் கூடாது என்ற அந்த முறையில் கொண்டு வரப்படுமானால் நிச்சயமாக இது சென்னை மாநகர் மக்களுக்குப் பலன் தரும். இல்லை என்றால் இன்றைக்கு கடுமையான போக்குவரத்து நெரிசலினால் மக்கள் சிரமப்படுவார்கள், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படும்.



உதாரணமாக சி. ஐ. டி. நகர் பகுதியில் லாரி மெக்கானிக் ஷெட் இருக்கிறது. அதனால் இன்றைக்கு ஏறத்தாழ ஒரு நாளைக்கு 80 லாரிகள், 90 லாரிகள், 100 லாரிகள் என்று தினமும் அங்கே வந்து மக்களுக்குத் தொல்லையாக இருந்து கொண்டு இருக்கிறது. இதனால் சாலை வசதியும் செய்ய முடியவில்லை. அங்கே மக்கள் சுகாதாரமாக இருக்கவும் முடியவில்லை. அங்கே இவர்கள் மெக்கானிக் ஒர்க் செய்வதால் அங்கே லாரிகளைக் கழுவுவதால் அந்த நீர் குட்டைபோல் தேங்கி அதனால் கொசுக்களின் தொல்லையையும் அதிகமாக ஏற்படுகிறது. இப்படிப்பட்ட அவலமான சூழ்நிலையைப் போக்கத் தான் உரிமை பெற வேண்டும் என்று நாம் சட்டம் கொண்டு வருகிறோம்.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்லப் போனால் யார் யாரோ மெக்கானிக் ஷாப் அமைத்து விடுகிறார்கள், தொழில் தெரிந்தவன், தெரியாதவன் எல்லாம் வைத்து விடுகிறான். அதனால் ஒரு முழுமையான வண்டியை கொண்டு சென்றால் அவனே பழுதுபார்த்து அதைகெடுத்துவிடுகிறான். அந்தச் சூழ்நிலைகளை மாற்றுவதற்காக தகுதி பெற்ற, தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு இதிலே முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு உரிமை வழங்கி இந்த மெக்கானிக் ஷாப்புகளை பயன்படுத்துகின்ற வகையில் முழுமையான தொழில் பயிற்சி பெற்றவர்கள் இந்த மெக்கானிக் ஷாப் நடத்துவதற்கு நாம் இந்தச் சட்டத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டும் அல்ல. இன்றைக்கு சென்னை மாநகரில் எல்லா தெருக்களிலும் இந்த காயிலாங்கடை, பழைய இரும்பு சாமான்களை சாதாரணமாக வாங்கிக் கொண்டு வருகிறார்கள். வாங்கிக்கொண்டு வண்டிகள் மூலம் நடந்து, சைக்கிளில் சென்று கொண்டிருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கும் அந்த லைசென்ஸைக் கொடுத்து, அவர்கள் ஒரு இடத்தில் அந்தப் பொருளைக் கொடுப்பதற்கும், வாங்குவதற்கும், இந்தச் சட்டத்திலே அவர்கள் பலன் பெறுகிற வகையிலேயும் இடம் பெறச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, சென்னை மாநகரத்தினுடைய பகுதிகளை எழில்படுத்த, அழகுபடுத்த, சென்னை மாநகர மக்கள் இது போன்ற நியூசென்ஸ், தொல்லைகளிலிருந்து விடுபட, இந்த லாரி மெக்கானிக், ஸ்பேர் பார்ட்ஸ் சாமான்கள் விற்பனை போன்றவைகளை எல்லாம் சென்னை நகருக்கு வெளியே கொண்டு சென்று 'ஆட்டோ நகரை' அமைத்து அதற்குண்டான பணிகளை விரைவில் செய்யுங்கள்.

ஆனால் அந்த உரிமத்தைக் கொடுப்பது, சென்னை நகரத்திற்குள்ளேயே மீண்டும் கொடுத்தால் மீண்டும் மக்களுக்கு தொல்லை ஏற்படும். எனவே, அதை நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். சென்னை மாநகரத்தில் என்றாலும் கூட

குறிப்பிட்ட இடத்தில் தான் அது இருக்க வேண்டும். எல்லா இடங்களிலேயும் இருக்கக் கூடாது என்று சொல்லி, இந்த அற்புதமான, சென்னை மாநகர மக்களைக் காப்பாற்றுவதற்காக வந்து இருக்கிற சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசாங்கத்தின் சார்பாக முன்மொழியப்பட்டு இருக்கக்கூடிய 'தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள் பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல் கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) என்ற இந்தச் சட்டத்தின் நோக்கங்களை பின்னாலே கூறும்போது, காரண நோக்கங்களை விளக்கும் போது, 'தமிழ்நாட்டிலுள்ள டிங்கர் கடைகள், மோட்டார் வண்டி வகைகளைப் பழுது பார்க்கும் பட்டறைகள் மற்றும் பழைய இரும்புத் துணுக்குக் கடைகள் போக்குவரத்திற்கும், சுகாதாரச் சீர்கேடுகளுக்கும், பொது மக்களுக்குத் தொல்லை அளிப்பதுமாயிருக்கின்றன. சில நேரத்தில் தெரிந்தோ அல்லது தெரியாமலோ திருட்டுப் பொருட்கள் மேற்சொன்ன இடங்களில் வாங்கப்படுகின்றன, மற்றும் பொதுமக்களிடையே விற்கப்படுவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி கடைகளை உரிமம் வழங்கும் முறையின் கீழ் கொண்டு வருவதன் மூலம் ஒழுங்கு முறைப்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, மேற்படி கடைகளை ஒழுங்கு முறைப்படுத்தவும், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் தனிச்சட்டம் ஒன்று கொண்டு வரலாம் என்று அரசு முடிவு செய்து இந்தச் சட்ட முன்வடிவை கொண்டு வந்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தின் 11-வது பிரிவில் உரிமம் இல்லாமல் வியாபாரம் நடத்துவதற்குத் தண்டனை விதிக்கப்படும் என்பது— எவரேனும் உரிமம் இல்லாமல் அல்லது உரிமத்தின் வரையறைகளையும், நிபந்தனைகளையும் மீறி இரும்புத் துணுக்கு வணிகர் பழைய இரும்பு வியாபாரம் செய்தால் அல்லது மோட்டார் வண்டிவகைகளைப் பழுது பார்க்கும் பட்டறையை அல்லது டிங்கர் கடையை நடத்தினால் அவருக்கு ஓராண்டுக் காலம் வரையில் சிறைத்தண்டனையும், ஐயாயிரம் ரூபாய் வரையில் அபராதமும் விதிக்கப்படும் என்று 11-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் நம்முடைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னவென்றால், இது ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். அதற்கு உரிமம் வழங்க வேண்டும் என்பதிலே எனக்கோ, நான் சார்ந்து இருக்கிற கட்சிக்கோ ஆட்சேபணை இல்லை. ஆனால் இந்த நேரத்தில் இன்று நாடு முழுவதும், தமிழகத்திலும் இருக்கக்கூடிய வேலை



அற்ற நிலைமைகளையும், படித்து அல்லது படிக்க வாய்ப்பற்று வேலைக்கு அலைந்து கொண்டிருக்கக்கூடிய இலட்சோப இலட்சக்கணக்கான இளைஞர்களின் வாழ்க்கையும் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதையும், இதிலே சேர்த்து நினைத்து பார்க்க வேண்டும், என்று தான் நான் அமைச்சர் அவர்களையும், அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஐ.டி.ஐ. படித்தவர்கள் அல்லது ஐ.டி.ஐ. படிப்பதற்கு வாய்ப்பற்று சில கடைகளிலே சேர்ந்து, சிறு வயதிலேயே, மோட்டார் சைக்கிள், அல்லது மோட்டார், டிராக்டர் அல்லது லாரி ஆகியவைகளை பழுது பார்க்கக்கூடிய தொழில்களைக் கற்றுக் கொண்டு சிறு, சிறு பட்டறைகளை நடத்தக்கூடிய, அப்படிப்பட்டோர் தங்களுடைய வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அந்தத் தொழிலில் இருக்கக்கூடியவர்கள், தொழில் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய இளைஞர்களை அச்சுறுத்தக்கூடிய வகையில், இது அமையக்கூடாது என்பதையும் அந்த நிலைமைகளை உண்டாக்கக்கூடிய முறையில் இருக்கக் கூடாது என்பதையும் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனவே உரிமம் வழங்கி, ஒழுங்குபடுத்துவதை வேண்டாம் என்று நான் கூறவில்லை. உரிமங்கள் வழங்கப்படும்போது, இன்று எத்தனையோ சிறு தொழில்களுக்கு, கடைகளுக்கு, ஓட்டல்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளே அந்த உரிமங்களை வழங்கி, அந்தத் தொழில்களை நடத்தச் சொல்கிறார்கள். நகரசபைகள், ஒன்றியங்கள், ஊராட்சிகள் இவைகளே உரிமங்கள் வழங்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அப்படி அந்த அமைப்புகளின் மூலமாக அந்த உரிமங்கள் வழங்கப்பட அதிகாரம் வழங்கி, அந்தச் சட்டங்களை மாற்றம் செய்தாலே போதுமானது.

இதற்காக தனியாக ஒரு சட்டத்தை தமிழகம் முழுவதுக்கும் கொண்டு வரவேண்டும் என்று அரசு நினைப்பது சரி அல்ல என்று நான் கருதுகிறேன். ஒவ்வொரு சட்டத்திலும் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து, மொத்தமாக காவல்துறையினுடைய கையிலே போய்ச் சேரக்கூடிய அதிகாரம், அது தவறாகப் பயன்படுத்தக்கூடிய நிலைமைகள் இருக்கும்.

(மாலை 6-50)

ஆகவே, வேலையற்று அவதிப்படுகின்ற இளைஞர்கள் பட்டறைகளை வைத்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்குத் தொல்லை கொடுக்கின்ற நிலைமை ஏற்படலாம். இதையெல்லாம் கவனத்திற்கொண்டு, உரிமைகளை வழங்குகின்ற பொறுப்பை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குகின்ற விதத்தில் அந்தச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்து, இந்தத் தொழிலை ஒழுங்குபடுத்துகின்ற முறையில் உரிமைகளை வழங்குகின்ற முறையில் முயற்சிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். எனவே இதற்காக என்று தனிச்சட்டம் தேவை
யில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாண்டுக்
காலம் தண்டனை, ஐந்தாயிரம் ரூபாய் அபராதம் என்று
விதித்திருப்பது கடுமையாக தண்டனையாக இருக்கிறது.
அதை மாற்றுகின்ற வகையில் அரசு கவனம் செலுத்த வேண்டு
மென்று கூறி முடிக்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமது : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்
கக்கூடிய சட்ட முன்வடிவை கொஞ்சம் அச்சம் கலந்த உணர்ச்சி
யோடு நான் வரவேற்கிறேன். தாங்கள் இதனுடைய முகப்பை
வாசிக்கும்பொழுது நீங்களே கொஞ்சம் தடுமாறக்கூடிய நிலை
ஏற்பட்டது. பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத்
துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள், பழுது
பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் என்றெல்
லாம் இவ்வளவு விரிவாகச் சொல்லியிருப்பதை அமைச்சரவர்கள்
காயலான் கடை என்று குறிப்பிட்டிருக்கலாம். ஆனால், அப்படிச்
சொன்னால் ஒரு சாராரின் மனத்தைப் புண்படுத்துமே என்கிற
அச்சவுணர்ச்சி அவருக்கு இருந்த காரணத்தால் இவ்வளவு
விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

இப்பொழுது குறிப்பிட்டிருக்கின்ற இந்த வணிகங்களை
முறைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தை நான் வரவேற்
கிறேன். ஆனால் இந்தத் தொழில் பாரம்பரியமாகவே பெருகி
வளர்ந்திருக்கிறது என்பதையும் நாம் கவனித்துக் கொள்ள
வேண்டும். குறிப்பாக ஒரு ஊரிலிருந்து வந்த வணிகர்கள்
இந்தத் தொழிலை ஆரம்பகாலத்தில் ஆரம்பித்து, அந்த ஊர்க்
காரர்களிலே பெரும்பாலோர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த
காரணத்தினால் அவர்கள் நடத்தும் கடை அவர்கள் ஊர்ப்
பெயராலேயே அறியப்பட்டு இன்றைக்கு அந்த ஊர்க்காரர்களை
விட பிற ஊர்க்காரர்கள் அதிகமாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு
இருக்கின்ற காரணத்தினால் குறிப்பாகத் தென் மாவட்டங்
களிலேயிருந்து வரக்கூடிய வணிகர்களால் அதிகமாக நடத்தப்
படுகின்ற இந்தத் தொழில் பாதிக்கப்பட்டு விடக் கூடாது
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்தத்
தொழிலிலே இன்றைக்கு மிகுதியுமாக ஈடுபட்டிருப்பவர்கள்,
பதினைந்தாண்டுக் காலத்திலே பர்மாவிலிருந்து அகதிகளாக
வந்தவர்களாக இருக்கிறார்கள். பர்மியத் தலைநகரத்திலே,
கிழக்கு இரங்கூன் பகுதியிலே கிட்டத்தட்ட இதேவிதமான
தொழிலில் நூற்றாண்டுக் காலமாக பாரம்பரியமாக ஈடுபட்டி
ருந்த குடும்பங்களிலே இருந்தவர்கள் நிலைபெயர்ந்து அவர்
களெல்லாம் தங்களுடைய தாயகத்திற்குத் திரும்பி வந்தபொழுது
சென்னையிலேயும் திருச்சியிலேயும் மற்றும் எங்கெங்கே இப்படிப்
பட்ட தொழிலை நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ
அங்கெல்லாம் இவர்கள் இடம் பெற்றதால் இந்தத் தொழில்
இன்றைக்குக் கொஞ்சம் பரவலாக்கப்பட்டிருக்கிறது.



இந்தத் தொழிலையும், மோட்டார் வண்டி வகைகள் பழுது
பார்க்கும் பட்டறைகள், அதைப்போல மக்கள் குடியிருக்கின்ற
பகுதிகளிலே இன்றைக்குப் பரவலாக்கப்பட்டு, அங்கே வாழக்
கூடிய மக்களுக்கு அமைதியின்மையை விளைவிக்கின்ற வகையில்
செயல்கள் பெருகியிருப்பதை முறைப்படுத்த வேண்டுமென்பதை
நான் ஒப்புக்கொள்கிறேன்.

இந்தப் பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத்
துணுக்கு வியாபாரிகள் என்று சொல்லும்பொழுது இரு சாரா
ரையும் ஒன்றாக இணைக்காமல் பழைய இரும்பு வணிகர்களிலே
திறமையாகச் செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். இராணுவத்
தளவாடங்களை அவர்கள் குத்தகைக்கு எடுத்து, அங்கிருந்து
கொண்டுவந்து தெருக்களிலே போட்டு. போக்குவரத்துக்கு இடைஞ்
சலாக இருக்கும் வியாபாரிகள் ஒரு சாரார். மற்றொரு சாரார்,
சிறியசிறிய துணுக்குகளை, மோட்டார் பார்ட்ஸ் போன்றவைகளை
யெல்லாம் எடுத்து, கழற்றி, ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்தி,
சிறிய கடைகளாக வைத்திருக்கக்கூடியவர்கள் ஆகும்.

நம்முடைய அருமை நண்பர் திரு. துரைசாமி அவர்கள்'
ஆட்டோ
அவர்களையெல்லாம் ஊருக்கு வெளியே வெளியேற்றி
நகர் என்று அமைத்து அங்கே வைக்க வேண்டுமென்று
சொன்னார்கள். அப்படி வெளியேற்றப்படுகின்றபோது,
வெளியேற்றப்படுவதை இந்த அரசு கொள்கையாக ஏற்றுக்
கொண்டால், அப்படிச் செய்வது என்றால் இந்த இரும்புத்
துணுக்கு வியாபாரிகளைக் கொஞ்சம் கருணை கூர்ந்து கவனிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களெல்லாம் சிறு
தொழில்களை வைத்து வணிகம் செய்யக்கூடியவர்கள்.

பலருடைய போக்குவரத்திற்கு இடைஞ்சலாக, பாதைகளையே
அடைத்துக்கொண்டு, இரும்புத் துண்டுகளை வெட்டுவதோடு
மாத்திரமல்லாமல், வெல்டிங் போன்ற காரியங்களை எல்லாம்
செய்யும்போது, அந்த வட்டாரத்திலே நடமாடிக்கொண்டிருக்கக்
கூடிய பள்ளிக்குச் செல்லக்கூடிய சிறுவர்கள் கூட பாதிக்கப்படு
கிறார்கள். இப்படி இந்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு, முதன்
முதலாக, அதை ஒழுங்குபடுத்தும்போது, இப்படி போக்குவரத்
திற்குப்பிரதானமாக, இடைஞ்சலாக இருக்கக்கூடிய வியாபாரிகளை
பற்றிய இந்தச் சட்டத்தினுடைய கரம் கட்டிப் பிடிக்கக்கூடிய
தன்மையிலே அமைய வேண்டுமே தவிர, சிறிய வியாபாரிகளை,
கடையிலே அமர்ந்து முறையாக, தங்களுடைய பொருளை
வைத்துக் கொண்டு வியாபாரம் செய்பவர்களை, எந்த விதத்
திலும் இது தடுக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன்.

பெரம்பூர் ஜமாலியா அரபிக் கல்லூரி பக்கத்திலே ஒரு
வெற்றுத்திடல் கிடந்தது. ஒரு பழைய இரும்பு வணிகர் அதை
வாடகை கொடுத்து பிடித்து விட்டார். அங்கே எவ்வளவு
கொண்டு வந்து டம்ப் செய்ய முடியுமோ—எனக்கு உடனடியாக
அந்த வார்த்தை வரவில்லை—அவ்வளவு துருப்பிடித்த இரும்பு

(திரு. ஆ. கா. அ. அப்துல் சமது) [1985 ஜூலை 18

களை எல்லாம் அங்கே கொண்டுவந்து கொட்டி வைத்திருக்
கிறார்கள். அதன் காரணமாக, காற்றடிக்கும் போதெல்லாம்
அருகிலிருக்கிற அந்த அராபிக் கல்லூரியினுடைய மாணவர்கள்
கண்ணிலே பட்டு, பல மாணவர்கள் கண்களே பாதுபட்டிருக்
கின்றன. அதை நான் நேராகவே பார்த்தேன். இது என்வை
ரன்மென்ட்டல் பாதிப்பு என்ற வகையில், ஏற்கனவே இருக்கக்
கூடிய சட்டத்தினுடைய அடிப்படையிலே கூட நடவடிக்கை
எடுத்திருக்கவேண்டும். நம்முடைய மாண்புமிகு சுகாதார
அமைச்சர் அவர்களைக் கூட அந்தக் கல்லூரியிலே அழைத்து
ஒரு முறை அதுபற்றி அவரிடம் முறையிட்டிருக்கிறார்கள். அவர்
களும் தக்க அதிகாரிகளிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். என்ன
காரணமோ, அந்தத் துருப்பிடித்த இரும்புகள் மீது, துருப்
பிடித்த இரும்புகள் மேலும், மேலும் குவிக்கப்பட்டு வருகிறது.
கோரிக்கையினுடைய அடிப்படையிலே இன்னும் அகற்றப்படாமல்
அந்த வட்டாரத்திலே ஒரு ஹெல்த் ஹசார்ட் என்று சொல்
வார்களே, அப்படிப்பட்ட சுகாதாரக் கேட்டுக்கு அடிப்படையாக
இருக்கிறது. அன்புகூர்ந்து இப்படி ஒட்டுமொத்தமாக ஒரு
பகுதியையே நாசப்படுத்தி, அங்கே வாழக்கூடிய மக்களுக்
கெல்லாம் சுகாதாரக்கேடு உண்டு பண்ணக்கூடிய நிலையிலே
இருக்கக்கூடிய பெரும் குவியலாக, துருப்பிடித்து இரும்புகள்
குவிக்கப்பட்டிருப்பதை, இந்தச் சட்டத்தின் துணை கொண்டு,
அல்லது இருக்கக்கூடிய வேறு சட்டத்தின் துணை கொண்டு
அகற்றக் கூடிய முயற்சியிலே அரசு ஈடுபடுமேயானால் அது
நம்முடைய மொத்தமான பாராட்டைப் பெறும் என்று நான்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று. இந்தச் சட்டத்தை நாம் இன்று நிறைவேற்றி
விட்டாலும் அதை அமுல் நடத்துவதில் நாம் கொஞ்சம் கருணை
காட்டவேண்டும். ஏனென்றால், எல்லாம் சாதாரணமாக, எடுத்த
வுடனே அப்புறப்படுத்தக்கூடிய சாமான்கள் அல்ல, எல்லாம்
கொஞ்சம் பளுவான சாமான்கள். அவர்களுக்கெல்லாம் போது
மான நேரம் கொடுத்து, நோட்டீஸ் கொடுத்து, அவற்றை
முறைப்படுத்திக்கொள்ள, அவர்களுக்குப் போதுமான கால
அவகாசம் கொடுத்து, ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்வதோடு, ஒட்டுமொத்தமாக எல்லோரையும்
ஊருக்கு வெளியே அனுப்புவது என்பது, பிறகு ஏதாவது தேவைப்
பட்டால், 4, 5 ஊர்களை எல்லாம் சுற்றி வரக்கூடிய
நிலை ஏற்படும். அந்த நிலையிலிருந்து முறையாக தங்களுடைய
வரம்புக்கு உட்பட்டு, யார், யார் தொழில்கள் செய்கிறார்களோ
அவர்களை எல்லாம் இன்னும் ஊக்குவிக்கக்கூடிய முறையிலே
அவர்கள் சமுதாயத்தினுடைய ஒரு பகுதியாக இருக்கிறார்கள்.
அதிலும் முறையாக, தாங்கள் தொழில் செய்து பிழைக்க வேண்டு
மென்ற உள்ளத்தோடு இருக்கக்கூடியவர்களுக்கு எந்தவிதமான
ஆபத்தும் இல்லாமல் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்வதோடு உரிமம் வழங்க வேண்டுமென்று கட்டுப்படுத்துவது
கூட ஒரு சரியான முறை. எல்லாத் தொழில்களுக்கும் அப்படிப்
பட்ட உரிமை வழங்க வேண்டும்.



1985 ஜூலை 18] (திரு. ஆ. கா. அ. அப்துல் சமது)

போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதாக, இரும்பு
வணிகர்கள் கடைகளை அப்புறப்படுத்துவது என்று செல்லும்
போது, போக்குவரத்திற்கு அதிக இடைஞ்சலாக இருக்கக்
கூடியவை லாரி டிரான்ஸ்போர்ட். ஒரு தெருவிலே யாராவது
ஒரு வீட்டிற்கு அதிகமான வாடகை தருகிறார்கள் என்பதற்காக
ஒரு லாரி போக்குவரத்து ஸ்தாபனத்திற்கு ஒரு இடத்தைக்
கொடுத்து விடுவார்களானால் அந்தத் தெரு முழுவதும் லாரிகளை
நிறுத்தி வைத்து விடுவதோடு மாத்திரம் அல்லாமல். அதில்
ஏற்றக்கூடிய, இறக்கக்கூடிய சாமான்களைத் தெருவெல்லாம்
போட்டு, ஒரு சைக்கிளிலே கூட போகமுடியாமல் இருக்கிற
காட்சியை அமைச்சர் அவர்கள் அன்புகூர்ந்து அங்கப்ப
நாயக்கன் தெரு, தம்புச் செட்டித் தெரு, லிங்கிச் செட்டித் தெரு
பக்கம் நண்பர் பாலன் அவர்களோடு, நண்பர் செல்வராஜ் அவர்
களோடு ஒரு முறை சென்று வருவார்களானால், எந்த அளவுக்கு
அங்குள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிந்து
கொள்ளமுடியும். அதை ஒட்டியும் சட்டத்தை இயற்றுவதோடு
எதிர்காலத்திலே இப்படி போக்குவரத்திற்கு இதைவிட அதிகமாக
இடைஞ்சலைக் கொடுக்கக் கூடிய நிலைமைகளை மாற்றி
யமைப்பது பற்றியும் அவர்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்வதோடு, இதனுடைய பீனல் செக்ஷன்—ஓராண்டுக்காலம்,
ரூ. 5,000 தண்டனை என்பதை எல்லாம் அமுல்படுத்தாமல்,
கொஞ்சகாலம் தள்ளி வைத்து, இதையெல்லாம் முறைப்படுத்து
வதற்குள்ள ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று
கேட்டு அமர்கிறேன்.

(இரவு 7–00)

மாண்புமிகு திரு. ப. . சண்முகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவின்
மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும்
முறைப்படுத்துவதை, ஒழுங்குபடுத்துவதை வரவேற்றார்கள்
என்று நான் கருதுகிறேன். ஆனால் இந்தச் சட்டத்தினால்
யாருக்கும் பாதகம் ஏற்படக்கூடாது, சிறு வியாபாரிகளுக்குப்
பாதகம் ஏற்படக்கூடாது அல்லது பிற வியாபாரிகளுக்குப்பாதகம்
ஏற்படக்கூடாது என்று தெரிவித்தார்கள். யாருக்கும் பாதகம்
விளைவிக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டம் அமையாது என்ற
உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றுதான்
சட்டங்களைக் கொண்டுவருகிறோமே தவிர யாருக்காவது
பாதகம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல. கலைக்கப்
பட்ட சட்டமன்றத்திலே 1984 ஆம் ஆண்டு இந்தச் சட்டம்
அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போதே நிறைவேற்றப் பெற
முடியாமல், சட்டமன்றம் கலைக்கப்பட்டதால் மீண்டும்
இப்போது கொண்டு வந்திருக்கிறோம். மைய அரசு இதற்கு
அனுமதி வழங்கிவிட்டது. இந்தச் சட்டத்தினால் நிச்சயமாக
யாருக்கும் பாதகம் ஏற்படாது.

(திரு. ப. உ. சண்முகம்) [1985 ஜூலை 18

சிறு வியாபாரிகள், பழைய இரும்பு வைத்திருக்கிறவர்கள்—இவர்களுக்கெல்லாம் கால அவகாசம் கொடுக்க வேண்டும். நிறைவேற்றிய உடனே அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை வழங்கக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்கள் கூறினார்கள். நிச்சயமாக அந்த பரிந்துரையை அரசு ஏற்றுக்கொள்ளும், உரிய கால அவகாசம் கொடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை அளிக்கிறேன். அவசரப்பட்டு எதையும் செய்துவிட மாட்டோம். கொடுக்க வேண்டிய அளவுக்கு அவகாசம் கொடுப்போம். இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவரப்படும்போது யாருக்காவது தண்டனை கொடுக்க என்று யாரும் கருதக்கூடாது. இந்தச் சட்டத்தில் உரிமம் வழங்கும் அதிகாரம் யாருக்கு என்று இனிமேல்தான் முடிவு செய்ய வேண்டும். அநேகமாக நகராட்சி அல்லது மாநகராட்சியாக இருக்கும். சட்டம் வந்த பிறகு, ஒழுங்குபடுத்திய பிறகு யாருக்கு என்பது அறிவிக்கப்படும்.

டிங்கர், ஒர்க்ஷாப் வைத்திருக்கிறவர்களைத் தொந்தரவு செய்வதற்காகவா இந்தச் சட்டம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் கேட்டார்கள். அவர்களுக்குத் தொந்தரவு தர வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. அவர்களால் பல வீடுகளுக்குத் தொந்தரவு இருக்கக் கூடாது என்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். ஒருவரால் வேறு பல வீடுகளுக்குத் தொந்தரவு வரக் கூடாது. எங்கே வைப்பது, எப்படி வைப்பது என்று முறைப்படுத்த இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதைத் தவிர எந்தவிதமான கெட்ட நோக்கத்தோடும் இதைக் கொண்டு வரவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்கள் ஆட்டோ நகர் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். சென்னை நகரம் விரிவான பிறகு அதைப்பற்றி பரிசீலனை செய்யலாமே தவிர இப்போது இருக்கக்கூடிய சென்னை நகரில் அதை எங்கே வைப்பது என்று தெரியவில்லை. அந்த யோசனை பரிசீலிக்கப்பட வேண்டியதே தவிர இப்போது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்கள் கருதுவது போல் இதில் அச்சப்படத் தேவையில்லை. இந்தச் சட்டம் பொதுவாக முறைப்படுத்த, ஒழுங்கு படுத்தக் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டம் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமை



1985 ஜூலை 18] [பேரவைத் தலைவர்]

யாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 17 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள் பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்துதல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு, 1985.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1985) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர்சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஊ) தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு, 1985.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

---

* 1985 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. பரிதி இளம்வழுதி: பேரவைத்தலைவர் அவர்களே, 1985ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். 1950 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட வல்லுநர் குழு அறிவித்த பரிந்துரையின் அடிப்படையில் இந்தச் சட்டமுன்வடிவைக்கொண்டு வருவதாக இங்கே கூறப்பட்டுள்ளது. இது ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட வல்லுநர் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் இப்போது இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவது எந்த அளவுக்குச் சரியாக இருக்கும் என்று தெரியவில்லை.

காரணம் 35 ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லப்பட்ட பரிந்துரை இது என்ற நிலையில் பார்க்கும்போது ஏறத்தாழ 35 ஆண்டுகளில் பல்வேறு வகையான மாற்றங்களை இந்த நாடு சந்தித்து இருக்கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இது ஒரு ராக்கெட் யுகம் என்று கூடச் சொல்லப்படுகிறது. எனவே இந்தக் காலக் கட்டத்தில் நற்கால நிகழ்வுகளுக்கு இது எப்படி ஏற்புடையதாக இருக்கும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அண்மையில் மூர் மார்க்கெட்டில் தீ விபத்து ஏற்பட்டது. அந்தத் தீ விபத்துக்கள் பற்றி பல கருத்துக்கள் வெளியே சொல்லப்படுகின்றன. அது பற்றி தனியாக விசாரணை நடத்துகின்ற பணியில் ஈடுபட்டிருக்கின்ற நிலையில் அவர்களுக்குச் சில விதிகள் கூறப்பட்டுள்ளது. இதிலே 6-வது பக்கத்தில் கட்டிடங்கள் போன்றவற்றை இடிப்பதற்குக்கூட அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரங்களை அதிகாரிகள் தவறாகப் பயன்படுத்த மாட்டார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. அப்படித் தவறாகப் பயன்படுத்துகின்ற அதிகாரிகளுக்கு என்ன தண்டனை கொடுக்கப்படும், அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை. அதற்கெல்லாம் இந்த விதியில் இடம் இல்லை.

இது சம்பந்தமாகத் தொண்டர் படை அமைக்கப் போவதாகக் கூறியிருக்கிறீர்கள். அவர்கள் எல்லாம் ஹோம் கார்ட் போல் செயல்படுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுமா? ஏன் இந்தப் பயிற்சிகளினுடைய குறிப்புகளைத் தரக்கூடாது? மேலும் இந்தத் தொண்டர்கள் எந்தத் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இந்தச் சட்டமுன்வடிவை அமல்படுத்தும்போது ஏற்படக்கூடிய செலவுகள் பற்றி அரசு ஒரு சரியான மதிப்பீடு இல்லாத நிலையில்தான் இங்கே சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இதனைக் கொண்டு வருவதற்கு முன்னே அரசு கணக்கீடு செய்திருக்க வேண்டும்.





அடுத்தபடியாக இந்தத் துறையினைப் பொறுத்தவரையில் இயக்குநராக காவல் துறையைச் சேர்ந்த ஐ.ஜி. இருக்கிறார். ஐ. ஜி. க்களினுடைய எண்ணிக்கையை கூட்டிவிட்டு அவர்களுக்கு வேலை தரவேண்டும் என்பதற்காக அவர்களுக்குச் சம்பந்தம் இல்லாத துறைகளில் எல்லாம் அவர்களைக் கொண்டுவந்து போடுகிறீர்கள். காவல் துறையைச் சேர்ந்த ஐ. ஜி. தீயணைப்புத் துறைக்கு இருப்பதுபோல் ட்ரான்ஸ்போர்ட், மார்க்கெட்டிங் கார்ப்பரேஷன் போன்ற பல்வேறு துறைகளிலும் அவர்களை நியமித்து இருக்கிறார்கள். இது எப்படி இருக்கின்றது என்றால் அதாவது சம்பந்தம் இல்லாதவர்களையும், அந்தத்துறையிலே பயிற்சி இல்லாதவர்களையும் போடுவது எப்படி இருக்கின்றது என்றால் டெல்லியிலே ஓய்வு பெற்ற அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு கவர்னர் பதவி கொடுப்பது போலவும், தேர்தலிலே வாய்ப்பை இழந்தவர்களுக்கு பதவிகள் தருவது போலவும் இருக்கின்றது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது டெல்லியில் நடுவண் அரசு ஓய்வு பெற்றவர்களுக்குத்தான் பதவிகளைத் தருவதாகக் குறைபட்டுக் கொள்கிறார்கள். எல்லோருக்கும்தான் அவர்கள் கொடுக்கிறார்கள், என்ற உணர்வினை அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது நடுத்தர இளைஞர்களுக்கும்கூட கொடுத்திருக்கிறார்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை எதற்காகச் சொன்னேன் என்று சொன்னால் சம்பந்தம் இல்லாதவர்களை எல்லாம் அடுத்த துறையிலே கொண்டு வந்து போடுகின்றபோது அந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்கள், நாம் எவ்வளவுதான் பணியாற்றினாலும் மேலே வரமுடியாது என்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் அவர்கள் மன நிறைவோடு அந்தத் துறையிலே பணியாற்ற முடியாது என்பதற்காகத்தான் சொன்னேனே தவிர அதைத் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கால்நடை மருத்துவத் துறையில் உள்ளவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் என்று 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்தத் துறையில் உள்ளவர்களைப் பொறுத்தவரையில் ரிஸ்க் அலவன்ஸ் 20 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இந்தத் துறையில் பணியாற்றுகின்றவர்கள் உயிரைப் பணயம் வைத்துத்தான் தீயை அணைக்கப் போராடுகிறார்கள். சில இடங்களில் பெரிய அளவில் தீ விபத்து ஏற்படுகின்றது. மூர் மார்க்கெட்டில் தீ விபத்து ஏற்பட்டது. அது சாதாரண தீ விபத்து அல்ல. பெற்ற அன்னையைத் தவிர அனைத்தும் கிடைக்கும் என்று பெருமையாகச் சொல்வார்கள்.

(இரவு 7—10)

அப்படிப்பட்ட மூர் மார்க்கெட்டே இன்றைக்கு களை இழந்துக் காணப்படுகிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் அப்படிப்பட்ட பெரிய தீ விபத்துக்கள் ஏற்படுகிற இடத்திலே எல்லாம் சென்று அவர்கள் உயிரைப் பணயம் வைத்து தீயை அணைப்பதற்காகப் போராடுகிறார்கள். அத்தகையவர் களுக்கு எந்த முறையில் வழங்கப்படுவது நியாயம் என்று நினைத்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன். மேலும் இராணுவ வீரர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகளைப் போல அத்தனை சலுகைகளும் அவர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இத் துறையில் உள்ளவர்களின் சம்பள விகிதத்தை மற்றத்துறைகளில் உள்ளவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் குறைவாக உள்ளது. அதைச் சற்று உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறையிலே District Fire Officer என்ற பதவி மிகவும் பொறுப்புள்ள பதவியாகும். இப்பதவிக்கு பி.ஏ., எம்.ஏ., படித் தவர்கள் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். ஆனால் அவர்கள் தற்போது காவல் துறையிலே ஒரு சாதாரண ஹெட் கான்ஸ்டபிள் என்ன சம்பளம் வாங்குகிறாரோ அந்த அளவு சம்பளம்தான் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு இன்ஸ்பெக்டருக்கு வழங்கப்படுகின்ற அளவுக்கு சம்பளம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் நல்ல நிலையில் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டு, நான் சொல்லிய அந்தக் கருத்துக்கள் இடம் பெறத்தக்க அளவில் இந்தச் சட்டத்திலே திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முந்தைய சட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் சமது அவர்கள் சொன்னதுபோல், ஒரு அச்ச உணர்வுடன்தான் இந்தச் சட்டத்தை வரவேற்க வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

தீ விபத்து ஏற்படக்கூடிய நேரத்திலே அதை அமர்த்தக்கூடிய முறையிலே உள்ள, திட்டங்கள் உள்ள, ஒரு நல்ல ஃபயர் ஃபோர்ஸ் நமக்குத் தேவை என்பதில் இரண்டு கருத்துக்கு இடம் இல்லை. ஆனால் ஒரு நல்ல ஃபயர் ஃபோர்ஸ் ஏற்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய சட்டத்திலே இருக்கிற சில ஷரத் துக்கள் அச்சத்தை ஏற்படுத்துகிறது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நேரம் அதிகம் இல்லாததன் காரணமாக எல்லா ஷரத்துக்களையும் நான் படிக்க விரும்பவில்லை.





குறிப்பாக, 11-வது ஷரத்திலே, தற்போது இருக்கக்கூடிய பல பிரிவுகள் (சி), (ஈ),(எப்) போன்ற பிரிவுகள் சில அபாயத்தை ஏற்படுத்துவதற்கான ஆபத்து இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனாலும் ஒன்றைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. அதாவது 11-வது செக்ஷனிலே (2)-வது சப்செக்ஷன் "11. (2) Any damage done on the occasion of fire by Members of Fire Service in the discharge of their duties shall be deemed to be damage by fire within the meaning of any policy of insurance against fire." எனி டேமேஜ் என்று உள்ள முறையிலே அவர் களுக்கு அந்த அளவுக்கு அதிகாரம் வழங்குவது சரியாக இருக்குமா என்று அமைச்சர் அவர்களும் அரசும் பரிசீலிக்க வேண்டும். அது மட்டும் அல்ல. 24-வது செக்ஷனிலே என்ன சொல்லப்படுகிறது என்றால், " 24. No authority in charge of water-supply in an area shall be liable to any claim for compensation for damage by reason of any interruption of supply of water occasioned only by compliance of such authority with the requirement specified in clause (d) of sub-section (1) of Section 11." அதாவது இந்த எனி டேமேஜ் என்பதையும், நோ காம்பன்சேஷன் என்பதையும் நாம் சேர்த்துப் பார்க்கக்கூடிய நேரத்திலே இந்த அளவுக்கு ஒரு அதிகாரத்தை அதுவும் குறிப்பாக போலீஸ் துறையைச் சார்ந்த ஒருவர் தலைவராக இருக்கக்கூடிய ஒரு இலாகாவிற்கு கொடுப்பது சரியாக இருக்குமா என்பதை நான் சுட்டிக்காட்ட விருப்புகிறேன். எனக்கு எந்த தனிப்பட்ட போலீஸ் அதிகாரி மீதும் எந்தவிதமான விரோத உணர்ச்சியும் இல்லை. பொதுவாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நேற்றுகூட இங்கே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசக் கூடிய நேரத்திலே திருச்சியிலே நடந்த சம்பவம் சம்பந்தமாக இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசக்கூடிய நேரத்திலே ஒரு டி. எஸ். பி. அந்த பிரச்னையை ஒரு துப்பாக்கிப் பிரயோகத்திற்கு கொண்டு செல்லக்கூடிய முறையில் அவருடைய எண்ணம் இருக்கிறது என்ற அடிப்படையில் அந்தப் பிரச்னையை எடுத்துச் சென்றிருக்கிறார்கள் என்பதை இங்கே எடுத்துக் காட்டிச் சொன்னார்கள்.

ஆகவே பல நேரங்களிலே காவல் துறையைச் சார்ந்தவர்கள் அப்படிப்பட்ட நிலையை உருவாக்கிவிடுகிறார்கள் ஆகவே இப் படிப்பட்ட அதிகாரங்களை அவர்களுக்கு கொடுப்பது சரியாக இருக்காது. அதிலே ரீசனபிள் ரெஸ்டிரிக்ஷன் தேவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று பல முறைகளில் உள்ள அதிகாரங்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தினுடைய சில ஷரத் துக்களை படித்துப் பார்த்தால் தீ விபத்து ஏற்படக்கூடிய நேரத்தில் தீ அணைக்கப்பட வேண்டும் என்ற உணர்வுதான் எல்லா மனிதர்களுக்கும் ஏற்படுமே தவிர, தீ அணைக்கப்பட வேண்டாம் என்ற முறையிலே உணர்வு யாருக்காவது ஏற்படுமா என்று என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்தச் சட்ட ஷரத்துக்களைப் பார்த்தால் அப்படிப்பட்ட மகாபாவிகள் கூட இந்த நாட்டிலே இருக்கிறார்களா என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே அந்த முறையில் உள்ள அதிகமான அதிகாரம் 'எனி டேமேஜ்' என்ற முறையில் போகிற அளவிற்கு உள்ள ஏற்பாடு சரியாக இருக்காது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதற்கு ரூல்ஸ் கொண்டு வருகிற போது இந்த விஷயங் களில் 'ரீசனபிள் ரெஸ்டிரிக்ஷன்' என்ற அந்த அதிகாரத்தை ஏற் படுத்துகிற வகையில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். 29-வது செக்ஷனில் 2-வது சப்செக்ஷனில் என்ன சொல்லப்படுகிறது என்றால், "The Members of Fire service in existence in this State at the commencement of this Act shall be deemed to be the Tamil Nadu Fire Service established under this Act." இப்போது இந்த தீயணைப்புத் துறையைப் பொறுத்த வரையில் அதில் வேலை செய்பவர்கள் பயிற்சி பெற்றவர்கள். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அவர்களுடைய வேலைக்குத் தகுந்த அளவிற்கு சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. தீ விபத்து ஏற்படுகிறபோது தீயோடு உயிரைக்கூட பணயம் வைத்து போராடுகிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு இந்த அரசு கொடுக்கிற ஊதிய அளவு குறைவாக இருக்கிறதென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒரு கான்ஸ்டபிள் ஊதியம் தான் இந்தத் துறையின் ஹெட்கான்ஸ் டபிளுக்குக் கொடுக்கப்படுகிறது. ஒரு ஹெட்கான்ஸ்டபிள் ஊதியம் தான் சப்-இன்ஸ்பெக்டருக்குக் கொடுக்கப்படுகிறது. ஆகவே அவர்களுக்கு இருக்கிற ரிஸ்க்கை கணக்கில் எடுத்துக் கொண்டு, அவர்களின் திறமைக்குத் தகுந்த அளவிலே, அவர்களை ஊக்கு விக்கிற முறையிலே உள்ள ஊதியம் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். அந்த முறையில் செய்தால்தான் தீயணைப்பு பணி களிலும் மற்ற பணிகளிலும் அவர்கள் சிறப்பாக செயல்படு வார்கள்; அதைப்போல அவர்களுக்கு ப்ரமோஷன் ஆப்பர் சூனிட்டிகளும் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

29-வது செக்ஷன்படி நீங்கள் இப்போது இருக்கிறவர்களுக்கு, மேலும் புதியதாக நியூ என்ட்ரண்ட்சை ரெக்ரூட் செய்து அவர் களுடைய ப்ரமோஷன் ஆப்பர்சூனிட்டிஸ்களில் பாதிப்பு ஏற்படுகிற முறையிலே உள்ள நடவடிக்கைகளை எடுக்கக் கூடாது என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றை என்னுடைய யோசனையாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த இலாக்காவை காவல் துறை அதிகாரி தலைமையில் வைக்காமல், தீயணைப்புத் துறையில் பயிற்சி பெற்ற அதிகாரியின் தலைமையில் கொண்டு வர வேண்டும். காவல்துறை அதிகாரி இந்த இலாக்காவை நிர்வகிக்கிற



நிலைமை கூடாது. இன்றைக்கு ஃபாரஸ்ட் டிபார்ட்மென்ட் எப்படி ரெஜிமெண்ட் என்று சொல்லப்படுகிறதோ, அதைப்போல ஃபயர் சர்வீசும் ரெஜிமெண்ட்தான். ஃபாரஸ்ட் டிபார்மெண்டிற்கு காவல்துறை அதிகாரியின் தலைமை இல்லை. அந்தத் துறையில் ஐ.எப்.எஸ். அதிகாரிகளைத் தான் நாம் வைக்கிறோம். அதைப் போல ஃபயர் சர்வீசைப் பொறுத்த வரையில் பயிற்சி பெற்ற திறமையான ஒரு அதிகாரியின் கீழ் இந்த இலாக்கா வைக் கொண்டுவர வேண்டும். ஒரு காவல் துறை அதிகாரியின் தலைமையில் இந்த இலாக்காவை வைத்தல் இப்படிப் பட்ட சட்ட ஷரத்துக்களை அவர்கள் கையில் கொடுத்தால் அதனால் மிகப்பெரிய பாதிப்ப ஏற்படுகிற நிலை உருவாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே பயர் சர்வீஸ் என்ற ஃபோர்சை ஏற்படுத்த வேண்டுமென்ற உணர்வை, நடவடிக்கையை ஆதர்க்கக்கூடிய நேரத்தில் இப்படிப்பட்ட அபாயங்கள், ஆபத்துக்கள் அமையாமல், நாட்டிற்கு நல்ல முறையில் இந்த விஷயங்கள் அமையக்கூடிய முறையில் சட்டத்தில் தெளிவாக திருத்தங்கள் கொண்டு வரவும் அல்லது அது சம்பந்தமாக தகுந்த அளவிலே ரூல்ஸ் இயற்று வதற்கும் முன்வரவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையிலும் ஏற்கனவே பன்னெடுங் காலமாக தமிழகத்தில் நடைமுறையில் இருந்து வருகிற ஃபயர் சர்வீஸ் மானுவலை கோடிபை செய்து சட்ட மாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மைய அரசு ஏற்கனவே அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பி இருக்கிற தாக்கீதின் அடிப் படையில், மைய அரசு அனுப்பியிருக்கிற மாடல் புரவிஷன் என்று சொல்லக்கூடிய அந்த மாதிரி அடிப்படையில் இந்தச் சட்டமுன் வடிவை நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

(இரவு 7-20)

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற போது, சிலவற்றைச் சொன்னார்கள். 1950 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மைய அரசினுடைய வல்லுநர் குழு பரிந்துரைத்த ஒன்றை இவ்வளவு காலம் கடந்துசெய்கின்றபோது, நடைமுறைப்படுத்துகின்றபோது சரியாக இருக்குமா என்று கேட்டார்கள். சரியாகத்தான் இருக் கிறது. காரணம் அந்த எண்ணத்தைத்தான் அப்போது அவர்கள் வெளியிட்டு இருந்தார்கள். ஆனால் தற்போது சட்டமுன்வடிவில் ஷரத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் ஆழமாகப் பார்ப்பார் களேயானால், எந்த அளவிற்கு நவீன முறையில் இந்தச் சட்டத்தை மக்களின் நலன் கருதி, தற்போதுள்ள நிலைமையை யொட்டி, நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிவார்கள் என்று கருதுகிறேன்.

மற்றும் ஒன்றைச் சொன்னார்கள். இதிலே காவல்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளை நியமித்தல் தவறு என்ற கருத்தைச் சொன்னார்கள். அதைத் தவறாக அரசு கருதவில்லை. காரணம் ஃபயர் சர்வீசைப் பொறுத்த வரையிலும், காவல் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் ஓரளவிற்கு நல்லமுறையில் பயிற்சி பெற்று இருக்கிறார்கள். இதுபோன்ற பணிகளை செவ்வனே நடைமுறைப் படுத்துகின்றபோது, துரிதமாக மக்களின் நலன்கருதி நடைமுறைப்படுத்துகின்றபோது காவல்துறை அதிகாரிகளுடைய பொறுப்பில் இருக்கிறபோது, அது சிறப்பான முறையில் ஈடேறும் என்ற நம்பிக்கையில் அது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது.

மற்றும் ஒன்றைச் சொன்னார்கள். பல ஐ.ஜி. க்களை எல்லாம் பல்வேறு துறைகளுக்கு தலைவர்களாகப் போடுவதாகச் சுட்டிக்காட்டினார்கள். டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்கு போடப்பட்டு இருக்கிறது என்றால், அதிலே ஒன்றும் தவறு இல்லை. காரணம் 'Though he is a professional in that Department' அந்தத் துறையில் அவர்கள் இருந்தபோதிலும் கூட, டிரான்ஸ் போர்ட் துறைக்கு வருகின்றபோது, அவர்கள் போலீஸ் துறையிலே பெற்ற அனுபவத்தை, குறிப்பாக டிராபிக் போன்றவற்றை அவர்கள் நல்லமுறையில் நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் என்ற காரணத்தால், இதுபோன்ற நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதிலே தவறு ஒன்றும் இருப்பதாக அரசு கருதவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்ற போது சொன்னார்கள். செக்ஷன் 11-ஐப் பொறுத்தவரையில், சில ஷரத்துக்கள் நடைமுறைக்குத் தேவைதானா என்பதை எடுத்துச் சொன்னார்கள். தேவைப்படுகின்றபோது, அவற்றைப் பயன்படுத்துவது, பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு பலன் தருவதாக அமையும் என்ற முறையில் அது தேவையான ஒன்றாகும். 'Any damage done on the occasion of fire by Members of Fire Service in the discharge of their duties......' என்பதைச் சுட்டிக்காட்டி, அதை நீக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதை நீக்கவேண்டும் என்பதில்லை என்று நான் கருதுகிறேன். காரணம், அது பாதிக்கப்பட்டவர்களுக்கு நலனை ஈட்டும். காரணம், 'It shall be deemed to be damage by fire within the meaning of any policy of insurance against fire' என்றுதான் இருக்கிறது. அப்படி பாதுகாப்பு கொடுக்கின்ற போதுதான், 'Insurance scheme will be easier for them' என்ற முறையில், அவர்களுக்கு உகந்ததாக இருக்குமே ஒழிய, அது அவர்களுக்கு தீங்கு விளைவிப்பதாக இராது என்பதற்காக, இதைச் சொல்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் ஹேமசந்திரன் அவர்கள் பேசுகின்றபோது, செக்சன் 24-ஐப் பொறுத்தும், அதில் மாற்றம் தேவை என்பதையும், ''நோ காம்பென்சேஷன்'' என்பதையும் எடுத்துச்சொன்னார்கள். இது நடைமுறையில் இருக்கவேண்டிய



ஒன்றுதான். இப்போது தீவிபத்தாலே ஏற்படுகின்ற ஆபத்துக்களில் இருந்து உடனடியாக பாதுகாப்பைத் தருகின்ற போது, சில இன்னல்கள், இடர்ப்பாடுகள் அவ்வப்போது ஏற்படத்தான் செய்யும். அந்த நேரத்தில் மக்களின் நலன் ஒன்றுதான் முக்கியம் என்ற முறையில், சிலவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியது இருக்கின்றது என்ற காரணத்தால், இது நடைமுறைக்குத் தேவையான ஒன்று என்பதை எடுத்துச் சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை அவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 30 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1985) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 9. அரசினர் தனித் தீர்மானங்கள்.

### சில நகரியங்களை அமைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்கு தனித் தீர்மானங்களையும் ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு வாக்கெடுப்பின் போது தனித்தனியாக நிறைவேற்றலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-ம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, செங்கல்பட்டு மாவட்டம், புழல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எலந்தஞ்சேரி கிராமம் உட்பட மணலி பேரூராட்சி, சின்னச்சேக்காடு பேரூராட்சி, சடையான்குப்பம் ஊராட்சி, கடப்பாக்கம் ஊராட்சி ஆகியவை அடங்கிய பகுதியை (இது தொழிலாளர் குடியிருப்புப்பகுதியாகும்) நகரியமாக அறிவிப்பதென இப் பேரவை தீர்மானிக்கிறது."

புழல் ஊராட்சிஒன்றியத்தில் உள்ள மணலி தொழில்துறையில் வளர்ச்சி அடைந்த பகுதியாகும். மேலும் மணலி பேரூராட்சி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் மேம்படுத்தபட்டு வரும் நகரமாகும். இப்பகுதியில் 269 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடங்களில் குடி தண்ணீர் வசதி, விளக்கு வசதி, வடிகால் வசதி, பள்ளிக்கூடம் மற்றும் கடைகள் வசதிகளையும், சமூக மேம்பாட்டுத் திட்டங்களையும் இக்குழுமம் உருவாக்கியுள்ளது சுமார் 1,300 குடியிருப்பு வீடுகளையும் கட்டிக் கொடுத்துள்ளது. இதைத் தவிர சுமார் 100 திறந்தவெளி காலி மனைகளை குடியிருப்பு மனைகளாக மேம்பாடு செய்துள்ளது. மேலும் 1983-85 ஆம் ஆண்டுகளில் சுமார் 130 ஏக்கர் நிலங்களை மேம்படுத்தி, 5,500 குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதி செய்துதர உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மணலி மற்றும் அதனைச் சார்ந்துள்ள ஊராட்சிகளைக் கொண்ட தனி நகரியம் அமைப்பதால் இப்பகுதியில் உள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் போதுமான அளவுக்கு பெருக்கப்பட்டு, அதன் மூலம் மக்கள் நலமடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, செங்கல்பட்டு மாவட்டம் புழல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எலந்தஞ்சேரி கிராமம் உட்பட மணலி பேரூராட்சி, சின்னசேக்காடு பேரூராட்சி, சடையன்குப்பம் ஊராட்சி, கடப்பாக்கம் ஊராட்சி ஆகியவை அடங்கிய பகுதிகளை மணலி நகரியமாக அமைக்க அரசு தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பொத்தேரி, காட்டாங்குளத்தூர், நின்னகரை, பேரமனூர், களிவந்தப்பட்டு, திருக்கச்சூர், செங்குன்றம் ஊராட்சிகளில் அடங்கியுள்ள பகுதி முழுவதையும் (இது ஒரு தொழிலாளர் குடியிருப்பு பகுதி ஆகும்) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-ம் பிரிவைக் சேர்ந்த (1) உட்பிரிவையொட்டி நகரியமாக அறிவிப்பதென இப்பேரவை தீர்மானிக்கிறது".



காட்டாங்கொளத்தூருக்கு அடுத்த "மறைமலை நகரை" சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் குட்டி நகரமாக வளப்படுத்தி வருகிறது. தொழிற்சாலைகளும், தொழிலாளர் குடியிருப்பும் இங்கு பெருகி வருகிறது. ஊராட்சி நிர்வாகம் இதன் வளர்ச்சி குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். நகரியத்தை ஏற்படுத்துவதன் மூலம் ஊராட்சி நிர்வாகம், குடிநீர், துப்புரவு, கல்வி, மருத்துவம் ஆகியவற்றைச் சிறந்த முறையில் வழங்க முடியும். மேலும் தனி நகரியம் அமைப்பதால் இப்பகுதியில் உள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் போதுமான அளவுக்கு பெருக்கப்பட்டு, அங்கு வாழும் மக்கள் நலம் அடைவார்கள்.

இதனைக் கருத்தில் கொண்டு செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொத்தேரி, காட்டாங்கொளத்தூர், நின்னகரை, பேரமனூர், களிவந்தப்பட்டு, திருக்கச்சூர், செங்குன்றம் கிராமங்கள் அடங்கிய பகுதி முழுவதையும் ஒருங்கிணைத்து மறைமலை நகர் நகரியம் அமைக்க அரசு தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 4-ம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள புஞ்சைப்புகளூர் பேரூராட்சியின் 6, 7, 8 ஆகிய வட்டங்கள் அடங்கிய தொழிலாளர் குடியிருப்பு பகுதியை ஒரு நகரியமாக அறிவிப்பதென இப்பேரவை தீர்மானிக்கிறது".

தமிழ்நாடு செய்தி அச்சு மற்றும் காகித ஆலை புஞ்சைப் புகளூர் பேரூராட்சியில் அமைந்துள்ளது. மேற்படி ஆலை முடிவுற்ற பிறகு ஜனத்தொகை 3000 வரை உயரக்கூடும், இது ஒரு தொழிற் பகுதியாகும். நகரியம் ஒன்றை அமைப்பதன் மூலம் தொழிலாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் போதுமான அளவுக்கு பெருக்கப்பட்டு, அதன் மூலம் அங்கு வாழும் மக்கள் நலமடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே புஞ்சைப்புகளூர் பேரூராட்சியுள்ள 6, 7, 8 ஆகிய வட்டங்களின் கீழ் வரும் பகுதிகளைச் சேர்த்து தமிழ்நாடு காகித ஆலை நகரியமாக அமைக்க அரசு தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

[1985 ஜூலை 18

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-ம் பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவின்படி நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போதுள்ள சமய நிறுவனத்தைச் சேர்ந்த குடியிருப்பான தஞ்சாவூர் மாவட்டம் வேளாங்கண்ணி ஊராட்சியை ஓர் நகரியமாக அறிவிப்பதென இப்பேரவை தீர்மானிக்கிறது''.

நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வேளாங்கண்ணி சமய நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு குடியிருப்பு பகுதியாகும். வேளாங்கண்ணியில் பிரசித்தி பெற்ற மாதா கோயில் உள்ளது. வேளாங்கண்ணியிலுள்ள உலகப் புகழ் பெற்ற சகாய மாதாவின் திருவுருவச் சிலை உலகெங்கிலும் இலட்சக்கணக்கான மக்களை ஆண்டு முழுவதும் அவ்விடத்திற்கு ஈர்க்கிறது. இக்கோவில் ஒரு புண்ணியஸ்தலமாகக் கருதப்படுகிறது. இங்கு நடைபெறும் திருவிழாவிற்கு இம்மாநிலத்தில் உள்ள மக்கள் மட்டுமல்லாது பிற மாநிலங்களிலிருந்தும் மக்கள் வருவதினால் இவ்வூர் ஒரு பிரசித்தி பெற்ற சுற்றுலா பிரதேசமாகக் கருதப்படுகிறது. இத் திருக்கோவிலுக்கு வருகை தருகின்ற எண்ணற்ற மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேளாங்கண்ணி ஊராட்சியை நகரியமாக அமைப்பது அவசியமெனக் கருதப் படுகிறது. அதன் மூலம் அங்கு வழிபாட்டிற்கு வரும் மக்கள் நலமடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இத்தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு மாற்று தள நாயகர் அவர்களே, புழல் பேரூராட்சி ஒன்றியத்தின் கீழ் இயங்குகின்ற மணலியை நகரியம் ஆக்குகின்ற நிலையில் ஒரு சில கருத்துக் களை சொல்லலாம் என எண்ணுகிறேன்.

மணலி பேரூராட்சி, சின்னசேக்காடு பேரூராட்சி, கடப்பாக்கம் ஊராட்சி, சடையான்குப்பம் ஊராட்சி, எலந்தஞ் சேரி கிராமம் ஆகியவைகளை சேர்த்து நகரியமாக ஆக்க இருக்கிறார்கள். இப்படி நகரியம் ஆக்க இருக்கின்ற இந்தப்பகுதியில் இந்த புழல் ஊராட்சி ஒன்றியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். 18 ஊராட்சிகள் அந்தப் புழல் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்றன. 4 பேரூராட்சிகள் இருக்கின்றன. ஆக தமிழகத்தில் மிகச்சிறியது புழல் ஊராட்சி என்பதைத் தாங்கள் அறிந்து இருப்பீர்கள். நிதி அதிகமாக வருகின்ற பகுதியாக இருக்கின்ற மணலியில் இப்போது எல்லா வசதிகளும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கல்வி, துப்புரவு, குடிநீர், தொழிலாளர் நலம், மருத்துவ வசதி அத்தனையும் அங்கே சிறப்பாக செய்யப்பட்டு இருக்கின்றன.



[திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

(இரவு 7-30)

அங்கே இருக்கின்ற நிதியை இன்னமும் பலபேரூராட்சிகளுக்குக் கொடுத்து இருக்கின்ற செய்திகளையும் நான் அறிந்திருக்கிறேன். இப்படி வளமாக இருக்கின்ற பேரூராட்சிகளை எல்லாம் எடுத்து நகரியமாக மாற்றுவதனாலே வளம் பெறுமா என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது. காரணம் தேர்தல் வருமே, பதவி அதிலே பெறலாமே என்று அரசியல்வாதிகள் மிக ஆசைப்பட்டுக் கொண்டு இருக்கிற நேரத்தில், இப்போது, கனவு கண்டு கொண்டிருந்த அரசியல்வாதிகள் எண்ணுகின்ற பேதமை உணர்வுக்குத் தள்ளப் பட்டு விடுமோ என்கிற சூழ்நிலையில் நகரியமாக ஆக்குகின்றபோது நகரியம் ஆன, என்னுடைய திருவொற்றியூர் தொகுதியைச் சேர்ந்த, பக்கத்திலே 2 நகரியங்கள் இருக்கின்றன. மாதவரம் நகரியம், பக்கத்திலே கத்திவாக்கம் நகரியம்.

இப்போது மூன்றாவது நகரியமாக மணலியை ஆக்கப் போகிறீர்கள். அந்த மாதவரம் நகரியம், நகரியமாக்கப்பட்டு வளம் பெற்றிருக்கிறதா என்றால் வளமே இல்லை என்று தான் என்னால் சொல்ல முடியும். மாதவரம் நகரியத்தின் கிழக்குப் பகுதியில் 12 ஆண்டுகளாக விளக்கே எரிவது இல்லை. நான் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் பல முறை மனு கொடுத்து இருக்கிறார்கள். நகரியம் ஆக்கி, அங்கே குடிநீர் இல்லை. நல்ல சாலை வசதிகள் அமைக்கப்படாமல் இருக்கின்றன. மேலும் கத்திவாக்கத்தை எடுத்துக்கொண்டால், அங்கே ஒரு சில நன்மைகள் இருந்தாலும், அங்கே இருக்கின்ற நிர்வாக அதிகாரிக்கும் மற்றும் உள்ள வைஸ்—சேர்மன் என்று சொல்கிற வருக்கும் கருத்து வேறுபாடுகள், மாதவரத்திலும் சரி, கத்திவாக்கத்திலும் சரி இருக்கின்றன. இதை ஏன் சொல்கிறேன் என்றால், நகரியம் ஆக்குகிறபோது நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவரே பொறுப்பேற்றுக் கொள்கிறார்.

மக்களுடைய பிரதிநிதிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள் அங்கே வரமுடியாத சூழ்நிலை இருக்கிற காரணத் தால், நகரிய உணர்வானது பாதிக்கப்படுகிறது. இப்போது கூட நம்முடைய சட்டமன்றப் பேரவை, மேலவைத்தேர்தல்கள் நடை பெறுகின்றன. அவை இல்லாமலேயே, நம் கவர்னரே ஆளுகின்ற பொறுப்பிலே விட்டுவிடலாம். நடுவண் அரசு இருக்கின்ற டெல்லியிலே கூட, பிரசிடென்ட், குடியரசுத் தலைவர் அவர்களே ஆளுகின்ற தன்மையிலே விட்டுவிடலாம்.

ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால்தான் மக்களுடைய பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்கமுடியும். ஏற்கனவே, அதிகாரிகளுடைய ஆட்சி என்று நம் அரசைச் சொல்கிறார்கள். மேலும் அதிகார வர்க்கத்தின் கீழே நகரியம்

ஆக்கப்படுமேயானால், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்திருக்கிற குழு சொல்கிற கருத்துக்களைக் கூட அவர்கள் கேட்டாலும் கேட்கலாம். கேட்காமலும் போகலாம். ஒன்றும் செய்ய முடியாது.

ஆகவே, நகரியம் ஆக்குகின்ற தன்மையை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து நினைத்துப் பார்க்கவேண்டும். மேலும் நிதி அதிகமாக இருக்கின்ற பகுதிகளை எல்லாம் எடுத்து விட்டு, மிக சிறிய பஞ்சாயத்து புழல் இருக்கிறது; ரெட் ஹில்ஸ் பேரூராட்சி இருக்கிறது. இரண்டையும் வைத்துக் கொண்டு ஏன் தனி பஞ்சாயத்து யூனியன் என்று அழைக்கவேண்டும்? அதை தயவு செய்து எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதையும் நீங்கள் புழல் டவுன்ஷிப் என்று டவுன்ஷிப்-உடன் இணைத்து விடுவீர்களேயானால், யூனியனையே ஒழித்துவிடலாம். இதை என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சொல்கிறேன். அதையாவது ஒரு சிறந்த திட்டமாக உண்டாக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், நம்முடைய நகரியத்தினால் ஏற்படுகின்ற விளைவுகள் எல்லாம்—இப்போது 2 நகரியங்கள் இருக்கின்றன. இரண்டு நகரியங்களின் நிர்வாக அதிகாரிகள், நம்முடைய தோழமைக் கட்சியினுடைய வைஸ் சேர்மன் எதைச் சொன்னாலும் செய்வதே கிடையாது. இதை நான் அமைச்சர் அவர்களிடம் கூட சொல்லி இருக்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அதிகாரிகள் சொல்கிறார்கள்—எங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்தான் முக்கியம். நீங்கள் தேவை இல்லை என்று. எங்களுக்குத்தான், அரசியல்வாதிகள் பொறுப்பிலே இருக்கிறவர்களுக்குத் தான், அதாவது அந்த வைஸ் சேர்மனுக்குத் தான் பிரச்சினைகள் தெரியும்.

அவர் மக்களைப் பார்க்கிறார். மக்களை அணுகி, மக்களுடைய குறைகளைக் கேட்கிறார். மக்களும் குறைகளை அவர்களிடம் சொல்கிறார்கள். அதிகாரிகளிடம் சொல்வது இல்லை. ஆகவே, இந்த வைஸ் சேர்மன், நிர்வாக அதிகாரி இருவருக்கிடையே வருகின்ற கருத்துவேறுபாடு சூழ்நிலையை நான் நேரடியாக பரர்த்து இருக்கிறேன். நேரடியாக தான் உணர்ந்து இருக்கிற காரணத்தினாலே, நகரியமாக மாற்றுவதனாலே, பெரிய மாற்றம் வருவதற்கு வழி இல்லை, என்று நினைக்கிறேன்.

எனவே, இந்த நகரியமாக ஆக்குகின்ற தீர்மானத்தின்மீது பேசுவதற்கு—நேரம் கடந்து விட்டது; எல்லோரும் மணியைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மணியை ஒலிக்கின்ற சூழ்நிலையை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் பெற்று இருக்கிறார்கள்—பேசுவதற்கு வாய்ப்பு தந்ததற்கு நன்றியையும், வணக்கத்தையும் சொல்லி விடை பெறுகிறேன்.



திரு. சு. பாலன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 3 மாவட்டங்களில் அடங்கிய ஊராட்சிகளை நகரியப் பகுதிகளாக ஆக்கவேண்டும் என்று இங்கே சொன்னார்கள். அவர் சொல்கிற நேரத்தில், எதற்காக இப்படி ஆக்கவேண்டும் என்று சொன்னார். மக்களுக்குக் குடிநீர் கிடைப்பதற்கும், துப்புரவு, கல்வி, மருத்துவம் ஆகியவை எல்லாம் ஒழுங்காகச் செய்வதற்காகவும், அவைகளை நகரியமாக ஆக்குவதாகத் தெரிவித்தார்கள். புழல் ஊராட்சியை உள்ளடக்கிய சின்னசேக்காடு பேரூராட்சி, சடையான்குப்பம் ஊராட்சி, கடப்பாக்கம் ஊராட்சி ஆகிய 3 பேரூராட்சிகளையும், அதைப் போன்று, செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பொத்தேரி, காட்டாங்கொளத்தூர், நின்னக்கரை, பேரமனூர், களிவந்தப்பட்டு, திருக்கச்சூர், செங்குன்றம் ஆகிய பகுதிகளையும், தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போதுள்ள வேளாங்கண்ணி ஊராட்சியையும், அது பக்தர்கள் வருகின்ற ஊராக இருப்பதால் அங்கே இப்படிப்பட்ட வசதிகளைச் செய்ய வேண்டுமென்பதற்காக இதை நகரியமாக ஆக்குவதாகச் சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனக்கு முன்னால்பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல, அடுத்த இரண்டு மாதங்களில் நகராட்சி, ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற இருப்பதாக அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படி அந்தத் தேர்தல் வரும் சமயத்திலே இப்படிப்பட்ட ஊராட்சிகளை நகரியமாக ஆக்கி அங்கே அதிகாரிகளைப் போட்டு அல்லது கலெக்டரின் தலைமையின் கீழே, இந்த ஊராட்சிகளை நகரியமாக ஆக்குவதன் மூலம், ஏற்கனவே அந்த ஊராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் நல்லமுறையிலே பணியாற்றி பல ஊராட்சிகளை நல்ல நிலையிலே வைத்திருந்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது திடீரென்று நகரியமாக ஆக்குகின்ற காரணத்தினால், தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் இல்லாமற் போய்விடுகிறது. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, அரசியல் கட்சிக்காரர்களுக்கு ஏமாற்றமளிக்கும் நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இங்கே சொல்லப்பட்டிருக்கின்றவற்றில் ஏறக்குறைய மூன்று இடங்களிலே பெருவாரியான தொழிலாளர்கள் வாழ்கின்ற பகுதிகளாக இருப்பதால், தேர்தல் வரும் நேரத்தில் தொழிலாளர்கள் தங்களுடைய ஆளுங்கட்சிக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்ற அச்சத்தால் இந்தத் தனித் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டிருப்பதாக நாங்கள் நினைக்கிறோம், ஆகவே, நீங்கள் அந்த அச்சத்தின் காரணமாகத்தான் இவ்வாறு கொண்டுவந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்

பினர்கள் இல்லாமல் செய்யப்படுவதன் மூலம் ஜனநாயகத்தைக் குழித்தோண்டிப் புதைக்கின்ற நிலையில் ஆது வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, இந்த அரசினர் தனித் தீர்மானத்தை எதிர்க்கிறோம்.

ஏற்கனவே நவீனமயமாக்கப்பட்ட பகுதிகள் எந்த அளவிற்கு முன்னேற்றம் கண்டிருக்கின்றன என்பதை இன்றைக்கு எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். ஆகவே, எலக்ஷனை அடிப்படையாக வைத்து, தொழிலாளர்கள் தங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்ற நிலையிலேதான் இன்றைக்கு இவைகள் நகரியங்களாக ஆக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டைக் கூறி, இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசினர் தனித் தீர்மானங்கள் மூலம் நான்கு நகரியங்களை அமைப்பதாக அறிவித்திருப்பது, குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலுள்ள வேளாங்கண்ணி ஊராட்சியை நகரியமாக அறிவிப்பதாக இந்தத் தீர்மானம் குறிப்பிடுகிறது. வேளாங்கண்ணி ஊராட்சி என்பது நாகை தொகுதியைச்சேர்ந்தது. நான் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவன் என்ற முறையில் வேளாங்கண்ணி ஊராட்சியை நகரியமாக ஆக்குவதற்கு அரசு முன் வந்திருப்பதற்காக அரசுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாங்கண்ணி ஊராட்சி நகரியமாக மாற்றப்படுவதால், அங்கே ஆண்டுதோறும் வருகின்ற இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு உரிய வசதிகளைச் செய்து தரமுடியும் என்ற நோக்கத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கினார்கள். அதிலே ஆரம்பத்திலே சிரமங்கள் இருந்தாலும், இன்றைக்கு இருப்பதைவிட அபிவிருத்தி காண்பதற்கு நகரியமாக மாற்றப்படுவது உதவி செய்யும் என்ற நம்பிக்கையோடு அது நகரியமாக மாற்றபபடுவதை நான் வரவேற்கிறேன்.

நகரியமாக அமைத்தவுடனேயே அதற்குத் தேர்தல் நடத்தப் போவதில்லை. கமிட்டிதான் அமைக்கப்படும். அப்படி கமிட்டி அமைக்கப்படும்பொழுது ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டும் கொண்டதாக அமைக்காமல், அந்த ஊரிலே உள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கின்ற முறையில அந்த நகரியக் கமிட்டிக்கு ஆரம்பத்திலே நாமினேட் செய்யும்பொழுது கவனத்தில் வைத்துக் கொண்டு நாமினேட்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு என்னென்ன காரணங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்களோ அதே காரணங்கள் இது ஒரு கிறித்தவர் ஸ்தலமாக இருக்கிறது. அதற்குச் சமமான அளவிற்கு முஸ்லீம் மக்களின் புனித இடமாக நாகூர் நகரம் இருக்கிறது. நான்





ஆளுநர் உரையின்மீது நடைபெற்ற விவாதத்தின்பொழுதே
நாகூரை நகரியமாக ஆக்கித் தர வேண்டுமென்று கோரியிருக்
கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இதையும் கவனத்திற்
கொண்டு, வேளாங்கண்ணியை நகரியமாக ஆக்கித் தந்தமைக்கு
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், அதைப்
போல நாகூரையும் நகரியமாக ஆக்கித்தர வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 7-40)

அது நகரியமாக ஆகும்போது, அதில் அனைவரும் பங்கு
பெற்று, அந்த நிர்வாகத்தை நடத்தக்கூடிய முறையிலே,
கவனித்து, அந்தக் கமிட்டிகளுக்கு நாமினேட் செய்ய வேண்டு
மென்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடிக்
கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல்சமத்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்னும் கொஞ்ச நேரம் விவாதம் நீண்டு
கொண்டே போனால். டின்னருக்கு ஏற்பாடு செய்வீர்கள் என்ற
நம்பிக்கையில் பல பேர்கள் அமர்ந்திருக்கிறோம்.

ஒரே ஒரு கருத்து—என்னுடைய அருமைத்தோழர் வீரய்யன்
அவர்கள் அதை எடுத்துச் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் நாகை நகராட்சியை உள்ளிட்ட வேளாங்
கண்ணி நகரியம் ஆவதற்கு என்ன, என்ன காரணங்கள் இருக்
கின்றன என்று குறிப்பிட்டார்களோ அந்தக் காரணங்கள்
அனைத்தும் நாகூரை ஆக்குவதற்கும் உண்டு. நாகூருக்கும்
இலட்சோபலட்சம் மக்கள்—எல்லா சமுதாய மக்களும் ஆண்டு
தோறும் வந்து கொண்டிருக்கிறார்கள். அதோடு வேளாங்
கன்னிக்கு வரக்கூடிய யாத்ரீகர்களிலே இலட்சோபலட்சம் மக்கள்
நாகூருக்கு வந்து செல்கிறார்கள். நாகூர் வரலாற்றுச் சிறப்புமிக்க
ஒரு ஊர். நாவைக் கூர்மையாக்கிக் கொண்ட பல செந்நாப்
புலவர்கள் அங்கே வாழ்ந்திருக்கிறார்கள். அதற்குப் புலவர்
கோட்டை என்ற மற்றொரு சிறப்புப் பெயர் உண்டு. இன்றைய
நான்காவது தமிழ்ச் சங்கம்தோன்றுவதற்கு பாண்டித்துரைத்தேவர்
அவர்களைத் தூண்டிய குலாம் காதர் அவர்கள் வாழ்ந்த ஊர்
நாகூராகும்.

அதோடு 400 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு அறநெறிச் சிறுவ
ராகத் தமிழகத்திலே உலா வந்த சாகுல் ஹமீது என்ற பெரியவர்
அவர்கள் அடக்கப்பட்டிருக்கிற திருத்தலம். அதை சுற்றுலாத்
தலமாகவும் அறிவிக்க வேண்டுமென்று சுற்றுலா மானியத்தின்
மீது பங்கு கொண்டபொழுதே நான் கோரிக்கை வைத்தேன்.
அதேபோல் நகரியம்ஆக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டேன்.
இப்பொழுதும் நான் அதை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு,
அமைச்சர் அவர்கள் அதை அவசியம் ஒப்புக் கொள்ள வேண்டு
மென்று வற்புறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, 4 நகரியங்கள் உருவாக்குவதற்கான
தீர்மானத்தை நான் முன் மொழிந்ததையொட்டி உறுப்பினர்கள்

[திரு. ப. உ. சண்முகம்.] [1985 ஜுலை 18

தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மாண்புமிகு திரு பாரதி அவர்கள் பேசும்பொழுது, தன் தொகுதியிலிருக்கிற பெரும் பகுதியை, வளர்ந்திருக்கிற தொழிலாளர் பகுதியை மட்டும் எடுத்து நகரியமாக ஆக்கிவிட்டோம் என்று சொன்னார்கள். நகரியமாக ஆக்குவது நாங்கள் செய்தது மட்டுமல்ல. அதேபோல், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்மாண்புமிகு திரு.பாலன்கூட தொழிலாளர்களெல்லாம் உங்களுக்கு ஓட்டுப் போட மாட்டார்கள் என்று பயந்து போய் நகரியமாக ஆக்குகிறீர்கள் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

நடக்கப் போகிற தேர்தலில் அரசியல் கட்சிகளே நிற்கப் போவதில்லை, அரசியல் சின்னங்கள் இல்லை என்பது அவருக்கு நினைவு மறந்து விட்டதோ என்று தெரியவில்லை. எனவே, கட்சிக்கு ஓட்டுப் போடுகிற பிரச்னை இல்லை. ஆனால் என்ன நடந்தது என்றால், தொழிலாளர்களே வந்துதான் அதை நகரியமாக ஆக்க வேண்டுமென்று மனு கொடுத்திருக்கிறார்கள்.

அதற்கும் முன்னே அரசு யோசனை வைத்திருந்தது, பரிசீலித்துக்கொண்டிருந்தது; தொழிலாளர்களே வந்து அதை நகரியமாக ஆக்க வேண்டுமென்று மனு கொடுத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நகரியமாக ஆக்குவதில் என்ன, என்ன நன்மைகள் இருக்கின்றன என்பதை அவர்கள் உணர்ந்து வந்து கேட்டார்கள். அதை ஏற்றுக் கொண்டிருக்கிறோமே தவிர, ஏதோ தேர்தலுக்காக பயந்துகொண்டு நகரியமாக ஆக்கினோம் என்று தயவு செய்து கருத வேண்டாம் என்று தங்கள் மூலம் நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு.அப்துல் சமது அவர்கள்குறிப்பிட்ட நியாயமான காரண காரியங்களை நான் ஒத்துக்கொள்கிறேன். என்ன, என்ன காரணங்கள் வேளாங்கன்னிக்குப் பொருந்துமோ, அவை அத்தனை காரணங்களும் நாகூருக்கும் பொருந்தும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். நிச்சயம் அரசு அதைப் பரிவோடு பரிசீலிக்கும் என்று இந்த நேரத்தில் அவர்களுக்கு உறுதியளிக்கிறேன். நகரியமாக ஆக்குவதன் மூலம் நகரங்கள் எல்லாம் சிறப்படையும்.

அதோடு மட்டுமல்ல, இந்த நேரத்தில் இன்னொன்றும் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரையில் நகரியங்களில் இருக்கின்றவர்கள் வாக்களிக்கின்ற உரிமை பெறவில்லை; இதுவரையில் நகரிய மக்கள் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருக்கவில்லை,

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் புதியதொரு முறையை, இந்தத் தேர்தலில், நாட்டிற்கு அறிமுகப்படுத்த இருக்கிறார்கள். நடக்க இருக்கின்ற ஊராட்சிமன்றத் தேர்தலில் ஊராட்சி ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு, நகரியத்தில் இருக்கிறவர்களுக்கும் வாக்குக் கொடுக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு வாக்குரிமை கொடுப்பதாக் இருக்கிறோம்: அதே நேரத்தில் நகரியத்தில் இருக்கிற துணைத்



1985 ஜுலை 18] [திரு. ப. உ. சண்முகம்]

தலைவரை ஊராட்சி ஒன்றியத்தின் ஒரு உறுப்பினராக ஆக்கலாமா என்பதைப் பற்றியும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. நகரியத்தின் தலைவரைக் கொண்டுபோய் உறுப்பினராக்க முடியாது, காரணம், அவர் மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர். துணைத் தலைவரைக் கொண்டுபோய் ஊராட்சி ஒன்றியத்தில் இணைக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். மேற்கொண்டு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நகரியத்திற்கும் எந்த விதத்தில் தொடர்பு ஏற்படுத்த முடியும் என்பதைப் பற்றியும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இதை மக்களாட்சியில் நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்பதை மீண்டும் நினைவுபடுத்துவதற்காகச் சொல்கிறேனே தவிர, வேறல்ல. எனவே 4 நகரியங்களாகும். 4 தனித் தீர்மானங்களையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்றுதங்கள் மூலம்இந்தப் பேரவையை நான் வேண்டிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-ம் பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவின்படி, செங்கல்பட்டு மாவட்டம், புழல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எலந்தஞ்சேரி கிராமம் உட்பட மணலி பேரூராட்சி சின்னச்சேக்காடு பேரூராட்சி, சடையான்குப்பம் ஊராட்சி, கடப்பாக்கம் ஊராட்சி ஆகியவை அடங்கிய பகுதியை (இது தொழிலாளர் குடியிருப்புப் பகுதியாகும்) நகரியமாக அறிவிப்பதென இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பொத்தேரி, காட்டாங்கொளத்தூர், நின்னகரை, பேரமனூர், களிவந்தப்பட்டு, திருக்கச்சூர், செங்குன்றம் ஊராட்சிகளில் அடங்கியுள்ள பகுதி முழுவதையும் (இது ஒரு தொழிலாளர் குடியிருப்புப் பகுதி ஆகும்) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-ம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவையொட்டி நகரியமாக அறிவிப்பதென இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 4-ம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள புஞ்சைப்புகளூ

பேரூராட்சியின் 6,7,8 ஆகிய வட்டங்கள் அடங்கிய தொழிலாளர் குடியிருப்புப் பகுதியை ஒரு நகரியமாக அறிவிப்பதென இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-ம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போதுள்ள சமய நிறுவனத்தைச் சேர்ந்த குடியிருப்பான தஞ்சாவூர் மாவட்டம் வேளாங்கன்னி ஊராட்சியை ஒரு நகரியமாக அறிவிப்பதென இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 19-7-1985 காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

268. நத்தம் மற்றும் வேடசந்தூர் தாலுகாக்களைச் சேர்ந்த இரண்டு கிராமங்களைத் தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித்துறையின் 8-4-1985-ஆம் நாளிட்ட 273-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

269. கரியமங்கலத்திற்கு ஓர் ஊராட்சி வளர்ச்சிப் பகுதி அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 23-5-1985-ஆம் நாளிட்ட 402 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2)பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

270 தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சட்டமன்ற (உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் மருத்துவச் செலவு ஈட்டுத்தொகை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொது (பணியாளரமைப்பு)த் துறையின் 16-3-1985 ஆம் நாளிட்ட 504 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1951-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



271. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சட்டமன்ற (கட்டணமில்லா இருப்புப்பாதைப் பயணம்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொது (பணியாளரமைப்பு)த் துறையின் 11-4-1985 ஆம் நாளிட்ட 682-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

272. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

194. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை குறித்தும், 1984-85 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் விவாதத்தைத் தொடங்கி வைத்து மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை (தமிழ், ஆங்கிலம்).

195. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளும் அக்கருத்துரைகள் மீதான குறிப்புரைகளும் அடங்கிய விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

196. தமிழ்நாடு அரசின் 1969-70 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1980-81) தனது முந்தைய அறிக்கையில் (நான்காவது அறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய நிதித் துறை சம்பந்தப்பட்ட பொதுக் கணக்குக் குழுவின் ஆறாவது அறிக்கை. (ஆங்கிலம்)

197. தமிழ்நாடு அரசின் 1964-65, 1970-71 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக்குழு (1980-81) தனது முந்தைய அறிக்கையில் (நான்காவது அறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சம்பந்தப்பட்ட பொதுக் கணக்குக் குழுவின் ஏழாவது அறிக்கை. (ஆங்கிலம்)

198. தமிழ்நாடு அரசின் 1970-71 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1980-81) தனது முந்தைய அறிக்கையில் (நான்காவது அறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத் துள்ள நடவடிக்கை பற்றிய உள்துறை சம்பந்தப்பட்ட பொதுக் கணக்குக் குழுவின் எட்டாவது அறிக்கை. (ஆங்கிலம்)

199. தமிழ்நாடு அரசின் 1964-65, 1966-67 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1980-81) தனது முந்தைய அறிக்கையில் (நான்காவது அறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறை சம்பந்தப்பட்ட பொதுக் கணக்குக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (ஆங்கிலம்)

200. தமிழ்நாடு அரசின் 1966-67 முதல் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1980-81) தனது முந்தைய அறிக்கையில் (நான்காவது அறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய தொழில் துறை சம்பந்தப்பட்ட பொதுக் கணக்குக் குழுவின் பத்தாவது அறிக்கை. (ஆங்கிலம்)

201. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும்-விடைகளும் (1 முதல் 25 வரை) (நான்காவது பட்டியல்).

இணைப்பு.

(....205 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்ட தமிழ்நாடு மின் வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை/ 1984-85 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. தமிழ்நாடு மின் ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று 1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61ஆம் பிரிவிற்கிணங்க தமிழ்நாடு மின் வாரியம் இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. வாரியத்தின் செயல்முறை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும் மின்வாரியமும் கருத்தில் கொள்ளும். முந்தைய ஆண்டுக்கான (அதாவது 1982-83 ஆம் ஆண்டுக்கான) நிதிநிலை அறிக்கை இந்த அவையின் கடந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை தனியே சுற்றனுப்பப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீதான கடைசி விவாதம் அவையில் 1983-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் நடைபெற்றது. 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை 1982-83 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கை மற்றும் 1984-85 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கை, 1983-84 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கை இவற்றின் மீதான விவாதம் 1984 அக்டோபர் திங்களில் நடைபெறுவதாக திட்டமிடப்பட்டிருந்ததென்றாலும் ஒத்திவைக்கப்பட வேண்டியதாயிற்று.





4. விவசாயப் பெருங்குடி மக்கட்கு, குறிப்பாக குறைந்த வருவாயுடைய விவசாயிகட்கு எல்லாவகைகளிலும் உதவி செய்ய வேண்டும் என்ற இவ்வரசின் கொள்கைக்கிணங்க, விவசாய நிலத்திலிருந்து பெறும் வருமானத்தை மட்டுமே சார்ந்துள்ள குடும்பங்களைக் கொண்ட சிறு விவசாயிகட்கு 15-9-1984 முதல் இலவச மின்சாரம் வழங்கவேண்டுமென அரசு தீர்மானித்தது. இந்தச் சலுகை 5 ஏக்கர் புன்செய் அல்லது 2½ ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு மேற்படாமல் சொந்தமாகவோ, குத்தகையிலோ அல்லது அடகு முறையிலோ பயிரிடும் தகுதியுள்ள சிறு விவசாயிகளுக்குப் பயன்தரும். மற்ற எல்லா விவசாயிகளைப் பொறுத்தவரை அவர்கள் உபயோகிக்கும் மின் அளவைக் கணக்கில் கொள்ளாது, வருடத்துக்கு ஒரு குதிரை சக்திக்கு ரூ. 75 மட்டுமே மொத்தத் தொகையாக வசூலிக்கப்படும்.

கிராமப்புறங்களில் வாழும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு மின்சக்தியின் நன்மைகளை விரிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் ''குடிசைக்கு ஓர் மின் விளக்கு'' திட்டத்தினை இவ்வரசு 1979-ல் துவக்கி இத்திட்டத்தின் கீழ், இதுவரை 6.52 இலட்சம் குடிசைகட்கு மின் இணைப்பு வழங்கியுள்ளது. இப்பயனீட்டாளர்களிடமிருந்து ஒட்டு மொத்தமாக ஒரு மின் இணைப்புக்கு மாதத்திற்கு ரூ. 2.50 மின் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. 15-9-1984 முதல் இத்தகைய மின் இணைப்புகளுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

விவசாய மின் இணைப்புகளுக்கான விண்ணப்பங்களை அளித்து நீண்ட நாட்களாகக் காத்திருக்கும் எண்ணற்ற விவசாய விண்ணப்பதாரர்களுக்கு விரைவில் மின் இணைப்பு வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில், ஏற்கனவே 1984-85ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டளவான 20,000-ஐ உயர்த்தி 50,000 பம்பு செட்டுகளுக்குப் புதிய மின் இணைப்பு வழங்க வேண்டுமென தமிழ்நாடு அரசு, மின்வாரியத்தைப் பணித்தது. மின் வாரியம் 1984-85-ல் இக்குறியீட்டையும் மிஞ்சி 50,950 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கியிருக்கிறது என்பதனை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர்.

கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் மின் உற்பத்தியைப் பகிர்ந்துகொள்வதிலிருந்த தகராறு மாநிலத்தின் திருப்திக்கேற்றவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அணுசக்தித் துறை கல்பாக்கத்தில் ஓர் அணு மின் நிலையத்தை நிறுவியுள்ளது. 235 மெகாவாட் திறன் கொண்ட முதற்பிரிவு 1983 ஜூலையில் பணியைத் துவக்கியது. 235 மெகாவாட் திறன் கொண்ட இரண்டாவது பிரிவு 1985-86ல் பணியைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதற் பிரிவின் உற்பத்தி முழுவதும் மற்றும் இரண்டாம் பிரிவின் உற்பத்தியில் 50 விழுக்காடும் தமிழ்நாட்டுக்கே வழங்கப்படுமென மாநிலங்களவையில் 1971-ல் முன்னாள் பிரதமர் கொடுத்த உறுதி மொழியை நிறைவேற்ற வேண்டுமென மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்திக்

கொண்டிருந்தது. 1984 மார்ச் திங்களில் தமிழ்நாட்டின் இரண்டு சட்டமன்றங்களும், இதற்கான ஒருமனதான தீர்மானத்தை நிறைவேற்றின. இறுதியாக, மத்திய அரசு தமிழ்நாட்டின் வேண்டுகோளை முழுவதுமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

1984-85-ஆம் ஆண்டில் கிடைத்த மின்சக்தியின் அளவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. 1983 ஏப்ரல் முதல் மார்ச் 1984 வரை கிடைத்த 10352 மி. யூனிட்டுகளுக்கு மாறாக 1984 ஏப்ரல் முதல் 1985 மார்ச் வரை கிடைத்த அளவு 13,695 மி. யூனிட்டுகளாகும். இது 32.29 சதவீதம் உயர்வைக் குறிக்கும். நீர் மின் நிலையங்களைத் திறம்பட நிர்வகித்ததாலும் அனல் மின்நிலையங்களை நன்கு பயன்படுத்தியதாலும் கல்பாக்கம் அணு மின் நிலையத்திலிருந்தும் இராமகுண்டம், பெரும்பேரனல் நிலையத்திலிருந்தும் கிடைத்த கூடுதல் மின்சாரத்தின் உதவியின் காரணமாகவும் இது சாத்தியம் ஆயிற்று என்பது கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் மூலம் தெரியும்.

| | 1984–85 (மி.யூ.) | 1983–84 (மி.யூ.) | கூடுதல் விழுக்காட்டில். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| நீர் மின் நிலையங்கள் .. | 4,450 | 2,948 | 50.95 |
| பேசின் பிரிட்ஜ் .. | 87 | 87 | .. |
| எண்ணூர் .. .. | 1,427 | 1,101 | 29.61 |
| தூத்துக்குடி .. .. | 3,421 | 2,793 | 22.48 |
| நெய்வேலி .. .. | 3,087 | 3,027 | 1.98 |
| கல்பாக்கம் .. .. | 935 | 376 | 148.67 |
| கேரளா .. .. | 175(—) | 15 | .. |
| ஆந்திரா .. .. | .. | 31 | .. |
| தேசிய அனல் மின் கழகம் .. | 111 | .. | .. |
| மற்றவை .. .. | 2 | 4 | — |
| மொத்தம் .. | 13,695 | 10,352 | 32.29 |

6. தமிழ்நாடு மின் வாரியத்தில் பேசின் பிரிட்ஜ், எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று அனல் மின் நிலையங்கள் உள்ளன. பேசின் பிரிட்ஜ் செயலற்ற நிலையம் என்பதையும் இந்நிலையத்தை எரிவாயு மின் நிலையமாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளது என்பதையும், தூத்துக்குடி மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையங்களின் செயற்திறனில் சென்ற ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதையும் இம்மன்றத்திற்குத் தெரிவிப்பதில்



நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 1981-82 நீர் ஆண்டில் 41 சதவீதமாக இருந்த தூத்துக்குடி நிலையத்தின் நிலையத் திறன் குறியீடு 1984-85 நீர் ஆண்டில் [illegible]7.7 சதவீதம் ஆக உயர்ந்துள்ளது. இவ்வாறே 1981-82 நீர் ஆண்டில் 37 சதவிகிதம் ஆக இருந்த எண்ணூர் நிலையத்தின் நிலையத் திறன குறியீடு 1984–85 நீர் ஆண்டில் 42.5 சதவீதம் ஆக உயர்ந்துள்ளது.

இவ்விரு நிலையங்களின் செயல்திறனை மேலும் மேம்படுத்த தமிழ்நாடு மின் வாரியம் தொடர்ந்து முயன்று வருகிறது. எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு ஒரு மேம்பாட்டுத் திட்டம் ரூ. 42.40 கோடி செலவில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி 1987 இல் முடிக்கப்படும். இந்தப் பணியின் இரண்டாவது கட்டத்திற்கு ரூ. 37.38 கோடி முதலீட்டுடன் மத்திய அரசு ஏற்பு அளித்துள்ளது. இப்பணிகள் 1987–88 வரை நடைபெறும். இவ்வாறே ரூ. 6.77 கோடி செலவிலான தூத்துக்குடி அனல் மின் நிலைய மேம்பாட்டுத் திட்டத்துக்கும் மத்திய அரசு ஏற்பு அளித்துள்ளது. இப்பணிகள் 1987-88-இல் முடிக்கப்படும். இம்மேம்பாட்டுத் திட்டம் குறித்து தூத்துக்குடிக்கு ரூ.5.56 கோடியும், எண்ணூருக்கு ரூ. 18.50 கோடியும் மத்திய நிதி உதவியாக மாநில திட்டத்திற்கு அப்பாற்பட்ட தொகையாக பெறப்படும்.

7. அனல் மின் நிலையங்கள் திறம்பட செயல்பட தரமான நிலக்கரி வழங்கப்படவேண்டியது உரிய காலத்தில் அடிப்படைத் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ளதால் இந்த வகையில் தமிழ்நாட்டிற்குப் பெருமளவில் வசதிக்குறைவு ஏற்படுகிறது.

தனது வருடாந்திரத் தேவையான 26 இலட்சம் டன் நிலக்கரிக்கு மாறாக தூத்துக்குடி மின் நிலையம் 1983–84-ல் 16 இலட்சம் டன்களும், 1984-85-ல் 18.71 இலட்சம் டன்களுமே பெற்றது. தொடர்ந்த நிலக்கரித் தட்டுப்பாடு காரணமாக அவ்வப்போது வெவ்வேறு அளவுகளில் நிலைய இயக்கத்துக்கு எரி எண்ணெயைப் பயன்படுத்துவதைத் தவிர மின்வாரியத்துக்கு வேறு வழி இல்லாமல் போய்விட்டது. இதனால் வாரியத்துக்குப் பெரும் செலவு ஏற்பட்டுள்ளது. சம அனல் நிலை ஈடு கொண்ட நிலக்கரியைவிட, எண்ணெய்க்கென கிலோ லிட்டருக்கு வாரியம் ரூ. 1,000 அதிகமாகச் செலவிடவேண்டியுள்ளது. எரி எண்ணெய்க்கென 1983-84-ல் ரூ.8.84 கோடியும், 1984–85–ல் ரூ. 11.35 கோடியும் வாரியம் கூடுதலாகச் செலவிட வேண்டியிருந்தது.

இந்நிலையில், ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு முறை 5 இலட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்ய இவ்வரசு வற்புறுத்தி மத்திய அரசு ஒரு இலட்சம் டன் நிலக்கரி இறக்குமதிக்கு ஒப்புதல் அளித்தது. எண்ணூர் நிலையத்திலும் இத்தகைய சிக்கல்கள் உள்ளன. நிலக்கரி ஒழுங்காக வழங்கப்படுவதில்லை.

குறைவான அளவு மட்டுமின்றி தூத்துக்குடிக்கு வழங்கப் படும் நிலக்கரியின் தரம் நமக்குத் திருப்தி அளிக்கவில்லை. கொதிகலன்கள் 5,200 முதல் 6,300 கே.சி./கி.கி. அனல் நிலைக் குறியீடு மற்றும் 14.5 சத விகிதம் முதல் 23.5 சதவிகிதம் வரை யிலான சாம்பல் உள்ளடக்கத்திற்கென வடிவமைக்கப்பட்டுள்ளன. இதற்கு மாறாக வழங்கப்படும் நிலக்கரியின் மொத்த சராசரி அனல் நிலை குறியீடு 3890 கே.சி./கி.கி. மட்டுமே. ஆனால் சாம்பல் உள்ளடக்கம் 45 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரை அதிகமாக உள்ளது. இது தவிர, நிலக்கரியில் கற்களும், களி மண் கட்டிகளும் பெரிய பாறாங்கற்களும் நிறைந்துள்ளன. இதனால், நிலக்கரியை எடுத்துச் செல்லும் அமைப்புகட்கும், அரவை இயந்திரங்கட்கும், மாவாக்கும் இயந்திரங்கட்கும் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. இச்சிக்கலைத் தவிர்ப்பதற்காக வாரியம் பெருமளவில் ஆட்களை நியமித்து கற்களையும், களி மண் கட்டிகளையும் நேரிடையாக நீக்க வேண்டி உள்ளது.

8. மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நெய்வேலி அனல் மின் நிலையம் தொடர்ந்து நன்கு செயல்பட்டு வருகிறது. 1983–84-ல் வழங்கிய 3087 மி. யூனிட்டுகளுக்கு மாறாக 1984–85-ல் 3027 மி. யூனிட்டுகள் வழங்கியது. முதல் பிரிவின் உற்பத்தி முழுவதையும் வழங்கும் கல்பாக்கம் அணு மின்நிலை யம் 1983–84-ல் வழங்கிய 376 மி. யூனிட்டுகளை 1984–85-ல் 935 மி. யூனிட்டுகளாக உயர்த்தியுள்ளது.

9. ஆந்திராவில் இராமகுண்டம் என்னுமிடத்தில் மத்திய அரசு ஒரு பெரும் பேரனல் மின் நிலையத்தை நிறுவி வருகிறது. இத் திட்டத்தின் முதற்கட்டமாக 200 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகள் செயல்படுகின்றன. இது மண்டலத் தைச் சார்ந்த நிலையமானதால் தமிழ்நாட்டிற்கு உற்பத்தியில் பங்கு உண்டு; மத்திய அரசு வகுத்துள்ள விதியின்படி 600 மெகாவாட்டில் தமிழ்நாட்டின் பங்கு 132 மெகாவாட் ஆகும். எனினும் இராமகுண்டம் பெரும் பேரனல் நிலையத்தின் 400 கிலோ வோல்ட் மின் கம்பித் தொடர்கள் அமைக்கும் பணி முடிவு பெறாததால் தமிழ்நாட்டிற்கும், இராமகுண்டத்துக்கும் நேரிடை இணைப்பு இல்லை. எனவே ஆந்திர மாநிலத்தின் மின் கம்பித் தொடர்கள் வழியாகவே தமிழ்நாட்டின் பங்கினைப் பெற வேண்டியுள்ளது. ஆந்திராவிலுள்ள மின் கம்பித் தொடர்களிலுள்ள குறைபாடுகளின் காரணமாக இராமகுண்டத்திலிருந்து பெற வேண்டிய முழுமையான பங்கைப் பெற முடியவில்லை. மின் கம்பித் தொடர் நிர்மாண வேலைகள் 1986-87ல் தான் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை, இராமகுண்டத்திலிருந்து நாம் ஒரு குறிப்பிட்ட பங்கினையே பெற இயலும்.

10. அனல் மின் நிலையங்களின் பணித்திறனில் ஏற்பட்ட முன்னேற்றம், கல்பாக்கத்திலிருந்து கூடுதல் உதவி மற்றும் ஜூன் திங்கள் நடுவில் துவங்கிய பருவமழை இவற்றின் காரணமாக 20–7–1984 முதல் அரசு மின் வெட்டைத் தளர்த்த முடிந்தது. உயர் அழுத்தத் தொழிற்சாலைகட்குத் தேவையிலும், சக்தியிலும்



1-2-1985 முதல் 30 சதவீதம் மின்வெட்டு மீண்டும் அமுல் படுத்த வேண்டியதாயிற்று, பின்னர் மின்சாரத்தை அதிக அளவில் பயன் படுத்தும் தொழிற்சாலைகட்கு 50 சதவீதம் எனவும் உயர் அழுத்தத் தொழிற்சாலைகட்கு 40 சதவீதம் எனவும் தேவையிலும் சக்தியிலும் 1–3-1985 முதல் மின்வெட்டு உயர்த்தப்பட்டது. கிராமப்புறங்களில் அதுவரை இருந்த இரு பிரிவுகட்குப் பதிலாக 3 பிரிவுகள் அமைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது. எதிர் பார்த்த அளவில் கேரள உதவி கிடைக்காததாலும் நீர்நிலை யங்களில் நீர் வரவு சராசரிக்குக் குறைந்ததாலும் ஸ்டேடாரில் ஏற்பட்ட ஒரு பெரிய தயாரிப்புக் கோளாறின் காரணமாகத் தூத் துக்குடியில் 210 மெகாவாட் திறனுடைய ஒரு பிரிவு வேலை செய்யாததாலும் மேற்கண்ட மின் வெட்டு தேவை ஆயிற்று.

11. பற்றாக்குறையை எதிர்நோக்கி, இந்த அரசு 1984 ஆகஸ்டில் கேரளத்தின் உபரி மின்சாரம் முழுவதையும் தமிழ் நாட்டுக்கென வாங்கும் வகையில் கேரள அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்தது. அச்சமயத்தில் ஆகஸ்ட் 1984 முதல் ஜூன் 1985 வரை கேரளா 1000 மி யூனிட்டுகள் வழங்கும் என எதிர்பார்க்கப் பட்டது. கேரளாவில் பருவமழை தவறியதன் காரணமாக எதிர் பார்த்த அளவு மின்சாரத்தை அம்மாநிலத்தால் தர இயலவில்லை. மேற்சொன்ன காலங்களில் 178 மில்லியன் யூனிட்டுகள் மட்டும் வழங்கியது.

தென்மேற்குப் பருவமழை செவ்வனே, ஜூன். ஜூலை 1984-ல் ஆரம்பித்தாலும் எதிர்பார்த்த அளவில் வலுப்பெறவில்லை. வட கிழக்குப் பருவ மழையும் எதிர்பார்ப்பிற்குக் குறைவாகவே பெய்தது. இதன் காரணமாக, பத்து ஆண்டு சராசரியான 3,800 மி.யூனிட்டுகளுக்குப் பதிலாக மேட்டூர் தவிர மற்ற நீர்த் தேக்கங்களின் மொத்த நீர் வரவு 1984–85ல் 3442 மி.யூனிட்டுகள் மட்டுமே இருந்தது. எனினும் 1983–84ல் தேக்கி வைத்ததைக் கொண்டு நிலைமை சமாளிக்கப்பட்டது.

தூத்துக்குடி மின் நிலையத்திலும் ஓர் தடங்கல் ஏற்பட்டது. ஹைட்ரஜன் கசிவு மற்றும் இதைச் சார்ந்த கோளாறுகளின் காரணமாக 210 மெ.வா. சக்தி கொண்ட 3வது பிரிவு 1–2–1985 முதல் மூடப்பட்டது. ஓர் குறிப்பிட்ட தொழில் நுட்பத்துடன் பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட் நிறுவனம் செய்த 47 இயந்திரங்களில் இதுவும் ஒன்று. எல்லாவற்றிலுமே இக் கோளாறு இருக்கிறது. தற்போது பழுது பார்க்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பெல் நிறுவனம் தூத்துக்குடியில், இயந்திரத்தைத் தற்போது பழுது பார்த்து வருகிறது. 1985 ஜூலை இறுதியில் மீண்டும் செயல்படத் துவங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஜெனரேட்டரில் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக 7–12-1984 அன்று முழுச் சுத்திகரிப்புக்கென எடுத்துக்கொள்ளப் பட்ட கல்பாக்கம் பிரிவு எதிர்பார்த்தவாறு ஜனவரி 1985-ல் பணியை மீண்டும் துவங்க இயலாமல் மார்ச் 1985-ல்தான் பணி யைத் தொடர்ந்தது.

12. பருவ மழையின் நிலை இன்னும் தெளிவாகத் தெரியாத
தால் 1985-86 ஆம் ஆண்டின் மின் சக்தி நிலையைப் பற்றி
முன்கூட்டியே அறுதியிட்டுக் கூற இயலாது. எனினும் பருவ
மழை வழக்கம்போல் இருக்கும் என்று எதிர்பார்த்து ஜூலை
1985 முதல் ஜூன் 1986 வரை கிடைக்கக்கூடிய மின்சாரத்தைக்
கணக்கிடும்பொழுது கட்டுப்பாடற்ற மொத்தத் தேவையான
15,400 மி.யூனிட்டுகளுக்கு மாறாக 14,200 மி.யூனிட்டுகளாகக்
கிடைக்கும். எனவே, 1,200 மி.யூனிட் பற்றாக்குறை ஏற்படும்.
மேற்கண்ட மதிப்பீட்டில் நீர் நிலையங்களின் உற்பத்தி 4,000
மி.யூனிட் எனவும் வாரியத்தின் அனல் மின் நிலையங்களின் உற்
பத்தி 5565மி.யூனிட் எனவும், நெய்வேலி, கல்பாக்கம் மற்றும்
இராம குண்டம் முறையே 2900 மி.யூனிட் 1375 மி.யூனிட் 360
மி.யூனிட் வழங்கும் எனவும் எடுத்துக் கொள்ளப்பட்டது.
கேரளத்தின் உபரி மின்சாரத்தைப் பெறவும் பற்றாக்குறையைக்
கூடியவரை சரி செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தென்மேற்குப் பருவமழையால் 21—6—1985 முதல்
கணிசமான நீர்வரவு பெற்று 1—7—1985 அன்று நீரளவு
808 மி.யூனிட்டுகளை அடைந்தது. எனவே உயர் அழுத்தத்
தொழிற்சாலைகட்கான தேவை மற்றும் சக்தி மீதான மின்
வெட்டு 30 சதவிகிதம் ஆகக் குறைக்கப்பட்டது. கிராமங்களில்
3 பிரிவுகள் மீண்டும் இரண்டு பிரிவுகளாக மாற்றியமைக்கப்
பட்டு பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும்
மின்சாரம் வழங்கப்படுகிறது.

13. நாட்டின் முன்னேற்றத்துக்கும் தொழில் வளர்ச்சிக்கும்
மின்சாரம் தூண்டுகோல் ஆனதால் மின் உற்பத்தித் திறனை
தேவையான அளவு அதிகரிப்பதிலும், மாநிலத்தில் மின்பற்றாக்
குறை இல்லாது அதன் தொடர்பான மின்வெட்டும் கட்டுப்பாடும்
இல்லா நிலையை உருவாக்குவதிலும் தனக்குள்ள பொறுப்பினை
அரசு நன்கு உணர்ந்துள்ளது.

மத்திய மின் அதிகார மன்றத்தின் 12 ஆவது மின்சக்தி
ஆய்வுக் குழுவின் முன்னறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் 1984-85-ல்
உள்ள கட்டுபாடற்ற மின்சக்திக்குத் தேவையான 2800 மெ.வா.
115, 250 மி.யூனிட் என்பது 1989-90-ல் 4142 மெ.வா/22,500
மி.யூனிட் என உயரும். இதைச் சமாளிப்பதற்கு மின்சக்தித் துறை
யில் பெருமளவில் முதலீடு தேவை. எட்டாவது ஐந்தாண்டுத்
திட்ட காலத்தில் மின் தட்டுப்பாடு அறவே களையப்படுவ
வகையில், நடந்துவரும் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்று
வதிலும் புதிய நீர், மற்றும் அனல் மின் திட்டங்களைச் செயல்
படுத்துவதிலும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முழு கவனம்
செலுத்தப்படும்

நடந்து வரும் திட்டங்களில் ரூ. 38.43 கோடி செலவில்
20 M.W/75 M.U சக்தி தரும் சேர்வலாறு நீர் மின் திட்டம்
1985 ஜூன் திங்களில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்
பட்டது. எனினும் கட்டப்பட்டு வரும் மின் நிலையத்தில்
25—6—1985 அன்று வெள்ளம் புகுந்ததால் இத்திட்டம் தாமத
மாகச் செயல்படத் துவங்கும்



ரூ. 154.44 கோடி செலவில் உச்ச வேளையில் மட்டும்
செயல்படும் 400 மெ வா. திறன் கொண்ட காடம்பாறை
நீரேற்று மின் நிலையத்தின் 100 மி.வா. சக்தி கொண்ட ஒரு
பிரிவு 1987 ஜனவரியில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்
படுகிறது. மற்ற மூன்று பிரிவுகளும் மூன்று மாத இடைவெளியில்
செயல்படத் துவங்கும். ரூ. 147.00 கோடி செலவில் 120
மெ.வா. 36 மி.யூனிட் பயன் தரக்கூடிய கீழ் மேட்டூர் நீர் மின்
நிலையம், 15 மெகாவாட் திறனுடைய ஒரு பிரிவுடன் 1986
செப்டம்பரில் செயல்படத் துவங்கும். மற்ற ஏழு பிரிவுகளும்
மூன்று மாத இடைவெளியில் செயல்படத் துவங்கும். குந்தா V
விரிவாக்கத் திட்டத்தின்கீழ் குந்தா V மின் நிலையத்தில்
ரூ.8.37 கோடி செலவில் 20 மெ.வா. /36.5.மி.யூனிட் திறன்
கொண்ட மேலும் ஒரு பிரிவு நிறுவப்படும். இது 1987
செப்டம்பரில் செயல்படத் துவங்கும். 16 மெ வா. 174 மி.யூனிட்
திறன்கொண்ட கீழ்பவானி, வைகை மற்றும் பைக்காரா சிறிய
நீர் மின்திட்டங்கள் 1987-88-ல் செயல்படத் துவங்கும்.
நடைபெறும் திட்டங்களில் மேட்டூர் அனல் மின் நிலையத்
திட்டம் மிகப் பெரியதாகும். இதன் முதற்கட்டத்திற்கான
திட்டம் 1970 வாக்கிலேயே தீட்டப்பட்ட போதிலும் மத்திய
திட்டக்குழு 1980 செப்டம்பரில் தான் ஒப்புதல் வழங்கியது.
முதற் கட்டமாக 210 மெ.வா. திறன் கொண்ட இரண்டு பிரிவு
கள் ரூ. 384.33 கோடி செலவில் நிறுவப்படும். முதல்பிரிவு
டிசம்பர் 1986லும் இரண்டாம் பிரிவு ஜூன் 1987லும்
செயல்படத் துவங்கும். இரண்டாம் கட்டமாக 210 மெ.வா.
திறன் கொண்ட மேலும் இரு பிரிவுகள் அமைப்பதற்கும் மத்திய
அரசுமே 1983-ல் இசைந்துள்ளது. இத்திட்டத்தின் தற்
போதைய மதிப்பீடு ரூ. 269.03 கோடியாகும். இதற்கான
பணிகளும் ஆரம்பமாகிவிட்டன. இக்கட்டத்தின் முதல் பிரிவு
டிசம்பர் 1988லும் இரண்டாம் பிரிவு டிசம்பர் 1989லும் செயல்
படத் துவங்கும். நடைபெறும் திட்டங்களின் மூலம் தமிழ்
நாட்டின் திறனுக்கு உற்பத்தித் திறன் ஏறத்தாழ 1,416மெ.வா.
கூடுதல் ஆகக் கிடைக்கும். பார்ஸன் பள்ளதாக்குத் திட்டத்
துக்கு ஜூன் 1982லேயே ஒப்புதல் அளித்தபோதிலும் வனப்
பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அனுமதி கிடைக்காததால் இத்
திட்டத்தை மேற்கொள்ள இயலவில்லை.

14. நடந்துவரும் மேற்கூறிய மாநிலத் திட்டங்கள் தவிர
இந்த மண்டலத்தில் மத்திய அரசு அமைத்துவரும் மின்
நிலையங்களிலிருந்தும் தமிழ் நாட்டிற்குப் பங்கு கிடைக்கும்.
மேலே கூறியவாறு கல்பாக்கம் இரண்டாம் பிரிவு நடப்பு
ஆண்டில் செயல்படத் துவங்கும். இப்பிரிவின் உற்பத்தியில்
நம் மாநிலத்திற்கு 50 சதவிகிதம் பங்கு உண்டு. பிற்காலத்தில்
210 மெ.வா. திறனுடைய நான்கு பிரிவுகளுடன் விரிவுபடுத்தும்
வகையில் 210 மெ.வா. திறனுடைய மூன்று பிரிவுகளுடன்
நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 1,470 மெ.வா.
திறனுடைய இரண்டாவது அனல் மின் நிலையத்தை அமைத்து
வருகிறது. முதல் பிரிவு மார்ச் 1986-ல் செயல்படத் துவங்கும்

எனவும் மேலும் மூன்று பிரிவுகள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்
முடியுமுன்னரும் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்
படுகிறது. முதல் மூன்று பிரிவுகளின் மொத்த உற்பத்தியையும்
தமிழ்நாட்டுக்கே தர வேண்டுமென தமிழ்நாடு வற்புறுத்தி வந்த
போதிலும், மத்திய அரசின் பகிர்வுக் கொள்கைப்படியே வழங்கப்
படும் என மத்திய அரசு கருதுகிறது. இக்கருத்தைத் தமிழ்
நாடு ஏற்கவில்லை. தமிழ்நாட்டின் மின் தேவையைப் பூர்த்தி
செய்யும் பொருட்டு, 1978-ம் ஆண்டிலேயே இத்திட்டத்திற்கு
அனுமதி அளிக்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் மூலம்
கிடைக்கும் முழு மின்சாரத்தையும் தமிழ்நாடே பயன்படுத்திக்
கொள்ளும் என்று ஒரு வாக்குறுதியை மத்திய அரசு கேட்டு
பெற்றுக்கொண்டுள்ளது. எனவே இம் மூன்று பிரிவுகளிலிருந்து
கிடைக்கும் மின்சாரத்தையும் தமிழ்நாட்டிற்கே வழங்க வேண்டு
மென இவ்வரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. 7வது
ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் கிடைக்கக்கூடிய 840 மெகாவாட்
மின்சாரத்தில் மத்திய அரசின் கொள்கையின்படி தமிழ்நாட்டிற்கு
235 மெகாவாட் கிடைக்கும்.

மத்திய அரசின் கொள்கையின் அடிப்படையில் இராம
குண்டம் பெரும்பேரனல் திட்ட உற்பத்தியிலும் தமிழ்நாட்டிற்கு
பங்கு உண்டு. ஏற்கனவே இராமகுண்டத்தில் செயல்படத்
துவங்கியுள்ள 200 மெகாவாட் திறன் கொண்ட 3 பிரிவுகள் தவிர
500 மெகாவாட். திறன் கொண்ட மேலும் ஒரு பிரிவு 7ஆவது
ஐந்தாண்டுத் திட்ட முடிவில் செயல்படத் துவங்கும் என எதிர்
பார்க்கப்படுகிறது. 7ஆவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இராம
குண்டத்தில் எதிர்பார்க்கப்படும் மொத்த உற்பத்தியான 1,100
மெகாவாட்டில் தமிழ்நாட்டின் பங்காக 242 மெகாவாட்
கிடைக்கும். இதன் பொருட்டு ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட
காலத்தில் மத்திய அரசின் மின் நிலையங்களிலிருந்து தமிழ்
நாட்டிற்கு ஏறத்தாழ 594 மெகாவாட் கூடுதல் மின் உதவி
கிடைக்கும்.

15. நமது மதிப்பீட்டின்படி நடைபெற்று வரும் மாநிலத்
திட்டங்களிலிருந்தும் மத்திய அரசு மின் நிலையங்களிலிருந்து
பெறும் பங்கின்மூலமும் கிடைக்கும் கூடுதலான மின்சக்தியினால்
ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் எதிர்பார்க்கப்படும்
பற்றாக்குறையை முழுவதுமாகச் சரிகட்ட இயலாது. எனவே
மாநிலத்தின் மின்பற்றாக்குறையைப் போக்குவதற்கான நீண்ட
காலத் தீர்வு, கூடுமான அளவில் அனல் மின் நிலையங்களும்,
அணு மின் நிலையங்களும் அமைப்பதே. இதனை உணர்ந்து வட
சென்னையில் ஓர் அனல் மின் நிலையம் நிறுவவும் தூத்துக்குடியில்
தற்போதுள்ள அனல் மின் நிலையத்தை விரிவாக்கவும் திட்டம்
தீட்டி, 1981 டிசம்பரில் திட்டம் தீட்டி மத்திய மின் அதிகார
மன்றத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டன. ரூ. 356.38
கோடி செலவில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் கூடுதலாக
ஒவ்வொன்றும் 210 மெ.வா. திறன் கொண்ட மேலும் இரண்டு
பிரிவுகள் அமைக்கும் விரிவாக்கத் திட்டத்துக்கு மத்திய திட்டக்
குழு இசைவு அளித்துள்ளது என்பதை அறிய மாண்புமிகு உறுப்





பினர்கள் மகிழ்ச்சி அடைவர். இவற்றில் முதல் பிரிவு 1990லும்
இரண்டாவது பிரிவு ஒரு வருடத்துக்குப் பின்னரும் செயல்படத்
துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வட சென்னையைப் பொறுத்த வரை, ரூ. 547.79
கோடி செலவில் 210 மெ.வா. திறன் கொண்ட மூன்று பிரிவுகள்
அமைக்க மத்திய மின் அதிகார மன்றம் இசைந்துள்ளது, மாநில
திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், நிலக்
கரிச் சுரங்களிலிருந்து நிலக்கரி கொண்டு வர உரிய ஏற்பாடு
கள் செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இத்திட்
டத்திற்கு மத்திய திட்டக் குழுவும் அனுமதி அளித்துள்ளது.
மூன்றில் ஒரு பிரிவு 1990-ல் செயல்படத் திட்டமிடப்பட்டுள்
ளது.

உச்ச நேரத் தேவையில் பற்றாக்குறையைச் சரிக்கட்டவும்,
திட்டமிட்ட ஆண்டுகளுக்கு பணி செய்து முடித்துவிட்ட தற்
போதுள்ள பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக
வும் ரூ. 47.10 கோடி செலவில் ஒவ்வொன்றும் 50 மெகாவாட்
திறன் கொண்ட எரிவாயு மின்நிலையத்தின் இரண்டு பிரிவுகளை
பேசின்பிரிட்ஜ் மின் நிலையத்தில் நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.
இத்திட்டம் மத்திய மின் அதிகார மன்றத்தின் பரிசீலனையில்
உள்ளது. இந்த இரண்டு பிரிவுகளும் ஏழாவது ஐந்தாண்டுத்
திட்ட காலத்தில் பயன் உள்ள வகையில் செயல்படுத்தப்படலாம்.
மொத்தம் 10 மெகாவாட் திறன் கொண்ட சிறிய நீர் மின்
நிலையங்களின் பணிகளும் துவக்கப்பட்டு ஏழாவது ஐந்தாண்டுத்
திட்ட காலத்திற்கு முன்பாகவே முடிக்கப்படும்.

16. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மாநில மின்
நிலையங்களிலிருந்து 1,946 மெகாவாட் கூடுதல் மின் நிறுவுத்
திறனும் மத்திய அரசின் மின் நிலையங்களிலிருந்து 594 மெகா
வாட் கூடுதல் மின் நிறுவுத் திறனும் எதிர்பார்க்கலாம்.
மாநிலத்தில் அமைந்துள்ள மத்திய அரசு மின் நிலையங்களின்
உற்பத்தியையும் கணக்கில் கொண்டு மாநில மின் அமைப்பின்
மொத்த நிறுவுத்திறன் தற்போதுள்ள 3,344 மெகாவாட்டிலிருந்து
6,365 மெகாவாட்டாக உயரும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்
கால இறுதியில் உள்ள பற்றாக்குறையை முழுவதும் நிவர்த்தி
செய்ய இக்கூடுதல் திறன் போதாது. மின்உற்பத்தியில் முன்
னேற்றம் பெற நீண்ட காலம் ஆகும். எனவே எட்டாவது
ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குத் தேவையான மின்திட்டங்
களின் பணிகளை ஏழாவது ஐந்தாண்டுக் திட்ட காலத்தின்
நடுவிலேயே துவங்கப்பட வேண்டும்.

இதை கருத்தில் கொண்டு, ஆரம்ப நிலையில் 630 மெகா
வாட் திறனுடன் கடலூரில் ஒரு அனல் மின் நிலையம்
அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை தமிழ்நாடு மின்வாரியம்
ஆராய்ந்து வருகிறது. திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வரு
கிறது. இது தவிர பவானி கட்டளை திட்டம் I (90மெகாவாட்)
சாத்தனூர் நீர் மின் திட்டம் (20 மெகாவாட்) பைக்காரா,

திட்டம் இறுதிக் கட்டம் (100 மெகாவாட்) பரளையாறு நீர் மின் திட்டம் (25 மெகாவாட்) மற்றும் கோமுகி நதி நீர் மின் திட்டம் (20மெகாவாட்) முதலிய திட்டங்களை எழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் பயனை எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்தான் எதிர்பார்க்கலாம். பாண்டியாறு, புன்னம்புழா திட்டம், ஒகேனக்கல் திட்டம், மேல் அமராவதித் திட்டம் ஷண்முகா நதித் திட்டம் மற்றும் நெல்லித்துறைத் திட்டம் ஆகியவையும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

பல நீர்த் தேக்கங்கள், மாநிலங்களுக்கிடையே உள்ள தகராறுடன் தொடர்புடையவையாய் இருப்பதும், திட்டங்களை நிறைவேற்ற மற்ற மாநிலங்களின் இசைவு தேவைப்படுவதும் நீர் மின் நிலையங்கள் அமைப்பதில் உள்ள முக்கிய சிக்கல்கள் ஆகும். மேலும் வனப்பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அனுமதி பெறுவதிலும் சிரமம் ஏற்படுகிறது.

இந்நிலையில், சிறிய நீர் மின்திட்டங்களைப்பயன்படுத்துவதே சிறந்த முறையாகும். தமிழ்நாட்டில் இதுவரை இனம் கண்டுள்ள எல்லாவகையான சிறிய நீர் மின்நிலையத் திட்டங்களின் மொத்த மின் உற்பத்தித் திறன் 244 மெகாவாட் 1173 மி.யூனிட் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பினை படிப்படியாக பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை பைக்காரா, வைகை, மற்றும் கீழ்பவானி ஆகிய மூன்று சிறிய நீர் மின் திட்டங்கள் செயலாக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றின் மொத்தத் திறன் 16 மெகாவாட்/74 மி.யூனிட் ஆகும். மேலும் 8 சிறிய நீர்மின் திட்டங்கட்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 20 திட்டங்களுக்கான ஆய்வு வேலை நடைபெறுகிறது.

17. பொருளாதார ரீதியில் சாத்தியமான நீர் மின் திட்டங்களுக்கான வாய்ப்பினை மாநிலம் ஏறத்தாழ முழுவதுமாகப் பயன்படுத்தி விட்டது எனவும், மாநிலத்தில் நிலக்கரி படிவங்கள் இல்லை எனவும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். பழுப்பு நிலக்கரி மட்டுமே மாநிலத்தில் உள்ள ஒரே படிவ எரிபொருள் ஆகும். இந்த வாய்ப்பினை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. 1500 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது அனல் மின் நிலையம் அமைக்க நெய்வேலி பழுப்புநிலக்கரி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இது எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முடியும்.

நாட்டில் கூடுதலாக அணுமின் நிலையங்கள் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. நமது ஆய்வின்படி நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள மாநிலங்களில், அணுமின் உற்பத்தி, அனல் மின் உற்பத்தியை விடச் செலவில் குறைந்தது என்பதன் காரணமாக, புது அணு மின் நிலையங்



களை இது போன்ற மாநிலங்களிலேயே அமைக்க வேண்டுமென மத்திய அரசை நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். அணு மின் நிலையம் அமைக்க திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கூடங்குளம் என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளோம். இந்த இடத்தில் ஒரு அணு மின் நிலையம் அமைக்க மத்திய அரசு முன்வரும் என இந்த அரசு நம்புகிறது.

18. உற்பத்தி நிலையங்களிலிருந்து மின்சாரத்தை வெளியே கொண்டுவந்து நுகர்வோருக்குப் பகிர்ந்திட மின்கம்பித் தொடர் அமைக்கும் பணிகள் பெருமளவில் சீர் செய்யப்பட்டு விரிவாக்கப்பட வேண்டும். மின் அனுப்புதல் மற்றும் விநியோகத் திட்டப் பணியின்கீழ் 1983-84-ல் 12 கூடுதல் உயர்அழுத்த துணை மின் நிலையங்களும் 348 கி.மீட்டர் கூடுதல் உயர் அழுத்த மின் கம்பித் தொடர்களும் பயன் உள்ள வகையில் அமைக்கப்பட்டன. 1984-85-ல் 13 கூடுதல் உயர் அழுத்த துணை மின் நிலையங்களும் 544 கி.மீ. கூடுதல் உயர் அழுத்த மின் கம்பித் தொடர்களும் அமைக்கப்பட்டன. 1985-86-ல் 18 கூடுதல் உயர் மின் அழுத்த துணை மின் நிலையங்கள் அமைக்கவும் 531 கி.மீட்டர் கூடுதல் உயர் அழுத்த மின்கம்பித் தொடர் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் அனல் மின் நிலையங்களான இராமகுண்டம் மற்றும் நெய்வேலி இரண்டாவது சுரங்க மின் நிலையம் இவற்றிலிருந்து வழங்கப்படும் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஸ்ரீபெரும்புதூர், சேலம் மற்றும் உடுமலைப்பேட்டையில் 400 கி.வா. துணை மின் நிலையங்கள் அமைக்க வாரியத்திடம் திட்டம் உள்ளது. ஸ்ரீபெரும்புதூர் 400 கி. வா. துணை மின் நிலைய வேலை ஆரம்பமாகி விட்டது. இந் நிலையம் 1986-ல் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

19. கிராமப்புற மின் இணைப்பில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. மாநிலத்திலுள்ள 15,735 கிராமங்களில் 1985 மே இறுதி வரை 15,706 கிராமங்கள் மின் இணைப்புப் பெற்றுள்ளன, 10.52 இலட்சம் பம்பு செட்டுடன் தமிழ்நாடு இந்நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களைவிட அதிக அளவில் பம்பு செட்டுகள் உள்ள மாநிலமாக விளங்குகிறது. எல்லா ஆதி திராவிடர் குடியிருப்புகட்கும் மின் இணைப்பு வழங்கிய தனிச் சிறப்பு தமிழ்நாட்டுக்கு உண்டு. குடிசைக்கோர் மின்விளக்கு என்னும் திட்டத்தின்கீழ் 6.52 இலட்சம் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 1983-84-ல், 37 கிராமங்கள், 89 ஆதிதிராவிடர் குடியிருப்புகள், 42,294 குடிசைகள் மற்றும் 17,589 பம்பு செட்டுகள் மின் இணைப்பு பெற்றன. 1984-85-ல், 27 கிராமங்கள், 25 ஆதி திராவிடர் குடியிருப்புகள், 73,494 குடிசைகள் மற்றும் 50,950 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது.

1985-86-ல் கூடுதலாக 9 கிராமங்கட்கும் மற்றும் 40,000 பம்பு செட்டுகளுக்கும் மின் இணைப்பு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

20. நாட்டிலுள்ள மற்ற மின் வாரியங்களைப் [1985 ஜூலை 18
தமிழ்நாடு மின்வாரியத்தினது மிகப் பெரிய போலவே,
மின் திட்டங்களிலும், மின் கம்பித் தொடர் பிரச்சினை. புதிய
களிலும் முதலீடு செய்யத் தேவையான நிதி திரட்ட அமைக்கும் பணி
மின் திட்டங்களுக்கு கணிசமான முதலீடுகள் இயலாமையே
யும், நடைபெற்று வரும் திட்டங்களை குறித்த செய்தலன்றி
வேற்றா விட்டாலும், முழு அளவில் காலத்தில் நிறை
தேவையை நிறைவு செய்யும் அளவில் வளர்ந்து வரும் மின்
உற்பத்தித் திறன் இருக்காது. மின்வாரியத்தின் மின்

நிலக்கரி மற்றும் எரி எண்ணெய் விலையில் வருடாந்திர
ஏற்றம், இரயில் கட்டணம், கப்பல் கட்டணம் மற்றும் வாங்கும்
மின்சாரத்தின் விலை ஆகியவற்றில் வருடந்தோறும் உயர்வு
ஆகியவையே இந்த நிலைக்கான முக்கிய காரணங்களாகும்.

1979-க்கான செலவினத்துடன் ஒப்பிடுங்கால் மின் வாரியம்
இவ்விலை ஏற்றங்களின் காரணமாக ஆண்டுதோறும் ரூ. 160
கோடி கூடுதலாகச் செலவிட வேண்டியுள்ளது. தமிழ்நாட்டைப்
பொறுத்தவரை, மொத்த மின்சக்தியில் இராமகுண்டம் மற்றும்
நெய்வேலியிலிருந்து வாங்கும் மின்சாரம் உட்பட அனல் மின்
சாரத்தின் விகிதாச்சாரம் ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே
வருவது மற்றொரு காரணமாகும். சமீபத்தில் 1980-81-ல்
குறைந்த விலை மற்றும் உயர்ந்தவிலை மின்சார விகிதாச்சாரம்
50:50 என இருந்தது 5 வருடங்களுக்குள் இது 30:70 என மாறி
யுள்ளது. இவற்றின் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு மின்வாரி
யத்தின் இழப்பு அதிகரித்து கொண்டே வருகிறது. பருவமழை
தவறுவதன் காரணமாக நீர் மின் உற்பத்தி குறையும் ஆண்டு
களில் இழப்பு அதிகமாகும். கடந்த 5 ஆண்டு களில் மின்வாரி
யத்தின் நிதிநிலை செயல்பாடு கீழேயுள்ள அட்டவணையில்
தரப்பட்டுள்ளது:—

| (1) | 1980–81. (2) | 1981–82. (3) | 1982–83. (4) | 1983–84. (5) | 1984–85. (6) |
|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| வருவாய் (மானியம் நீங்கலாக) .. | 26,591 | 28,367 | 32,756 | 36,669 | 52,752 |
| வருவாய் செலவு. .. | 29,196 | 36,331 | 42,597 | 47,150 | 56,496 |
| வட்டி, தேய்மானம் சேமநிதி மற்றும் பொது சேமநிதி. .. | 8,735 | 9,673 | 11.254 | 14,403 | 14,600 |
| பற்றாக்குறை. | 11,340 | 17,637 | 21,095 | 24,884 | 18,344 |



பயன்படும் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்து வதற்கென நிலக்கரி விலை, எண்ணெய் விலை, கப்பல் கட்டணம், இரயில் கட்டணம் இவற்றை உயர்த்துவது பற்றிச் சிந்திக்கும் போது மாநிலங்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டுமென நான் மத்திய அரசை வற்புறுத்தியுள்ளேன்.

வெவ்வேறு அனல் மின் நிலையங்கட்கு வழங்கப்படும் நிலக்கரி விலையில் வேறுபாடு அமைவதன் காரணமாக, நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களிடையே உற்பத்திச் செலவு மாறுபடுகிறது. உற்பத்திச் செலவு ஒரே சீராக அமைவதற்கென, எஃகு, சிமெண்ட் ஆகியவற்றிற்கு விலை நிர்ணயிக்கப்படுவது போன்று நிலக்கரிக்கும் நாடு முழுவதும் ஒரே சீரான விலை நிர்ணயிக்கப்படவேண்டும். இந்த அரசு மத்திய அரசிடம் இந்தப் பிரச்சினையை எழுப்ப இருக்கிறது.

21. செலவுக்கும் வருவாய்க்குமுள்ள இடைவெளியைச் சரிசெய்ய கட்டணத்திருத்தம் அவசியமாகிறது. இதற்கென தகுந்தவாறு கட்டணத்தைத் திருத்துவதுபற்றி கருத்து சொல்லவும் பரிந்துரை வழங்கவும் 1983 மார்ச் திங்களில் அரசு ஒரு தனிநபர் குழுவினை நியமித்தது. இக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. குழுவின் பரிந்துரையைப் பெருமளவில் ஏற்று விவசாயிகள் நீங்கலாக ஏனைய நுகர்வோருக்கான கட்டணம் 16 மே 1983 முதல் திருத்தியமைக்கப்பட்டது. இத்திருத்தம் வருடத்துக்கு ரூ. 53.57 கோடி கூடுதல் வருவாயை அளித்தது. உயர் அழுத்தம் மற்றும் குறைந்த அழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் பொதுநோக்க நுகர்வோர் பிரிவுக்கான கட்டணம் 15-6-1984 முதல் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. இதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 64 கோடி கூடுதல் வருவாய் கிடைத்தது. வருடத்துக்கு ரூ. 77 கோடி மொத்த வருவாய் கிடைக்கும் வகையில் உரிமதாரர் உட்பட உயர் அழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் குறைந்த அழுத்தத் தொழிற்சாலைகட்கும் கடைகள், தங்கும் விடுதிகள் போன்ற பிரிவினருக்கும் பொருந்தும் கட்டண விகிதங்களை அரசு 1985 மே திங்களில் மீண்டும் திருத்தி அமைத்துள்ளது. எனினும், விவசாயிகள் மற்றும் பஞ்சாயத்துக்களிலுள்ள குடிசை வாழ்வோருக்கு 15-9-1984 முதல் வழங்கப்பட்ட சலுகைகளின் காரணமாக ஆண்டுக்கு ரூ. 10.44 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டது.

விவசாயிகட்குக் குறைந்த விலையில் மின்சாரம் வழங்குவதால் மின்வாரியத்துக்குப் பெருமளவில் இழப்பு ஏற்படுகிறது என்பதைக் குறிப்பிடவேண்டும். நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் விளங்குவதாலும் உணவுப் பண்டங்களின் விலையை நியாயமான நிலையில் வைப்பதற்கெனவும் விவசாயத்துக்குக் குறைந்த விலையில் மின்சாரம் வழங்குவது தவிர்க்க முடியாதது. இப்பெருஞ்சுமையை மாநில அரசு மட்டுமே முழுவதுமாக ஏற்கமுடியாது. புதுடெல்லியில் 1984 ஜூலையில்

நடைபெற்ற மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் இச்சுமையில்
மத்திய அரசும் பங்கேற்க வேண்டும் என நான் கருத்துத் தெரி
வித்துள்ளேன்.

22. 1985–86-ல் கட்டணத்திருத்தத்தின் காரணமாக எதிர்
பார்க்கப்படும் கூடுதல் வருவாயையும் சேர்த்து வருவாய் வரவு
ரூ. 600.33 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த
ஆண்டுக்கான வருவாய்ச் செலவு எரி பொருளுக்கான ரூ. 198.82
கோடி, வாங்கும் மின்சாரத்தின் விலைக்கான ரூ. 201.24 கோடி,
பராமரிப்புக்கான ரூ. 42.20 கோடி, பணியாளர் மற்றும் நிர்வா
கத்துக்கான ரூ. 133.81 கோடி, அரசுக்கடன் நீங்கலாக ஏனைய
கடனுக்கான வட்டிக்கான ரூ. 51.72 கோடி, தேய்மான ஒதுக்
கீட்டுத் தொகைக்கான ரூ. 41.52 கோடி, அரசுக் கடன்களுக்கான
வட்டிக்கான ரூ. 77.21 கோடி ஆகியவற்றைச் சேர்த்து ரூ. 746.52
கோடியாகும். வருவாய்ச் செலவிற்கு ஈடுசெய்ய வருவாய் வரவு
முழுவதுமாகப் போதாது. எனவே ரூ. 146.19 கோடி துண்டு
விழும்.

23. 1984–85-ல் முதலீட்டுப் பணிகளுக்கென ரூ. 256.02
கோடி செலவிட மின்சார வாரியம் வரவு–செலவுத் திட்டம் தீட்டி
யது. இதில் மின் உற்பத்திக்காக ரூ. 185.92 கோடி அனுப்புகை
பகிர்வுக்கு ரூ. 50 கோடி, திட்டச் செலவுக்கு அப்பாற்பட்ட
ரூ. 7.78 கோடி உட்பட ஊரக மின் இணைப்புகளுக்காக ரூ. 20
கோடி, மற்றும் ஏனைய செலவுகட்காக ரூ. ஒரு கோடி ஆகியவை
அடங்கும். எனினும் 1984–85-ல் திட்ட முதலீட்டுப் பணி
களுக்கு ரூ. 237.17 கோடியும் பம்பு செட்டுகளுக்கு மின்
இணைப்பு வழங்க திட்ட நிதி ஒதுக்கீட்டுக்கு அப்பாற்பட்டு
ரூ. 7.72 கோடியும் மட்டுமே செலவிட மத்திய திட்டக் குழு
ஒப்புதல் அளித்தது. ரூ. 237.17 கோடியில், மின் உற்பத்திக்கு
ரூ. 174.42 கோடியும், அனுப்புகை பகிர்வுக்கு ரூ. 149.47
கோடியும், திட்டச் செலவுக்குட்பட்டு ஊரக மின் இணைப்புக்
கென ரூ. 2 28 கோடியும், ஏனைய செலவுகட்கு ரூ. ஒரு கோடியும்
அடங்கும். இதற்கு மாறாக 1984–85-ல் ஏற்பட்ட தோராயமான
செலவு ரூ. 245.12 கோடியாகும். மின் உற்பத்திக்காக ரூ. 170.92
கோடி அனுப்புகை-பகிர்வுக்கு ரூ. 47 80 கோடி திட்டச் செலவுக்கு
அப்பாற்பட்டு பம்பு செட்டுகள் உட்பட கிராமங்கட்கு மின்
இணைப்பு வழங்க ரூ. 25.51 கோடி, ஏனைய செலவுகட்கு
ரூ. 0.89 கோடி ஆகியவை இதில் அடங்கும்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு மின்சாரம் அத்தியாவசிய
மானது என்பதனை உணர்ந்து 1985-86 ஆம் ஆண்டுக்கான
ஆண்டுத் திட்டத்திலும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் மின்
உற்பத்தியில் முன்னேற்றத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்
பட்டுள்ளது.



1985-86 ஆம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்டத்தில்
மாநிலத்தின் மொத்த ஒதுக்கீடான ரூ. 960 கோடியில்,
31.25 சதவீதம் மின்சாரத்துக்கென ஒதுக்கத் தீர்மானிக்கப்
பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான ஒதுக்
கீடான ரூ. 5,750 கோடியில் மின்சாரத்துக்கென 34.78
சதவீதம் செலவிடப்படும்.

1985–86-ம் ஆண்டுக்கான தனது வரவு-செலவுத்
திட்டத்தில் வாரியம் முதலீட்டுச் செலவுகட்கென ரூ. 325.93
கோடி ஒதுக்கியுள்ளது இதில் மின் உற்பத்திக்கென ரூ. 239.75
கோடியும், அனுப்புகை-பகிர்வுக்கு ரூ. 70 கோடியும், கிராம
மின் இணைப்புகளுக்கென ரூ. 15.18 கோடியும் (திட்ட
செலவுக்குள்), ஏனையவற்றிற்காக ரூ. ஒரு கோடியும் செல
விடப்படும். இதைத் தவிர, திட்டச் செலவிற்கு அப்பாற்பட்டு
கிராம மின் இணைப்புகளுக்கென ரூ. 27 கோடியும், மத்திய
உதவியுடன் அனல் மின் நிலையங்களைப் புதுப்பித்தலுக்கென
ரூ. 9.45 கோடியும் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்டக்
குழு ரூ. 300 கோடிக்கான முதலீட்டுச் செலவுகட்கு மட்டுமே
அனுமதி வழங்கியுள்ளது. இதில் மின் உற்பத்திக்கென ரூ. 218.82
கோடியும், அனுப்புகை-பகிர்வுக்கு ரூ. 65 கோடியும், கிராம மின்
இணைப்புகளுக்கென ரூ. 15.18 கோடியும், ஏனையவற்றுக்காக
ரூ. ஒரு கோடியும் அடங்கும். இது தவிர திட்ட செலவுகட்கு
அப்பாற்பட்டு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க ரூ. 27
கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. மத்திய அரசின் உதவியுடன்
கூடிய புதுப்பிக்கும் வேலைக்கான ஒதுக்கீடு ரூ. 6.52 கோடியாகக்
குறைக்கப்பட்டது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மத்திய திட்டக் குழு
ரூ. 2,000 கோடி நிதி ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
இதில் மின் உற்பத்திக்கென ரூ. 1,258.52 கோடியும், அனுப்புகை–
பகிர்வுக்கு ரூ. 650 கோடியும், கிராம மின் இணைப்புகளுக்காக
ரூ. 81.18 கோடியும், ஏனையவற்றிற்காக ரூ. 10 கோடியும்
அடங்கும், இதைத் தவிர திட்ட நிதி ஒதுக்கீட்டுக்கு அப்பாற்பட்டு
பம்பு செட்டுக்கென ரூ. 1.35 கோடி எனவும், மத்திய அரசின்
உதவியுடன் அனல் மின் நிலையங்களின் புதுப்பிக்கும் பணிக்கென
ரூ. 24.06 கோடி எனவும் நிர்ணயிக்கப்பட்டது.

24. மின் வாரியம் தனது நடவடிக்கைகளைச் செவ்வனே
தொடர மாநில அரசு பெருமளவில் நிதி உதவி அளிக்கிறது.
1984–85-ல் அரசு 232 கோடி ரூபாய் நிதி உதவி அளித்தது.
1985–86-ல் மின் வாரியத்துக்கு ரூ. 270 கோடி நிதி உதவி
தர உத்தேசித்துள்ளது. அரசின் நிதி உதவியைத் தவிர
மின்வாரியத்துக்கு வெளிச் சந்தையிலிருந்தும் ஆயுள் காப்பீட்டுக்
கழகத்திடமிருந்தும், மத்திய ஊரக மின் இணைப்புக் கழகத்திட
மிருந்தும். வர்த்தக வங்கிகளிலிருந்தும் கடன் உதவி கிடைக்கும்.

மத்திய ஊரக மின் இணைப்புக் [1985 ஜூலை 18
உதவியினை மின்வாரியம் பெருமளவில் கழகத்தி நிதி
வசதிக்காக பயன்படுத்திக் கிராமப்புற மின்
நிலவரப்படி 524 கொண்டுள்ளது. 31-3-1985
மொத்தம் ரூ. 157.97 ஊரக மின் இணைப்பு திட்டங்கட்கு
கழகம் கடன் உத கோடி மத்திய ஊரக மின் இணைப்புக்
ரூ. 73.78 கோடி அனுமதி அளித்துள்ளது. இக்கடனுதவியில்
வர்த்தக வங்கி மேற்படி கழகத்திடமிருந்தும் ரூ. 31.44 கோடி
ஊரக மின் ளிடமிருந்தும் பெறப்பட்டுள்ளது.
களிடமிருந்தும் இணைப்புக் கழகத்திடமிருந்தும், 1985–86-ல்
நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ.27 கோடி பம்பு செட்டுகளுக் வர்த்தக வங்கி
படுத்தவும், மேற்படி கழகத்தின் கெனவும் திட்ட
உதவி பெறப்படும். மேற்படி கழகத்திடமிருந்து ரூ. 4.71 கோடி செயல் கடன்

25. தனது செயல்முறையில் முன்னேற்றம் காண்பதற்கென
மின்வாரியம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பட்டி
தயாரித்தல் மற்றும் வருவாய் வசூல் செய்வதிலும் முன்னேற்றம்
காண ஜனவரி 1982 முதல் மின்வாரியம் ஒரு புதிய அட்டைப்
பட்டியல் முறையை அமுல்படுத்தியது. மேற்சொன்ன திட்டத்
தினை எதிர்த்து சில தொழிற் சங்கங்கள் நீதி மன்றத்தில் வழக்குத்
தொடர்ந்தன. திட்டத்தின் நடைமுறையின் முன்னேற்றத்துக்
கான கருத்துக்களைப் பெறும் வகையில் வழக்குத் தொடர்ந்த
சங்கங்களும் ஏனைய சங்கங்களும் பேச்சு வார்த்தைக்கென
அழைக்கப்பட்டன. அவர்களது கருத்துக்களை ஆராய்ந்து
தொழிற்தகராறு சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் தொழிற்
சங்கங்கள் வழங்கிய கருத்துக்களில் ஏற்றுக்கொள்ளக் கூடிய
வற்றை உள்ளடக்கிய ஒரு திருத்திய ஒப்பந்தம் 5–12–1984
அன்று தொழில்துறை ஆணையர் முன்னிலையில் கையெழுத்
தானது. திருத்தப்பட்ட அட்டைப் பட்டியல் முறை
4-2-1985 முதல் அமுலுக்கு வந்தது. அட்டைப் பட்டி
முறையை ஏற்றுக் கொள்ளாது வேலை செய்ய மறுத்த பணப்
பொறுப்பாளர்களும் அவர்களது உதவி ஆய்வாளர்களும் திட்டத்
துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர். மின் இணைப்புகளின்
எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், அதனை ஈடு செய்யும்வகையில்
ஏறத்தாழ 950 மதிப்பீட்டாளர்கள் புதிதாகப் பணியமர்த்தப்
படுகின்றனர்.

வசூலிலுள்ள நிலுவை உன்னிப்பாகக் கண்காணிக்கப்படு
கிறது. கூடிய வரை நிலுவையை வசூலிக்க நடவடிக்கை மேற்
கொள்ளப்படுகிறது. 31—3—1985 நிலவரப்படி மொத்த
நிலுவை ரூ. 44·19 கோடியாகும். இதில் உயர் அழுத்தத்
தொழிற்சாலைகளிடமிருந்து ரூ. 31.72 கோடியும், குறைந்த
அழுத்தத் தொழிற்சாலைகளிடமிருந்து ரூ. 13.07 கோடியும்
வரவேண்டியுள்ளது. உயர் அழுத்தத் தொழிற்சாலைகளில்
அதிக அளவில் பாக்கி மால்கோ நிறுவனத்திடம் உள்ளது.



நிலுவைத் தொகை ரூ. 22.02 கோடியாகும். வழக்கு உச்ச நீதி மன்றத்திலே உள்ளது. இறுதித் தீர்ப்பு வழங்கப்படும்வரை, மால்கோ நிறுவனம் நடப்புக் கட்டணமாக யூனிட் ஒன்றுக்கு 44.40 பைசா வீதம் செலுத்த வேண்டுமெனவும், அலுமினியத்தின் விலை உயரும்போது மின் கட்டணத்தை உயர்த்த மின் வாரியத்துக்கு உரிமை உண்டு எனவும் உச்ச நீதிமன்றம ஆணையிட்டுள்ளது.

நவம்பர் 1980 இறுதியில் 5.64 இலட்சம் விவசாயப் பயனீட்டாளரிடமிருந்து ரூ. 37·59 கோடி பெறுமளவில் நிலுவையிருந்தது. ஒவ்வொரு மாதமும் நிலுவை ஒன்றும் நடப்புக் கட்டணம் ஒன்றும் என்ற விதிப்படி நிலுவையை வசூலித்ததனால் 31-3–1985 அன்று வரை நிலுவைத் தொகை ரூ. 4.75 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மின் கம்பித் தொடர்களில் ஏற்படும் மின் இழப்பினைக் குறைப்பதற்கான தேவையினை மின்வாரியம் தொடர்ந்து பரிசீலித்து வந்தது, 1974-75-ம் ஆண்டில் மின்கம்பித் தொடர்களில் ஏற்பட்ட மின் இழப்பான 21.5 சதவீதத்துக்கு மாறாக, தற்போதைய இழப்பு 18.8 சதவீதம் மட்டுமே மின் கம்பித் தொடர்களில் ஏற்படும் மின் இழப்பு குறித்து ஆய்வு செய்து அதனைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் பற்றி பரிந்துரைக்க உயர்மட்டக் குழு ஒன்றைத் தமிழ்நாடு அரசு 1981–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அமைத்தது. இக்குழு தனது அறிக்கையை 1981 டிசம்பர் திங்களில் அளித்தது. குழுவின் 52 பரிந்துரைகளில் ஐந்து பரிந்துரைகள் ஏற்கப்படவில்லை. மூன்று பரிந்துரைகள் மறுபரிசீலனையில் உள்ளன. மீதமுள்ளவற்றில் பத்து ஏற்கனவே அமுலில் உள்ளன. 34 பரிந்துரைகளை அமுல் செய்ய கள அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மின்திருட்டையும், முறைகேடுகளையும் கட்டுப்படுத்த மின்சாரத் திருட்டுக் கட்டுப்பாட்டுப் பிரிவு சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மேலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளருடனும் துணை அலுவலர்களுடனும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 1983-84 முதல் இதற்கெனத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக 1983-84–ல் 361 திருட்டுக்கள் மீதும் 4,748 முறைகேடுகள் மீதும் நடவடிக்கை தொடரப்பட்டது. 1984-85-ல் 555 திருட்டு வழக்குகள் தொடரப்பட்டன. 4,690 முறைகேடுகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1981-82-ல் கிடைத்த ரூ. 15 இலட்சம் மற்றும் 1982–83-ல் கிடைத்த ரூ. 48 இலட்சத்துக்கு மாறாக இத்தீவிர நடவடிக்கைகளின் காரணமாக 1983-84-ல் ரூ. 209 இலட்சமும் 1984–85-ல் ரூ. 150 இலட்சமும் வருவாய் மதிப்பிடப்பட்டது.

1983 ஏப்ரல் திங்களிலிருந்து மின்சக்திக் களவு மற்றும் முறைகேடுகள் பற்றிய தகவல் தருவோருக்கென வெகுமதி வழங்கும் திட்டம் ஒன்றை வாரியம் கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் மின்சாரத் திருட்டு பற்றித் தகவல் அளிப்போருக்கு அந்தக்

களவு கண்டுபிடிக்கப்பட்டதால் கிடைக்கும் கூடுதல் வருவாயில் 10 சதவிகிதத்துக்கு மேற்படாமலும் உயரளவு 10,000 ரூபாய்க்கு உட்பட்டும் வெகுமதி வழங்கப்படும். இத்திட்டமானது வாரியத்தின் பணியாளருக்கும் பொருந்தும். ஆனால் பொது மக்களுக்கு வழங்கத் தக்க தொகையில் 50 சதவீதம் மட்டுமே வாரியப் பணியாளருக்கு வழங்கப்படும்.

மின்சார வாரியத்தின் நிர்வாகத்தில், பயனீட்டாளரின் திருப்தியே மிக முக்கியமானதாகும். பயனீட்டாளர்களின் புகார் களை உடனுக்குடன் கவனிக்கும் வகையில் தலைமை அலுவல கத்தில் பயனீட்டாளர் முறையீட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட் டுள்ளது. மற்ற அமைப்புகளிலும், பயனீட்டாளர்களின் குறை களைக் கவனிப்பதற்கென உதவி வட்டாரப் பொறியாளர் தரத் தில், 26 பங்கீட்டு அமைப்புகளிலும், ஒரு மக்கள் தொடர்பு அலுவலர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்பார்வைப் பொறியாளரால் பெறப்பட்ட முறையீடுகளைக் கவனிப்பதோடல் லாமல் இந்த மக்கள் தொடர்பு அலுவலர் அலுவலக நேரத்தில் பயனீட்டாளர் எளிதில் தொடர்பு கொள்ளக்கூடியவராகவும் இருப்பார், அவர்களது குறைகளை உடனுக்குடன் கவனிப்பார். மேலும் பகுதி அலுவலருக்கு மேலேயுள்ள பதவியிலுள்ள மின் வாரியத்தின் அலுவலர் அனைவரும் தலைமையிடத்தில் இருக்கும் நாட்களில் ஒவ்வொரு அலுவலக வேலை நாளிலும், பிற்பகல் 2 முதல் 3 மணி வரையான நேரத்தை பொதுமக்களிடமிருந்தும் பணியாளரிடமிருந்தும் வரும் முறையீடுகளை வாங்குவதற்கென ஒதுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பயனீட்டாளர் பணி, தொழிலாளர் நிர்வாகம், நிர்வாகத்தில் ஒழுங்கைக் கடைப்பிடித்தல் மற்றும் வருவாய் வசூல் ஆகிய வற்றின் மீது அதிகக் கவனம் செலுத்தும் பொருட்டு மாநில மானது மின் வழங்குதலை நிர்வகிக்க 4 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்த வட்டாரங்கள் சென்னை, திருச்சி, மதுரை கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக்கொண் டுள்ள வட்டாரத் தலைமைப் பொறியாளர்களின் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. மேலும், திட்டங்கள், அனல் மின் நிலையங்கள் ஆகியவற்றிற்குப் பொறுப்பு வகிக்கும் தலைமைப் பொறியாளர்களின் தலைமை இடங்களும் அந்தந்த திட்டப் பகுதிகளில் அனல் மின் நிலையங்களில் அமைக்கப் பட்டன. கட்டிட வடிவமைப்புகளுக்கென ஒரு தனி தலைமைப் பொறியாளர் பதவியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அண்ணாசாலையில் பன் மாடிக் கட்டிடம் கட்டி முடித்த பின்னர், சென்னை மாநகரில் வாடகைக் கட்டிடங்களில் இது வரை செயல்பட்டு வந்த பல அலுவலகங்கள் இக்கட்டிடத்திற்கு மாற்றப்பட்டன.

26. தொழிற்சாலைகளில் சுயமாக மின்சாரம் உற்பத்தி செய் வதை மிகுந்த அளவில் ஊக்குவிக்கும் வகையிலும், மின்வெட்டுக் காலத்தில் தொழிற்சாலைகளுக்கு உதவவும், மின்சாரத்திற்கான



''சேமிப்பு முறை'' ஒன்று 1983 அக்டோபர் திங்களில் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சுயமாக 500 கிலோ வாட்டும் அதற்கு அதிகமாகவும் மின்சார உற்பத்தி செய்யக்கூடிய பிரிவு களை வைத்திருக்கும் தொழிற்சாலைகள், மின்வெட்டுக் காலத் தில் தங்களுக்குப் பயன்பெறும் விதத்தில் மின்வாரியத்திடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளும் வகையில், தாங்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை வாரியத்திடம் சேமித்து வைக்க அனுமதிக் கப்படுகின்றன.

27. மின்வாரியப் பணியாளர்களது நலன் உரியமுறையில் கவனிக்கப்பட்டு வருகிறது. பணியாளரது குறைகளைக் கவனிப் பதற்கென தலைமையிடத்தில் குறைகேட்கும் பிரிவு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

1982-83 ஆம் ஆண்டு சம்பளத்தில் அனுமதிக்கப்பட்ட 8.33 சத விகிதம் போனஸ் வழங்கியதோடு கருணைத் தொகை யளிப்பாக ரூ. 150-ம் ஒவ்வொரு பணியாளர்களுக்கும் வழங்கப் பட்டது. மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வெள்ளி விழாவினை ஒட்டி ஒவ்வொரு பணியாளருக்கும் கருணைத் தொகையளிப்பாக ரூ. 100 வழங்கப்பட்டது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் பொறியியல் துறையில் உள்ள பணியாளர் களுக்கு அனல் ஊக்கப்படி, அனல் ஊக்க போனஸ், மாற்றுப் பணிக்குரித்தான தனி ஊதியம் முதலியன வழங்கப்படுகின்றன. இதைத்தவிர இரவு நேரப்படியும் சம்பந்தப்பட்ட நிரந்தரப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

நிரந்தரப்பணி தொகுதியில் கீழ்நிலைப் பிரிவில் பணி புரியும் பணியாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் நோக்கத்துடன் இளநிலை பொறியாளர் நிலை 2-க்கு நேரிடையாகத் தேர்வு செய்யாமல் மின் வாரியத்தில் பணிபுரியும் பட்டயப்பணியாளர் களையே நியமனம் செய்ய வேண்டும் என வாரியம் முடிவு செய்துள்ளது. வாரியத்தில் பணிபுரியும் போதே மரணமடையும் பணியாளர்களது வாரிசுகளுக்கு வேலை அளிக்கும் திட்டத்தின் கீழ், 1-4-1981 முதல் 31-3-1985 வரை 577 நபர்கட்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

1979 டிசம்பர் முதல் தேதிக்குப் பின்னர் ஓய்வு பெற்ற வாரியத்தின் பணியாளர்கட்கு, ஓய்வூதியம், போனஸ் மற்றும் பணிக்கொடையைக் கணக்கிடும்போது அகவிலைப்படியின் ஒரு பகுதியைச் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

ஊதியம் குறித்து, ஒரு திருத்திய ஒப்பந்தம் செய்யப்படுவதற் கென பல்வேறு தொழிற்சங்கங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடை பெறுகின்றன. விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஒப்பந்தம் ஏற்படுமுன்னர் தொழிற்சங்கங்களின் வேண்டுகோளுக்கிணங்க, பின்னால் ஊதிய உயர்வில் பிடித்தம் செய்து கொள்ளும் வகையில் இடைக்கால உதவித் தொகையாக ரூ. 350 ஏப்ரல் 1985-ல் பணியாளர்கட்கு வழங்கப்பட்டது.

[1985 ஜூலை 18

28. மின்சார வாரியம் என்பது பல்வகைப்பட்ட சிக்கல்களும் பிரச்சனைகளும் நிறைந்த ஒரு நிறுவனமாகும். எனவே, அதன் செயல்பாட்டில் மேம்பாடுகளைச் செய்ய இடையறாத முயற்சிகள் தேவைப்படுகின்றன. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்திறனை மேம்படுத்த இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை நான் வரவேற்கிறேன்.

தமிழ்நாடு
136406
சென்னை-600 009

D
V211,31 'N85
N85-14-2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tinnevelly) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.